# யாழ்ப்பாண நினைவுகள்




யாழ்ப்பாண நினைவுகள் 2

வேதநாயகம் தபேந்திரன்

சிவகாமி பதிப்பகம்

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

# யாழ்ப்பாண நினைவுகள்

## 2

(தினக்குரல் வாரமலரில் பிரசுரமாகிய கட்டுரை
எழுத்துக்களின் இரண்டாம் பாகம்)


**வேதநாயகம் தபேந்திரன்**

B.Com (Jaf), PGD.Population Development Studies (Jaf)
M.A in Development Studies (Jaf)



**சிவகாமி பதிப்பகம்**

'தேன் தமிழ்'

கைதடி வடக்கு, கைதடி,

யாழ்ப்பாணம்.

நூல்:
**யாழ்ப்பாண நினைவுகள் 02**
விடயம்:
**யாழ்ப்பாண வாழ்வியலின் நனவிடை தோய்தல்**
ஆசிரியர்:
**வேதநாயகம் தபேந்திரன்**

முதற்பதிப்பு:
**2015 ஜூலை**

வெளியீடு:
**சிவகாமி பதிப்பகம்**
"தேன் தமிழ்"
கைதடி வடக்கு, கைதடி,
யாழ்ப்பாணம்.
0212057432
noolagam23@hotmail.com
Mobile- 0771167667
அட்டைப்பட ஓவியம்:
**ப.அஸ்வின் சுதர்சன்**
(ஊடகவியலாளர்)


வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும்:
**தேவி Printers**
140/1 மானிப்பாய் வீதி, யாழ்பாணம்.
0213003030
Deviprinters.net
Deviprinters@live.com

பக்கங்கள்:
**197**

விலை
**இலங்கை ரூபா : 390**

ISBN No 978-955-41392-1-3

# வளர்க... இன்னும்... இன்னும்!



எனக்கு வாசிப்பு எப்போதும் திகட்டியதில்லை. "தினக்குரலில்" அடிக்கடி வெளிவந்து கொண்டிருந்த யாழ்ப்பாண நினைவுகள் என்னை ஈர்த்ததுக்கு அத்தகைய நினைவுகள் என்னுள் புதையுண்டு கிடந்ததும் ஒருகாரணமாக இருக்கலாம். யார் இந்த வேதநாயகம் தபேந்திரன்..? என நான் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. நெடுங்காலத்தின் பின் அவர் யார் என்பதை நான் எதேச்சையாக அறிந்து கொண்டேன். அவரது தகப்பனாரும் நானும் வடமராட்சி அல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அரசியல் திசையில் எதிர் எதிர் அணியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் இருவரும் ஒருநாளாவது கதைத்தது கூட இல்லை. தொழில் ரீதியாக எனது தகப்பனாருக்கும் வேதநாயகம் குடும்பத்தாருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இவை பற்றியெல்லாம் எனக்கு பல நினைவுகள் எழுந்தன.

திரு.தபேந்திரன் அவர்கள் திருகோணமலையில் கடமையாற்றியதை நான் நினைவு கூர்ந்தேன். திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் பிரயாணிகளை யாழ் அனுப்பும் பிரதேச செயலக உத்தியோகத்தராக அவர் கடைமையாற்றிக் கொண்டிருந்தார். எனக்கு அவரை அடையாளம் காண முடிந்தது. அவருக்கு என்னைத் தெரியாது நான் கப்பலில் பயணப்படவும் இல்லை. எனக்கு தெரிந்தவர்களுக்காக அவரைச் சங்கடத்திலாற்றவும் நான் விரும்பவில்லை. இந்த நினைவுகள் யாழ்ப்பாண நினைவுகள் போலவே என்னிடம் மீந்துளது.

நினைவுகள் பவுத்திரமானவை. சில நினைவுகள் மகிழ்வை ஊட்டக்கூடியவை,சில நினைவுகள் துன்பத்தை தரக்கூடியவை, ஏக்கத்தை,பெருமிதத்தை தரக்கூடிய நினைவுகளும் உண்டு. புலம் பெயர் தேசங்களில் இருக்கும் நம்மவர்களது பால்ய நினைவுகள்

ஏக்கம் நிறைந்தவையாகவே பெரும்பாலும் இருக்கும். ஆனால் புலம் பெயராத நம்மவர்களின் நினைவுகள் ஏக்கத்தோடு ஒரு பெருமிதமாகவும் வெளிப்படும். “எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது... அதுவும் கொம்பன் யானை “என்பதுபோலவோ.. ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பது” போலவோ.. மிகையான கற்பனைகளை நான் தபேந்திரனிடம் காணவில்லை. “எங்கள் தாத்தாவிடம் ஒரு சைக்கிள் இருந்தது அதுவும் பழைய “ரலி” சைக்கில்” என்பது போலவும். அல்லது எனது தகப்பனாரிடம் ஒரு “ரச்” சைக்கில் இருந்தது” என்பது போலவும் மிக நிதானமாகவும், உண்மைக்கு மிக நெருக்கமாகவும் எழுதுகிறார். இது என்னை மிகவும் கவர்ந்து எனக்கு மிக அருகில் அவரைக் கொணர்ந்தது. ஒருநாள் அவரது தொலைபேசி எண்ணைத் தேடி எடுத்து அவருக்கு எனது பாராட்டைத் தெரிவித்தேன். இன்று அந்தப் பாராட்டை எழுத்தில் தர அன்போடும் விருப்போடும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன். முதிய தலை முறை எங்களை உற்சாகப்படுத்தத் தவறியமையில் இருந்து நாம் பாடங்களைப் படித்தமையால் எமது வருங்காலத் தலை முறையை, அவர்களது எழுத்துமுயற்சிகளை வாழ்த்தவும் வளர்க்கவும் மிக மிக ஆவலாக உள்ளோம். வேதநாயகம் தபேந்திரன் மேலும் மேலும் எழுத்துத் துறையில் வளர ஒரு வாசகன் என்னும் வகையில் எனது மனப்பூர்வமான பாராட்டுகள் ,வாழ்த்துக்கள்

வளர்க... இன்னும்... இன்னும்...!


**அன்புடன்**

**நந்தினிசேவியர்**

**இல.29, ஏகாம்பரம் வீதி,**

**திருகோணமலை,**

**2015.06.24**

# நினைவுகளின் சந்திப்பு

சிவகாமி பதிப்பகத்தின் 14 ஆம் வெளியீட்டில் உங்களைச் சந்திக்க வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றிகள்.

யாழ்ப்பாண நினைவுகள் இலங்கையின் முன்னணித் தேசிய தினசரிகளில் வெளிவந்த போது கிடைத்த பெரும் ஆதரவு போல நூல் வெளியீட்டிற்கும் கிடைத்தது. அல்வாய், வவுனியா, அளவெட்டி ஆகிய இடங்களில் அறிமுக விழாவினை நடத்திய கலை இலக்கிய அன்பர்களுக்கு நன்றிகள் கோடி.

பல நூறு பேரின் பங்களிப்புடன் தான் இந்த தொடர் செம்மை யுற்றது. அவர்களுக்கும் நன்றிகள்.

மூத்த எழுத்தாளர்கள் சிலரது பாராட்டுதலும் ஆக்கபூர்வமான தகவல்களும் இத் தொடரின் வெற்றிப் பயணத்திற்கு உதவியது. அவர்களுக்கும் நன்றிகள்.

2014 ஜூலை 27 இல் முதலாம் பாகம் வெளியாகி சரியாக ஒரு வருடம் நிறைவுறும் நாளில் இரண்டாம் பாகம் வெளிவருகின்றது. இதற்கு ஆதரவளித்த உள்நாட்டு வாசகர்கள், நண்பர்கள், குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் நண்பர்கள் வாசகர்களுக்கும் நன்றிகள் பல.

நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் மண்ணின் நினைவு களைப் பல கூறுகளாகப் பதிவு செய்து உள்ளேன்.

அதுபோல ஏனைய மாவட்ட எழுத்தாளர்களும் தங்கள் மண்ணின் பதிவுகளை முன்வைக்க வேண்டும்.

எழுத்துலகின் எனது மூன்று ஞானத் தந்தையர்களை நன்றியு டன் நினைவில் கொள்கிறேன். முதற்குரு என் தந்தை அமரர் வேலுப் பிள்ளை வேதநாயகம். இரண்டாவது குரு உதயன் நாளிதழின் பிரதம

ஆசிரியர் பெருமதிப்புக்குரிய ம.வ.கானமயில்நாதன்.

மூன்றாவது குரு என்னை தேசிய, சர்வதேச அளவுகளில் தெரிய வைத்த தினக்குரல் வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியர் பெருமதிப் பிற்குரிய பாரதி இராஜநாயகம்.

இந்த நூலில் என்னை வாழ்த்தியதுடன் இத் தொடரின் வெற்றிப் பயணத்திற்கும் உதவிய மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர் களுக்கும் நன்றிகள் கோடி.

இத்தொடரின் வெற்றிக்கு எனக்கு மகிழ்வான வீட்டுச் சூழலை அமைத்துத் தந்த அன்பு மனையாள் சற்குணேஸ்வரி, மகன்கள் இலக்கியன், இந்துயன் ஆகியோருக்கும் நன்றிகள்.

இந் நூலின் அட்டைப்படத்திற்கான ஓவியத்தை வரைந்து தந்த அன்புத் தம்பி ஊடகவியலாளர் ப.அஸ்வின் சுதர்சனுக்கு உளமார்ந்த நன்றிகள்.

இந் நூலை தமது சொந்தப் புத்தகம் போல உணர்வுடன் அழகுற தரமாக அச்சிட்டுத் தந்த தேவி Printers உரிமையாளர் குடும்பத்திற்கும் நன்றிகள் கோடி கோடி.

யாழ்ப்பாண நினைவுகள்குறித்து எழுதிய கட்டுரைகள் 25 நூல் உருவாகாத நிலையில் உள்ளது.தற்போது வெளிவந்துள்ள பாகம் 2 க்கு கிடைத்த ஆதரவு போல கிடைக்குமாயின் அதனையும் வெளிட முடியுமென நம்புகிறேன்.

நன்றி

**வேதநாயகம் தபேந்திரன்**

"தேன்தமிழ்"


கைதடி வடக்கு, கைதடி,

யாழ்ப்பாணம்,

2015 ஜூலை 10

# பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| 1. | ஹர்த்தால்கால நினைவுகள் | 01 |
| 2. | பாஸ் நடைமுறையும் வடபுல மக்களும் | 09 |
| 3. | பனங்காய் கால பழைய நினைவுகள் | 19 |
| 4. | பட்டத்தை வட்டமிடும் நினைவுகள் | 31 |
| 5. | அருகிப்போன பாரம்பரியங்கள் | 42 |
| 6. | வாழ்வாதாரங்கள் தந்த சீட்டு முறை | 51 |
| 7. | யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்திய சைக்கிள் | 57 |
| 8. | பள்ளியில் பயின்ற நினைவுகளின் மீட்டல் | 68 |
| 9. | வயலும் வாழ்வும் | 75 |
| 10. | டிஜிற்றலின் வருகையால் தொழில் இழந்த ஓவியர்கள் | 87 |
| 11. | தொலைக் காட்சியின் வருகை ஏற்படுத்திய சலசலப்பு | 94 |
| 12. | சூத்திரக் கிணறும் விவசாயமும் | 109 |
| 13. | மாறிப்போன உபசரிப்பு முறைகள் | 114 |
| 14. | நிகழ்வுகளை மீட்டுப் பார்க்க உதவும் புகைப்படங்கள் | 121 |
| 15. | ஊரடங்கு வாழ்க்கை | 133 |
| 16. | சேர்க்கஸ், உடற்பயிற்சி கால நினைவுகள் | 146 |
| 17. | போர்க்காலமும் வியாபாரமும் | 155 |
| 18. | வல்வெட்டித்துறையும் இந்திரவிழாவும் | 178 |
| 19. | மின்சாரம் இல்லாதகால நினைவுகள் | 185 |



“பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகம் பற்றி நீங்கள் அறிவீர்கள். பத்திரிகைத்துறையும் ஒரு பல்கலைக்கழகம் தான். இத்துறையில் அரசியல், பொருளாதாரம், சமுதாய அமைப்பு, விவசாயம், கைத்தொழில் போன்ற விடயங்களையும் உலக மக்களின் வாழ்வும் வளமும் பற்றிய விபரங்களையும் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும். இவ் விடயங்களில் நீங்கள் பெறும் அனுபவமும் முதிர்ச்சியும் உங்களை முழு மனிதனாக்கும்.”

**எஸ்.ரி.சிவநாயகம்**

**நன்றி** - *வீரகேசரி அமுதவிழா*
*(80 ஆம் ஆண்டு) சிறப்புமலர்*
*06.08.2010*




# ஹர்த்தால்கால நினைவுகள்

“பந்த்” இந்தச் சொல்லை கேள்விப்பட்டிருப்பீர்கள். தென்னிந் திய சினிமாப் படங்களில் கேபிள் தொலைக்காட்சி மெகாத் தொடர் களில் பழக்கமான சொல்லாக இருக்கும் வட இந்திய, ஹிந்தி மொழிச் சொல் தான் இந்த பந்த். அதற்குச் சமனாக நீங்கள் அறிந்த சொல் தான் ஹர்த்தால். Hartal என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பணிப் புறக்கணிப்பு என்ற தூய தமிழ்ச் சொல்லைப் பாவனைக்கு இட்டுள் ளனர். ஹர்த்தால் எனும் சொல்லை வடமொழிச் சொல்லெனத் தவ றாக நினைப்பவர்களும் உள்ளனர்.

ஹர்த்தால் இலங்கையின் இயல்பு வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு போராட்ட வடிவமாக இருந்தது. யாழ்ப்பாண வாழ்வியலில் மூன்று தசாப்தங்களாகப் பெரும் தாக்கத்தைச் செலுத்திய ஹர்த்தால் ஆவணப்படுத்தும் நோக்குடன் இன்று மீள் பதிவிற்கு உட் படுத்தப்படுகின்றது

- வேதநாயகம் தபேந்திரன் -

ஹர்த்தால் என்ற இன்றைய பத்தியின் எழுத்துக்களை விதைக்கும் போது சர்ச்சைகளை அறுவடையாகச் செய்யக்கூடாது என விரும்புகின்றேன். அரசியல் முற்றும் சாராமல் பிரசார எழுத்துக்கள் வராமல் கூரிய வாளின் மீது நடப்பது போலத்தான் எழுத்துருவாக்கம் செய்துள்ளேன். ஹர்த்தாலின் ஆரம்ப காலங்களை நோக்கிப் பயணிப் போமாயின் 1977 ஆம் ஆண்டில் தான் ஆரம்பத்தைக் காண முடிகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) அரச எதிர்ப்பின் ஒரு வடிவமாக ஹர்த்தாலைப் பயன்படுத்தியதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். கடைகளைப் பூட்டி, பாடசாலைகள் இயங்காது, அரச, தனியார் அலுவலகங்கள் இயங்காது பொது வாழ்க்கையை சீர்குலைப்பதாக இப்போராட்டம் அமைந்தது.

1980 ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் வலுப்பெறத் தொடங்கியது. அப்போது பொது மக்களின் உணர் வலைகளை வெளிப்படுத்தும் வழிமுறையாக ஹர்த்தால் அமைந் தது. அப்போது இருந்த இயக்கங்களின் பெயர்களைப் பார்ப்போம். தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOT), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), தமிழீழ விடுதலை இராணுவம் (TELA), தமிழீழ தேசிய விடுதலைப் பேரவை (NLFT). என்ற இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் 1986 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் "ஈழம்" எனப் பொறிக்கப்பட்ட தபால் முத்திரை ஒன்றையும் வெளி யிட்டது குறிப்பிடத்தக்கது. 1980 களின் பின்னாட்களில் ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF), ஈழமக்கள் ஜனநாயக் கட்சி (EPDP) என்பவை உருவாகின. இவை முதற் சொன்ன இயக்கங்களில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் ஏற்பட்ட பிரிவினைகளால் உருவாகிய இயக்கங்களாகும். அது போலவே 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னரான சூழ்நிலைகளால் மட்டக்களப்பைத்

தலைமையிடமாகக் கொண்டு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாகியது.

இங்கு குறிப்பிட்ட இயக்கங்கள் தமது பரப்புரைகளை மேற்கொள் ளவென மாதாந்தப் பத்திரிகைகளை அல்லது காலண்டு பத்திரிகை களை வெளியிட்டு வந்தன. அவற்றைப் பார்ப்போம். தமிழீழ விடுத லைப் புலிகள் (LTTE) - விடுதலைப் புலிகள், ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி (EPRLF) – கண்ணோட்டம். விடுதலை தமிழீழ மக் கள் விடுதலைக் கழகம் (PLOT) – புதிய பாதை, தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) – செந்தணல் என்பவை குறிப்பிடத்தக்கவையாக வெளிவந்தன. இவையே பின்னாளில் போர்க்கால இலக்கியங்கள் என்ற திசையை நோக்கிப் பயணிக்க வைத்ததாக இலக்கிய ஆர்வ லர்கள் கூறுகின்றார்கள்.

நாம் எமது ஹர்த்தாலின் திசையை நோக்கி மீண்டும் வருவோம். முதற் சொன்ன இயக்கங்களின் காலத்தில் தான் ஹர்த்தால் என்ற வடிவம் பிரபலமானது. அந்நாளைய தினசரிப் பத்திரிகைளை எடுத் துப் பார்ப்போமாயின் "நாளை வடக்கு – கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு." என்ற செய்தியை இடையே பார்க்கக் கூடியதாயிருந்தது. இயக்கமொன்றின் பெயரைக் குறிப்பிட்டு அச் செய்தி பிரசுரமாயிருக்கும். ஹர்த்தால் நடக்கும் அன்றைய தினம் பத்திரிகைச் செய்தியில் **'இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு'** என முன்பக்கச் செய்தியாக இட்டிருப்பார்கள். சில பத்திரிகைகள் இச்செய்தியை கறுத்த தடித்த எழுத்துக்களால் தலையங்கமிட்டுப் பிரசுரித்திருப்பார்கள். ஹர்த்தால் நடந்த மறுநாள் பத்திரிகையில் 'நேற்று பூரண ஹர்த்தால் காரணமாக இயல்பு நிலை முற்றாகவே செயலிழப்பு' என்ற செய்தி வந்திருக்கும்.

இயக்கங்கள் பல இருந்த போது தான் ஹர்த்தால் அடிக்கடி நிகழ்ந் தது. குறித்த ஒரு இயக்கம் ஏதாவது ஒரு காரணத்தை முன் வைத்து

ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரி அது வெற்றியளித்திருக்கும். உடனேயே மற்றுமொரு இயக்கம் ஓரிரு நாட்களின் பின்பாக இன் னுமொரு காரணத்தை முன்னிறுத்தி ஹர்த்தால் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுக்கும்.

ஹர்த்தால் நாட்களில் ரி.வி.டெக், சினிமாப் படக் கொப்பி வாட கைக்கு விடும் கடைகளுக்கு, வீடுகளுக்கு திருவிழா தான். முதல் நாள் மாலையே இவை இல்லாத குடும்பங்கள் சில வாடகைக்கு எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.

கோரும் மற்றைய இயக்கத்தை விட தமது ஹர்த்தாலின் போது இயல்பு நிலை முழுவதுமாக பாதிக்கப்படுவதில் கவனமாக இருக்கும். பலப்பரீட்சை,ஒரு இயக்கம், ஒரு நாள் ஹர்த்தால் கடைப்பிடிக்குமாறு கோரினால் மற்றொரு இயக்கம் இரண்டு நாள், மூன்று நாள் தமது ஹர்த்தால் என அறிவிக்கும்.

ஒரு வார ஹர்த்தால் கூட நடந்திருக்கிறது. 1984,1985,1986 ஆம் ஆண்டுகளைத் தான் ஹர்த்தால் யுகத்தின் உச்சமெனக் குறிப்பிட லாம். போராட்ட இயக்கங்கள் மளமளவென வளர்ந்த காலங்கள் இவை. இதனால் தமது அரசியல் இருப்பைக் காட்டுவதற்காக ஹர்த் தால் இடையிடையே நடந்தது. இயல்பு நிலை பாதிக்கப்படுதல் என்ற சொல்லையும் இங்கு விளக்கத்தான் வேண்டும். ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் நாளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் தனி யார், கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், சந்தைகள் இயங்காது. அத்துடன் நகர்ப்புறக் கடைகள், கிராமப் புறக்கடைகளும் மூடப்பட் டிருக்கும்.

கிராமப் புறக் கடைகளும் மாலை ஆறு மணியானதும் மீளவும் திறக்கப்பட்டு விடும். பலசரக்குக் கடைகள் சில, காலை வேளையில் பின்கதவால் வியாபாரம் செய்து கொள்ளும். அன்றாட உழைப்

பாளிகளின் (Bread Winners) தேவைகளை நிறைவு செய்யவே இக் கடைகள் பின்கதவு வியாபாரத்தைச் செய்தன. சில வேளைகளில் இந்த பின்கதவு வியாபாரமும் தடைப்படுத்தப்பட்டதுண்டு.

நகர்ப்புறக் கடைகள் மூடினால் அன்று முழுவதுமே ஒரே மூடல் தான். பொதுப் போக்குவரத்துச் சேவைகளான அரச போக்குவரத்துச் சேவை (C.T.B) தனியார் போக்குவரத்துச் சேவைகள் முற்றாகவே தடைப்பட்டிருக்கும். நோயாளிகளை அவசர தேவைக்கு மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்ல ரக்சி, கார், வான், தட்டிவான் (Chav-alot lorry) போன்றவை தான் பயன்படுத்தப்பட்டன. இப்போது எங்கும் வியாபித்திருக்கும் ஆட்டோ அப்போது இல்லை.

தென்னிந்திய சினிமாப் படங்களில் 'பந்த்' நடக்கும் போது அவசரத்திற்கு நோயாளிகளைக் கொண்டு செல்லவிடாமல் வாகனக் கண்ணாடிகளை உடைத்து அரசியல்வாதிகளின் அடிவருடிகள் அட்டகாசம் செய்வதைப் பார்த்திருப்பீரகள். சில நோயாளரின் இறப்பும், கர்ப்பிணிப் பெண் வீதியில் அவஸ்தைப்பட்டுத் துடித்துப் பிரசவம் நடு வீதியில் நடப்பதையும் பார்த்திருப்பீர்கள். ஆனால் வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் அக்காலங்களில் இது போன்ற செயல்கள் நடக்கவில்லை. ஹர்த்தால் நாகரிகமாகவே நடத்தப்பட்டது.

ஆனால், பின்னாளில் 2002 முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலங்களில் ஒரு சில இடங்களில் தென்னிந்திய ஸ்ரைலில் சிலர் ஈனத்தனமாக நடந்து ஹர்த்தாலை அனுஷ்டித்தமையைச் சமூக ஆர்வலர்கள் கவலையுடன் கூறினார்கள். முற்சொன்ன 1984, 1985, 1986 ஆம் ஆண்டுகளில் ஹர்த்தால் நடந்தபோது மருந்துக் கடைகள் (பாமசி – Pharmacy), உணவகங்கள் திறந்து மக்களுக்குரிய சேவைகளை வழங்கினார்கள்.

மனிதாபிமான நோக்கம் கருதி அவற்றைத் தடைப்படுத்த ஹர்த்

தால் அழைப்பு விடுத்தோர் விரும்பவில்லையெனக் கூறினார்கள். அக்காலத்தில் திடீரென ஹர்த்தால் வருவதன் காரணத்தால் யாழ்ப் பாணத்து நடுத்தர வர்க்கக் குடும்பங்கள், பணவசதி படைத்தோர் தமது வீட்டுக் குசினிகளில் (சமையலறை) புழுங்கல் அரிசி, பச்சை அரிசி, கோதுமை மா, அரிசி மா, சோயா மீற், பயறு, வெந்தயம், தேங்காய், உருளைக்கிழங்கு, ரின்மீன் கருவாடு என்பவற்றைக் கையிருப்பாக வைத்திருக்கப் பழகினார்கள். தமது உணவுத் தேவை களை வீட்டிலிருந்தவாறே நிறைவு செய்து கொண்டார்கள். யுத்த காலங்களில் கடைகள் அடிக்கடி மூடப்பட்ட போது உணவுத் தட்டுபபாடு வீட்டில் ஏற்படாதிருக்க இவ்விதம் உணவுக் கையிருப்பைப் பேணிக் கொண்டார்கள்.

அன்றாடக் கூலி உழைப்பாளர்கள் நிலை தான் பெரிதும் பரிதா பகரமானது. உழைப்புக்கும் போக முடியாத நிலை. பின் கதவால் வியாபாரம் நடக்கும் ஒரு சில பலசரக்குக் கடைகளில் உணவுப் பொருள் வாங்க பணமும் இல்லை. வயிறு நிறையப் பசியுடன் நாட் களைக் கடத்த வேண்டிய பரிதாப நிலை. ஹர்த்தால் நாட்களில் ரி.வி, டெக் சினிமாப்படக் கொப்பி வாடகைக்கு விடும் கடைகளுக்கு, வீடுகளுக்கு திருவிழா தான். முதல் நாள் மாலையே இவை இல் லாத குடும்பங்கள் சில வாடகைக்கு எடுத்துக் கொண்டு போய் விடு வார்கள்.

வளவுவேலை, தோட்ட வேலைகள் இல்லாத குடும்பங்கள் வெட் டிப் பொழுது போக்காட்ட இருக்க வீட்டில் பகல், இரவாகப் படம் போட்டு சில குடும்பங்கள் குழுமியிருந்து படங்களைப் பார்த்துப் பொழுதைப் போக்கினார்கள். ஹர்த்தால் நடந்த ஆரம்ப காலங்களில் பாட சாலைக்கு ஹர்த்தால். ஆனால், ரியூசன் எனப்பட்ட தனியார் கல்வி நிலையங்களுக்கு ஹர்த்தால் இல்லை. இதனால் பாடசாலைக் கல்வி தொய்ந்து போக பொதுப் பரீட்சைகளுக்கான பாடத் திட்டங்களை நிறைவு செய்ய மாணவர்கள் ரியூட்டரிகளை நோக்கிச் சென்றார்கள்.

சிறிய பருமனில் இயங்கத் தொடங்கிய ரியூசன் சென்ரர்கள் மளமளவென வளரத் தொடங்கின. பாடசாலையின் மிகை நிரப்புக் கல்வியின் ஒரு பகுதியை ரியூட்டரிகள் வழங்கின. பாடசாலைகளின் முக்கியத்துவத்தைச் செயலிழக்கச் செய்த காரணிகளில் ஒன்றாக ஹர்த்தாலும் அமைந்தது வருந்தத்தக்கது. இப்போது ரியூசன் ஒரு பாஷன் (Fashion) ஆகிவிட்டதெனக் கல்வியியலாளர்கள் கவலை யுடன் கூறுகின்றனர்.

பின்னாளில் பாடசாலைக்கு ஹர்த்தால் என்றால் ரியூசனுக்கும் ஹர்த்தால் என்ற நடைமுறை வந்தது. பாடசாலை செல்லக் கள்ளப்பட்ட மாணவர்களுக்கு ஹர்த்தால் வந்தால் பேரானந்தம் தான். வீட்டில் நின்று பிள்ளைகள் குழப்படி செய்த போது கறுத்தாளும் சிவத்தாளும் மாறி மாறி வருவதால் இந்தப் பிள்ளைகளால் கரைச் சலென மூத்தோர் புறுபுறுத்த சம்பவங்களும் நடந்தது.

சற்றுத் தூரப் பாடசாலைக்குச் செல்லும் சில மாணவர்கள் இன்று ஹர்த்தால். அதனால் பாடசாலை நடைபெறாது என்று கல்வியறிவு குறைந்த தமது பெற்றோரை ஏமாற்றிய சம்பவங்ளும் நிகழ்ந்தன. முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் படித்த சின்னஞ் சிறுசுகள் செல்லம் பொழிந்த வேடிக்கைச் சம்பவங்களும் அப்போது நிகழ்ந்தன. 1987 ஜூலை 29 ஆம் திகதியில் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ராஜீவ் காந்தி ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது. இதன் எதிரொலியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும், தென்பகுதிகளிலும் ஒரே நாளில் ஹர்த் தால் கடைப்பிடிக்கப்பட்டு நாடு முழுவதும் செயல் இழந்து போனமை யும் குறிப்பிடத்தக்கது.

காலப் போக்கில் ஹர்த்தாலின் செயல் வடிவங்கள் நாட்டில் சில சில மாற்றங்களுக்கு உட்பட்டது. குறித்த தேவை கருதி குறித்த ஒரு பிரதேசம் பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்தது. அரச ஆதரவுக்

கட்சிகள், இயக்கங்கள் ஹர்த்தாலை நடத்தின.

யுத்தம் முடிந்த பின்பு இந்த ஹர்த்தாலுக்கான தேவைகள் பெரு மளவில் அற்றுப்போய் விட்டன. ஆயினும் ஆங்காங்கே ஹர்த்தால் தலை தூக்கவே செய்கிறது. கால மாற்றங்கள் ஹர்த்தால் என்பதை முற்றாகவே அற்றுப் போகச் செய்யக் கூடும்.

ஆனாலும், வாழ்ந்த வாழ்வின் சுவடுகள் மீது மீண்டும் நடந்து பார்க்கும் வேளைகளில் நினைவுகூரப்பட வேண்டியதாக ஹர்த்தாலும் உள்ளது. அதனால் வாழ்வியல் ஆவணம் என்ற நோக்கத்தை மட்டும் கருதி இங்கே பதிவு செய்துள்ளேன்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2012 டிசெம்பர் – 2**



# பாஸ் நடைமுறையும் வடபுல மக்களும்

பாஸ்போட் (pass Port), விசா (Visa) என்பவற்றை நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாடு ஒன்றின் அரசியல் எல்லையைக் கடப்பதற்கான அனுமதிச் சீட்டாக பாஸ்போட் எனப்படும் கடவுச்சீட்டு உள்ளது.

ஒரு நாடு தனது நாட்டிற்குள் பிறநாடுகளின் பிரசைகள் உள் நுழைய தூதரகம் ஊடாக வழங்கும் அனுமதி பாஸ்போட்டில் இடம் பெறுவது விசா எனப்படுகிறது. எமது நாட்டில் நடந்து முடிந்த உள் நாட்டு யுத்தத்திலும் பாஸ் (Pass) நடைமுறை இருந்தது. இதனையும் முதற்சொன்ன பாஸ்போட், விசா நடைமுறைக்கு ஒத்தது என அர சியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். யுத்தம் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றது. ஆனாலும், பாஸ் நடை முறை வடமாகாணத்தில் தான் நடைமுறையில் இருந்தது. ஒரு முறை மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை வெலிகந்தை ஊடாக வெளியேறும் வாகனங்களுக்கும் பாஸ் நடைமுறைக்கு வந்தது.

பின்பு நீக்கப்பட்டது.

வடபுல (வடமாகாண) மக்களின் வாழ்வியலில் ஒன்றாக இருந்த பாஸ் நடைமுறையையும் பாதுகாப்பு (Clearence) முறையையும் ஆவணப்படுத்துமாறு வாசகர்கள் விடுத்த வேண்டுகோள் இன்று நிறைவேறுகின்றது. அரசியலாக இல்லாமல் ஆவணமாகப் பாருங்கள்.

இரண்டாம் ஈழப்போர் 1990 ஜூன் 15 ஆம் நாளில் வடக்கில் வெடித்தது. அப்போது அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பகுதி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பகுதி என இரு பிரதேசங்கள் உருவாகின. 1987 ஜூலை மாதத்திற்கு முந்திய யுத்த நிலமைகளிலும் இவ்விதமான நிலப்பகுதிகள் இருந்தன. ஆயினும் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாத யுத்தத்தின் பின்பு தான் பாஸ் (Pass) எனப்படும் பிரயாண நடைமுறை வந்தது.1990 ஜூனில் வடக்கில் பெருமெடுப்பில் யுத்தம் வெடித்தவுடன் ஆனையிறவு இராணுவ, சோதனைச் சாவடி ஊடான யாழ் கண்டி வீதி போக்கு வரத்து தடைப்பட்டது.

அப்போது கேரதீவு - சங்குப்பிட்டி பிரதேசக் கடல் மார்க்கமாக பாதை (Ferry) ஊடாகக் கடந்து இரவு நேரப் பயணத்தைப் பொது மக்கள் மேற்கொண்டார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதற்கு நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் விடுதலைப் புலிகளால் பாஸ் வழங்கப்பட்டது. பின்நாளில் இந்தப் பாஸ் நடைமுறை கைவிடப்பட்டது. ஆனால், ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக வவுனியாவுக்கும், நாட்டின் தென் பகுதிக்கும் செல்வதற்கான பாஸ் நடைமுறைகள் தொடர்ச்சியாக இருந்தது. ஆரம்பத்தில் இலகுவான நடைமுறைகளில் பாஸ் எனப்பட்ட பிரயாண அனுமதியை வழங்கினார்கள்.

இதற்காக குடும்ப அட்டை முறைமையொன்றை ஏற்படுத்தினார்

கள். பிரதேசம் தோறும் பிரயாண அனுமதி (பாஸ்) வழங்குவதற்கான அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை தமக்கென வாரத்தில் வேலை நாட்களை ஒதுக்கி பாஸ் வழங்கின. விசிட்டிங் காட் (Visiting card) அளவில் இந்த பாஸ் அனுமதிப் பத்திரம் இருக்கும். அதில் பயண அனுமதி ஆரம்பிக்கும் திகதி, முடிவடையும் காலப் பகுதி என்பன குறிப்பிடப்பட்டிருக்கும். பிரயாணம் மேற்கொண்ட ஒருவரோ, அக்கு டும்ப உறுப்பினர்களோ தமது பயணம் முடிந்த பின்பு ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தரும் உள்நுழைந்த அனுமதியைச் சமர்ப் பித்து குடும்ப அட்டையில் பதிவு நீக்கவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வைத்தே பாஸ் பெறக் கூடியதாக காலப் போக்கில் ஏற்பாடுகள் செய்யப்பட் டன. அதேபோல அரச திணைக்கள, கூட்டுத்தாபன, வங்கி உறுப் பினர்களுக்கும் பிரத்தியேக நடைமுறை ஒன்று இருந்தது. 1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குடும்பமாகச் செல்ல பாஸ் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டது. குடும்ப உறுப்பினர்கள் தமது பயணத் தின் நோக்கத்தைக் கூறி, சிலவேளை ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதாரப்படுத்தியும் பாஸ் பெற வேண்டியிருந்தது. பரீட்சை, நேர்முகப் பரீட்சை, அரச நியமனம், வெளிமாவட்ட பல்கலைக்கழக அனுமதி, நோய்க்கு சிகிச்சை பெறல் உறவினர் வீட்டு நிகழ்வுகள் போன்றவற் றிற்கு தனியான பாஸ் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

ஆரம்பத்தில் இளம் பராயத்தினருக்கு தேவை கருதி பாஸ் வழங்கப்பட்டது. நாளடைவில் 12 வயது முதல் 30 வயது வரையிலா னோர் பாஸ் பெறுவதற்கு இந்த வயதுள்ள இரு பிள்ளைகள் கொண்ட குடும்ப உறுப்பினர் ஒருவர் பிணை நிற்க வேண்டுமென்ற நடைமுறை வந்தது. பயணம் செய்பவர் 500 ரூபா பிணைப் பணம் செலுத்த வேண்டும். ஆனால் அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. புகைப்படங்கள் 2 கொடுக்க வேண்டும். குடும்ப அட்டையில் பிணை நிற்கும் விபரமும் பாஸ் பெற்றவரின் குடும்ப அட்டையில் பாஸ் பெற்ற

விபரமும் றப்பர் சீலால் பொறிக்கப்பட்டிருக்கும். பாஸ் பெற் றவர் திரும்பி வந்து குடும்ப அட்டையில் பதிவு நீக்கினால் தான் அடுத்தவர் பாஸ் பெறலாம். அதேபோல பிணை வைத்தவரும் குடும்ப அட்டையில் பிணை நீக்கினால் தான் வேறு ஒருவருக்கு பிணை நிற்கலாம். அல்லது தான் பாஸ் பெற்று ஓமந்தை ஊடாகப் பயணிக்கலாம். கடுமையான இந்த நடைமுறையால் வயதுக்கட்டுப்பாட்டிலுள்ள ஒருவர் நினைத்தவுடன் தேவை கருதி பயணத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது.

பாஸ் பெறும் படிவங்களை நூறு ரூபா செலுத்தி அங்கீகரிக்கப் பட்ட விற்பனை நிலையங்களில் பெறலாம். வவுனியா தாண்டிக் குளத்திற்கு வடக்காக யாழ்ப்பாணம் வரையான பிரதேசம் எங்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் இந்தப் பாஸ் நடைமுறைக்குள் வந்தனர். யாழ்ப்பாணத்தில் வசித்த மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் பாஸ் பெறுவதற்கு விசேஷட நடைமுறையொன்று இருந்தது. இந்த மாவட் டங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு இயங்கிய விடுதலைப் புலிக ளின் முகாம்கள் எம்பஸி (Embasy) என அழைக்கப்பட்டது.

மன்னார் எம்பஸி, ரிங்கோ (திருகோணமலை) எம்பஸி போன்ற சொற்களால் பொது மக்களால் அழைக்கப்பட்டது. எம்பஸி என்பது தூதரகம் என்ற கருத்தைத் தருகின்றது. இந்த எம்பஸிகளே மேற் சொன்ன மாவட்டங்களில் இருந்து வந்தவர்களுக்கு பாஸ் வழங்கும் நடைமுறைகளைச் செய்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக அரசாங்கப் படைகள் 1995 ஆகஸ்ட் மாதம் இடி, முழக்கம் இராணுவ நடவ டிக்கையை மேற் கொண்டனர். பின்பு இது சூரியக்கதிர் (ரிவிரச) நடவடிக்கை எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1995 ஒக்டோபர் 31 ஆம் திகதி பெரிய யாழ்ப்பாண (யாழ்ப்பாண, நல்லூர் பிரதேச செயலகப்

பிரிவு இணைந்தது) வலிகாம மக்கள் மாபெரும் இடப்பெயர்வை மேற்கொண்டார்கள். தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களுக்குச் சென்றார்கள். ஓரிரு இலட்ச மக்கள் வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு சென்றார்கள். அப்போது பாஸ் வழங்கும் நிலையங்கள் தற் காலி கமாக மூடப்பட்டன. சில நாட்களின் பின்பு இறுக்கமான நடைமுறை களின் கீழ் விநியோகிக்கப்பட்டது.

வன்னிப் பிரதேசத்திலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வவுனியா சென்று மரக்கறிகள், தட்டுப்பாடான வீட்டுப் பாவனைப் பொருள்க ளைக் கொள்வனவு செய்த வியாபாரிகளுக்கென பிரத்தி யேகமாக பாஸ் வழங்கும் முறையொன்றும் இருந்தது. யாழ்ப்பாணம் முழு மையான இராணுவக் கட்டுப்பாட்டினுள் 1996 ஏப்ரல் 19 ஆம் திகதி யின் பின்னரான காலங்களில் வந்தது.

அப்போது வன்னிப் பிரதேசம் மட்டும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருந்தது. அங்கும் பாஸ் நடைமுறை தொடர்ந்தது. ஆனாலும் யாழ்ப்பாணம் சென்று மீள்குடியமர விரும்பிய பல்லாயி ரக்கணக்கான குடும்பங்களுக்கு பயண அனுமதி (பாஸ்) வழங்கப் பட்டது. காலப் போக்கில் சில மாதங்களுக்குப் பின்பாக இது நிறுத் தப்பட்டது. அப்போது பூநகரி பிரதேசத்திலிருந்து ரகசியமாகப் படகுகள் மூலம் யாழ் குருநகர் இறங்கு துறைக்கு சில ஆயிரம் குடும்பங்கள் வந்து சேர்ந்தன. சீநோர் தொழிற்சாலைக் கட்டடத்தில் இவர்கள் தங்க வைக்கப்பட்டு தமது பிரதேசங்களில் மீளக்குடியமர அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டனர்.

வன்னிப் பிரதேசத்தில் பின்பு விடுதலைப் புலிகளால் பாஸ் நடைமுறை தொடர்பாக இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட் டன. வெளிமாவட்டங்களிலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கு வருபவர் களுக்கு உள்நுளையும் பாஸ் முதலில் சாதரணமாகவே வழங்கப் பட்டது. 1997 மே மாதம் அரசாங்கப் படைகளால் விடுதலைப் புலிக

ரின் நிலப்பகுதியை கைப்பற்றும் நோக்கில், ஜயசிக்குறு (வெற்றி ிச்சயம்) படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வெளிமாவட்டங்களிலிருந்து வன்னிப் பிரதே சத்திற்குள் வருபவர்கள் பொதுக் கட்டடமொன்றில் ஓரிரு நாட்கள் தங்க வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்பு, பிரயாணத் திற்கான தகுந்த காரணங்களைக் கண்டறிந்த பின்புதான் பாஸ் வழங்கப்பட்டது.

வவுனியா தாண்டிக்குளம், ஓமந்தை போன்ற இடங்களினூடாக இரு பகுதிக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கடக்கும் இடங்கள் இருந்தன. காலப் போக்கில் இவை யுத்தம் காரணமாக மூடப்பட மன்னார் உயிலங்குளம், பிரமாணலங்குளம் போன்ற இடங்களூடான போக்கு வரத்து மையங்கள் உருவாகின.

2002 பெப்ரவரி 22 ஆம் நாளில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. 2002 ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் யாழ். முகமாலை ஊடாகப் பொது மக்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். அதேபோல வவு னியா ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாகவும் பொது மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதனால் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இருந்த மக்களுக்கான பாஸ் நடைமுறையைக் கைவிட வேண்டி வந்தது. ஓமந்தை ஊடாக தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வரும் பொது மக்களை புளியங் குளத்தில் அமைத்த சோதனைச் சாவடியில் பரிசோதித்து விட்டு வடக்கே யாழ்ப்பாணத்திற்குச் செல்ல அனுமதித்தனர். இதன் போது வழங்கப்பட்ட பாஸ் படிவம் காலத்திற்கு காலம் மாற்றங்களுக்கு உட்பட்டது. விடுதலைப் புலிகளால் புளியங்குளத்தில் வழங்கப்பட்ட பாஸ் துண்டின் மூலப் பிரதியை முகமாலையிலிருந்த அவர்களது சோதனைச் சாவடியில் ஒப்படைத்துவிட்டு யாழ்ப்பாணத்தினுள்

பயணிக்க முடியும்

அதேபோல வெளிமாவட்டங்களில் இருந்து வருவோர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்வதற்கான காரணத்தைக் கூறிவிட்டு பாஸ் பெற்று பயணிக்கலாம். யுத்தமற்ற இக்காலங்களில் பாஸ் நடைமுறை வெறுமனே அடையாளப்படுத்தும் நோக்கத்துடன் மட்டுமேயிருந்தது. தாராள அனுமதி வழங்கப்பட்டது. அதுபோல மன்னார் உயிலங்குளத்தினூடாகப் பயணிக்கவும் பாஸ் நடைமுறை பின்பற்றப்பட்டது. முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் சோதனைச்சாவடிகளில் பொது மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் (ICRC) பணிக்கு இருந்தார்கள்.

இவர்கள் ஆரம்பத்தில் வாரநாட்களில் மட்டும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரையும் பணியில் இருந்தார்கள். பின்பு வாரம் 7 நாட்களும் காலை 7 மணி முதல் மாலை 5.00 மணிவரையும் பணியிலிருந்தார்கள்.யாருடைய கண்பட்டதோ தெரியவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) சிறப்பான வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இப்போக்குவரத்து சரியாக 4 வருடங்கள் 4 மாதங்கள் 4 நாட்களின் பின்பதாக 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முழங்கிய துப்பாக்கி வெடிகளுடன் முடிவுக்கு வந்தது.

அத்தினத்தில் ஐந்தாவதும் இறுதியுமான ஈழப்போர் ஆரம்பித்தது. அப்போது வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவது உள்நுழைவதற்கான பாஸ் நடைமுறை விடுதலைப் புலிகளினால் மீண்டும் மிக இறுக்கமான நடைமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அரசாங்கப் படை வீரர்களால் வழங்கப்பட்ட பாஸ் (Pass) எனப்பட்ட பிரயாண அனுமதி நடைமுறைகளின் மீதும் பார்வையைச் செலுத்

துவோம்.

1995 அக்டோபரில் நிகழ்ந்த யாழ்ப்பாண இடம் பெயர்வின் போது வவுனியா, மன்னார் மாவட்டங்களில் வசித்தோருக்கு பாஸ் நடைமுறை கொண்டு வரப்பட்டது. வவுனியாவில் நிரந்தரமாக தற் காலிகமாக வசித்தோருக்கு வதிவிட பாஸ் வழங்கப்பட்டது. வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் மக்கள் புகையிரத நிலையத்திற்குப் பின்பாக இருந்த குட்செற் (Good set) முகாமில் தங்க வைக்கப்பட்டனர். இந்த முகாம் கோழிக்கூடு முகாம் எனப்பட்டது. இங்கு சில நாட்களோ, சில வாரங்களோ, சில மாதங்களோ ஒருவர் தங்க வேண்டியிருக்கும்.

தமது பயண நோக்கத்தை நிரூபித்த பின்பு பாஸ் வழங்கப் பட்டு வவுனியாவினுள் தங்கவோ, வெளிமாவட்டம் செல்லவோ அனு மதிக்கப்பட்டனர். அப்போது அரச படைகளால் வழங்கப்பட்ட பாஸ் பத்திரத்தை ஈரற்பெரியகுளம் இராணுவ முகாம் சோதனைச் சாவ டியிலுள்ள பொலிஸாரிடம் அல்லது புகையிரத நிலைய பொலிஸா ரிடம் சமர்ப்பித்த பின்புதான் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது. இதற்கு முன்பாக ஆரம்பத்தில் வடக்கிலிருந்து தாணடிக்குளம் ஊடாக வருவோரில் இளைய வயதினர் தாண்டிக்குளம் பிரமண்டு வித்தி யாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். அங்கு விசாரிக்கப்பட்டு புகைப் படம் எடுக்கப்பட்ட பின்பு பயண அனுமதிச் சீட்டு பிறவுண் அன்ட் கம்பனியில் வைத்து வழங்கப்படும்.

அதற்கு முன்பதாக வடக்கிலிருந்து வவுனியா வருவோருக்கு பிறவுண் அன்ட் கம்பனியில் வழங்கப்படும் பாஸ் பெருமளவுக்கு இலகுவான நடைமுறையின் கீழ் வழங்கப்பட்டது 1994, 95, 96, ஆம் ஆண்டுகளில் நொச்சிமோட்டைப் பாலத்தின் ஊடாக வவுனியா விற்குள் வடக்கிலிருந்து வருவோரது எண்ணிக்கை சில சமயம் மட்டுப்படுத்தப்பட்டது. 1995 நவம்பர் மாதத்துடன் வடக்கிலிருந்து

வருவோர் யாவரும் முதற்சொன்ன குட்செற் முகாமில் தங்க வைக் கப்பட்ட பின்பே பாஸ் வழங்கப்பட்டது.

1996 இறுதிப் பகுதி முதல் அவ்வாறு வருவோர் வெளிக்குளம், நெலுக்குளம், வேப்பங்குளம் போன்ற பகுதி பாடசாலைகள், பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். பாஸ் வழங்க சில மாதங்கள் சென்றன. இக்காலங்களில் குறுக்கு வழியில் பாஸ் பெறும் வியா பாரம் கொடி கட்டிப் பறந்தது. இதற்கு முன்பாக 65 சில ஆயிரங்கள் பல ஆயிரங்கள் எனப் பணம் கைமாறியது. பாஸ் புறோக்கர் தொழி லும் கோலோச்சியது. வயதை அடைந்த முதியோர் அடையாள அட்டை எடுத்தவர்கள் பாஸ் பெறாமலேயே ஈரற்பெரியகுளம் ஊடாக நாட்டின் சகல பகுதிக்கும் தங்கு தடையின்றி போய்வர அனுமதிக்கப்பட்டார்கள்.


வவுனியாவுக்குள்ளும் இருக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், வடக்கிலிருந்து முதியோர் அடையாள அட்டைகளுடன் வந்தோர் அனுமதிக்கப்படவில்லை. வவுனியாவுக்குள் இருந்தோருக்கு பாஸ் வழங்கப்பட்டபோது வவுனியாவுக்குள் உள்ளே மட்டும், வவுனியாவுக்கு வெளியே போய் வருவதற்கானது என இரு வகையில் பாஸ் வழங்கப்பட்டது. வவுனியாவைச் சேர்ந்த நிரந்தர பாஸ் உள்ள ஒருவர் பிணை வைத்தால் தான் வவுனியா மட்டும் என பாஸ் பெற்றவர் தென் பகுதிக்குப் போய் வர முடிந்தது. இதனால் பணத்துக்குப் பிணை வைக்கும் புதிய தரகு வியாபாரமொன்றும் வளர்ந்தது.

7 நாள் பாஸ், 3 மாத, 6 மாத, 9 மாத பாஸ் கொம்பியூட்டர் பாஸ் எனப்பல வகையிலும் பாஸ் வழங்கப்பட்டது. 7 நாள் பாஸ் எடுத்து அதனை ஒவ்வொரு 7 நாளுக்கும் ஒரு முறை நீடித்து 9 மாதம், ஒரு வருடமெனத் தங்கியிருந்தனர். பிரவுண் அன்ட் கம்பனியில் தினந்தோறும் 1500 முதல் 2000 பேர் வரையில் பாஸ் பெறப் பலமணி நேரம் காத்திருப்பார்கள். ஓமந்தை ஊடாக ஒரு நாள் பாஸ் பெறும் வியாபாரிகள் சில பொதுமக்கள் அடுத்த நாள் காலை போய்விட

- வேதநாயகம் தபேந்திரன் -

வேண்டும். இங்குள்ள போட்டோ கொப்பி கடைகளுக்குப் பரபரப்பாக வியாபாரம் நடக்கும். 1990 ஜூனுக்குப் பின்னர் வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் வவுனியா விநியோக மைய நகரமாக இருந்த தால் மளமளவென வளர்ந்தது.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2012 டிசெம்பர் – 9**



# பனங்காய் கால பழைய நினைவுகள்

"மல்வான என்றால் ரம்புட்டான். களுத்துறை என்றால் மாங்குஸ் தான். பனை என்றால் யாழ்ப்பாணம்" கறுத்தக் கொழும்பான் என் றாலும் யாழ்ப்பாணம்." இவை இந்நாடறிந்த சொல்வழக்குகள். இலங்கை வரைபடத்தின் வடபகுதியில் பனை ஒன்றின் படத்தை வரைந்து விட்டு இது எவ்விடம் என்று கேட்டால் "யாழ்ப்பாணம்" எனச் சட்டெனக் கூறுவார்கள். பனையும் யாழ்ப்பாணமும் இரண்டறக் கலந்தவை. யாழ்ப்பாணத்தானின் உயர்வுகள், வாழ்வுகள், வளங்கள் யாவற்றிலும் பனை நீக்கமற நிறைந்திருக்கின்றது. பனங்கொட்டை, பனங்காட்டான் என யாழ்ப்பாணத்தவரை நாட்டின் ஏனைய பகுதி மக்கள் விகடமாகவும் சில நேரங்களில் வெறுப்புடனும் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்.

பனை மரத்தின் வாழ்வியல் நினைவுகளும் ஆவணப்படுத்தப்பட வேண்டியவையே. என் பட்டறிவுக்கு அகப்பட்டவற்றை இங்கு விதைத் துள்ளேன். 'யாழ்ப்பாண நினைவுகள்' எனும் இப்பத்தியில் பனையும்

வந்தால் தான் பொருத்தமல்லவா.

"எணேய், உந்தப் பனங்காயைப் பிசைஞ்சு பாயில் போட்டுக் காய வைத்துப் பினாட்டு ஆக்காத. கம்பசில என்னோட படிக்கிற பிள்ளையள் வந்து பார்த்தால் என்னை அங்கபகிடி பண்ணுவினம்" இவ்வாறு ஒரு குரல் சில மாதங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்துப் பனை மரக்கிராமமொன்றில் என் செவிகளுக்கு எட்டியது.

கால மாற்றமென இதனை இலகுவாகக் கூறி விட முடியாது. எப்படி வாழ்ந்த சமூகம் எங்கே போய் விட்டதென நினைத்துப் பார்த்தேன். நினைவுத் தடங்களைப் பின்னோக்கிப் பயணிக்கவும் விட்டேன். ஆடியில் போட்ட பாத்தி ஒன்றின் பனங்கிழங்கு ஒன்றை இன்று சுவைக்க முடிந்தது. அதனாலும் என் ஞாபகப் பக்கங்களைத் தட்டிப் பார்க்கப் புறப்பட்டுள்ளேன். இன்று எந்த ஒரு விவசாய உற்பத்தியை எடுத்துப் பார்த்தாலும் இரசாயனம் கலந்தே வருகின்றது. ஆனால், இன்றும் பனம்பழம், பனங்கிழங்கு, பனங்கள் என்பவை இரசாயனம் கலக்காது கிடைக்கின்றன. பனையைக் 'கற்பகதரு' எனத் தான் யாழ்ப்பாணத்தவர் அழைப்பார்கள். இதனால் தான் பனை அபிவி ருத்திச் சபையின் விற்பனை நிலையங்களைக் கற்பகம் என அழைக் கிறார்கள்.

பனையின் பயன்களைப் பார்ப்போம். பனை வடலியின் ஓலைக ளும் வளர்ந்த பனையின் ஓலைகளும் மாட்டின் தீவனமாகியது. தரமான பசுப்பால் கிடைத்தது. காய்ந்த பனையோலைகளை வீடு வேய்தல், வேலி அடைத்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத் தினார்கள். கூரையில் இருந்து உக்கிய பனை ஓலைகளையும், வேலியின் பனை ஓலைகளையும் மாட்டு வண்டியில் ஏற்றிச் சென்று தோட்டத்தில் பறிப்பார்கள், தோட்டம் கொத்தும் போது மண்ணுடன் கலப்பார்கள். இது சிறந்த பசளையாக இருந்தது. இன்று வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது. பழுத்த பனை ஓலைகளைத் தேடி எடுக்க

முடியாது. வீடமைப்புத் திட்டங்கள் வந்து கல்வீடுகள் உருவாகி விட்டன. வளர்ந்த பனை ஒன்றில் ஒன்றுவிட்ட ஒரு வருடம் ஓலை வெட்டும் படலம் நடக்கும். வெட்டிய பச்சை ஓலைகளை நிலத்தில் வைத்து உழக்கி அடுக்குவார்கள். சில நாட்கள் வெய்யிலில் வாட விட்ட பின்னர் இதனை எடுக்கும் போது அயன் பண்ணிய ஒரு உடுப் புப் போல இருக்கும்.

பின்னர் இவற்றை வீடு வேய்தல், வேலியடைத்தல் போன்ற வற்றிற்குப் பயன்படுத்துவார்கள். பனை ஓலை வெட்டும் போது பனையின் குருத்து ஓலைகளை வெட்டி எடுப்பார்பகள். இது சார்வு எனப்பட்டது. இதனைப் பதப்படுத்தி சார்வின் தன்மைக்கேற்ப பெட்டி பாய், கடகம், நீத்துப்பெட்டி, மூடல்பெட்டி, தொப்பி, பேர்ஸ் போன் றவற்றை இழைப்பார்கள். நாளாந்தம் ஒரு பாய், ஒரு பெட்டி இழைத்த குடும்பங்கள் பல முன்பு ஏராளம் இருந்தன. வடமராட்சியின் மாநாண்டி சந்தை மாலை நேரத்தில் இப் பொருட்களுக்கான பெரிய தொரு சந்தையாக இயங்கியது.

நீர்வேலி போன்ற வாழைத்தோட்டம் அதிகமுள்ள கிராமத்தில் வாழை ஒன்றின் அடியிற்கு அருகில் கிடங்கை வெட்டி அதில் ஒரு பனை மரத்தின் பச்சை ஓலைகளைச் சிராய்த்து விடுவார்கள். புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் முதல் மழை தொடங்கிய சில நாட்களில் இது நிகழும். மழை பெய்ய ஆரம்பித்ததும் சிராய்த்த பனை ஓலைகள் அழுகிப் பச்சைப் பாணியாக வந்து விடும். இந்நிலையில் இப்பச்சைப் பாணியுள்ள கிடங்கு மூடப்பட்டு விடும்.

இவ்வாறு செய்யப்பட்ட இடத்திலுள்ள வாழைகள் செழித்து ஓங்கி வளர்ந்து பென்னாம் பெரிய குலைகளைப் போடும். 25, 40, 45 கிலோகிராம் எடையுள்ள வாழைக் குலைகளைப் பனையோலைப் பசளை தரும். யாழ்ப்பாணத்துப் 'பனம்கள்' தனிச்சுவை தான். 1990 இற்கு முன்பாக கொழும்பிலிருந்து காங்கேசன்துறை

நோக்கிப் புகையிரதம் (Train) ஓடியது. அக்காலங்களில் பங்குனி மாதம் நடைபெறும் வடக்கின் சமர் (Battle of the North) எனப்பட்ட சென்றல் சென்.ஜோன்ஸ் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி பார்க்க புகையிரதத்தில் பழைய மாணவர்கள் திரண்டு வருவார்கள். வெள்ளி, சனி நாட்களில் கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

'மச்சான் ஒருக்கால் ஆனைக்கோட்டைப் பக்கம் போயிற்று வருவம்' இக் கதைதான் பழைய மாணவர் சிலரிடம் இருக்கும். யாழ் நகரிலிருந்து மேற்காக 4 கிலோமீற்றர் தூத்திலுள்ள ஆனைக்கோட்டையின் பனம் கள் தனிச்சுவையுடையது. இதனால் அது பிரபலமானது.

ஆனைக்கோட்டை உள்ளே போன பின்பு கிரிக்கெட் மைதானம் களை கட்டும். தமது அணியின் திறமைகளைக் கண்டு வானைப் பிளக்கக் கரகோசம் செய்வார்கள். மைதானத்துக்குள் ஆடி ஓடி ஆரவாரம் செய்வார்கள். அக்காலத்தில் இப்போதையதைப் போல ஊருக்கு ஊர் வெளிநாட்டு பணம் புழங்காது. உத்தியோகச் சம்பளம் சில வீடுகளிற்கு வந்தது. மற்றும்படி தோட்ட விவசாயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் பனைகளால் நிறைந்திருந்தன. ஆனிமாதம் பிறந்ததும் பனங்காய்கள் பழுத்து விழ ஆரம்பித்து விடும்.

ஆனாலும் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் தான் பனங்காய் எனப் பேச்சு வழக்கில் கூறப்படும் பனம்பழம் அமளியாகப் பழுத்து விழ ஆரம்பிக்கும். ஆனி ஆடி மாதங்களில் கொசுக்கள் உலாவத் தொடங்கித் துன்பம் தரும். இதனால் அதனைப் பனங்காய் கொசுக்காலம் என்பார்கள். பனங்காய் பொறுக்குவதில் போட்டி இருக்கும். பின்னாளில் பனை மரங்களை வகை தொகையற்றுத் தறித்ததால் பனங்காய் கொசு காலத்தை காண்பது அரிதாகிவிட்டது. அதிகாலை 4 மணிக்கே நித்திரை விட்டெழுந்து பனங்காய் பொறுக்க வளவிற்குப் போவார்கள். கடகத்தை தலைச்சுமையாக வைத்துப் பனங்காய் பொறுக்குவார்கள். பனங்காய் பொறுக்கி சேகரிப்பதில் பலத்த போட்

டியிருக்கும். அடுத்தவர் வளவில் பனங்காய் பொறுக்கி சண்டை பிடித்தவர்களும் இருந்தார்கள்.

கோடு, கச்சேரி, வழக்கெனப் போனவர்களும் இருந்தர்கள். பனங்காய் பொறுக்குவதில் முன்னணி வகித்தோரைப் பனங்காய்த் தியாகர், பனங்காய்ப் பொன்னம்மா என அடைமொழியிட்டு அழைத் தார்கள். பனையில் குரும்பை பிடித்தவுடன் இளம் பதம் நுங்கு எனப் படும். இதனைக் குலையாய் வெட்டி இறக்கி நுங்கு வெட்டிக் குடிப் பது தனிச் சுவையே தான். சற்று முற்றிய நுங்கு சீக்காய் என அழைக் கப்படும். இதனை தோல் நீக்கிய பின் கத்தியால் சீவி ஆடு, மாட்டுக்குத் தீவனமாக வைப்பார்கள். மாலை வேளைகளிலும், இரவு வேளைகளிலும் சீக்காய் சீவுவது பனை ஓலை கிழிப்பது என்பனவே குடும்ப வேலைகளாக நடந்தன.

பனை ஓலைகளால் வீடு வேய்வது, பனங்கொட்டைகளை பாத்தி போடுவது என்பன கூட்டுறவு முறை மூலமாக நடைபெற்றது. ஊர் கூடித் தேரிழுக்கும் ஒற்றுமைப் பண்பாட்டின் அம்சமாக இருந்தது. சமூக வலுவூட்டல் என மேற்கு நாடுகளிலிருந்து வருவோர் கூறுவது போன்றவையெல்லாம் எம் மண்ணின் மக்களிடையே ஏற்கனவே ஒரு பத்தியில் பார்த்து விட்டோம்.

ஊரில் மங்கல நிகழ்வுகள் நடந்தால் நடக்கும் இடத்தை இனங் காட்ட உயரமாக ஸ்பீக்கர் எனப்படும் ஒலிபெருக்கி கட்டப்பட்டி ருக்கும். பனங்காய்கள் (பனம்பழம்) பொறுக்கியது போக மிகுதியை பழப் பருவம் எட்டியவுடன் மரத்திலிருந்து வெட்டி விழுத்தி எடுப் பார்கள். புரட்டாதி மாதம் முதல் மழை கண்டவுடன் பதமான மண்ணில் மூன்றடி உயரத்திற்கு மண்ணைப் பாத்தியாக்குவார்கள். பனங்கொட்டைகளை மூன்று நான்கு படையாக அடுக்கிப் பாத்தி போடுவார்கள். மணல் பாங்கான மண்ணுள்ள இடங்களில் போடும் பனம் பாத்திகளில் பனம் கிழங்கு நன்கு நீண்டு விளையும் தை, மாசி,

பங்குனி மாதங்களில் பனம் பாத்தி கிண்டும் படலம் தொடங்கும்.

பனம் பாத்தி போடுதல், பாத்தி கிண்டுதல் போன்றவை ஓரிடத்தில் நடக்கும் போது ஊர் கூடிச் சமைப்பார்கள். முறை வைத்து இவ் வேலைகள் நடக்கும். பனம்பாத்தி கிண்டியவுடன் தெரிந்தெடுத்த பனம் கிழங்குகள் சிலவற்றை பெரிய பானையில் வைத்து அவிப் பார்கள். நன்கு அவிந்த பின் பனங்கிழங்குகளை ஆறவிட்டு தோல் நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக்குவார்கள். உரலில் பச்சை மிளகாய் அல்லது செத்தல் மிளகாய் இட்டு அளவான உப்பு, சேர்த்து இடித்து. பின் உள்ளி (பூடு) மிளகு, சீரகம் சேர்த்து இடிப்பார்கள். பின்பு தேங் காய்ப்பூ போட்டு இடித்த பின்பு வெட்டிய பனங்கிழங்கு துண்டுகளைப் போட்டு உரலில் நன்கு இடிப்பார்கள்.

ஊருக்கு ஊர் இச் செய்முறையில் மாற்றமிருக்கும். சில ஊர் களில் தேங்காய்ப்பூ இடமாட்டார்கள். இவ்வாறு இடித்து வருபவற் றைச் சிறு சிறு உருண்டைகளாக்கி உண்பார்கள். உழைத்த களைப்பு பறந்தோடி விடும். சொல்லும் போதே நாக்கில் நீரூறி விடுகின்றதா ? ஒருமுறை செய்து பாருங்களேன். பாத்தி கிண்டி முடித்ததும் பூரான் வெட்டும் படலம் தொடங்கும். பெரிசு, சிறிசு வேறு பாடின்றி பூரான் என்றால் கொள்ளைப் பிரியம் தான். பனம் பாத்தியில் முளை விட் டதும் கருக்கியது முளைப் பூரான் எனப்படும். இது மிகவும் கட்டியா னதாகவும் சுவையானதுமாக இருக்கும்.

கிழங்கு நன்கு விளைந்த பனங்கொட்டையில் வரும் பூரான் தண்ணீர் பூரானாக இருக்கும். பனங்கிழங்கு கிண்டிய பின் நன்கு அவித்த கிழங்குகளில் ஒரு பகுதியை முற்றத்து வெய்யிலில் காய வைப்பார்கள். மறுநாள் உண்பார்கள். இது ஒரு தனிச் சுவை தான். அவித்த பனங்கிழங்குகளில் ஒரு பகுதியைத் தோல் நீக்கிப் பிளந்து ஈர்க்கிலில் கோர்த்து கோர்வையாகக் காயவிடுவார்கள். சில நேரம் கோர்வையாக்காமலும் காயவிடுவார்கள். காய்ந்த பின்பு

அதனைப் புளுக்கொடியல் என்பார்கள். முதல் தரமான பெரிய புளுக்கொடியல்களைத் தனியாக வீட்டில் சேகரித்து வைப்பார்கள். பனங்கிழங்கை அவிக்காமல் பச்சைப்பருவத்தில் காய வைத்து ஒடியல் ஆக்குவார்கள். இவ் ஒடியலை உரலில் இட்டு நன்கு இடித்து மாவாக்குவார்கள்.

முன்னாளில் இப்போதையதைப் போல மதிய உணவிற்கு சோறு உண்பது குறைவாயிருந்தது. அக்காலத்தில் ஒடியல் மா பிட்டு நாளாந்த உணவாக இருந்தது. பல வீடுகளில் ஒடியல் பிட்டு குறிப்பிட்டளவு சாப்பிட்டால் தான் சிறு அளவு சோறு உண்ணக் கொடுப்பார்கள். ஆடிப்பிறப்பு, புரட்டாதி மாளயம், கார்த்திகை விளக்கீடு போன்ற சமய நிகழ்வுகளில் ஒடியல் மா பிட்டு அவித்துப் படைத்து வழிபடும் மரபு இன்றும் தொடர்கின்றது. ஆடிப்பிறப்பன்று பனங்கட்டியை அரிசி மாவில் சேர்த்து தேங்காய்ச் சொட்டுகளும் கலந்து ஆடிக் கூழ் காய்ச்சும் மரபு இன்றும் தொடர்கின்றது.

பனையின் பயன்களை நிலத்தை உடைமையாகக் கொண்ட மக்கள் கூட்டம் மட்டும் தான் பயன்படுத்த முடியும். பனை மரத்தில் இருந்து கள் இறக்குவதில் இரு சமூக (சாதி) மக்கள் மட்டும் தான் ஈடுபட்டனர். பனைமரத்தில் வரும் பாளையை சீவிப் பதப்படுத்திக் கள் வடிப்பார்கள். பாளை வெடித்துப் பனங் காய்கள் உருவாகிய பின்பு அதில் சிலவற்றை வெட்டி அதிலிருந்து எடுக்கும் கள்ளை காய் வெட்டிக் கள் என்பார்கள். மண்ணால் செய்ய்யப்பட்ட முட்டிகளே கள் சேகரிக்க மரத்தில் கட்டப்பட்டன. அது தனிச் சுவை தான் இந்நாளில் பிளாஸ்ரிக் கொள்கலன்களைக் கட்டும் வழக்கமும் வந்து விட்டது.

சில இளைஞர்கள் விசும்புக் குணமாக பனை மரத்தில் ஏறிக் கள்ளை குடித்த பின்பு வெறும் முட்டியைக் கட்டிய சம்பவங்களும் நடந்தன. பங்குனி மாதம் தொடங்கி ஆனி மாதம் வரையான காலங்களில் கள் சீவும் முட்டியில் மெல்லியதாகச் சுண்ணாம்பு

தடவி பாளையுடன் சேர்த்துக் கட்டுவார்கள். அதற்கென முட்டிகள் வீட்டிலேயே தயார் செய்யப்படும். பனையில் வைத்தும் சுண்ணாம்பு இம்முட்டியில் பூசப்படும். ஊறி வடியும் கள் பதநீராக காலை வேளைகளில் மட்டும் தான் சூரிய ஒளிபட முன்பாக பனையில் ஏறிச் சேகரிப்பார்கள். கருப்பணி சேர்த்து தான் ஆடிக் கூழ் காய்ச்சுவார்கள். அதன் சுவையே தனிச் சுவை தான்

கருப்பணி காய்ச்சும் படலம் கிராமங்களில் தொடங்கும். சீனச் சட்டியிலான பெரிய தாச்சி ஒன்றில் கருப்பணி எனப்படும் பதநீ ரைக் காய்ச்சுவார்கள். மண்பானைகளில் கருப்பணி காச்சிய நிகழ்வுகளும் நடந்தன. கருப்பணி தடித்ததும் அதற்கென இழைக் கப்பட் குட்டான்களில் ஊற்றி இறுக வைக்கப்படும். 1970 களின் நடுப்பகுதியில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனும் அமைப்பு உருவாகி வளர்ந்தது. இவையும் கருப் பணி காய்ச்சும் பனங்கட்டித் தொழிற்சாலைகள் பலவற்றை வெற்றி கரமாக நடத்தின.

தனியாரும் 1970 – 77 காலப்பகுதியில் சீனிக்கு இறக்குமதித் தடை இருந்த போது பனங்கட்டி தொழிற்சாலைகள் பலவற்றை வெற்றிகரமாக நடத்தினார்கள். ஜே.ஆர். 1977 இல் கொண்டு வந்த தாராள பொருளாதார யுகம் இக்கைத்தொழில்களை ஒரேயடியாக விழுத்தி விட்டது. ஆடிமாதம் மன்னார் மடுதேவாலயத் திருவிழா தான் யாழ்ப்பாணத்து பனைசார் விளை பொருட்களுக்குச் சிறந்த சந்தையாக அக்காலத்தில் இருந்தது. புளுக்கொடியலில் தெரிந்தெ டுத்த பெரியவைகள், பனை, ஓலைப் பெட்டி, தொப்பி, பாய், கடகம், கைப்பை, பனங்கட்டிகள், பனாட்டு, பாணிப் பனாட்டு போன்றவற்றை லொறிகளிலும் தட்டி வான்களிலும் மடுத் திருப்பதிக்கு எடுத்துச் செல்வார்கள்.

அங்கு பெருமளவில் ஒன்று கூடும் சிங்கள யாத்திரிகர்கள் பார்த்

தும் பாராமல் விலை கொடுத்து இவர்களது விளை பொருட்களை வாங்குவார்கள். மடுவில் விற்றுவரும் பணத்தின் ஒரு பகுதியில் தமது வீடுகளுக்குத் தேவையான அலுமினிய, பித்தளைப் பாத்தி ரங்களை வாங்கி வருவார்கள். மிகுதிப் பணத்தில் வீடு வேய்தல், பிள்ளைகளின் கல்விச் செலவுகளைப் பார்த்தல் என்பவை நடை பெறும். சேமிப்பும் ஏற்படுத்தப்படும். பனைமரங்கள் மழை நீர் தேவைப்ப டாத கானல் மரங்கள் என்பதனால் அதன் விளைபொருள் உற்பத்தி களும் வருமானங்களும். நிச்சயப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

பனாட்டை வீடுகளில் 'உமல்' எனப்படும் ஓலையால் செய்யப் பட்ட பையில் வைத்திருப்பார்கள். பனாட்டில் பாணிப் பனாட்டு எனும் வகை மிகச் சுவையானது. பனாட்டுத் தட்டை மிகச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி மடித்து கருப்பணி பாணியில் ஊற விடுவார் கள். பானையில் தடிக்கக் காச்சிய கருப்பணியில் மிளகு, சீரகம் என் பவற்றைக் கலப்பார்கள். காலையில் பாடசாலை செல்லும் வேளைக ளில் இப்பாணிப் பனாட்டில் சில துண்டுகளைச் சாப்பிட்டு விட்டுச் செல்வார்கள்.

பனை தொடர்பான பழமொழிகளும் மக்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்தவை. அவற்றைத் தனியாக விபரிக்கப் புறப்பட் டால் இப்பத்தியின் விரிவும் அதிகமாகி விடும். மனிதர்களின் உட லின் நிறம், உயரம் போன்றவற்றை விபரிக்கும். போது பனையின் அம்சத்தைக் கொண்டு கூறும் பண்பும் உள்ளது.

யாழ்ப்பாணத்தவரின் சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் போன்றவற்றில் பனை மரத்தின் நினைவுகளின் வகிபாகம் அளவி டற்கரியது. 'முற்றத்து ஒற்றைப்பனை' எனும் நாவல், பூத்திடும் பனந்தோப்பு எனும் கட்டுரைகளின் தொகுப்பு போன்று வெளியாகிய வையின் பட்டியல் கூறபுறப்படடால் மிக நீளமாகிவிடும்.

பனைமரத் தோப்பின் நினைவுகளைத் தாங்கி வெளிவந்த கவிதைகள் தான் மிக அதிகம். பனை மரம் குறித்த ஆக்க இலக்கி யங்களைத் தனியாகத் தொகுத்து ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இதன் மூலம் பனையும் யாழ்ப்பாணத்தானின் வாழ்வும் எவ்விதம் இருந்தது என்பதைக் காண முடியும். இலங்கை மண்ணில் பிரச வமான ஆக்கங்கள் நிறைய உள்ளன. யுத்தத்தின் விளைவாகப் புலம் பெயர்வைச் சந்தித்த எம்மவரின் ஆக்க இலக்கியங்களிலும் கருத்தாடல்களிலும் பனை மரத்தின் கடந்த கால வாசங்களை நுகர முடியும். புலம்பெயர் இலக்கியவாதிகள். தமது தாய்மண் குறித்த இலக்கிய வடிவங்களில் பனையுடன் தமக்கு இரத்தமும் சதையுமாக உள்ள பிணைப்பைப் பெருமூச்சுடன் நினைவு கூறுகின்றனர். நன விடை தோய்தலில் இன்பம் காணுகின்றனர்.

இணையத் தளங்களின் ஊடாகத் தமது பதிவுகளை மேற் கொள்ளும் போது பனையைத் தமது அடையாள இலட்சினையாக இடுவதையும் காணலாம். வடக்கு மாகாண சபையின் இலட்சி னையிலும் பனை உள்ளது.

பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் இன்று எம் வாழ்வியலை ஆக்கிரமித்து விட்டன. முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்து வீடுகளில் பனை மரத்தினால் செய்யப்பட்ட பொருட்களே வீட்டை நிறைத்திருக்கும். கோயிலில் அர்ச்சனை செய்வதற்குப் பனை யோலைப் பெட்டிகளே அணிவகுத்துக் காத்திருக்கும். இன்று அவ் இடத்தைப் பெருமளவுக்கு பிளாஸ்ரிக் பைகள் பிடித்து விட் டன. வீடுகளில் சாப்பாடு வைக்க பனைஓலை மூடல் பெட்டிகள் உறிகட்டிப் பொருட்களைப் பாதுகாக்க பனையோலையால் இழைத் தவை இருக்கும். நித்திரை கொள்ளப் பனை ஓலைப் பாய்கள் இருக்கும். பனைஓலைப் பொருட்களைப் பயிற்றுவிக்கும். ஆசிரி யரை பன்னவேலை ஆசிரியரென அழைப்பார்கள். பெண்களே இவ்விதம் இருப்பார்கள். தையல்கலை பழகுவது போல பன்ன

வேலை பழகுவதற்கு ஊருக்கு ஊர் நிலையங்கள் இருந்தன. முன்னோர் வழிவந்த பாரம்பரிய அறிவு பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்று பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்ததாக மட்டும் இக்கைவேலைகள் பெருமளவு முடங்கி விட்டன. பனை ஓலைப் பொருட்களை யாவரும் வாங்கும் நிலை இருந்த போது நிறையப் பேருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்தன. குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கிய குடும்பங்கள் பலவற்றிற்கு சோறு போட்ட தொழிலாகப் பனைவேலை இருந்தது.


அம்மா பெட்டி பாய் இழைத்துத் தான் என்னைப் படிப்பித்தவ, "அப்பா கள்ளும் சீவி உழைத்து தான் நான் படித்தேன்" எனப் பெரிய பதவிகளை அலங்கரித்த பலரும் கூறிய காலம் இருக்கிறது. அந்தத் தலைமுறையை இனிவரும் காலத்தில் காண முடியாது. யாழ்ப்பாணத்தினை நினைவூட்டும் குறியீடுகளாக பனை, நல்லூர் கந்தசுவாமி கோவில், யாழ்ப்பாணப் பொது நூலகம் என்பவை தனித்தனியாகவோ கூட்டாகவோ உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தியர்களின் கேரள மாநிலத்து மலையாளிகளும் பனையினால் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். அதே ஒற்றுமை யாழ்ப்பாணத் தவருக்கும் உள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சி ஒன்றின் போது பனைபடு விளைபொருட்களுடன் பனம் பானத்தையும் வைத்திருந்தார்கள். அதை விரும்பிக் குடித்த ஓர் விரிவுரையாளர் தனது கல்வி நிறுவனத்திற்குக் கொண்டு வாருங்கள். சந்தைப்படுத்த தான் உதவுகின்றேன் என்றார். அதற்கு அந்த விற்பனை அதிகாரியோ எமக்கு நேரமில்லை. நீங்கள் இங்கே வந்து கொள்வனவு செய்யுங்கள் என்றார். சந்தை வாய்ப்பை நாம் தேடித்தானே போகவேண்டும் இவ்வாறு இருந்தால் பனை விளை பொருட்களின் விற்பனை, பாவனை எவ்வாறு உயருமென அந்த அன்பர் குறைபட்டுக் கொண்டார்.

நூறு, நூற்றைம்பது வருட வயதைக் கொண்ட பனைகள் பல் லாயிரம்அழிக்கப்பட்டுவிட்டன.அவற்றின்மீள்நடுகைத்திட்டங்களோ செயற்திறன் வாய்ந்ததாக இல்லை. காலமாற்றம் மனிதனின் வாழ் வியல் தடங்களைப் படிப்படியாகவோ விரைவாகவோ அசைத்துத் தான் வருகின்றது. மாறும் வாழ்வியல் பண்புகள் எமது மண்ணின் வழிவந்த பழம் பெரும் பண்பாட்டு வேர்களை அகற்றி வருகின்றன. அல்லது உருமாற்றம் செய்து வருகின்றன.

பனை குறித்து என் பட்டறிவுக்கு கேட்டறிவுக்கு அகப்பட்டவற்றை மட்டும் பதிவு செய்துள்ளேன். கடந்த காலநினைவுகளின் மீது நடந்து பார்த்தவர்களே இன்னமும் தெரிந்திருந்தால் நீங்களும் பதிவு செய் யுங்கள்.

**நன்றி தினக்குரல் வாரவெளியீடு 2012 டிசம்பர் – 16, 23**



# பட்டத்தை வட்டமிடும் நினைவுகள்

**"பட்டம் விடுவோம், பட்டம் விடுவோம் பாலா ஓடிவா**
**பாடிப் பாடி பட்டம் விடுவோம் பாலா ஓடிவா"**

இப் பாடலை நினைக்கும் போது உங்களில் பலருக்கு பாடசாலை ஆரம்ப வகுப்புக் காலங்களை நோக்கி நினைவுகள் பறந்து செல்ல ஆரம்பிக்கும். இரண்டாம் வகுப்புப் படிக்கும் போது தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இப்பாடல் இடம்பெற்றிருந்தது. 1995 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த புதிய பாடத் திட்டம் இப்பாடலை புதிய பாடப் புத்தகங்களில் இல்லாமல் செய்து விட்டது.

அதற்கு முன் கற்றவர்களிடம் இப்பாடல் கட்டாயம் நினைவில் இருக்கும். இன்னும் இரு வாரங்களில் தைப் பொங்கல் வருகின்றது. அந்த நாளில் வல்வெட்டித்துறையில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் பட்டமேற்றும் போட்டி நடக்கும். அந்நிகழ்வு ஓர் கண் கொள்ளாக் காட்சியாகும்.

பல பிரதேசங்களிலும் நிகழ்ந்தாலும் பட்டம் விடும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போதும் உயிர்த் துடிப்புடன் நிகழ்கின்றது. இதனால் பட்டம் பற்றி இன்றய பத்தியை ஆரம்பிக்கின்றேன்.

பட்டம் விடுதல் என்பது உலகின் சகல பாகங்களிலும் சிறந்த பொழுது போக்காக உள்ளது. அதற்காக பொழுது போக்குக் கழகங்களும் உள்ளன. பட்டம் என்றவுடன் ஆட்களுக்குப் பட்டப் பெயர் வைத்து அழைப்பது. பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்கள் உங்கள் நினைவுக்கு வந்து விடும். காற்றில் பறக்கும் பட்டத்தைத் தான் இங்கு பதிவு செய்கின்றேன்.

எமது நாட்டில் பட்டம் விடுதல் என்பது காலத்துக்குக் காலம் பொழுது போக்காக நீடித்து வருகின்றது.பட்டம் சுற்றுதலை கொடி ஏற்றுதல், கொடி விடுதல் எனவும் அழைப்பார்கள். பட்டம் விடுவதற்கு உவப்பான காற்று பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட வகையில் இருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதுபோலவே பட்டம் விடும் நிகழ்வு பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்ட காலங்களில் நிகழ்கின்றது.

பட்டம் விடுதலும் காலமாற்றங்களை நிறையவே சந்தித்து வருகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தை எடுத்துப் பார்ப்போமாயின் இங்கு பட்டம் விடுதல் இன்றும் மிகப் பெருமளவில் செல்வாக்கைச் செலுத்தி வருவதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் பரந்த நிலவெளிகளைக் கொண்ட பிரதேசங் களில் தான் பட்டம் விடும் பழக்கம் அதிகமாக உள்ளது. குறிப்பாகக் கடற்கரையோரப் பிரதேசங்களில் தான் பட்டத்தின் செல்வாக்கு அதிகம். ஆயினும் சன நெருக்கடி மிக்க பிரதேசங்களிலும் சிறிதள வாக பட்டமேற்றும் கலை தொடர்கின்றது. முன்னாளில் சிறுவர்கள், இளைஞர்களுக்கு இப்போதையதைப் போல கேபிள் தொலைக்காட்சி,

டிவிடி பிளேயர், கைத்தொலைபேசி, இணையத்த ளம் போன்ற வசதிகள் கிடையாது.

அதனால் மிகப்பெருமளவில் கிராமியப் பாரம்பரியம் வழிவந்த விளையாட்டுகளில் நிகழ்வுகளில் கூடிய கவனம் செலுத்தினார்கள். அப்போது இப்போதையதைப் போல ரியூசன் கல்வி முறையும் பெரு மளவில் வியாபித்திருக்கவில்லை. இதுவும் பட்டம் ஏற்றுதல் போன்ற நிகழ்வுகள் பரவலாக நிகழ ஒரு காரணமெனலாம்.

கடற்கரைகளை, வெளிகளைக் கொண்ட கிராமங்கள் பட்டமேற்று தலை தமது பாரம்பரியமாகக் கொள்கின்றன.

நிகழ்ந்து முடிந்த யுத்தம் கடற்கரைக் கிராமங்களின் இயல்பு வாழ்க்கையைப் பெருமளவில் சீர்குலைத்து விட்டதால் பட்டமேற்றும் கலையிலும் பெரும் வீழ்ச்சி ஒன்றைக் கண்டிருந்தது. இயல்புநிலை மீளத் திரும்பியுள்ள இன்றைய நிலையில் பட்டமேற்றுதல் பரவ லாகத் திகழ்கின்றது. யாழ் குடாநாட்டில் பட்டமேற்றுவதற்கு வாய்ப்பான காற்றும், காலநிலையும் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடுகின்றது.

1990 ஆம் ஆண்டிற்கு முந்திய காலப்பகுதிகளில் வலிகாமம் வடக்கின் காங்கேசன்துறையை அண்டிய கிராமங்களில் பட்டமேற் றும் கலை உச்சம் பெற்றிருந்தது. வலிகாமம் வடக்கின் காங்கேசன்து றைப் பிரதேசத்திலும் கொடி விடுதல் எனப்பட்ட பட்டமேற்றுதல் பிர பலமானது. இங்கும் கடற்கரைக் கிராமங்களில் பட்டமேற்றுதல் வெகு உசாராக நிகழும். பட்டமேற்றி மின்சாரக் கம்பிகளுக்கு மேலாக நூல் எறிந்து வீடு வரையும் கொண்டு வந்து வளவு மரத்தில் கட்டுவார்கள்.

தைப்பொங்கலன்று அதிகாலை எழுந்து பட்டமேற்றி வீட்டிற்குள் கொண்டு வந்த பின்பு தான் பொங்கும் வழக்கமுள்ள சிலரும் இருந் தார்கள். பட்டத்திற்கு விண் வைக்கும் போது செப்புத் தகட்டினாலான விண்ணை வைப்பதனையோ, இரவில் பட்டம் விடுவதையோ பொலி

ஸார் தடுத்தார்கள். ஏனெனில் அருகிலிருக்கும் பலாலி விமான நிலையத்திற்கு வரும் விமானங்கள் பட்டத்தில் சிக்கி விபத்துக்கு உள்ளாகக் கூடாது என்பதால் ஆகும்.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ளோர் தமது பாரம்பரியங்களை விடாப் பிடியாகப் பேணும் மனப்பாங்கு உடையவர்கள். இங்கு பட்ட மேற்றுதல், மார்கழி, தை மாதங்களில் தான் நிகழ ஆரம்பிக்கும்.

இக்காலத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காற்று வீச ஆரம்பிக்கும். இதனை வாடைக் காற்று என்பார்கள். வாடைக் காற்றின் வாசனையை செங்கை ஆழியானின் "வாடைக் காற்று" நாவல் கூறுகிறது. கடல் வடக்கு நோக்கி இருப்பதால் கடல் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி யாழ்ப்பாண நகரத்தை நோக்கிய திசையில் வீசும் காற்று பட்டம் ஏற்றுவதற்கு மிகவும் வாய்ப்பானது.

புரட்டாதியில் தொடங்கும் மழை மார்கழி மாத ஆரம்பத்தில் மிகவும் குறைந்து விடும்."மார்கழி மாதத் தூறல் மயிர் நனையாத் தூறல்" எனப் பெரியோர்கள் கூறுவார்கள்.

ஆனால், இன்றைய காலநிலை மாற்றங்கள் எமக்கு புதிதாகவே உள்ளன. பழமொழிகளும் பொய்க்கின்றன. மார்கழி மாத ஆரம்பத்தில் வடமராட்சியில் பட்டம் ஏற்றும் படலம் தொடங்கும்.

பட்டமேற்றுவதற்குமிகவும்பிரபலம்வாய்ந்தஇடமாகஉலகமறிந்த வல்வெட்டித்துறை தான் அன்றும் இன்றும் திகழுகின்றது. இங்குள்ளவர்கள் நவீன உத்திகளைக் கைக்கொண்டு பட்டம் கட்டுவார்கள். பட்டமேற்றி வானில் பறக்க விடப்படும் போது அதிலும் ஒரு தனி அழகு இருக்கும். இவர்களது பட்டம் கட்டும் கலையின் திறமை அதனுடன் ஒன்றிப்போகும் பண்பு மிகவும் சிறப்பானது.

கட்டுக்கொடி எனும் ஒரு வகைப் பட்டத்தைப் பெரியளவில் கட்டுவார்கள். இதில் துணிச்சலுள்ள ஆண் ஒருவர் பட்டத்தில் நிற்க

ஏற்றுவார்கள். இப்பட்டத்தின் வால் மிகவும் பாரமாயிருக்கும். சில மணி நேரத்தின் பின் பட்டத்தை இறக்குவார்கள்.

பாரிய பட்டமொன்றைக் கட்டி பலர் சேர்ந்து நூல் இழுத்துப் பறக்க விடுவார்கள். பட்டத்தில் பற்றரி, வயர், மின்குமிழ் கொண்டு ஒளி அமைப்பை ஏற்படுத்துவார்கள். சிறிய ரக வர்ண மின்குமிழ்களைப் பட்டத்துடன் இணைத்து விடுவார்கள். பட்டம் வானில் பறக்கும் போது தனி அழகாகத்தானிருக்கும்.

வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கும் பட்டம் விடும் படலம் வல்லை வெளி வரை வியாபித்திருக்கும். தைப்பொங்கலன்று வல்வெட் டித்துறை உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் பட்டம் விடும் திருவிழா அரங்கேறும். வடமராட்சி மக்களின் ஊர் கூடித் தேரிழுக்கும் ஒற்றுமைப் பண்பாட்டின் அடையாளமாக இப்பட்டமேற்றும் கிராமியப் பெருவிழாவைக் கூறலாம்.

மதிய உணவு வேளை முடிந்தவுடன் பிற்பகல் 1 மணி, 2 மணி முதல் பட்டமேற்றும் போட்டிக்கெனத் தமது பட்டங்களுடன் ஒவ்வொரு ஊரவரும் வல்வெட்டித்துறையில் ஒன்று கூட ஆரம்பிப்பார்கள். ஆண்கள் பட்டமேற்றுவார்கள். பெண்கள் விடுப்புப் பார்க்கவும் ஆண் களை உற்சாகப்படுத்தவும் இருப்பார்கள். பட்டமேற்றாத ஆண், பெண், குஞ்சு குருமன், முதியோர் என விடுப்பு விண்ணாரம் பார்க் கும் கூடத்திற்குக் குறைவிருக்காது.

போட்டிக்கு பட்டம் விடும் படலம் தொடங்கும் பட்டத்தில் பல வகை களுண்டு கொக்கு, எட்டுமூலை, பருந்து, நாலுமூலை, சானாட்டான், முத்துமூலை.சிறகு, சதுரம், மணிக்கூடு, ஆள்பெட்டி, வெளவால், நட் சத்திரம் என நீளும் பட்டியலுக்குக் குறைவில்லை.

பட்டங்களிற்கு அழகு சேர்க்க வித்தியாச வித்தியாசமான உத்தி களைக் கையாளுவார்கள். விண் கூவும் பட்டம் தனித்துவமானது.

பனையின் இளம் பருவமான வடலியின் பச்சை மட்டையை எடுப் பார்கள். அதில் நார் உரிப்பார்கள். நார் உரிப்பதற்கென மிகக் கூரிய கத்தி பயன்படுத்தப்படும். நாரை நெருப்பு வெப்பத்தில் அளவாக வாட்டி எடுப்பார்கள்.

அந்த நாரைப் பட்டத்தின் பின்புறம் இணைப்பார்கள். பட்டம் வானில் பறக்கும் போது அந்த நாருடன் காற்று உராய்ந்து விண் கூவும். விண் கூவும் பட்டம் அப்பிரதேசத்தில் பயணிப்பவர்களை நிச்சயம் தலை நிமிர்ந்து பார்க்கச் செய்யும். இதனால் விண் பட்டத் துடன் அழகான குஞ்சங்கள், மின்ஒளி அமைப்பு போன்றவற்றையும் செய்வதில் அக்கறை காட்டுவார்கள்.

ஏனைய பட்டங்கள் மௌனமாகப் பறப்பதால் விண் பட்டத்திற் கென தனிக் கவர்ச்சி இருக்கும். செப்புத்தகட்டை பட்டத்தின் பின்புறம் கட்டி விண் கூவச் செய்யும் முறை முன்னாளில் இருந்தது. இப்பட்டங்கள் அறுந்து உயர் அழுத்த சாதாரண மின் கம்பிகளின் மீது விழுந்த போது மின்சாரத் தடைகள் வந்தன. இதனால் செப்புத் தகட்டை விண் கூவப் பாவிப்பது தடை செய்யப்பட்து. ஆனாலும் இரகசியமாகப் பயன்ப டுத்தும் ஒரு சிலர் இப்போதும் உள்ளனர்.

சிறகுப் பட்டத்தின் அழகு தனி அழகு தான். பறவைகளின் சிற குக்கு ஒத்ததாக பல சிறகுகள் சேர்ந்ததாக சிறகுப் பட்டம் இருக் கும். ஒவ்வொரு சிறகிலும் ரிசுப் பேப்பர் அல்லது வாணிஷ் பேப்பரினா லாகிய குஞ்சங்கள் தொங்க விடப்படும். இதன் அழகும் ஜொலிப் பாகத் தானிருக்கும்.

சதுரக்கூடு வகையான பட்டமும் தனித்துவமானது. ஒரு பெரிய சதுரக் கூடு இருக்கும். நாலு பக்கமும் சிறிய சதுரக் கூடுகள் இருக் கும். பெரிய சதுரக் கூட்டில் 4 சிறிய சதுரக் கூடுகளுக்குள்ளும் சிறிய பென்ரோச் பற்றரி சிறிய பெட்டி ஒன்றுக்குள் வைக்கப்பட்டு சிறிய மின்குமிழ்கள் இடப்பட்டிருக்கும்.

பட்டம் இரவு வேளைகளில் வானில் பறக்கும் போது தனி அழகாகத்தானிருக்கும். பார்ப்பவர்கள் யாவரையும் வசீகரிக்கும். பட்டம் கட்டி முடிந்ததும் அதனை ஒட்டுவதற்கு பேப்பர்கள் தேவை.

ஏழ்மை குடியிருக்கும் வீடுகளின் சிறார்கள் புதினப் பத்திரி கையின் பழைய தாள்களால் பட்டம் ஒட்டுவார்கள். ஈர்க்கில்களால் பட்டம் கட்டுவார்கள். சற்றுப் பண வசதியுள்ளோர் ரிசுப் பேப்பர், வாணிஷ் பேப்பர் கண்ணாடித் தன்மையுள்ள மினுங்கல் பேப்பர் ஆகியவற்றைப் பயன்படுத்துவார்கள்.

தடிகளில் அல்லது ஈர்க்கில்களில் செய்யப்படும் பட்டங்களை மேற்சொன்ன பேப்பர்களால் ஒட்டுவதற்கு வேப்பம் பிசின், கோதுமை மாவைக் காய்ச்சிய பசை, போன்றவை தான் பயன்பட்டன. இந்நாளில் தான் கம், பயிண்டர் கம், பிளாஸ்ரிக் பட்டம் என்பன வந்துள்ளன.

பட்டம் ஒட்டி முடிந்தவுடன் முச்சை கட்டுதல் என்பது மிக முக்கி யமானது.பட்டம் வானத்தில் சரிவரப் பறப்பதற்கு முச்சை கட்டுதல் மிகச் சரியாக நிகழ்த்தப்படுதல் வேண்டும். பட்டத்தின் முன்புறம் நூல்களை முக்கோணத் திசைகளில் இணைத்து பட்டம் வானில் நூலுடன் பிணைந்து பறக்கும் வகையில் முச்சை சரியாக அமைக் கப்படுதல் வேண்டும். இது பிழைத்தால் பட்டம் பறக்காது. பறந்த பட்டம் குத்துக்கரணமடித்து கீழே விழுந்து சிதைந்து விடும்.

பறந்து கொண்டிருந்த பட்டத்தின் முச்சை நூல்கள் இளகினாலும் பட்டம் கரணமடித்து சேதமடைந்து விடும்.முச்சை என்பதை முச்சம் எனவும் சில இடங்களில் அழைப்பார்கள். பட்டத்தின் வால் பகுதியில் வால் கட்டுதல் நிகழும். வால் கட்டுவதற்கு கயிறு, திரட்டிய சணல் நூல்கள் பழைய நூல் சேலைகளின் துண்டுகள் என்பன பயன்படும் பட்டத்தின் நிறைக்கேற்ப வானில் பறக்கக் கூடியவாறு வால் அமைக்கப்படுதல் வேண்டும். வாலின் அளவு குறைந்தால் பட்டம்

கரணமடித்து உடையும். வாலின் அளவு கூடினால் நிறை கூடி பட்டம் ஏறாது.

இதனால் வால் கட்டுதல் மிக முக்கியமானது. பட்டத்தின் அமைப்பு முச்சை, வால் என்பன சரியாக அமைந்தாலே அது சரியாகப் பறக்கும். கொக்கு, பிராந்து, செம்பிராந்து போன்ற பட்டங்களுக்கு மட்டும் வால் கட்டுவதில்லை. பட்டத்தின் கீழ்ப் பகுதி அரை வட்டமாக இருக்கும் பகுதியில் குஞ்சங்கள் கட்டப்படும். பட்டங்களில் மிக அழகான கொக்குப் பட்டம் தான் ராஜா எனக் கூறக் கூடியது.

மார்கழி,தை மாதங்களில் பட்டம் ஏற்றும் போது வயல் வெளிகளில் உழக்கியடித்துக் கொண்டு ஏற்றுவதும் பல இடங்களில் நிகழும். இதனால் வயல் விளையும் காலங்களில் பட்டம் விடுபவர்களால் வயல் அழியாதவாறு காவல் காப்பதும் நிகழும்.

வயல் உழக்கிச் சேதம் வந்தால் பட்டக்காரர்களுக்கும் வயல்க் காரர்களுக்கும் வாய்ச் சண்டை வலுக்கும். அடி,தடி, பொலிஸ், கோடு (நீதிமன்றம்) வரையில் போன சில சம்பவங்களும் நடந்தன.

இராக்கொடி எனும் ஒரு வகைப் பட்டம் ஏற்றுதலும் நிகழும். பட்டத்தை கொடியென அழைக்கும் வழக்கம் உள்ளதை முன்னர் பார்த்தோம். மாலை படும் வேளையில் பட்டத்தை வளவு கடந்து வீட்டிற்கு எடுத்து வருவார்கள். வீட்டு வளவு மரத்துடன் பட்டத்தின் நூல்களைக் கட்டி விட்டு அழகு பார்ப்பார்கள். இந்த இராக்கொடியுடன் மின்குமிழ் பொருத்தி அழகு பார்ப்பார்கள்.

இரவிரவாகப் பறந்த பட்டம் சில வேளை மழை பொழிந்தால் ஊறிக் கரைந்து குத்தென விழுந்து கிடக்கும். விடியற் காலை எழுந்து பட்டத்தைத் தேடிய போது அதன் அவலச் சாவை ஒப்பாரி வைத்தது போல அழுகின்ற நிகழ்வுகளும் நடக்கும். வேடிக்கையாக மற்றவர்களுக்கு இருக்கும். பட்டத்தைப் பாடுபட்டுக் கட்டி ஏற்றுபவன்

பதைபதைப்பான்.

**சிறுசுகள்** இரவிரவாகப் பெற்றோரைக் கொண்டு பட்டம் கட்டி விடியற் காலையில் பனியில் ஆர்வக் கோளாறால் ஏற்றி ரிசு கரையும் சம்பவங்களும் நிகழும். பட்டத்தை ஏற்றிக் கொண்டு வயல்வெளி, தோட்டவெளி ஊடாக ஓடிய போது மாரிக் கிணற்றில் சிறுவர்கள் விழுந்து இறந்த சோகச் சம்பவங்கள் சில வருடாந்தம் நிகழ்கின்றன. இன்னமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது.

சிறிசுகள் அழும் போது பார்க்கப் பரிதாபமாக இருக்கும். பட்டம் பறக்கும் போது அதன் பறப்பு உயரத்தைக் குறிக்க பனையைப் பயன்படுத்துவார்கள். அரைப் பனை உயரத்தில், முழுப்பனை, உயரத் தில் இரண்டு பனை உயரத்தில் எனத்தான் கூறுவார்கள் இன்றும் அவ்வாறுதான் கூறுகின்றனர்

பட்டம் ஏற்றுவதில் சிறுவர்களும் விடலைப் பெடியளும் தான் மிகப் பெருமளவில் ஈடுபடுவார்கள். வல்லை வெளியில் பட்டம் ஏற்றும் போது சைக்கிளுடன் பெடியளும் ஆயத்தமாகத்தான் நிற் பார்கள். உயரப் பறந்த பட்டம் தற்செயலாக அறுத்தால் அச்சுவேலி, ஆவரங்கால்,புத்தூர் வரை சென்றுதான் நிலத்தில் விழும்.

இரண்டு பனை உயரத்தில் பறந்த பட்டம் அறுந்து கடுங் காற்றினால் கோப்பாய் வரை விழுந்ததும் நிகழ்ந்தது. பட்டம் அறுந்து தெற்குத்திசை நோக்கிச் செல்ல அதனைப் பார்த்துக் கொண்டே சைக்கிளில் விரைந்தோடி பட்டம் விழுந்த ஏரியாவை றவுண்ட் அப் பண்ணி இளசுகள் மீட்டுவரும் காட்சி சுவையானது. பட்டம் அறுந்து தென்னை மரத்தின் மீது விழுந்தால் அதனை எடுக்கும் இளசுகளைக் கொண்டு தேங்காய் பிடுங்குவிக்கும் சாமர்த்தியசாலிகளும் இருக் கின்றனர்.

போட்டிக்குப் பட்டமேற்றும் நிகழ்வுகளை சனசமூக நிலையங்

கள்,விளையாட்டுக் கழகங்கள் நடத்தும். இது தொடர்பாகப் பத்திரிகைச் செய்திகளை, விளம்பரங்களை யாழ்ப்பாணத்தில் காண முடியும். பட்டம் விடும் போட்டி 16 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் 16 வயதுக்கு மேற்பட்டோர் என இரு பிரிவாகவோ தனியே திறந்த பிரிவாகவோ நிகழும்.

பட்டத்தின் அளவு, புதுமை, அலங்காரம்,பட்டங்களின் தொடர், பட்டத்தின் ஆட்டம், விண் ஒலி என்பவற்றிற்கேற்ப தனித் தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் ஏற்றும் படலம் தொடங்கும் போது அது தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் இன்றும் வருகின்றன. பட்டமேற்றும் போட்டிகளின் போது போட்டிக்கு நிற்கும் பட்டமொன்றை அறுத்து விழுத்துவதற்கு இன்னுமொரு பட்டத்தை டம்மியாக (போலியாக) ஏற்றும் முன்னணியில் நிற்கும் பட்டத்தைக் கொளுவி விழுத்தி அழித்து தமது பட்டத்தைப் பரிசு பெறச் செய்வார்கள். இதனால் வாக்குவாதம், அடிதடி ஊர்ச் சண்டைகளும் நிகழும்.

பட்டமேற்றும் காலங்களில் பட்டம் கட்டி கடைகளுக்கு விற்பது, காசுக்குப் பட்டம் கட்டிக் கொடுப்பது போன்ற கைத்தொழில் இன்று வரையும் ஓரளவு உயிர் வாழ்கின்றது.

மூன்று பட்டம் தொடராக ஏற்றும் நிகழ்வும் நடைபெறும். ஒரு பட்டமேற்றி வானில் பறக்க விட்ட பின்னர் நூலில் இன்னுமொரு பட்டத்தையும் பிணைத்து விடுவார்கள். பின்னர் மூன்றாவது பட்டத்தையும் நூலில் பிணைத்து ஏற்றுவார்கள். ஒரு நூலில் 3 பட்டங்கள் வானில் பறப்பது தனி அழகாயிருக்கும்.

பட்டம் விடுதலைப்பற்றிக் கவிதைகள் நிறையவே வந்திருக்கின்றன. தாயகத்தில் பட்டம் விட்ட நினைவுகளை புலம்பெயர் நாடு

களில் நினைவு கூர்ந்து அதனை ஆக்க இலக்கியங்களில் படைக்கும் நிகழ்வுகளும் தொடர்கின்றன.

உள்நாட்டு யுத்தத்தின் உருப்பெருக்கும், வாழ்வை குலைத்ததும் யாழ்.குடாநாட்டில் பட்டமேற்றும் திடல்கள் பலவற்றின் செயற்பாடு களைப் பலகாலம் செயலிழக்கச் செய்து விட்டது.

குறிப்பாக வல்வெட்டித்துறையில் தைப்பொங்கலன்று நிகழும் பட்டமேற்றும் திருவிழா பலவருடங்களாக நிகழவில்லை. இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்பியுள்ள நிலையில் பட்டமேற்றும் பாரம் பரியம் குறிப்பிட்டளவு மீளத் திரும்பியுள்ளது.

மனிதன் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு பொழுது போக்கு அவசியமானது. அந்த வகையில் பட்டமேற்றும் கலையை இப்போதும் விடாப்பிடியாகப் பின்பற்றும் வடமராட்சி மக்களும், ஏனைய பிரதேச மக்களும் பதிவிற்குரியவர்கள். மாறும் வாழ் வியலில் மறைந்து போகும் அருகிப் போகும் பாரம்பரிய பொழுது போக்குகள், கலைகள் நிறையவே இருக்கின்றன.,

அவற்றுக்கு மத்தியில் பட்டமேற்றும் பாரம்பரியம் இன்றும் குறித்த சிலபகுதிகளில் தொடர்வது ஆரோக்கியமானது. தான். சென்றவாரம் வடமராட்சிக் கிராமத்திற்குச் செல்ல வாய்ப்புக் கிடைத்த போது பட்டத்தின் பதிவுகளையும் சுமந்து வீட்டிற்கு வந் தேன்.உங்கள் பட்டறிவில் பதிந்தவை இன்னுமின்னும் இருக்கும். வசந்தகால நினைவுகளை இனிமையாக இதனுடன் இணைத்து அசைபோட்டுப் பாருங்கள்.

**நன்றி-தினக்குரல் வாரவெளியீடு- 30-12-2012, 06.01.2013**



# அருகிப்போன பாரம்பரியங்கள்

மனிதர்கள் அஃறிணை உயிரினங்களை உயர்வாக நேசித்த காலப் பகுதி ஒன்றிருந்தது. அவற்றின் எச்சங்களாக இன்றும் இருக்கும் சங்கடப் படலை, சுமைதாங்கி, ஆவுரஞ்சிக் கல், கேணி, தெருமூடி மடம், ஆறுகால் மடம் போன்ற சொற்கோலங்களின் வாழ்வியலை நினைவூட்டுவதாக இன்றைய பத்தி மலருகின்றது.


நவீனங்களின் வருகை இவற்றின் தேவைகளை அற்றுப் போகச் செய்து விட்டது. குறைவடையச் செய்து விட்டது. கால மாற்றம் எனும் பசி இவற்றில் பலவற்றை தனது உணவாக்கி விட்டது. வீதி அகலமாக்கும் பணியின் போதும் இப் பாரம்பரிய சின்னங்கள் பல அழிக்கப்பட்டமை கவலைக்குரியது. யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்த பண்பாட்டம்சங்களில் மேற்சொன்னவைகளும் உள்ளன.

மனிதர்கள் உயிரினங்கள் நலமாக வாழ வேண்டுமென்ற உயரிய

சிந்தனைகள் காலத்திற்குக் காலம் இருந்து வருகின்றது.

அச் சிந்தனைகளின் வழியாகச் செயலுருப் பெற்றவைகளில் சங் கடப் படலை என்பதை முதலாவதாகப் பார்ப்போம்.

**சங்கடப் படலை**



சங்கடப் படலை என்பது ஒரு வகைத் துன்ப நிலை எனலாம். அவன் சங்கடப்படுகின்றான்... இது போன்ற சொல் வழக்கு யாழ்ப்பா ணச் சமூகத்திற்கு தனித் துவமான ஒன்றாகவே இருந்து வருகின்றது.

போக்குவரத்தில் சங்கடப்படும் மக்களுக்காகவே உருவாக்கப்பட் டது இந்தச் சங்கடப் படலை என்பதாகும். முன்னாளில் இப்போதை யதைப் போல வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள் இல்லை. ஆட்டோ, கார், வான், பஸ் போன்றவை இல்லை. இதனால் பொது மக்களின் பிரயாணம் மிகப் பெருமளவுக்கு கால் நடையாகவும் மாட்டு வண்டிப் பயணமாகவும் நிகழ்ந்தது.

அக்காலத்தில் இப்போதையதைப் போல தார்ப்பாதைகள் இல்லை. கரடுமுரடான மண் பாதைகளே பெருமளவு இருக்கும். ஒற்றைய டிப் பாதைகளும், மரங்கள், செடி, கொடிகளடங்கிய சிறு காட்டு வழியாகவும் பயணங்கள் நிகழும்.

அப்போது கால்நடைப் பயணிகள் இளைப்பாறுவதற்கு வசதி தேவைப்பட்டது. அதனை உணர்ந்த முதியோர்கள் வீட்டுக்கு வெளியே வீதி ஓரமாகச் சங்கடப்படலை எனும் இவ் அமைப்பை உருவாக்கினார்கள்.

ஆரம்ப காலங்களில் பனைமரம், பனைஓலை அல்லது கிடுகு கொண்டு சங்கடப்படலையை அமைத்தார்கள். இப்பழைய காலச் சங்கடப்படலை அமைப்பு பற்றிய படங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. இக்காலச் சங்கடப்படலைகள் பற்றிய படங்களையே இத்துடன் இணைத்துள்ளோம்.

வீதியின் ஓரத்தில் வேலி அடைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்கு வரு வதற்காக படலை ஒன்று இருக்கும். இதனைத் தான் இன்று ஆங்கி லத்தில் கேற் (Gate) என்கின்றோம். இந்தப் படலையுடன் இணைந் ததாக பத்து முதல் பதினைந்து அடி உயரமுள்ளதாக கிடுகால் அல்லது பனை ஓலையால் வேய்ந்த சங்கடப்படலை அமைக்கப் பட்டிருக்கும். பலகையால் செய்யப்பட்ட கதவு ஒன்று இருக்கும் பயணிகள் அமர்ந்திருக்கவென அமைக்கப்பட்ட மண் திண்ணைகள் கதவின் முன்புறமாக வீதியோரம் இடம் வலமாக இருக்கும்.

சில இடங்களில் மண் திண்ணைகள் படலையின் உட்புறம் இருக்கும். வீதியோரச் சங்கடப் படலையின் திண்ணையில் மணல் பரப்பி மண் பானை ஒன்றில் தண்ணீரும் பித்தளை மூக்குப் பேணியும் இருக்கும். தொலை தூரம் நடந்து களைத்த ஒருவர் சங்கடப் படலையின் திண்ணையில் அமர்ந்து களைப்பாறுவதுடன் தண்ணீரும் அருந்தக் கூடிய வகையில் இவ்அமைப்பு இருக்கும்.


வீட்டிற்கு வருவோரை இருத்தி ஆறுதலடையச் செய்யும் தன்மை யும் இச் சங்கடப்படலை அமைப்பில் இருந்திருக்கின்றது. பின்னா ளில் இச் சங்கடப் படலை அமைப்பு சுண்ணாம்புக் கட்டிடமாக அமைக் கப்பட்டது. கூரைக்கு ஓடு போடப்பட்டிருந்தது.

தாம் குடியிருக்கும் வீடு மண் வீடாக இருக்கும். ஆனால், சங்கடப் படலை சுண்ணாம்பு அல்லது சீமெந்துக் கட்டிடமாக இருக்குமாறு அமைத்தார்கள். யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் இச்

சங்கப்படலை அமைக்கப்பட்டாலும் வடமராட்சிப் பிரதேசத்தில் தான் இதன் செல்வாக்கு மிகப் பெருமளவில் இருந்தது. இன்றும் கோலோச் சுகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பல இடங்களில் சங்கடப் படலைகளில் எஞ்சியவை அப்படியே இருக்கின்றன. நவீன முறையில் வீடு கட்டும் போது இவ் அமைப்பை பின்பற்றும் குடும்பங்களும் இருக்கின்றன. துன்னாலைக் கிராமத்தில் தான் மிகப் பெருமளவில் இவற்றைக் காணக் கூடியதாக உள்ளது.

### சுமை தாங்கிக் கல்



மரபார்ந்த வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒன்று தான் சுமை தாங்கிக் கல். மருத்துவ வசதிகள் நவீனத்துவமடையாத முன்னாளில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் சுகப் பிரசவத்தின் மூலம் மட்டுமே குழந்தை பெறக் கூடியதாயிருந்தது. சத்திரசி கிச்சை மூலம் குழந்தை பெறும் முறை நடைமுறையில் இருக் கவில்லை.

அந்நாட்களில் சுகப்பிரசவம் நடைபெறாவிட்டால் அந்தக் கர்ப் பிணிப் பெண் கொடும் வேதனையுடன் வயிற்றுப் பிள்ளையுடன் துடி துடித்து மரணமடைவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அவ்வாறு ஒரு பெண் வயிற்றுச் சுமையுடன் மரணமடைய நேரிட்டால் வசதி படைத்த சில குடும்பங்கள் அவளின் நினைவாக ஊரின் பாதையருகே சுமைதாங்கிக் கல் ஒன்றை நிறுவுவார்கள்.


கால் நடைப் போக்குவரத்தில் பெரிதும் தங்கியிருந்த அக்கா

லத்தில் தலையில், தோளில், பொருட்களைச் சுமந்து வருவோர் அவற்றை வைத்துக் களைப்பாற இடம் தேவை.

பொருட்களை வைத்துக் கொள்ள இச் சுமைதாங்கிக் கல் பயன் பட்டது. வழிப் போக்கர்களின் பொருள் சுமையைத் தான் தாங்கு வதாக இக்கல் அமைந்தது. பாதையோரம் கோயிலின் அருகாமை யில் ஆலமரம், அரசமரம். வேப்பமரம் அருகாமையில் தான் இச் சுமைதாங்கிக் கல் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றின் வடிவங்களும் மாறுபட்டிருக்கும். தனி ஒரு கல்லில் அமைக்கப்பட்டது ஒரு வகை. மனிதர்களின் உயரங்களுக்கேற்ப சுமைகளை (பொருட்களை) இறக்கி வைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருப்பது இன்னுமொரு வகை. இது “ப” வடிவிலிருக்கும்.

## ஆவுரஞ்சிக் கல்

“ஆ” என்பது பசு மாட்டைக் குறிக்கின்றது. முன்னாளில் பால் பெறும் தேவைக்காகப் பசுக்களைப் பெருமளவில் வளர்த்தார்கள். அவ்வாறு வளர்க்கப்படும் பசுக்கள் தாகம் தீர்ப்பதற்காக ஊருக்கு ஊர் பாதையோரமாக தண்ணீர்த் தொட்டி அமைப்பார்கள்.



கிணற்றிலிருந்தோ, கேணியி லிருந்தோ தண்ணீரை இத் தொட் டிகளில் நிறைப்பார்கள்தர வைகள், வெளிகளில் மாடுகள் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லப்படும். அவற் றுக்குத் தாகமேற்படும் போது இந் தத் தண்ணீர்த் தொட்டி உதவியது. தண்ணீர் குடித்த மாடுகள் தமது உடலில் ஏற்படும் அசௌகரியங்க ளைப் போக்க கல்லுடன் உடலைத் தேய்க்க இவ் ஆவுரஞ்சிக் கல்

உதவியது. புல் மேய்ந்த பின் குடித்த தண்ணீர் மாடுகளின் வயிற்றில் சமிபாடு அடைய இவ் ஆவுரஞ்சிக் கல் உதவியதாகவும் கூறுகின்றனர். கால மாற்றம் வீதி அகலமாக்குதல், வீட்டுக்கு வீடு மாடுகள் வளர்த்த கிராமியப் பொருளாதார முறைமையையும் மிகப் பெருமளவில் மாற்றமுறச் செய்து விட்டது.

## கேணி



முன்னாளில் இப்போதையதைப் போல வீட்டுக்கு வீடு கிணறுகள் இல்லை. மிக அரிதாகவே சில கிராமங்களில் கிணறுகள் இருக்கும். ஆழம் குறைந்த கிணறுள்ள விவ சாயக் கிராமங்கள் கிணற்று நீரின் பாவனையை இலகுவாகப் பெற்றன. அவ்வாறில்லாத கிராமங்களில் மக்கள் உடலைச் சுத்தமாக்க ஆடை களைச் சுத்தம் செய்ய கேணி நீரில் தங்கியிருந்தனர்.


ஊருக்கு ஊர் கேணியிருந்தது. மனிதனது யுத்த அனர்த்தம் காணாத அக்காலத்தில் மரங்கள் அடர்ந்த பிரதேசங்கள் நிறையவே இருந்தன. இதனால், மாதம் மும்மாரி எனக் கூறுமளவுக்கு இல்லாவிட்டாலும் அவ்வப்போது மழைபொழிந்தது. இதனால் கேணிக ளில் வருடம் முழுவதும் தண்ணீர் இருந்தது. சுண்ணக்கற் பாறைகளிடையே வரும் நீரூற்றும் தண்ணீரைத் தந்தது.

ஊர் மக்கள் இக்கேணிகளைப் பாதுகாத்து தமது நீர்த் தேவைகளை நிறைவேற்றினார்கள். கல்லைச் சதுர வடிவில் பொழிந்து, மணலுடன் சுண்ணாம்புத் தூள், சர்க்கரை, கற்றாளைச் சாறு , நீர் கலந்து உருவாக்கிய சீமெந்தைக் கொண்டு கேணிகளைக் கட்டினார்கள். பலநூறு வருடம் கடந்தும் அவை உறுதியாக இருக்கின்றன.

குளிப்பு, முழுக்கு நடக்கும் கேணிதான் ஊர்மக்களின் முகவரியாக இருந்தது. முழுக் கிராமமும் ஆளையாள் அறிந்து கொள்ளும் இடமாக கேணி விளங்கியது. கேணிகளுடன் துலாவும் பெருத்தப்பட்டிருக்கும். அருகில் மாடு தண்ணீர் குடிக்கவென தண்ணீர்த் தொட்டியொன்றும் கட்டப்பட்டிருக்கும்.

கால மாற்றம் மனிதர்களுக்கு நிறையவே வசதிகளைக் கொடுத்து வாழ்க்கைத்தரத்தைக் கூட்டி விட்டது. அதனால் கேணிகளின் பாவனை மிகப் பெருமளவில் வழக்கொழிந்து அவற்றை மூடும் நிலை வரை சென்றுள்ளது.

## தெருமூடி மடம்



தெருமூடி மடம் என்பது யாழ்ப்பாணத்தின் பண்பாட்டம்சங்களில் ஒன்றாக உள்ளது. தெரு என்பது பொதுமக்கள் செல்லும் பாதையைக் குறிக்கின்றது அத்தகைய பாதையின் இருபுறத்தையும் மூடி அமைக்கப்பட்ட கட்டிட அமைப்புத் தான் தெருமூடி மடம் என்பதாகும்.


இம் மடத்தின் இரு புறமும் ஆட்கள் இருக்க படிக்கட்டுகள் திண்ணை போன்ற அமைப்புக்களில் இருக்கும். வழிப்போக்கர் நடந்து செல்லும் போது வெய்யில், மழை போன்றவற்றினால் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாப்புப் பெற இத் தெருமூடி மடங்கள் உதவின. குறிப்பாக தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர், நோயாளிகள் போன்றோருக்கு உதவும் வகையில் இத் தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டன. காலத் தின் கோலம் இவ் அமைப்பை அருகிப் போகச் செய்து விட்டது.

- வேதநாயகம் தபேந்திரன் -

## ஆறுகால் மடம்

தூண்களாக ஆறுகால்கள் உள்ள மடம் தான் ஆறுகால் மடமாகும். ஆனைக்கோட்டையில் ஆறுகால் மடம் ஒன்று பாரம்பரியத்தைப் பிர திபலிக்கும் வகையில் இருக்கின்றது. இப்பிரதேசமும் ஆறுகால் மட மென்ற பெயர் கொண்டு தான் அழைக்கப்படுகின்றது. ஆறுகால் மடத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

யாழ்ப்பாணத்துக் கிராமங்களின் பெயர்களில் மடம் என்ற சொல் பரவலாக இருப்பதைக் காண முடியும். கந்தர் மடம், சுப்பர் மடம், பூதர் மடம், மடத்தடி, மருதனார்மடம், ஓட்டுமடம் என மடங்களின் பெயர்களைக் கொண்ட கிராமங்களின் பட்டியல்கள் மிக நீளமானது.



இக்கிராமப் பெயர்ச் சொல் வழக் கிலிருந்தே வழிப் போக்கர் கள் களைப்பைப் போக்க ஏராளம் மடங்கள் முன்னாளில் இருந்ததை அறிய முடிகின்றது. இப்போது இந்துக் கோயில்களில் மடங்கள் இருக்கின்றன. கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங் கும் இயல்பைக் கொண்டதாக திரு மண நிகழ்வுகளுக்கு உணவு வழங் கும் இயல்பினைக் கொண்டதாகவே இயங்குகின்றன.

தெருவுக்குத் தெரு மடங்கள் இருந்த வாழ்வியல் கோலம் வெகு காலத்திற்கு முன்பே மாற்றமடையத் தொடங்கிவிட்டது. விஞ்ஞானத் தின் விரைவான வளர்ச்சி மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை வெகுவாகவே உயர்த்தி விட்டது. பல வாரங்கள் சென்ற பயணங்கள் சில மணி நேரப் பயணங்களாகச் சுருங்கி விட்டது.

சில நாட்கள் சென்ற உள்நாட்டுப் போக்குவரத்துக்கள் சில மணி நேரப் பயணங்களாகி விட்டது. கைத்தொழில் புரட்சியின் விளைவால் இயந்

திர யுகத்தின் ஆட்சிக்குள் மனிதன் ஆட்பட்டு விட்டான்.

சைக்கிளின் வருகையால் அவற்றின் பரவலாக்கத்தால் நடைப் பயணம்குறைந்தது.கார்,பஸ்,சவ்லற்லொறி,(தட்டிவான்),ஆட்டோ,வான், மோட்டார் சைக்கிள் என வாகனங்களின் வருகை மனிதர்களின் வாழ்க்கையை இலேசாக்கி விட்டன. இவற்றால் நடைபாதைப் பய ணம் என்பது மிகக் குறுகிய தூரப் பயணங்களாகின.

வாழ்வின் நவீன கோலங்கள் எமது சங்கடப் படலை, தெரு மூடி மடம், ஆறுகால் மடம், சுமைதாங்கி, ஆவுரஞ்சிக் கல், கேணி போன் றவற்றின் தேவைகளைக்குறைத்து விட்டன.

மனித நேயத்தை, உயிரினங்களின் நேசிப்பை உயர்வாகக் கொண்ட சமூகத்தின் பண்புகளும் மாறத் தொடங்கின. பாதை விரி வாக்க வேலைகள் பாரம்பரியம் கூறும் இக் கட்டுமானங்களின் அழிவைத் தந்தன. எமது முன்னோர்கள் எவ்விதம் வாழ்ந்தார்கள் எனத் தேடிப் புறப்படும் ஒருவருக்குத் தொல் பொருள் சான்றுகள் குறைவாக இருப் பது கவலைக்குரியதே. இவற்றில் பெரும்பாலனவற்றைப் பேணிப் பாதுகாக்கும் வடமராட்சிப் பிரதேச மக்கள் பாராட்டுக்குரியவர்களே. இவை போன்ற இனத்தின் வரலாறு, பெருமைகள் கூறும் சான்றுகள் ஏராளம் இன்னும் தேடிக்கண்டு பிடிக்கப்பட வேண்டியிருக்கிறது. காலப் பதிவேட்டில் இவற்றைப் பதிந்து ஆவணமாக்குவோம்.

**நன்றி தினக்குரல் வாரவெளியீடு** – 2013 **ஜனவரி** 13, 20



# வாழ்வாதாரங்கள் தந்த சீட்டு முறை

யாழ்ப்பாண மக்களின் பொருளாதார நிமிர்வின் அடித்தளமாகக் கூறக்கூடியதாக சீட்டு எனப்படும் பொருளாதார முறைமை உள்ளது. கடின உழைப்பிற்கும் சேமிப்பிற்கும் இலங்கையில் பேர்போனவர்க ளாக இம்மக்கள் மெச்சப்பட்டகாலம் இருந்தது.

இன்றையதைப்போல வாழ்க்கைத்தரங்களில் உயர்வுகள் இல் லாத அக்காலங்களில் மக்களின் பெருமளவு அடிப்படைத் தேவை களை சீட்டுமுறைமை ஏற்படுத்திக்கொடுத்தது. வீட்டுப்பாவனைப் பொருட்கள் முதல் தொழில் உபகரணங்கள், பணத்தை மொத்த மாகப்பெறல் வரையும் சீட்டு செல்வாக்கு செலுத்தியது.

1980 களில் உள்நாட்டு யுத்தம் காரணமாக மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, ஓசானிக் நாடுகளை நோக்கிப்புலம்பெயர்ந்த போது இச்சீட்டு முறையையும் கூடவே எடுத்துச் சென்றனர்.

இதனால் பொருளாதார மேம்பாடுகளும் நடந்தது. சண்டைசச் சரவுகளும் சிலவேளை இடம் பெற்றது. யாழ்ப்பாண மண்ணில் காலமாற்றம் பலசீட்டு முறைகளின் நடைமுறைகளைக் காணா மல்ப்போகச் செய்து விட்டது. பொருளாதாரமேம்பாடு கருதி ஊர்கூ டித்தேர்இழுத்த ஒற்றுமைப் பண்பாட்டின் இவ் அம்சங்களையும் ஆவணப்படுத்த வேண்டுமல்லவா? சீட்டு முறைமை இருவகையாக இடம் பெற்றது. ஒன்று வீட்டின் உள்ளேயே நடைபெற்றது. மற்றது ஊரிலுள்ள பலர்கூடியோ, சிலர் சேர்ந்தோ நடைபெறும். வீட்டின் உள்ளே எனும்போது அடுப்புப்புகட்டுச் சேமிப்பைக்கூறலாம்.

குசினி எனப்பட்ட சமையறையின் அடுப்பின் அண்மையாக பானை யொன்று வைக்கப்பட்டிருக்கும். நாளாந்தம் சமைப்பதற்கு எடுக்கும் அரிசியில் ஒருகைபிடி அரிசிஎடுத்து அந்தப்பானையினுள் இடு வார்கள். மாதமுடிவில் அப்பானையிலுள்ள அரிசி இரண்டு அல்லது மூன்று நாளைக்குச் சமைப்பதற்குப் போதுமானதாக இருக்கும்.

அடுப்புப் புகட்டில் சல்லிமுட்டி எனப்படும் மண்ணினால் ஆக்கப் பட்ட உண்டியல் இருக்கும். அதில்நாளாந்தம் சில்லறைக்காசு போடப் படும். முதல்நாள் ஒருரூபா, அடுத்தநாள் இரண்டு ரூபா, மூன்று ரூபா, நான்கு ரூபாவென 30 ஆம் திகதி முப்பதுரூபாவென அதிகரித்துச் செல்லும். பின்புமாத முடிவில் உண்டியலை உடைத்து குடும்பப் பெண் சீட்டுக்காசாகக்கட்டுவார். அடுத்தமாதமும் புதிய சல்லி முட்டி யிருக்கும். வீட்டிற்கு வெளியேசீட்டுக்கட்டும் பொருளாதார முறை கிராமத்திற்குக் கிராமம் அவர்களின் வளங்களின் கிடைப்பனவு, தேவைகள் என்பவற்றிற்கு ஏற்பமாறுபடும்.

யாழ்ப்பாண நகரை அண்டிய கரையோரக் கிராமங்களில் கிறிஸ்தவ மக்களிடையே பொருள் சீட்டு ஒருகாலத்தில் மிகவும் பிரபல மாயிருந்தது. தைமாதம் முதல் மார்கழி மாதம் வரையில் பொருள் சீட்டுபிடிப்பவரிடம் மாதாமாதம் காசு கட்டுவார்கள். இப்பணத்தைப்பெறும்போது காட்

(Card) ஒன்றில் பதிந்து ஒப்பமிட் டுக் கொடுப்பார்கள். அந்தந்த மாதத்திற்கு நேரேயுள்ள இடத்தில் இப்பதிவு இடம் பெற்றுக் கொள்ளும்.

அக்காலத்தில் ரூபா 10 முதல் 50 வரையில் இச்சீட்டுக்கான மாதாந்தக்காசு இருந்தது. மார்கழி மாதம் வந்ததும் கிறிஸ்மஸ் தினத்திற்கு ஒருகிழமை முந்தியதாக கட்டிய காசின் பெறுமதிக்கேற்ற வீட்டுப்பாவனைப்பொருட்கள் வழங்கப்பட்டன.

வாளி, குடம், சமையல் பாத்திரங்கள் போன்றவையே இவ்வாறு பிரதானமாக வழங்கப்பட்டன. சீட்டுப்பணம் செலுத்தியவர்கள் தமது பண எல்லைக்குள் விரும்பியபொருட்களைத் தெரிவுசெய்யும் உரிமை வழங்கப்பட்டது. சீட்டுக்காசு கட்டும் அட்டையில் விலைவாசி ஏற்றத்திற்கேற்ப பொருள்களின் எண்ணிக்கை மாறுபடும். என்ற வசனமிருக்கும்.

இச்சீட்டு முறை மூலம் வீட்டுப்பாவனைப் பொருள்களைப் பெறுவதில் குடும்பப்பெண்கள் மிகவும் அக்கறை காட்டினார்கள். வாழ்க்கை வசதிகள் உயர்வடைந்துள்ள இக்காலத்தில் இச்சீட்டு முறையின் சுவடுகளைக் காணமுடியாதுள்ளது. தகவல் ஆவணமாக மட்டுமேயுள்ளது.

சீட்டுமுறையில் மேற்சொன்னவை இன்று பெரும்பாலும் வழக் கொழிந்து போய்விட்டன. ஏலச்சீட்டு என்பது இன்றும் யாழ்ப்பாணத் தில் பெரும் செல்வாக்குச் செலுத்திவரும். ஒன்றாகும். சீட்டை முன் னின்று நடத்துபவரை தாய்ச்சீட்டுக்காரர் என்பார்கள். ஏலச்சீட்டு முறையிலும் இவ் வழக்கமாயிருக்கின்றது. சீட்டின் முதல் மாதக் காசு தாய்ச் சீட்டுக்காரரிற்கு உரியது.

பணக்கொடுக்கல், வாங்கல் தொடர்பான பொறுப்புகள் அனைத் தையும் தாங்கும் ஒருவராகத் தாய்ச்சீட்டுக்காரர் இருப் பார். ஏலச்

சீட்டு முறைமையில் 20 பேர் சேர்ந்து தலா 5000 வீதம் 20 மாதத்திற்கு சீட்டு போடுவதாக இருக்கிறதெனவைத்துக் கொள் வோம். 5000 ரூபாவீதம் 20 பேர் சேர்வதனால் சீட்டின் மொத்தப் பெறு மதி ஒரு இலட்சம் ரூபாவாக இருக்கும்.

முதல் மாதச்சீட்டு தாய்ச்சீட்டுக்காரரிடம் வழங்கப்பட்டுவிடும். இரண்டாவது மாதம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி ஏலத்திற்கு விடப்படும். பணத்தேவை உள்ளவர்கள் போட்டிபோட்டு விலையைக் குறைத்துக் கேட்டுக் கொண்டு போவார்கள்.

சிலவேளை அவசர பணத்தேவை உள்ளவர் 50,000 ரூபா வெனக்கேட்டு எடுத்தால் அவரினால் மிகுதியாகும் 50,000 ரூபாவை 20 பேருக்கும் கழிவாககழித்து 3 ஆம்மாதம் கட்டுப்பணம் வாங்கப்படும். இவ்வாறே மாதம் மாதம் கழிவுவரவர ஏலத்தில் போட்டி போடாமல் அமைதியாக பெறுமை காப்பவருக்கு பணநன்மை நிகழும்.

அவர் இறுதி மாதத்தில் ஒரு இலட்சம் ரூபாவை குறைந்த கட்டுப்பணத்திலேயே பெறக்கூடியதாக இருக்கும். அதிஷ்ட இலா பச்சீட்டு எனப்படும். ஒருவகைச்சீட்டு அன்றும் இன்றும் பிரபல்யமா னதாக இருக்கின்றது. மாதம் ஆயிரம் ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்தும் 20 பேர் சேர்ந்து கொள்கின்றனர். எனவைத்துக் கொள் வோம்.

முதல் நாளில் 20 பேரின் முன்னிலையில் ஒன்று முதல் 20 வரை யான இலக்கங்கள் பேணி ஒன்றில் போட்டுக் குலுக்கி ஒவ்வொ ருவரையும் எடுக்கவிடுவார்கள். ஒவ்வொருவரும் இலக்கம் கிடைத்த முறையின்படி பணம் பெறுவார்கள். இதில் கட்டும்பணம் ஆயிரம் ரூபாய்ப்படி 20 மாதக்காசும் மொத்தம் இருபது ஆயிரமாக வழங்கப்படும். இதில் இலாபநட்டம் கிடையாது. ஆனால், முதல் இலக்கங்களில் சீட்டுக்கிடைப்பவர்கள் பணத்தை முன்கூட்டியே பெற்று நன்மையை

அனுபவிப்பார்கள்.

சீட்டு பிடிப்பதில் பெயர்பெற்றவர்களை சீட்டுத்தங்கம், சீட்டுப் பொன்னம்மா சீட்டு மணியம் என அடைமொழியிட்டு அழைக்கும் வழக்கமும் இருந்தது. பணக்கையிருப்பு சொந்தமாக வைத்திருப் பவர்களிடம் தான் சீட்டுக்கட்டச் சேருவார்கள்.

பண வசதிகுறைந்தவர் ஒருவர் சீட்டுப்பிடிக்க ஆயத்தமா னால் அவரிடம் சேரமாட்டார்கள். இதனால் சீட்டுப்பொருளாதார முறைமையில் பணம் படைத்தவன் மேலும் பணம் படைத்தவனா கின்றான். தாய்ச் சீட்டாகக்கிடைக்கும் பணத்தை வட்டிக்குக் கொடுத்து அதனைப் பெருக்கி வசதி படைத்தவர்களாகியோரும் உள்ளனர். சீட்டில் பணம் பெற்றவர்கள் சிலரால் ஏமாற்றப்பட்டுப் பொன், பொருள் பணமிழந்து நோயாளி யாகி நீண்ட ஆயுளின்றி இறப்பைப் சந்தித்தவர்களும் உள்ளனர்.

யுத்தத்தின் வரவு, இடப் பெயர்வு வாழ்க்கைக்கு வழிவகுக்க சீட்டுப் பொருளாதார முறைமை குழம்பி நட்டப்பட்டோரும் உள்ளனர். பெண்பிள்ளைகளின் திருமணம், காணிவாங்குதல், வீடுகட்டுதல், வாகனம் வாங்குதல், வியாபாரம் தொடங்குதல், தொழிற்சாலை அமைத்தல் போன்றவை சீட்டுப்பணத்தின் மூலம் நிகழ்த்தப்பட்டன. இப்போதும் அவை நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

1977 ஆம் ஆண்டில் ஆரம்பித்த மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய பயணங்கள், 1980 களில் ஆரம்பித்த மேற்குலக நாடுகளை நோக்கிய புலம்பெயர்வு ஆகியவற்றிற்கு சீட்டுக் கட்டியபணமும் முதலாக அமைந்தது. யாழ்ப்பாண மக்களின் பொருளாதார எழுச்சி யில் சீட்டுகளின் வகிபாகம் அளவிடற்கரியது. பணவரவு வைபவம், அற்ஹோம் வைபவம் என்பனவும் சீட்டு முறையின் இன்னொரு வடிவம் எனலாம்.


இவை பொருளியல் நுண்பாகக் கருத்திட்டத்தில் மிக முக்கிய மானவை. எமது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தியமை கிராமிய வறுமை குறைந்தமை என்ற வகையில் சீட்டுப்பொருளாதார முறைமை மதிப்பிற்குரியதாகும்.

மேற்கத்தைய நாட்டுப் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பெரி தாக போற்றிப் புகழும் எம்மவர்பலர் எம்மிடையே நிலவிய பாரம்ப ரிய முறைகளை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்ட முன்வ ருவதில்ல. அரசாங்கத்தின் மத்தியவங்கியின் அனுமதி பெறாது நம்பிக்கையினடிப்படையில் கோடான கோடி ரூபாக்கள் பொது மக்க ளிடையே நம்பிக்கை என்ற ஒன்றைமட்டும் அடிப்படையாகக் கொண்டு பரிமாற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

இன்றும்கூட பொருள்களின் சீட்டு பெருமளவில் வழக் கொழிந்து போனாலும் கூட, பணப்பரிமாற்றச் சீட்டுமுறை செல் வாக்கான தாகவே உள்ளது.

நகரப்புறங்களில் கடை முதலாளிமார் கொப்பியில் பதிந்து நாளாந்தம் அல்லது வாராந்தம் ஒரு தொகைக்காசைக் கொடுத்து பல இலட்சம் ரூபாக்களைச் சீட்டுப்பிடிக்கின்றனர். பணப்பரிமாற் றத்திற்கு எத்தனை எத்தனையோமிக நவீன இலத்திரனியல் முறை மைகள் வந்துவிட்டன. ஆயினும் பாரம்பரியம் வழி வந்தசீட்டு முறை மையின் தொடர்ச்சி இச்சமூகத்தின் அசைவியக்கத்தில் என்றுமே செல்வாக்குச் செலுத்திவரும்.

**நன்றி தினக்குரல் வாரவெளியீடு - 27.3.2013**



# யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்திய சைக்கிள்

பனை யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் தடங்களில் எவ்வாறு இரண்டறக் கலந்துள்ளதோ, அது போல சைக்கிளும் இரத்தமும் சதையுமாக பிணைந்துள்ளது. இன்றைய வாழ்வியல் நடப்புகளில் சைக்கிளின் முதன்மை மிகவும் குறைந்திருக்கலாம். ஆனால், இம்மக்களின் வாழ்க்கைப் பயணத்தில் மிக நீண்ட தூரம் பயணித்த இயந்திர யுகத்தின் ஆரம்பகாலக் கண்டுபிடிப்பான சைக்கிளும் ஆவணப் பெட்டகத்தில் சேமிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் தமது நாட்டு கண்டு பிடிப்புகள் மற்றும் உற்பத்திகளின் சந்தையாக இலங்கையையும் வைத்திருந்தார்கள். அவ்வாறு அவர்களினால் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டவற்றில் சைக்கிளும் ஒன்று. சமதரைகளைக் கொண்ட யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் சைக்கிளின் வருகை புது அத்தியாயத்தை எழுத ஆரம்பித்தது. ஆரம்ப நாட்களில் சைக்கிள் வைத்திருப்போர் பணக்காரராகக்

கருதப்பட்டார்கள். 1960 களில் இது நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் மிக முக்கிய போக்குவரத்துச் சாதனமாகியது. 2000 ஆம் ஆண்டின் பின்னான காலப்பகுதியில் சைக்கிள் ஏழைகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாகனமாகியது.

பிரித்தானியர்களின் காலத்தில் றலி (Ralieh), ஹம்பர் (Humber), BSA, றட்ஜ் (Rudge), ஹேர்குலிஸ் (Herculis), போன்ற உற்பத்திப் பெயர்களைக் கொண்ட சைக்கிள்கள் வந்தன. அந்த நாளில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தை வைத்திருந்த பிரிட்டிஷ்கார்களின் நாடுகளில் அவர்களது உற்பத்திகளை மட்டும்தான் வாங்கலாம். இலங்கை சுதந்திரமடைந்த பின்பு 1970 களில் ஜப்பானிய தயாரிப்பு ஏசியா (Asia Bikl), சீனாவின் பிளையிங் பிஜன் சைக்கிள்கள் (Flying Pigeon) போன்ற சைக்கிள்கள் பாவனைக்கு வந்தன 1970 – 77இல் சீன நாட்டுடன் அரசாங்கம் வணிகத் தொடர்புகளை அதிகம் பேணிய போது பிளையிங் பிஜன் சைக்கிள் தாராளமாக வந்தது.

1977இல் திறந்த பொருளாதார யுகம் தோன்றிய போது ஏசியா சைக்கிள் நாட்டினுள் உலா வந்தது. பிரித்தானிய சைக்கிள்கள் அதிக விலைக்கு வந்தபோது ஜப்பான், சீனா போன்ற நாடுகள் குறைந்த விலைக்கு கவர்ச்சிகரமான சைக்கிள்களை உற்பத்தியாக்கியதால் இலங்கையர்கள் அவற்றை வாங்கினார்கள். 1980 களில் இந்தியா அவற்றை விடக் குறைந்த விலையில் சைக்கிள்களை உற்பத்தி யாக்கிய போது, எமது நாட்டவர் அவற்றை வாங்கினார்கள். கிறோ (Hero), RMI, ஈஸ்ரேன் (Eastern), லுமாலா (Lumala) போன்ற பெயர் கொண்ட சைக்கிள்கள் அவ்விதம் தாராளமாக வந்தன.

இம்மாற்றங்கள் யாழ்ப்பாண மக்களாலும் உள்வாங்கப்பட்டன. ஆனாலும், றலி சைக்கிள் தான் அந்நாளில் யாழ்ப்பாண மக்களால் மிகப் பெரிதும் விரும்பப்பட்டது. காரணம் இச் சைக்கிள் மிக உறுதியான உலோகத்தால் செய்யப்பட்டிருந்தது. இதன் போக்

உடைக்காது. பார் (Bar) வெடிக்காது. பின்னாளில் வந்த உறுதி குறைந்த சைக்கிள்களால் மூக்குடைந்து, பல்லுடைந்து, முகத்தில் காயப்பட்டதெல்லாம் நடந்தது. அப்போது கூறுவார்கள் றலி சைக்கிள் இருந்தால் இப்படி வந்திருக்குமா? யாழ்ப்பாண மக்களால் பிரித்தானியத் தாயாரிப்புகளான ஒஸ்ரின், கம்பனியின் A40, சோமசெற் கார்கள், சிங்கர் கம்பனியின் தையல் மெசின்கள், றலி சைக்கிள் என்பன மிகவும் விரும்பி நேசிக்கப்பட்டன. அவற்றின் திறமையும் உறுதியுமே இதற்குக் காரணமெனலாம்.

சைக்கிளின் வருகை நிகழ்ந்த நாட்களில் ஊரிலுள்ள பணக்கார் ஒருவர் சைக்கிளில் போவதை விடுப்பு பார்ப்பதற்காக காத்திருந்தார்களாம். றட்ஜ் (Rudge) எனும் சைக்கிளை பாரமான பொருட்கள் கட்டி ஓடுவதற்கு தேவையுள்ளவர்கள் விரும்பி வாங்கினார்கள். றலி சைக்கிளை அதன் அழகுக்காகவும் உறுதிக் காகவும் விரும்பினார்கள். ஹம்பர் (Humber) சைக்கிளின் முன்பக்கம் இரட்டை போக் இருக்கும். இதனால் அதிர்வு தாங்கியான சொக்கற் சோவர் இச் சைக்கிளின் இரட்டை போக் மூலம் செயற்பட்டது. நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் ஹம்பர் சைக்கிளைத் தான் விரும்பினார்கள். பெரிதும் உடற்களைப்பின்றி இலகுவாகப் பயணங்களை மேற்கொள்ள முடிந்தது உத்தியோகம் பார்ப்பவர்கள், கிறிஸ்தவ அருட் தந்தையார்கள் ஆகியோர் தான் பெரிதும் விரும்பிப் பாவித்தார்கள்.

ஏனெனில், இச்சைக்கிளின் முன்புற பார் பெண்களின் சைக் கிளைப் போன்று கீழ்வளைந்து முன் புறம்மேல் எழுந்து இருக் கும். இதனால் அவர்களது ஆடை அமைப்புகளை வசதியாக அணிந்து கொண்டு பயணிக்கக் கூடியதாயிருந்தது. BSA மோட்டார் சைக்கிளைச் செய்த பிரித்தானியக் கம்பனிகயின் BSA சைக்கிளும் பாவனையிலிருந்தது. அந்நாட்களில் வந்த சைக்கிள்களில் சிலவற் றுக்குச் செயின் கவர் (Chain Cover) மேல்புறம் பாதி மட்டுமேயிருந்தது.

இதனால் நீளக்காற்சட்டை எனக் கூறப்படும் லோங்ஸ் போட்டு சைக்கிள் ஓடுபவர்கள் சைக்கிள் செயினின் கிறீஸ் பிரளாதவாறு லோங்சுடன் கிளிப் இணைத்து காற்றில் பறக்காதவாறு ஓடினார்கள்.

வேட்டி கட்டிக்கொண்டு சைக்கிள் ஓடியவர்கள் வேட்டி சைக்கிள் சில்லுக் கம்பிகளுக்குள் சிக்காதவாறு வேட்டியின் ஒரு தலைப்பை எடுத்துச் சைக்கிள் சீற்றில் வைத்து அதன் மேலமர்ந்து கொண்டு ஓடினார்கள். இதனை இன்றும் சில நேரங்களில் மூத்தோரிடம் மட்டும் காண முடிகின்றது. தமது ஆடைகள் அழுக்கேறாதவாறு நுண்மதியைப் பாவித்த விதத்தின் வியப்பு அது. கடின உழைப்புக்கும், சேமிப்பிற்கும் பேர் போன யாழ்ப்பாண மக்கள் பிரித்தானிய தயாரிப்பு கார்கள், மோட்டார் சைக்கிள்கள் வந்தபோதும் சைக்கிளையே விரும்பினார்கள். சேமிப்பிலிருந்த பணத்தைக் கொண்டு எரிபொருள் செலவழியும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் சிலரே நாட்டம் காட்டினார்கள். பெருமளவானோர் எரிபொருள் செலவின்றி, இயந்திர தேய்மானம் மிகக் குறைந்த சைக்கிளையே விரும்பி வாங்கினார்கள்.

சிக்கனமான வாழ்க்கையை விரும்பும் மனோபாவம் கொண்ட இம்மக்களுக்கு சைக்கிள் நல்ல தெரிவாக அமைந்தது. ஆசியா வின், சீன நாட்டுப் பொருளாதாரத்தை ஈருறுளி (சைக்கிள்) பொருளாதாரமெனப் பொருளியல் அறிஞர்கள் கூறுவார்கள். அதுபோல யாழ்ப்பாணக் குடாநாடும் இருந்தது. அந்நாளில் பெற்றோல் விலையேறும் போது கார், மோட்டார் சைக்கிள் வைத்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அதனைக் காட்டச் சைக்கிளில் சில நாட்கள் பல்கலைக்கழகம் சென்றனர். வாழ்க்கைச் செலவின் உயர்வைக் காட்ட வேடிக்கையாக இது நிகழ்ந்தது. அந்நாளில் கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பேற்றோல், டீசல் விலையேறும் போது சைக்கிள், மாட்டு வண்டிகளில் சில நாட்கள் பாராளுமன்றம் சென்று கவனஈர்ப்புச் செய்தனர்.

யாழ்ப்பாண வியாபாரத்தில் சைக்கிளின் பங்களிப்பு வரலாற்றில் மறக்க முடியாதது. சந்தைக்கு மரக்கறிகள் கட்டிச் செல்லல், வாழைக்குலை எடுத்துச் செல்லல், அரிசி, மா, சீனி, பருப்பு மூட்டையென எடுத்துச் செல்லல், மீன் வியாபாரம் செய்தல், ஆடுகள், பழைய பாத்திரம், பித்தளை, சரிகைச் சாறி எடுத்துச் செல்லல் எனக் கூறப் போனால் சைக்கிளின் பட்டியல் மிக நீளமானது.

எரிபொருள் செலவழியும் வாகனங்களை விட சைக்கிள் மூலம் வியாபாரம் செய்வது தமக்கு கூடிய இலாபத்தைத் தருகின்றது என்பதனால் விரும்பிப் பாவித்தார்கள். சைக்கிள் வாடகைக்குக் கொடுக்கும் கடைகள் யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்தது. இது தனிக்கடையாகவும் சைக்கிள் திருத்தும் கடையுடனும் இணைந்தும் இருந்தது. தமது கடைச் சைக்கிளை அடையாளம் காண்பதற்கென பெயின்ற் மூலம் அல்லது வெல்டிங் மூலம் அடையாளமிடும் வழக்கமும் இருந்தது. சைக்கிள் முன் பாரில் ஆட்களை டபிள் ஏற்றக்கூடாது என்பதற்காக ஆணிகளை வைத்து ஒட்டிய கடைக்காரர்கள் கூட இருந்தனர்.

வாய் வல்லமை, சண்டித்தனம் காட்டக்கூடியவர்களே சைக்கிள் வாடகைக்கு விடும் முதலாளிமார்களாக இருக்க முடிந்தது. ஏனென்றால், வாடகைக்கு எடுத்துச் சென்ற சைக்கிள் தவறுதலாகவோ குடிவெறியில் விபத்துக்கு உள்ளாகினாலோ அதற்குரிய தண்டப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. சண்டித்தனம் காட்டக்கூடியவருக்கே இவ்விதம் அறவிட்டுக் கொள்ள முடிந்தது. சைக்கிள் வாடகைக்குக் கொடுக்கும் காலங்களில் தமக்கு நன்கு தெரிந்தவர், அறிந்தவருக்கு மட்டுமே வாடகைக்குக் கொடுத்தார்கள். கொடுக்கும் போது கடையில் வைக்கப்பட்டுள்ள கொப்பி ஒன்றில் சைக்கிள் எடுப்பவரின் பெயர், முகவரி, சைக்கிள் எடுக்கும் நேரம் என்பன பதிந்து வைக்கப்படும். வாடகை மணித்தியாலக் கணக்குப் பார்த்து அறவிடப்பட்டது.

தூர இடத்துக்கு நன்மை, தீமை நிகழ்வுகளுக்குப் போய் வர விரும்புபவர்கள் சைக்கிளை வாடகைக்கு எடுத்தார்கள். சிறுவர்கள் ஓடும் சின்னச் சைக்கிள்களும் வாடகைக்கு விடப்பட்டன. பாடசாலை விடுமுறை நாட்களில் இவற்றுக்கு பெரும் மவுசு இருக்கும். சைக்கிள் வாடகைப் பணம் மணித்தியாலத்திற்கு 25 சதம், 50 சதம் எனத்தான் ஆரம்ப நாட்களிலிருந்தது. பிந்திய காலத்தில் சைக்கிள் வாடகைக்கு விடும் நடைமுறை முற்றாகவே அற்றுப் போனது. சைக்கிள் திருத்துவதில் நிபுணத்துவம் மிக்க சிலர் யாழ்ப்பாணத்தில் இருந் தார்கள். அவர்களிடம் சைக்கிளைப் பழுது பார்த்தால் தான் தமக்குத் திருப்திப்படுமெனக் காத்திருப்பார்கள். மழை முடிந்து மார்கழி, தை மாதம் வந்தால் சைக்கிள் கழுவிப் பூட்ட சைக்கிள் திருத்தும் கடைக்காரரிடம் கொடுப்பார்கள்.

சைக்கிள் முழுவதையும் கழற்றிப் பாகங்களாக்கி மண்ணெண் ணெயில் கழுவி பொருத்தும் இடங்களில் புதிதாக கிறீஸ் வைத்து புதிய போள்ஸ் வைத்துப்பூட்டுவார்கள். தேய்வடைந்த பழுதடைந்த பாகங்களை மாற்றுவார்கள். ஒரு சைக்கிளைத் தனியாக ஒருவர் கழுவிப்பூட்ட ஒரு பகல் பொழுது வேலை செய்ய வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை இவ்விதம் சைக்கிளைக் கழுவிப் பூட்டும் படலம் நடக்கும். சைக்கிளை ஒழுங்காகத் தண்ணீரால் கழுவி, எண்ணெய் சீலையால் துடைத்து, சில் அச்சுடன் பூப்போட்டு பெல் அல்லது கோர்ண் பூட்டி, சில நேரம் காற்றாடியும் பூட்டி ஸ்ரைலாக வைத்திருந்த பலர் இருந்தார்கள். வருடா வருடம் பெயின்ற் அடித்து எப்போதுமே பளிச்சென வைத்திருந்த சிலரும், சைக்கிள் ரயர் றிம்முடன் வெள்ளிக் கம்பிகள் பூட்டி எப்போதுமே பளிச்சென அழகாக வைத்திருந்தோரும் இருந்தார்கள். தமது சைக்கிளை இரவலாக யாரும் ஓடக்கொடுக்க மாட்டார்கள், எழுதுகின்ற மை நிரப்பு பேனா, சைக்கிள் என்பன யாருக்கும் இரவல் கொடுக்க கூடாதென்பது யாழ்ப்பாண மக்களின் மரபு வழிவந்த நம்பிக்கை. சைக்கிள் என்றவுடன் பொலிஸ்காரரின் (Police) நினைவும் கூடவே

வருகின்றது.

இரவுப் பொழுதில் சைக்கிளில் டைனமோ மூலம் முன்பக்கம் வெளிச்சம் (லைற் Light) காட்டாது போனால் பொலிஸார் அதனைக் குற்றமாகப் பதிந்து தண்டப் பணம் அறவிட்டார்கள். பொலிஸுக்குப் பயந்து ஒளித்து ஓடியதும், பொலிஸ் கலைத்துப் பிடித்துக் குற்றம் பதிந்ததும் பழைய கதைகளகவே போய்விட்டன. சிலவேளை பொலிஸார் டைனமோ, ஹெட்லைற் இல்லாமல் இரவு நேரத்தில் பயணிக்கும் சைக்கிள் ரயரின் காற்றைத் திறந்து வால்க்கட்டையைப் பிடுங்கி எறிந்து உருட்டிச் செல்லுமாறு தண்டனை கொடுத்ததாக மூத்தோர்கள் கூறுகின்றனர்.

பெண்களை சைக்கிளில் ஏறிச் செல்லவோ, சைக்கிளைத் தனியாக ஓட்டிச் செல்லவோ முடியாத காலமொன்று யாழ்ப்பா ணத்தில் இருந்தது. 1960 களில் திருமணம் முடித்த பெரியவர் ஒருவர் கூறினார். தான் திருமணமாகிய புதுசில் தனது மனைவியை சைக்கிளின் பின்புறம் ஏற்றிச் சென்ற போது "பொம்பிளையைச் சைக்கிளில் ஏத்திக் கொண்டு போறான் டோய்....." எனக் கூச்சலிட்டனராம் சில இளைஞர்கள்.

காலமாற்றம் பெண் கல்வியின் எண்ணிக்கையைக் கூட்டிய போது பெண்களும் சைக்கிள் ஓட வேண்டிய கட்டாயத் தேவையைத் தோற்றுவித்தது பெண்கள் ஆரம்ப காலங்களில் ஆண் சைக்கிளில் தான் தமது தேவை கருதிப் பயணங்களை மேற்கொண்டார்கள். பெண்கள் சைக்கிளும் இறக்குமதியாகத் தொடங்கின. அவ்வாறு வந்தவற்றில் சீனாவின் பிளையிங் பிஜன், ஜப்பானின் ஏசியா சைக்கிள்கள் முதன்மையானவை. பின்னாளில் பாடசாலை, பல்க லைக்கழகம், தொழிநுட்பக்கல்லூரி என எங்கும் மிகத் தாராளமா கவே பெண்கள் சைக்கிளைப் பார்க்க முடிந்தது.

பாடசாலை சேவைக்கு வான், பஸ்கள் பெருமளவு ஈடுபடாத காலத்தில் சைக்கிளில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஏற்றிச் சென்று வருவது பகுதிநேரத் தொழிலாயிருந்தது. அது இந்நாளிலும் சிலரால் செய்யப்படுவதை அருந்தலாகக் காணக்கிடைக்கின்றது.

உள்நாட்டு யுத்தத்தின் விரிவாக்கத்தால் எரிபொருள் தடை வருகையின்மை நிகழ்ந்த போது வடபகுதி மக்களின் வாழ்வில் சைக்கிள் ஆற்றிய பங்கு மகத்தானது. குறிப்பாக 1990-1997 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சைக்கிள் தான் மிகப் பெருமளவு மக்களின் உயிர் நாடியாக இருந்தது.

1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புதிய கல்வி ஆண்டுக்காக யுத்தத்தின் சத்தங்களுக்கு மத்தியிலும் திறந்தது. அப்போது துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அழகையா துரைராசா வடமராட்சியின் வதிரிக் கிராமத்திலிருந்து 35 கிலோ மீற்றர்கள் சைக்கிளில் பயணித்து யாழ் பல்கலைக்கழகம் வருவார். பேராசிரியர் பொ சுந்தரம்பிள்ளை துணைவேந்தராக இருந்த காலத்திலும் சைக்கிளில் தான் பல்கலைக்கழகம் வருவார்.

நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் ஆடம்பரக்கார்களில் கடமைக்கு வந்த அந்த நாட்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர்களோ மக்களோடு மக்களாக சைக் கிளில் வந்தமை அந்தக் காலத்தின் நிலையைக் காட்டியது.

அன்றைய நாட்களில் மோட்டார் சைக்கிளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவேயிருந்தது. அவையும் பெற்றோல் வரவின்மை காரணமாக வீட்டினுள் முடங்கிக் கிடந்தன. பல்கலைக்கழக மாணவர்கள் சைக்கிளில் தான் எங்கும் பயணித்தனர். வெளிமாவட்ட மாணவர்களும் கேரதீவு –சங்குப்பிட்டித் துறை ஊடான காலத்திலும் பின்னர் கொம்படி - ஊரியான் பாதை காலத்திலும் அதற்குப்

பின்பாக கிளாலிக் கடலின் ஊடாகவும் சைக்கிளின் ஊடாகவே பயணித்தார்கள். ஏனையோரும் சைக்கிள் தான் தஞ்சமென பெருமளவில் வாழவேண்டியிருந்தது. வவுனியா ஊடாக தரை வழியாகவோ கப்பல் ஊடாகவோ சைக்கிள் எடுத்து வரப்படுவது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் வவுனியா வியாபாரத்திற்குச் செல்வோர் திரும்பும் போது சைக்கிள் ஒன்றை புதிதாக வாங்கி அதனை சேவிஸ் செய்து அதன் மேல் தட்டுப்பாடான இராணுவத்தினர் அனுமதிக்கும் பொருட் களை ஏற்றி வந்தனர். சைக்கிளையும் பொருட்களையும் விற்றனர். அடுத்த முறை வவுனியா சென்று வரும் போது சைக்கிள் வாங்கி வந்து விற்றார்கள். இவ்வாறே சைக்கிள் வாங்கி விற்கும் புதிய வகை வியாபாரத்தால் வாராந்தம் நுற்றுக் கணக்கான சைக்கிள்கள் வடக்கே வந்தன.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட சைக்கிள்களுடன் டைனமோ, ஹெட்லைற் என்பன எடுத்து வரப்பட்டன. சைக்கிள் டைனமோவினை சைக்கிள் றிம் ஒன்றுடன் ரியூப் ஒன்றின் மூலம் இணைத்தார்கள். டைனமோவின் தொப்பி போன்ற பகுதியிலே ரியூப் இணைக்கப்பட்டு சுற்றப்படும் போது மின்சாரம் உற்பத்தியாகும்.

எரிபொருளின் தடை இறுக்கமாக இருந்த காலங்களில் வறுமைப்பட்ட குடும்பங்களின் திருமணத்தில் மணமக்களை ஏற்றி வரும் வாகனமாகவும் சைக்கிளே இருந்தது

மின்சாரத்தை வயர் மூலம் பெற டைனமோவிற்கு டைவேட் போட்டு ஒரு அம்பியர் மூலம் AC மின்சாரத்தை DC மின்சாரமாக்கினார்கள். இதனைக் கொண்டு இரண்டு பற்றரி மூலம் இயங்கும் றேடியோ கேட்டார்கள். இவ்வாறு பெறப்படும் மின்சாரத்தை சுத்திகரிக்க கொண்டஞ்சர் எனும் அமைப்பைப் பயன்படுத்தினார்கள். 3 அம்பிய

ரைப் பாவித்து எடுக்கும் மின்சாரம் மூலம் தொலைக்காட்சி பார்ப்பது கூட நிகழ்ந்தது. டைவேட்டுக்குப் பதிலாக மோட்டார் சைக்கிளின் றெக்கி வயரை டைனமோவுடன் இணைத்தும் மின்சாரம் பெற்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்கும் வவுனியா நகரத் திற்கும் சைக்கிளில் சென்று வியாபாரம் செய்யும் போர்க்கால வாழ்வாதாரத் தொழிலும் இருந்தது. இயந்திர வாகனங்கள் மிக மிகக் குறைவாகப் புழக்கத்திலிருந்த போது சைக்கிளில் ஆட்களை கூலிக்கு ஏற்றி இறக்கும் புதிய வகை சேவைக் கைத்தொழிலும் இருந்தது. யுத்தம் இயல்பு வாழ்க்கையைப் பெருமளவில் சீர்குலைத்த நிலையில் சைக்கிளில் கோடாரி கொண்டு விறகு வெட்டி விற்கும் வாழ்வாதாரத் தொழில் பரவலாக நடந்தது. எரிபொருள் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந்த அக்காலத்தில் வாழ்வின் சகல பாகங்களிலும் சைக்கிள் தான் கைகொடுத்தது.

சைக்கிளின் ரயர், ரியூப் எடுத்து வரப்படுவதற்கு மிகவும் இறுக் கமான கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த காலங்களில் வைக்கோலை ரயரினுள் அடைந்து சைக்கிள் ஓடிய ஓரிரு சம்பவங்களும் நிகழ்ந்தது. வவுனியா, ஓமந்தைக்கும், தாண்டிக்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதி யிருந்த யுத்த சூனியப் பிரதேசத்தில் உயிரைத் துச்சமாக மதித்து சைக்கிளில் பயணிகளை ஏற்றியிறக்கிய தொழிலும் நடந்தது.

1996 மே மாதத்தில் யாழ்ப்பாணம் முழுமையாகவே இராணுவக் கட்டுப்பாட்டில் வர கப்பல்கள் மூலமாக மோட்டார் சைக்கிள் மற்றும் பிற வாகனங்களை எடுத்துவரத் தொடங்கினர். இந் நிகழ்வின் தொடர்ச்சி சைக்கிளுடன் பெருமளவிற்கு பின்னிப் பிணைந்த வாழ்வியல் கோலத்தில் வேறொரு நிலையை உருவாக்கியது. பொருளாதார வசதிகளின் உயர்வும் வேகமாக ஓட வேண்டிய அவசர வாழ்க்கையின் வரவும் சைக்கிளின் முதன்மையைச் சடுதியாக குறைத்து விட்டன. சைக்கிள்களால் நிறைந்த தரிப்பிடங்கள் மோட்டார்

சைக்கிள்களால் நிறைந்தன. காலப் போக்கில் கார்களாலும் நிறையத் தொடங்குகின்றது.

ஆனாலும் இன்பத்திலும் துன்பத்திலும் உயர்விலும் தாழ்விலும் உடனிருந்த சைக்கிளின் நினைவலைகள் சமூக அசைவியக்கத்தில் என்றும் மீள் நினைவிற்குரியவை.

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு 2013 பெப்ரவரி 03, 10, 17**




# பள்ளியில் பயின்ற நினைவுகளின் மீட்டல்

பள்ளிப் பருவத்தின் இனிமையான பொழுதுகளைக் காட்டும் சினிமாப் படங்களை அண்மையில் பார்க்க முடிந்தது. கால மாற்றம் பள்ளிப் பருவத்திலும் நிறையவே மாற்றங்களை கொண்டு வந்து விட்டது. அவைகளும் எமது வாழ்வியல் ஆவணங்கள் அல்லவா. அதன் இனிமையான பொழுதுகளின் மீது மீண்டும் நடந்து பார்க்கும் போது கிடைக்கும் சுக அனுபவமே தனிதான். கூடப்படித்த நண்பனையோ, நண்பியையோ கண்டால் எமது நினைவுகள் பின்னோக்கிப் பறக்க ஆரம்பித்துவிடும்.

அன்றைய பாடசாலை களத்திற்குப் பயணிப்போம். பாடசாலை ஆரம்ப வகுப்புகள் காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை நடைபெறும். ஆறாம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புகள் இருநேரப் பாடசாலைகளாக (Double session school) நடந்தது. ஆரம்ப வகுப்புள்ள பாடசாலைகளில் அரிவரி என அல்லது பாலர் வகுப்பு என அழைக்கப்பட்ட வகுப்பு ஒன்று இருந்தது. அரிவரியில் ஒரு

வருடம் படித்த பின்னர் முதலாம் தரத்திற்கு ஒரு மாணவன் படிக்கப் போவார். ஆரம்ப வகுப்புகளில் 11 மணிக்கு ஒரு இடைவேளை விடப்படும். இது 10 நிமிடமாக இருக்கும். மதியம் 12 மணி வந்தவுடன் ஓர் மணியடிக்கும். அந்த நேரம் மாணவர்களுக்கு ஒரு கப் பால் சிறிய பணிஸ் துண்டுகள் உணவாக வழங்கப்படும். அதுபோன்ற பணிசை இந்த நாட்களில் காண முடியாது.

அமெரிக்காவின் கெயார் (Care) நிறுவனம் வழங்கிய பால்மா பக்கற்றுகள் பாடசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும். அதுவே மாணவர்களுக்கு வெந்நீரில் கரைத்து இனிப்பூட்டி வழங்கப்படும். பணிஸ் வழங்கவென ஒவ்வொரு வகுப்பிற்கும் சிறிய காட்போர்ட் பெட்டி வைக்கப்பட்டிருக்கும். அதில் வைத்துத்தான் பணிஸ் துண்டு களை வழங்குவார்கள். அந்த நாட்களில் ஆரம்ப வகுப்புகளில் வாய்ப் பாடு பாடமாக்குதல் மிகக் கட்டாயமானதாயிருந்தது. வகுப்புக ளில் தேர்ச்சி காட்டாத மந்த நிலையிலுள்ள மாணவர்கள் வகுப்பேற்றப் படமாட்டார்கள். இதனால் ஒரே வகுப்பிலேயே இரண்டு மூன்று வருடங்கள் தொடர்ந்து இருந்த நிலைமை மிகச்சாதாரணமாக இருந் தது.

இதனால் ஒரு வகுப்பில் குண்டடித்த (பெயில் விட்ட) மூன்று வயது கூடிய அண்ணன் தன் தம்பியுடனும் படிக்க நேர்ந்தது. வாய்ப்பாடு வாங்கக் கடைக்கு போன சுவையான சம்பவமொன்றை உயர் பதவியிலிருக்கும் அந்த அன்பர் நினைவு கூர்ந்தார்.

அந்த பாடசாலையின் ஆசிரியர் வாய்ப்பாடு மட்டை கட்டாயம் கொண்டு வருமாறு சொன்னதன் பேரில் ஐந்து சதம் விலையில் விற்ற வாய்ப்பாட்டுமட்டை வாங்கக் கடைக்குப் போனார்கள். இரண்டாம் வகுப்பில் படித்த தானும் அதேவகுப்பில் குண்டடித்து 3 வருடங்களாக இருந்த அண்ணனுமாகப் போனார்கள். இரண்டு வாய்ப்பாடு மட் டைக்குமாக சேர்த்து 10 சதம் பெற்றோரிடம் வாங்கினார்கள்.

அண்ணனும் தம்பியுமாக முதலில் பலசரக்கு கடை ஒன்றுக்குப் போனார்கள். வாய்ப்பாடு மட்டை கேட்க, இல்லையென்றார்கள். இப்படியாக சலூன், லோன்றி (தயவு செய்துசிரிக்க வேண்டாம்) என மாறி மாறிப்போய் தேநீர்க் கடை ஒன்றுக்கும் போனார்கள். 2 வாய்ப்பாடு எனக்கேட்டார்கள். வியாபாரப் பரபரப்பிலிருந்த கடைக்காரனும் பத்து சதத்தை வாங்கிக் கொண்டு 2 வாய்ப்பனைக் கொடுத்தார். வாய்ப்பனைக் கண்டவுடன் வாயூறி உண்டு விட்டார்கள். வீட்டில் போனபோது தந்தையார் வாய்ப்பாடு எங்கே எனக்கேட்டார். தயங்கித் தயங்கி நின்றார்கள். முழுசி முழுசி விடயத்தைக் கூறி னார்கள். தந்தை, தாயார் கோபப்படாமல் விழுந்து விழுந்து சிரித் தார்கள்.

கல்குலேற்றர் வந்த இன்றைய காலத்தில் வாய்ப்பாட்டின் முதன்மை மிகவும் குறைந்து விட்டது. அரிவரி வகுப்புகளில் கொப்பிகளில் எழுதும் வழக்கம் கிடையாது. சிலேற் எனும் ஒரு வகை அமைப்பில் சிலேற் பென்சிலால் தான் எழுதுவார்கள். சிலேற்றில் எழுதிப் பழகி வர உறுப்பமைய எழுத்துகள் வரும். மட்பாண்டம் போன்றதொரு அமைப்பில் தட்டையாக அமைந்த சிலேற்றில் எழுதி எழுதிக் கையால் அழிப்பார்கள். சிலேற்றை உடைத்துப் பாடசாலையில் ஆசிரியரிடமும் வீட்டில் பெற்றோரிடமும் தண்டனை வாங்கி அழுத சம்பவங்களும் நிகழ்ந்தன. சிலேற்றின் மூலையால் தலையில் வாத்தியாரிடம் குட்டு வேண்டித் தண்டனை பெற்றவர்களும் இருந்தார்கள். பாடசாலையில் கற்பித்த ஆண் ஆசிரியரை வாத்தியார் எனத் தமக்குள் அழைக்கும் வழக்கமிருந்தது. உபாத்தியாயர் என்ற சரியான சொல் வடிவமே வாத்தியார் என அழைக்கப்பட்டது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை வாத்தியார் என அழைக்கும் வழக்கம் உலகறிந்தது.

வீட்டிலிருந்து பனாட்டுத் துண்டுகளை காற்சட்டைப் பின் பொக் கற்றினுள் எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போய் அது ஒட்டுப்பட

ஆள்மாறி காற் சட்டைப் பொக்கற்றிலிருந்து பனாட்டை இழுத்து எடுத்தது சுவாரசியமான நிகழ்வு. பரீட்சைப் பெறுபேறுகளை பாடசாலையில் வரிசையில் நின்று பார்த்த காலம் மிக அண்மையில் தான் விடைபெற்றது. இப்போது இணையத் தளத்தில் சுட்டெண்ணை அடித்தவுடன் பெறுபேறு (Result) வந்து விழுகின்றது. பாடசாலையில் றிசெல்ற் பார்த்த காலத்தில் நல்லது என்றால் சிரிப்பார்கள் பெயில் என்றால் அழுகையுமாக இருக்கும்.

எட்டாம் வகுப்பு ஜே.எஸ்.சி. (JSC – Junior school certificate) எனவும், 9 ஆம் வகுப்பு Proper எஸ்.எஸ்.சீ (SSC – Senior school certificate) பத்தாம் வகுப்பு எஸ்.எஸ்.சி (SSC – Senior school certificate) எனவும் அழைக்கப்பட்டது. இன்று நாம் கூறும் வகையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை (G.C.E. O/L) அன்று நாம் முன்பு பார்த்த எஸ்.எஸ்.சி என அழைக்கப்பட்டது. இன்றைய கல்விப் பொதுத்தராதர உயர்தர (G.C.E. A/L ) பரீட்சை அந்நாளில் எச்.எஸ்.சி (HSC) என அழைக்கப்பட்டது. இன்றும் எமது நாட்டிலுள்ள முன்னோர் எஸ்.எஸ்.சி எனத்தான் தமது காலப் பரீட்சைகளை நினைவு கூருகின்றனர். பாடங்களும், பாடத்திட்டங்களும் காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டே இருக்கின்றது.

எட்டாம் வகுப்பை ஜே.எஸ்.சி. எனக் கூறும் காலத்திற்கு முந்திய காலத்தில் மத்திய மகா வித்தியாலயங்கள் இருந்த காலத்தில் என்.பி.ரி.ஏ (NPTA – Northern Province Teachers Association) பரீட்சை என நடந்தது. ஆசிரியர் தொழிற்சங்கம் வைத்த இப்பரீட்சையில் சித்தி பெற்ற கிராமப்புறச் சிறிய பாடசாலை மாணவர்கள் மத்திய மகாவித்தியாலயங்களுக்கு அனுமதி பெற்றனர்.

இப்பரீட்சைகள், நடந்த ஆண்டுகள், மாற்றமேற்பட்ட ஆண்டுகள் தொடர்பான விபரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. 1982 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரீட்சை இரு

முறை நடைபெற்றது. முதலாவது பரீட்சையில் உரிய வயதை உடைய ஐந்தாம் வகுப்பில் கற்கும் மாணவர்கள் எல்லோரும் தோற்ற அனுமதிக்கப்பட்டனர்.

அதில்சித்தியடையும்மாணவர்கள்அதேவருடத்தில்இரண்டாவது பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட்டனர். முதல் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் குறிப்பிட்ட ஒரு வீதாசாரத்தினர் மட்டும் இரண்டாவது பரீட்சையில் சித்தியடைய வைக்கப்பட்டனர். இவ்வாறு சித்தியடைந்த மாணவர்கள் நாட்டின் எந்த இடத்திலும் விரும்பிய பாடசாலைகளில் கல்விகற்க அனுமதிக்கப்பட்டனர். யுத்தத்தின் சத்தங்கள் கேட்காத அந்நாட்களில் மலையகம் உள்ளிட்ட பிறமாகாண மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து கல்வி கற்றார்கள். யாழ் நகரின் பிரபல தனியார் கல்லூரிகளில் கல்வி கற்று பின்னாளில் பெரிய பதவிகளை அலங்கரித்த சிங்கள மாணவர்களும் இருந்தார்கள்.

சிறிலங்கா சுகந்திரக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராகவும் பாராளுமன்ற சபாநாயகராகவும் இருந்த கே.பி.ரட்ணாயக்க பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றவர். நன்றாக யாழ்ப்பாணத்தவரின் உச்சரிப்புடனான தமிழ் கதைப்பார். இது போன்ற பிரபலங்களின் பட்டியல் மிக நீளமானது. முஸ்லிம் இனத்தவரும் இவ்விதம் கல்வி கற்றுள்ளனர். அந்நாட்களில் தரமான, ஒழுக்கப் பண்புடன் கூடிய கல்விக்கு யாழ்ப்பணம் நாட்டில் மதிப்பு வாய்ந்ததாக இருந்தது.

ஆங்கில மொழிக்கல்வியை வழங்கிய பிரபல கல்லூரிகள் பிற இன மாணவர்களை உள்வாங்கின. இவ்விடயம் மிகவும் விரிவானது. இதனைப் பற்றி விவரிவாக்கப் புறப்பட்டால் இவ் அத்தியாயம் மிக நீண்டு விடும். வெளி மாவட்ட வெளிமாகாண மாணவர்கள் யாழ்ப்பாணப் பாடசலைகளில் கல்வி கற்ற காலத்தில் இங்கு விடுதிகள் (Hostel) மிகவும் பிரமாண்டமாக இயங்கின. விடுதியில்

தாம் கற்ற காலத்தின் பசுமை நினைவுகளை இன்றும் அசை போடுபவர்களைக் காணமுடியும். யுத்தத்தின் வரவு, 1983ஆம் ஆண்டுடன் பாடசாலை விடுதிகளை வற்றச் செய்துவிட்டது. பாதுகாப்பு அச்சம் காரணமாக தத்தமது மாவட்டங்களின் பாடசா லைகளுக்குச் சென்று விட்டனர். அதனால் இங்குள்ள பிரபல பாடசாலைகளின் விடுதிகள் வற்றி வரண்டன. நாளடைவில் செயலிழந்து போயின.

விடுதிகளை மீள இயக்கப் பல கல்லூரிகள் முயற்சி செய் கின்றன. சில வெற்றி கண்டுள்ளன. யாழ் மாவட்ட மாணவர்களை மட்டும் கொண்டுள்ள இக்காலத்தில் விடுதிகள் இயங்குவது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவே உள்ளது. தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சை இந்நாளில் பெற்றோர்களின் கௌரவத்தை உரசிப் பார்த்து சமூக அந்தஸ்தை தீர்மானிக்கும் சமூக நோயாக மாறிவிட்டது. அந்நாட்களில் என்.பி.ரி.ஏ (N.P.T.A) புலமைப்பரிசில் பரீட்சை என்பவை நடந்தன தான். ஆனால் அவை அத்துணை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. யாழ் நகரின் பிரபல பாடசா லைகளில் மட்டுமே தமது பிள்ளைகள் கற்க வேண்டுமென தற்போது போல பெற்றோர் அடம்பிடிக்கவில்லை. உபநகர, கிராமப்புற பாடசா லைகள் மாணவர்களால் நிறைந்திருந்தன. பெற்றோரும் வீட்டிற்கு அண்மையிலுள்ள பாடசாலையில் பிள்ளைகள் கல்வி கற்பதில் நாட்டம் காட்டினார்கள்.

ஆசியாவில் முதன் முதலாவதான பெண்கள் பாடசாலையாக உடுவில் மகளிர் கல்லூரி உருவானதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப் பாணக் கல்வி வரலாற்றில் கிறிஸ்தவ மிசனரிமார்களின் பாடசா லைகள் உருவாக்கம், இந்து போர்ட் அமைப்பினால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள், தனவந்தர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் என இதன் வரலாறுகள் நீளமானதும், அகலமானதுமாக உள்ளன. இவற்றை தனியாக ஆராயப்புறப்பட்டால் இப்பத்தியின் நீளம் கூடி


விடும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிசெய்த 1956 முதல் 1965 வரையான காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் மக்களுக்கென சமூகப்பாடசாலைகள்பரவலாகஉருவாக்கப்பட்டமையும்கணிப்பிடத் தக்கது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அண்மைய இருபது ஆண் டுகளில் தான் பிரபல கல்லூரிகள் தமக்கென தனியான அனுமதிப் பரீட்சைகளை நடத்தியும் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் அனுமதித்தன.

தனியாரால்நிர்வகிக்கப்படும்கல்லூரிகள்இப்போதும்அனுமதிப் பரீட்சைகளின் மூலமாக மட்டுமே அனுமதி வழங்குகின்றன. யுத்தம், பணவசதிகளின் விரிவு, விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகளின் விரிவு என்பன பாடசாலைக்கல்விக் கோலத்தில் நிறையவே மாற் றங்களைச் செய்து விட்டன,

கள்ளங்கபடமற்ற பாடசாலைப் பருவ நாட்களின் இனிமைகள் நினைக்கும் தோறும் இன்பம் தருபவை. கழிந்து போன ஞாபகப் பக்கங்களினைப் புரட்டிப் பார்க்க வேண்டுமென்ற வாசக உள்ளங் களின் வேண்டுதல் இத்துடன் முற்றுப் பெறுகின்றது.

யாழ்ப்பாண நினைவுகளில் புதிய புதிய தேடல்களுக்கு களம் தரும் வாசக உள்ளங்களுக்கு நன்றிகள். புதியதொரு தடத்தின் மீது அடுத்தவாரம் நடப்போம்.

**நன்றி – தினக்குரல் வாரவெளியீடு 2013 பெப்ரவரி 24, மார்ச் 03,10**



# வயலும் வாழ்வும்

யாழ்ப்பாணக் குடாநாடு விவசாயம் சார்ந்த கிராமியப் பின்னணியைக் கொண்டுள்ளது. தோட்டப் பயிர்ச்செய்கை பெருமளவிலும் நெல்விவசாயம் சார்ந்த பிரதேசங்கள் அதற்கடுத்ததாகவும் இருக்கின்றது.

வயலும் வாழ்வும் சார்ந்த விடயங்களில் வெட்டிய நெற்கதிர்களைச் சூடடித்தலின் கால மாற்றங்களை முதன்மைப்படுத்தியதாக இன்றைய பத்தி மலருகிறது.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தினுள் கிளிநொச்சி உள்ளடங்கியிருந்த காலத்தில் யாழ்ப்பாணமும் நெற்களஞ்சியங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

வானம் பார்த்த மானாவாரிச் செய்கைதான் யாழ்ப்பாணத் தில் நிகழுகின்றது. கால நிலை பொய்த்தால் நெற்செய்கையும் பொய்த்து

விடும். காலநிலை பொய்க்கும் காலங்களில் வளர்ந்த நெல் பயிரை பாதுகாத்து விளைய வைக்க கிணற்று நீர் வசதியுள்ள இடங்களில் நீரிறைப்பார்கள். உடுவில்,சங்குவேலி போன்ற சில இடங்களில் மாரிகாலத்தில் வயல் செய்கையும், கோடை காலங்களில் மரக்கறி பயிர்ச் செய்கை, தானியப் பயிர்ச் செய்கையும் இடம்பெறுகின்றது.

வயல் செய்கையில் சூடடித்தல் எனும் முறைமையை பார்ப்போம். கையால் சூடடித்தல், மாடுகளைப் பயன்படுத்தி சூடடித்தல், டராக் ரரைப் பயன்படுத்திச் சூடடித்தல், இயந்திரங்களைப் பயன்படுத்திச் சூடடித்தல் எனக் கால மாற்றங்கள் நிகழ்ந்தன.

கையால் சூடடித்தல் ஆக முந்திய காலத்து முறையாக இருந்தது. வயலில் நன்கு முற்றிய நெற் கதிர்களை வெட்டி பிடி, பிடியாகக் கட்டி வைத்திருப்பார்கள். கட்டிய நெற்கதிர் பிடிகளை உரல் அல்லது கல்மேல் வைத்து அடிப்பார்கள். இவ்வாறு பெறப்படும் நெல்லை மூடைகட்டி வீட்டில் அடுக்குவார்கள். ஆகக்கூடிய மனித வலு தேவைப்பட்ட இம்முறைமை பின்னாளில் வழக்கொழிந்து போனது.

ஆனால், இன்றும் உடுவில், சங்குவேலி போன்ற கிராமங்களில் விதை நெல்லைப் பெறும் நோக்கத்திற்காகக் கையால் சூடடிக்கும் வழக்கத்தைக் கொண்ட விவசாயிகள் உள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் கையால் சூடடிக்கும் வழக்கத்தைக் கைவிட்டு மாடு களைப் பயன்படுத்திச் சூடடிக்கும் முறைமைக்கு மாறினார்கள்.

மாடுகளைப் பயன்படுத்திச் சூடடிக்கும் போது சூடு அடிக்கும் இடத்தின் நடுவே கட்டை அடிப்பார்கள். இது களக்கட்டை எனப் படுகின்றது. களக்கட்டையை சுற்றி 4 பெரிய பாய்கள் விரிப்பார்கள். எட்டு, ஒன்பது மாடுகளை ஒன்றாப் பிணைத்து கயிற்றை களக்கட்டையுடன் இணைப்பார்கள். மாடுகள் நெற்கதிர்களை உழக்கிச் செல்லும். ஒருவர் சாய்த்துச் செல்வார். இவ்வாறு மாட்டைச்

சாய்த்துச் செல்பவரை நடையன் வளைப்பவர் என அழைப்பார்கள்.

நடையன் என்பது சூடு மிதிக்கும் மாடுகளையே குறிக்கின்றது. மாடு உழக்கும் நெற்கதிர்களே சூடு எனக்குறிக்கப்படுகிறது. நடையன் வளைக்கும் போது பொலி பொலியென கத்தித் தான் வளைப்பார். சூடு மிதிக்கும் போது சில வேளை நடையன் எனப்பட்ட மாடுகள் சாணம் போடும். சாணத்தையும் துரிதமாக அள்ளி அப்புறப்படுத்திக் கொண்டுதான் நடையன் வளைக்க வேண்டும். சூடு மிதிக்கும் மாடுகள் சாணம் போடுவதை பொலி போடுவது என அழைப்பார்கள்.

சூடு மிதிக்கும் போது மாடுகள் வைக்கோலை உண்ண முற்படும். அதனிலிருந்து உருவான "சூடு மிதிக்கும் மாட்டிற்கு வாயைக்கட்ட முடியாது" என்ற பழமொழி யாழ்ப்பாணத்தில் பிரபலமானது. மாட்டின் வாயைக் கட்டி சூடு அடிக்கும் முறைமையும் செய்தார்கள்.

அந்நாட்களில் வயல்களில் விளைந்த நெற்கதிர்களை வெட்டு வதற்கு அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்தி லிருந்து வரும் முஸ்லிம் கூலியாட்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

நூற்றுக்கணக்காக இவ்வாறு பருவகாலத் தொழிலுக்கு வரு வார்கள். இவர்கள் வயல் பரப்புக்கணக்கில் கூலிகேட்டு நெற் கதிர் களை அரிவாள் கொண்டு வெட்டுவார்கள். அரிவாளையும் தம் முடன் எடுத்து வருவார்கள். நெற்கதிர்கள் கைகளில் சுணைக்காத வண்ணம் நீளக்கை சேட் பாவிப்பார்கள். மிக வேக வேகமாக இவர் கள் வெட்டுவது தனித்துவமான ஓர் திறமை தான்.


இந்த முஸ்லீம் கூலியாட்கள் தாமே சமைத்துச் சாப்பிட்டு வயல் களில் நெற்கதிர்களை அரிவு வெட்டுவார்கள். இவ்வாறு கட்டணம் பேசிக் கொடுப்பதை பொருத்தம் பேசிக்கொடுப்பது என்பார்கள். வயலில் நெற்கதிர்களை வெட்டும்போது வைக்கோலின் அடிப் பாகம்

வரையில் வெட்டுவார்கள். இதனால் வைக்கோல் மிக நீளமாக இருக் கும். ஆனால், வன்னிப் பிரதேச வயல்களில் இது போல வெட்டாமல் சற்று நீளம் குறைவாகவே நெற்கதிர்களை வெட்டுவார் கள். மாடு கள் சூடு மிதித்து முடிந்த பின்பு வைக்கோலை எடுத்து எறிந்து நெல் லைத் தூற்றுவார்கள்.

நெல்லைத் தூற்றப் பயன்படுத்தப்படும் சுளகு குல்லம் என அழைக்கப்படுகின்றது. குல்லத்தால் நெல்லைத்தூற்றும்போது காற்றின் வளம் பார்த்து தூற்றுவார்கள். தூற்றிய நெல்லை ✓ எனக் குறிபோட்டு பிறைவைத்து குல்லம் (சுளகு) முழுவதும் நெல்லை அள்ளி எடுப்பார்கள்.

இவ்வாறு அள்ளப்படும் நெல்லை மீசுவலி என்ற பெயர் கொண்டு அழைப்பார்கள். மீசுவலி நெல்லை தமது வயல் பிரதேசத்தை அண்டிய தமது இஷ்ட தெய்வத்தின் கோயிலுக்கு கொடுப்பார்கள். பொங்கல் செய்து படைக்கும் வழக்கமும் இருந்தது. மீசுவலியாக கிடைக்கும் நெல்லைக் கொண்டு கோயில்களில் பொங்கலைச் செய்வார்கள்.

சூடு மிதித்த பின்பு வைக்கோலை அள்ள ✓ எனும் வடிவம் கொண்ட தடியைப் பயன்படுத்துவார்கள். இது வேலைக்காரன் தடி எனப்படுகின்றது. பூவரசு மரத்திலிருந்து மட்டுமே வேலைக்காரன் தடியைப் பெற்றுக்கொள்ளுவார்கள். சூடடித்த நெல்லைத் தூற்றும் போது பெரிய முக்காலி கட்டி அதில் ஒருவர் நிற்பார். அதில் நின்று தான் குல்லத்தின் மூலம் நெல்லைத் தூற்றுவார்கள். வன்னியில்



நெல்லைச் சூடுமிதிக்க எருமை மாடுகள் பயன்பட்டன.

அதுபோல யாழ்ப்பாணத்தில் நாம்பன் மாடுகள் பயன்பட்டன. அம்பாறை மாவட்ட சம்மாந்துறைத் தெழிலாளர்கள் வருவதற்கு முன்னைய காலத்தில் குடும்பங்கள் பல ஒன்று கூடித் தான் அரிவு வெட்டுவார்கள். சூடடிப்பார்கள். ஊர்கூடித்தேரிழுக்கும் ஒற்றுமைப் பண்பாட்டு அம்சம் இதில் இருந்தது.

வயலில் சூடடித்து முடியும் தறுவாயில் ஏழைகள் வந்து நெல் கேட்டால் இயலுமான அளவு கொடுப்பார்கள். சிந்திய நெல்லை ஏழைகள் பொறுக்கியெடுக்க அனுமதிப்பார்கள்.

நெற்கதிர்களை அரிவு வெட்ட முன்பு "புதிரெடுத்தல்" எனும் சடங்கு அன்றும், இன்றும் நடைபெறுகின்றது. பஞ்சாங்கத்தில் தானியம் என்பதன் கீழ் புதிரெடுத்தலுக்கான நாட்கள் பல குறிக்கப்பட்டிருக்கும். பெரும்பாலானோர் தைப்பூச நாளைத் தான் புதிரெடுத்தலுக்குரிய நாளாக எடுப்பார்கள். அந்நாளில் வயலின் ஓரிடத்தில் திசைபார்த்து நிறைகுடம் வைத்து சாணி அல்லது மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து வைப்பார்கள். பூக்கள், கதலி வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பனவும் இருக்கும்.

வயல் சொந்தக்காரன் தலைப்பாகை கட்டி, கற்பூர தீபமேற்றி, தேங்காய் உடைப்பார். இதன் பின் புதிரெடுத்தல் நிகழும். புதிரெடுத்தல் நிகழ்ந்த பின்பு தான் அரிவு வெட்டும் படலம் தொடங்கும்.சொந்த வயல் இல்லாதவர்கள் கூட தைப்பூசத் திருநாளில் வயல் ஒன்றில் ஒரு கைப்பிடி நெற்கதிர்களை எடுத்து வந்து வீட்டில் சாமியறையில் வைப்பார்கள்.

புதிர் சமைத்தல் எனும் நிகழ்வும் நடக்கும். புதுநெல்லில் அரிசி எடுத்து புதிர் சமைப்பது நிகழும். புதிர் சமைத்தல் என்பது புதுவயல் நெல் அரிசிச் சோறு சமைத்தலாகும். இதன் சடங்கு சம்பிரதாயங்கள்

பிரதேசத்துக்குப் பிரதேசம் மிக நீளமானது.

அந்நாட்களில் மொட்டைக்கறுப்பன், பச்சைப் பெருமாள், மொறுங்கன் போன்ற நெல் இனங்களைத் தான் பெருமளவில் விரும்பி விதைப்பார்கள். மூன்றரை முதல் நான்கு மாதங்கள் வரை வளர்ந்து முற்றும் இனங்களாகிய இவை போசணைப் பெறுமானங்கள் கூடிய நெல் இனங்களாகும். தற்போதைய நெல் இனங்களைப் போல அதிக விளைச்சலை தராவிட்டாலும் கூட சுவை, போசணை காரணமாக மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன.

மழை நீர் சீராகப் பெய்ததால் இவற்றின் விளைச்சல் நன்றாக இருந்தது. திறம்படத் தந்தது. காலநிலை பொய்த்தால், முறை தவறி மழை பெய்தல் அன்றும் நிகழ்ந்து விவசாயிகளை நட்டப்படுத்தியது. இப்போதையதைப் போல உரத்தின் பாவனை அந்நாட்களில் மிகவும் கூடுதலாக இடம்பெறவில்லை.

மாட்டெரு, ஆட்டெரு என்பவற்றைத் தான் வயலில் அதிகளவில் பயன்படுத்தினார்கள். வீட்டு வளவுகளில் சேரும் இலை, குழை, சருகுகளை பொலித்தீன், பிளாஸ்ரிக், உலோகங்கள் நீக்கி வளவில் சேமித்து வைப்பார்கள். அவற்றையும் மாட்டு வண்டில் டராக்டர் மூலமாக வயலுக்கு எடுத்துச் சென்று பறிப்பார்கள். காற்றுப் பலமாக அடிக்கும் போது இவை பறந்து செல்வது நட்டத்தை ஏற்படுத்தியது.

இதனால் மாட்டெரு, ஆட்டெரு பெறுவதற்குப் பட்டி அடைத்தல் என்பதையே விரும்பினார்கள். வயலில் காலையில் நிலம் தெரிந்த நேரத்தில் பட்டி குத்தப் புறப்படுவார்கள். நிலத்தில் தண்ணீர் ஊற்றி ஈரமாக்கிக் கொண்டு ஒருவர் செல்வார். ஒரு அடி ஆழத்துக்கு கிடங்கு கிண்டக் கூடியதாக தண்ணீர் ஊற்றப்படும். இடைவெளிவிட்டு இவ்வாறு தண்ணீர் ஊற்றப்படும். அலவாங்கால் இன்னுமொருவர் கிடங்கு தோண்டிக் கொண்டு செல்வார்.

வயலில் சதுர அல்லது நீள்சதுர வடிவில் பட்டி அடைக்கப்படும். அடைக்கப்பட்ட பட்டியில் மாடுகள் அல்லது ஆடுகள் அல்லது செம்ம றியாடுகள் அடைக்கப்படும். அவற்றின் சாணி, ஆட்டுப் பிழுக்கை என்பன நிலத்தில் விழுந்து இவற்றின் கால்களால் உழக்கப்படும். இப்பிராணிகளின் சிறுநீரும் மண்ணுடன் கலக்கும்.

பகல் முழுவதும் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்பட்டு மாலைப்பட்டதும் தான் அவை பட்டியில் அடைக்கப் படும். இரவு முழுவதும் அவை பட்டியில் நிற்கும். சொந்தமாக ஆடு, மாடுகளை வைத்திருந்து கூலிக்கு ஆள் பிடித்து மேய்ச்சல் செய்வதும் நிகழும்.மாடு, ஆடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கூலி கொடுப்பது நிகழும்.

சொந்தமாக ஆடு, மாடுகள் இல்லாதோர் அவற்றை வைத்திருப் போரிடம் நாளாந்தம் இவ்வளவு காசு எனப்பேரம் பேசி பட்டியில் அடைப்பார்கள். வயலின் ஓரிடத்தில் பட்டி அடைத்தால் அடுத்தநாள் வேறிடத்தில் தான் பட்டி அடைப்பார்கள். இவ்வாறு செய்தால் தான் வயலில் பசளை எல்லா இடங்களிலும் சேரும். பட்டி அடைக்கும் போது கதிகால்களை உறுதியாக இடவேண்டும். இல்லா விட்டால் கடுங்காற்று ஆடு, மாடுகளின் உதைப்பால் பட்டி விழுந்து விடும். பட்டி விழுந்து விட்டால் கால்நடைகளான இவை இரவோடிரவாக சிதறி ஓடிவிடும்.

பின்பு இவற்றைக் கலைத்துப் பிடிப்பது லேசுப்பட்ட வேலையல்ல. பட்டியடைத்தலில் திறமைபெற்ற விவசாயி தான் சரியான அடைப்பை மேற்கொள்ள முடியும். இன்றும் சிறிய அளவிலாயினும் பட்டிய டைத்தல் நிகழ்ந்து கொள்கின்றது. பட்டியடைக்க பூவரசந்தடி, காட் டுத்தடி என்பவை தான் பெருமளவில் பாவிக்கப்படுகின்றன. அலம் பில் குத்துவது கிடுகால் மறைப்பதும் நிகழும். ஆடி மாதம் பிறந்ததும் மழை பெய்த நாளையடுத்து வயல் உழவு செய்யப்படும். ஆடி உழவு

தேடி உழு என்பார்கள்.

ஆடி உழவு உழுத வயல் தான் சிறந்த விளைவை மாரியில் தரும். முன்னாளில் ஏர்பூட்டி மாடுகளைக் கொண்டு உழுதார்கள். பின்னாளில் டராக்ரர்களைப் பயன்படுத்தி இயந்திரக்கலப்பை மூலம் உழுதார்கள். எருப்போட்டு விதைத்த வயலில் விளைந்த நெல் அரசிச் சோற்றின் கஞ்சி தனிச் சுவையானதாக இருக்கும். உரத்தைப் பெருமளவில் பயன்படுத்தி விளைந்த நெல்லின் அரிசிச் சோற்றின் கஞ்சி கசப்புத்தன்மையயானதாக இருக்கும்.

எருவைப் பயன்படுத்தி விளைந்த நெல்நிறை நிற்கும் அரிசியைத் தருகின்றது. உரத்தை மட்டும் பாவித்த நெல் நிறை குறைந்திருக்கும். இயற்கை எருவைப் பயன்படுத்தும் விவசாயிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளமை கவலைக்குரியது. விவசாயத் திணைக்களமும் நிலத்தடி நீர் மாசடைவதை நிலத்தின் தரம் குறைவதைக் காரணம் காட்டி செயற்கை உரப் பாவனையைக் குறைக்கும் படிதான் கூறுகின்றது.

விளைத்திறன் குறைந்தாலும் மொட்டைக் கறுப்பன் நெல்லை இன்றும் விரும்பி விதைக்கும் விவசாயிகள் இருக்கத்தான் செய்கின் றனர். வடமராச்சிப் பிரதேசத்தின் சில கிராமங்களில் மொட்டைக் கறுப்பன் நெல்லை மட்டும் பரம்பரை பரம்பரையாக விதைக்கும் விவசாயிகள் இருக்கின்றனர். பூநகரி பிரதேசத்தில் விளையும் மொட்டைக்கறுப்பன் நெல்லை தேடிச் சென்று விரும்பி வாங்கி வருவோரும் உள்ளனர்.

தாய்மைப் பேறடையும் பெண்களுக்கு மொட்டைக் கறுப்பன் அரிசிச் சோறு, சோற்று அரிசிக்கஞ்சி கொடுக்கும் வழக்கம் இன்றும் பெருமளவிலுள்ளது.

நாம்பன் மாடுகளை வைத்துச் சூடடிக்கும் பாரம்பரிய முறையை

ட்ராக்டர்களின் வருகை காணமல் போகச் செய்து விட்டது. பிரித்தானியத் தயாரிப்பு ட்ராக்டர்கள் வருகை பெருமளவில் நிகழ்ந்த போது சூடடிக்கும் தேவைக்கு அதனைப் பயன்படுத்த முற்பட்டார்கள். ட்ரராக்ரரின் பெட்டியைக் கழற்றி விட்டு முன்புற இயந்திரத்தின் பெரிய ரயர்களைப் பயன்படுத்தி சூடடிக்கத் தொடங்கினார்கள்.

மனிதர்களைக் கொண்டு வெட்டிய நெற்கதிர்களை படங்கு ஒன்றின் மேல் அடுக்கிவிட்டு ட்ராக்ரர் அதன் மேல் வட்ட வடிவமாக வேகமாக ஓடும். படங்கு தயாரிப்பதற்கு மிக மொத்தமான சீலைத் துணி அல்லது உரைப்பைகளைப் பயன்படுத்துவார்கள். படங்கைச் சொந்தமாகவோ அல்லது வாடகைக்கு எடுத்தோ அதன் மேல் நெல் கதிர்களை அடுக்கி ட்ராக்டர் மூலம் சூடடிப்பார்கள்.

ட்ராக்டரால் உழக்கப்பட்ட நெற்கதிர்களின் நெல்லை குல்லம் எனப்பட்ட சுளகின் மூலம் தூற்றுவார்கள். பரண்கட்டி காற்றின் வளம் பார்த்து தூற்றுவார்கள். காற்றடிக்கா விட்டால் ட்ராக்டரின் (Fan-பான்) விசிறி மூலம் காற்றின் மூலம் நெல்லைத் தூற்றுவார்கள். ட்ராக்டர் மூலம் சூடடிக்கும் போது நெல்மணி கழன்றுவிடும் பின்னர் வரும் வைக்கோலை வேலைக்காரன் தடி கொண்டே தட்டி அகற்றுவார்கள். ட்ராக்டர் மூலம் சூடடிக்கும் போது மரநிழல் பார்த்தோ அல்லது இரவுப் பொழுது பார்த்தோ தான் சூடடிப்பார்கள். ஏனெனில் களைப்புத் தோன்றாமலிருப்பதற்காகும். சூடடித்து தூற்றி வரும் நெல்மணிகளை சாக்கு அல்லது உரைப்பை மூலம் மூட்டை கட்டி நெல் மூடைகளையும் வைக்கோலையும் அதே ட்ராக்டரிலேயே எடுத்து வருவார்கள்.

கூலிக்கு அரிவு வெட்டப் போனோரும் அதே ட்ராக்டரிலேயே ஏறி வருவார்கள். கையால் சூடடிக்கும் போதும் நாம்பன் மாடு களால் சூடடிக்கும் போதும் ட்ராக்டரால் சூடடிக்கும் போதும் பெறப்பட்ட வைக்கோல் கும்பியாக அடுக்கப்படும். வயல், நிலத்தி

லேயோ அல்லது வீட்டு வளவிலோ வைக்ககோல் கும்பியாக அடுக்கப்பட்டிருக்கும். வயல் உரிமையாளர்கள் நிறைய மாடுகளை வைத்திருப்பார்கள் அவற்றை மேய்ச்சலுக்குக் கட்டி வைக்கோலை உணவாகப் போடுவார்கள். மாட்டின் பால் வருவாய் தரும். சாணம் வயலுக்கு எருவாக மாறும். மாடுகளைப் பட்டியில் அடைக்கும் போதும் சாணம் எருவாக மாறும். இயந்திர யுகத்தின் பரிமாண வளர்ச்சியாக புதிய ஒரு இயந்திரம் நெல் வயல்களுக்குள் வந்தது. அரிவு வெட்டுதல், வெட்டும் போதே சூடடித்தல் வைக்கோல் கதிர்களை உடனேயே தள்ளி விடுதல் நெல்மணிகளை உள்ளேயே களஞ்சியப்படுத்தல் என்பவற்றை இந்த இயந்திரம் தனியே செய்யத் தொடங்கியது.

எமது நாடெங்கும் இவ் இயந்திரம் வியாபகம் செய்தது. அரிவு வெட்டும் கூலியாட்கள் தேவையற்றுப் போனார்கள். சூடடிக்கும் சூட்டுக்களம் தேவையற்றும் போனது. நெல்லைத் தூற்றுவதற்கான பான் (Fan) குல்லம் (சுளகு), கூலியாட்கள் தேவையற்றுப் போனார்கள். தனி ஒரு இயந்திரம் எல்லாவற்றையும் செய்தது. மாடுகள் வளர்ப்பதற்கு வைக்கோலை நம்பியிருந்தவர்களின் பாடு தான் திண்டாட்டமானது.

கூலியாட்களைப் பயன்படுத்தி வயலில் நிலமொட்ட நெற்கதிர் களை வெட்டியவர்களுக்கு இவ் இயந்திரத்தால் வைக்கோல் பெறுவதென்பதே அரிதாகியது. வைக்கோல் தூள் தூளாக வயலில் சிதறிக் கிடந்தது. அதனைச் சேகரித்து கும்பியாக்குவதென்பது கடினமாகியது. சூடடிக்கும் இயந்திரம் முன்னால் வெட்டிக் கொண்டு போகும் போது வைக்கோல் பின்னால் தள்ளப்பட்டு விடும். நெல் மணிகளும் சப்பி இன்றி மிகச் சுத்தாமாக தூற்றியிருக்கும். இவ் இயந்திரத்தில் சூடடிக்கப்பட்ட நெல்மணிகள் உடன்மூடை கட்டப்பட்டால் அவை விதை நெல்லாகும் போது முளைக்கும் தன்மை குறைவாக உள்ளதாக மூத்த விவசாயிகள் கூறுகின்றனர்.

இயந்திரச் சூட்டுடன் உரப்பையினுள் அடைக்கப்படும் பச்சை நெல் அவிந்து போய் விடுகின்றது.

அதனால் சில விவசாயிகள் புத்திசாலித்தனமாக நெல்லை மூட்டை கட்டாமல் ட்ராக்டரில் எடுத்துச் சென்று வெளியொன்றில் நன்கு காய வைத்த பின்பு மூடையாகக் கட்டுவார்கள். இந்த நெல்லின் 90 வீதம் விதை நெல்லாகும் போது முளைக்கும் திறன் கொண்டவையாக உள்ளதாக அனுபவ மேதை விவசாயிகள் கூறுகின்றனர். இயந்திரத்தால் வெட்டும் போது வயலில் வைக்கோல் நீளமாக விடப்படுவது மண் வளத்தைப் பாதுகாக்க உதவுகின்றதென விவசாயத்துறை அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

நெற் கதிர்களின் அடிப்பாகம் மண்ணுடன் பசளையாக மாறுவதே இதற்கு காரணமாகும். அரிவு வெட்டும் தொழில் தெரிந்த தொழிலாளர்கள் வர்க்கம் ஒன்று இல்லாமல் போகவுள்ளது. ஊர் கூடி வயலில் ஒன்றுபட்ட கூட்டுறவு வாழ்கை முறை விடை பெற்று விட்டது. போசணைப் பெறுமானம் மிக்க நெல் இனங்கள் அருகிப் போய் விட்டது.

மனிதர்கள் தொழிலில் இருந்து விலகிவிட இயந்திரங்களின் வருகை புதிய தொழில் கோலமொன்றை உருவாக்கியது.

வயல் செய்வதை வேளாண்மை செய்வதென கிழக்கு மாகாணத்தில் கூறுவது போன்று சொல்வழக்கு யாழ்ப்பாணத்தில் கிடையாது. வயல் செய்து நெல்லை வீட்டிற்கு கொண்டு வந்து மூட்டைகட்டி கொண்டு வரும் போது நெற் செய்கைக்குச் செலவழித்த காசும், நெல்லின் பெறுமதியும் சமனாக இருக்கும்.

அதனால் பழைய காசை புதுக் காசாக்கிக் கொண்டு வருகின் றோமென கூறும் மரபும் உள்ளது. யாழ்ப்பாணத்து நிலமானியச் சமூக அமைப்பின் அடையாளமாக வயலின் உடைமையும் முன்னா

ளில் இருந்தது.

1980 களில் ஆரம்பித்த வெளிநாட்டுப் புலம்பெயர்வு புதுப் பணக்கார வர்க்கமென்றை வேகமாவே தோற்றுவித்தது. அப்போது நிலமானியச் சமூக அமைப்பில் சிறிதளவு தளர்வு வந்து புதிய பணக்கார வர்க்கமும் வயல்களை, நிலங்களை வாங்கியது. இது சமூக அமைப்பின் தளர்வு நிலையைக் காட்டுகின்றது. வயலுடன் இணைந்த கிராமிய வாழ்வு முறையும் தொழில்நுட்ப வரவு, பண வசதி காரணமாக ஏராளமான மாற்றங்களை நாட்டின் ஏனைய பகுதிகள் போல யாழ்ப்பாணமும் கண்டு விட்டது.

வயலுடன், தோட்டங்களுடன் போராடி உழைத்து முன்னேறி வளமாக வாழும் தலைமுறையொன்று தமது கிராமிய வாழ்வின் நினைவுகளைப் பார்க்கின்றது. உடல் உழைப்பால் ஆரோக்கியமாக வாழ்ந்த சமூகமொன்றின் தொடர்ச்சி அருகி விட்டது. வயலும் வாழ்வுமாக ஆனந்தமாக வாழ்ந்த உயர்ந்த நினைவுகளும் காலப் பெட்டகத்தில் ஆவணப்படுத்த வேண்டியவை.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 மார்ச் 17, 24**



# டிஜிற்றலின் வருகையால் தொழில் இழந்த ஓவியர்கள்

“சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்த தொரு கல்வி நல்ல மனப்பழக்கம்” இது எமது முன்னோர் கூறிய முதுமொழி. வைத்ததொரு கல்வி நல்ல மனப்பழக்கம் என்ற வரி எம்மில் பலர் அறியாதது.

சித்திரம் யாழ்ப்பாண வாழ்வியல் மீது கொண்டிருந்த ஆழமான உறவை வாசகர்கள் தெரிந்து கொள்ள எழுதுங்கள் எனக் கூறிய ஓவியக் கலைஞர் ஒருவரின் ஆதங்கத்தை நிறைவு செய்ய வரையறையுடன் இன்றைய கட்டுரை மலருகின்றது.

சித்திரம் (Atr) என்பது ஆழமான இயல் தமிழ் கடல். அதில் முழுதாக மூழ்கி எழாமல் எமது வாழ்வியல் நினைவுத் தடங்களில் சேகரித்த சில தகவல்கள் வாசகர்களுடன் பகிரப்படுகின்றன. கணினியின் (Cumputer) வரவு கையால் கீறும் ஓவியங்களின் எண்ணிக்கையைக் குறைத்து டிஜிற்றல் (Digital) முறையிலான படங்களின் வரவை

இயந்திரங்கள் உற்பத்தியாக்குகின்றன.

பல மணிநேரம், பல நாட்கள் என மனித உழைப்பின் மூலம் தூரிகை மூலம் உருவாகிய ஓவியங்களுக்கு மாற்றீடாக சில நிமிடங்களில் உற்பத்தியாகும் டிஜிற்றல் படங்கள் வந்து விட்டன. ஓவியக் கலையின் உன்னதங்கள் எம் மண்ணில் கோலோச்சிய காலங்களும் ஆவணமாக வேண்டுமல்லவா !

கையால் எழுத்துக்களை அச்சுக் கோர்த்து அச்சு இயந்திரங்களை இயக்கி தாள்கள் அச்சிட்ட தொழிலைச் செய்த போது ஏராளம் பேர் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

கணினி முறையில் ஒவ்செற் இயந்திரங்கள் அச்சுத்துறையில் காலடி வைத்த போது அச்சுக் கோர்த்த தொழிலாளர்கள் பலர் வேலையிழந்தனர். வறுமையில் உழன்றனர். அது போல தூரி கையால் வர்ணங்ககளைக் கொண்டு ஓவியம் தீட்டியோரில் கணிச மானோரும் டிஜிற்றல் வரவால் தொழிலிழந்து போயினர்.

படம் வரைந்து கொடுப்பதற்கென, விளம்பரப் பலகை வரைந்து கொடுப்பதற்கென வியாபார நிலையங்கள், வீடுகளில் தொழிற் கூடங்கள் இயங்கின. இலத்திரனியல் யுகத்தின் வேகமான எழுச்சி கற்பனை வளத்துடன் கூடிய உயிர்ப்புள்ள ஓவியங்களுக்கான தேவையை நாடுவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

ஆனால், மேற்கத்தைய நாடுகளில் கையால் வரையும் ஓவியத் திற்கான மதிப்பு உன்னதமாகவே உள்ளது.

எமது பிரதேசத்தில் ஏனைய இடங்களைப் போல ஆரம்ப காலங் களில் காய்களின் சாறு வடித்து, இலைகளின் சாயம் வடித்து இயற்கையான வர்ணங்களைப் பயன்படுத்தித் தான் ஓவியம்

வரைந்தார்கள். பின்னாளில் எண்ணெய் வர்ணம் (Oil paint), நீர் வர்ணம் (Water Paint) பயன்படுத்தி வரைந்தார்கள். காலம் கடந்தும் இவை உயிர் வாழ்கின்றன. கையால் வரையும் போது ஓவியக் கலை, கற்பனை வளம் என்பன வளர்ந்தன.

தூரிகையில் உயிர்த்தெழுகின்ற மரபு வழி ஓவியங்கள், சினிமாப் படங்களுக்கான கட்அவுட் ஓவியங்கள் பக்தி மயமான சமய ஓவியங்கள், வாகனங்கள், விளம்பரப் பலகைகள், கட்டிடச் சுவர்களில் வரையும் ஓவியங்கள், விடுதலைப் போராட்ட கால ஓவியங்கள், நவீன முறையில் அமைந்த குறியீட்டு ஓவியங்கள் என இதன் பரப்புக்கள் நீண்டு அகன்று செல்லும்.

பார்ப்பவற்றை உயிரோவியமாகப் படைத்த விஸ்வகர்மாக்கள் பலர் எம் மண்ணில் வாழ்ந்தார்கள். இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த 30 வருடங்களாக நடந்து முடிந்த யுத்தம் எம் மண்ணில் பல ஓவியப் பொக்கிஷங்களை அழித்து விட்டது. தாய் நிலத்தில் உருவான பல ஓவியர்கள் புலத்தில் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் சித்திரமும் வடிவ மைப்பும் என பட்டக் கற்கை நெறியொன்று உள்ளது.

தேசிய கல்வியல் கல்லூரிகளில் சித்திரம் ஒரு பாடமாக உள்ளது. மேலை நாடுகளில் ஓவியக் கலைக்குக் கொடுக்கும் முதன்மை அளவுக்கு எம் மண்ணில் கொடுக்கப்படாதது கவலைக்குரியதே.

கோயில்களில் சிகரம் கட்டித் திருவிழா கோலாகலமாக நடந்த காலங்களில் ஓவியர்களின் திறமை உன்னதமாகப் பேசப்பட்டது. பாடசாலைகளில் ஓவியக் கண்காட்சி நடைபெறுவதாலும் இக்கலை உயிர் வாழ்கின்றது.

பணவசதி படைத்தோர் தமது குடும்ப உறுப்பினர்களை உயிர்ப்

புள்ள ஓவியங்களாக வரைந்து வைத்திருக்கும் மரபு வற்றிப் போய் விட்டது. எமது மண்ணில் ஓவியக் கலைஞர்களின் பெயர், விபரம், சாதனைகள் குறித்த ஆவணமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். சிலவேளை இவ்வேலை நிறைவு பெற்றோ நடைபெற்றோ கொண் டிருக்கலாம்.

டிஜிற்றல் படங்களின் வரவால் இன்று ஓவியத் துறை கோயில் களில் இறை உருவங்களை வரைதல், வாகனங்களில் உருவங்களை வரைதல், கட்டிடங்களில் ஓவியம் வரைதல், என்றளவிற்கு வந்து விட்டது. வெளியிடப்படும் புத்தகங்களில் சஞ்சிகைகளில் ஓவியங் கள் வெளியிடப்படுதல் நிகழ்கின்றது.

தியேட்டர்களில் மட்டும் சினிமாப் படங்கள் வெளியிடப்பட்ட காலத்தில் கட்அவுட் கலாசாரத்தின் மூலம் ஓவியக் கலை உயிர்ப்புடன் வாழ்ந்தது. ஏனைய துறைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. ஆனாலும் சினிமா ஓவியங்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தன.

நல்லூரைச் சேர்ந்த ஆட்டிஸ்ற் மணியம் (பெரியதம்பி சுப்பிர மணியம் 1923 – 2006) தான் இத்துறையில் சாதனை படைத்த பெரும் கலைஞராவார். இவர் சினிமாப் படக் கட்அவுட் மட்டுமல்ல கோயில் களில் தெய்வப் படங்கள், அறிஞர்கள், அரசியல்த் தலைவர்களின் படங்கள் என அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்துள்ளார்.

சினிமாப் படங்கள் வெளியாகிய காலங்களில் தியேட்டர் வாசல் களை மொய்த்தபடி சனக் கூட்டமிருக்கும். ஆட்டிஸ்ற் மணியத்தின் கை வண்ணத்தில் உருவாகிய சினிமா கட் அவுட்டுகளை இரசித்தபடியே வாகனமோட்டி விபத்துகளுக்கு உள்ளான சிலரும் இருந்தார்கள். தென்னிந்தியாவிலிருந்து சினிமாப் படங்களுடன் கட்அவுட்டுகளை யும் எடுத்து வந்த மரபிற்கு முற்றுப் புள்ளி வைத்தார். சினிமாக் கலைஞர்களின் தத்தரூபமான உயிரோட்டமுள்ள தோற்றங்களைப்

பிரமாண்டமான கட் அவுட்டுகளில் பார்த்து ரசிப்பதற்கு மக்கள் திரையரங்குளின் முன்னால் அலை மோதினார்கள்.

தென் இந்தியாவில் படங்களை தயாரித்தவர்கள் இலங்கை சினிமாத் தியேட்டர்களுக்கு வழங்க பல மாதங்களோ, ஓரிரு வருடங் களோ செல்லும்.

அப்போது ஒப்பந்தமெழுதி படச்சுருள் பெட்டிகளை வழங்கும் போது படங்களில் முக்கிய காட்சிகள் அடங்கிய புகைப்படங்களையும் வழங்குவார்கள். அவற்றைக் கொண்டு படங்களின் கட்அவுட் தயாரிக்கப்படும். படம் வெளியாவதற்கு முதல் நாள் படத்தின் நடிகர் நடிகைகளைக் காட்டும் கட்அவுட் முன்புறம் காட்சிக்கு வைக்கப்படும். திரைக்கு வரும் படங்கள் 100 நாட்களைக் கடந்து ஓடுவதற்குரிய வசீகரத்தைத் தருவதாகக் கட்அவுட் இருக்கும்.

ராஜா தியேட்டரில் காண்பிக்கப்பட்ட பாபு எனும் சிவாஜி நடித்த படத்திற்கு வைத்த 100 அடி உயரமான கட்அவுட் தான் சாதனையாக இன்று வரையும் பேசப்படுகின்றது. முதியவராக படத்தில் தோன்றும் சிவாஜி சோறு சாப்பிடும் அக்காட்சியை இன்றும் சிலாகித்து மூத்தோர்கள் பேசுவார்கள்.

ராணி தியேட்டரில் அடிமைப் பெண் திரையிடப்பட்ட போது எம். ஜி.ஆர். அரச உடையில் தோன்றும் 77 அடி உயரமான கட் அவுட்டை இன்றும் நினைவு கூருகின்றார்கள். எம்.ஜி.ஆரின் உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் உயரமான எம்.ஜி.ஆர்.தோன்றும் கட்அவுட் வெலிங்டன், மனோகரா தியேட்டர்களில் இருந்தது.

ராஜா தியேட்டரில் சிவாஜி நடித்த எங்கள் தங்க ராஜா படத்தில் சிவாஜி மஞ்சுளாவின் சாரியைப் பிடித்திருக்க உண்மையான சாரி இணைக்கப்பட்டு மின்விசிறி (Fan) பின்னால் இருந்து காற்றை வழங்க சாரி அசைந்த காட்சியை இன்றும் நினைவு கூருகின்றார்கள்.

ஸ்ரீதர் திரையரங்கில் தங்கப்பதக்கம் படத்துக்காக சிலாஜி பொலிஸ் இன்ஸ்பெக்ரர் உடையில் கம்பீரமாகத் தோன்றும் காட் சியும் நினைவிற்குரியது. சவாலே சமாளி படத்தில் சிவாஜி, ஜெயலலிதா தோன்றும் காட்சி அற்புதமான கலரிங் முறையைப் பயன்படுத்தி கட்அவுட்டாக வைக்கப்பட்டிருந்தது. வசந்த மாளிகை படம் வெலிங்டன் மனோகரா திரையரங்குகளில் ஒரே நேரத்தில் திரையிடப்பட்ட போது சிவாஜி, வாணிஸ்ரீ படங்களின் காட்சிகளும் மீள் நினைவிற்குரியவை.

ராஜா தியேட்டரில் எம்.ஜி.ஆரின் நீரும் நெருப்பும் திரைப் படத்திற்கு இரட்டை வேடத்தில் தோன்றும் எம்.ஜி.ஆரின் பிரமாண் டமான கட்அவுட், சிவாஜியின் பாசமலர் படம் வெலிங்டனில் ஓடிய போது வைக்கப்பட்டிருந்த கட்அவுட், லிடோ தியேட்டரில் சிவாஜியின் புதிய பறவை திரையிட்ட போது இருந்த கட்அவுட், அதே தியேட்டரில் எம்.ஜி.ஆர். நடித்த நீதிக்குத் தலை வணங்கு படத்தின் கட்அவுட், ராஜாவில் எம்.ஜி.ஆரின் காவல்க்காரன் படக் கட்அவுட், வெலிங்டனில் சிவாஜியின் ஆலய மணி படத்திற்காக கோயில் மணி கட்டியிருந்த காட்சி அடங்கிய கட்அவுட் என நினைவில் நிற்கத்தக்கவை.

தென்னிந்தியப் படங்களுக்கு மட்டுமன்றி தென்னிலங்கை சிங் களப் படங்களுக்கும் இங்கிருந்து ஆட்டிஸ்ற் மணியத்தால் வரையப் பட்ட கட்அவுட்டுகள் போயின.சிங்களக் கலைஞர்கள் எமது மண் தந்த கலைஞரின் திறமை கண்டு சொக்கிப் போனார்கள்.

ஈழத்துப் படங்களான நான் உங்கள் தோழன், நாடு போற்ற வாழ்க, காத்திருப்பேன் உனக்காக, கோமாளிகள் போன்ற பல படங்களுக்கும் கட்அவுட் வைக்கப்பட்டு ரசிகர்கள் கவரப்பட்டார்கள்.

1960 களின் நடுப்பகுதியில் ஆட்டிஸ்ற் மணியத்தை எம்.ஜி.ஆர்,

சிவாஜி ஆகியோர் தமிழகத்திற்கு வரவழைத்துப் பாராட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்ட படங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சென்ற போது கட்அவுட்டுகளும் இங்கிருந்து போயின.

தொலைக் காட்சியின் வரவும், யுத்தத்தின் நீட்சியும் சினிமாத் தியேட்டர்களின் இருப்பைத் தொலைத்தது. கட்அவுட் கலாசாரத்தில் பெரியதொரு வீழ்ச்சியைக் கொண்டு வந்தது. பிரமாண்டமான கட்அவுட்டுகளுக்குப் பதிலாக சாதாரண உயரமான டிஜிற்றல் கட்அவுட்டுகள் வந்தன.

யாழ்ப்பாணத்தின் ஓவியக் கலையின் உயிர்ப்பை நினைவு கூரும் போது பிரமாண்டமான சினிமாக் கட்அவுட்டுகளையும் சேர்த்தே நினைவு கூர வேண்டும். ரசிகர்களை படம் பார்க்கத் தூண்டி தியேட்டர் எனும் தொழில் கோலாகலமாக நடந்த காலங்களின் நினைவுகள் எண்ணற்றவை.

நடிகர்களையும் படங்களையும் கட்அவுட்டுகளையும் விபரிக்கப் புறப்பட்டால் நீளம் மிக அதிகமாயிருக்கும். ஓவியத் துறையின் ஆவணமாக்கலில் இப்படங்களின் பங்கையும் அதன் பிதாமகர் ஆட்டிஸ்ற் மணியத்தையும் நீக்கிப் பார்க்க முடியாது.

அது போல எண்ணற்ற ஓவிய விற்பன்னர்களும் ஆவணப் படுத்தப்படவேண்டியவர்களே. காலமாற்றம் எமது பழைமைகளையும் பெருமைகளையும் அற்றுப் போகச் செய்திடக் கூடாது. கடந்து வந்த வாழ்வியல் கோலங்களை ஆவணமாக்கும் போது ஓவியத்துறை மீதும் தனியான தேடலும் பதிவு அவசியமாகும்.

**நன்றி-தினக்குரல் வாரவெளியீடு 2013 மார்ச் 31**



# தொலைக் காட்சியின் வருகை ஏற்படுத்திய சலசலப்பு

தியேட்டர் என்ற பெரிய அரங்கினுள் மட்டும் சினிமாப்படம் பார்க் கலாம் என ஒரு காலம் உலகம் முழுவதும் இருந்தது.

எமது நாட்டிலும் தென்னிந்தியாவில் வெளியாகிய ஒரு திரைப் படம் பல மாதங்கள் அல்லது ஓரிரு வருடங்களின் பின்பே திரைக்கு வந்தது. சினிமா மனிதனைக் கவர்ந்த அளவுக்கு எந்த வொரு ஊடகமும் மனிதனைக் கவரவில்லை எனலாம்.

தியேட்டரில் மட்டும் முடங்கியிருந்த சினிமாப் படங்களை தொலைக்காட்சி, வீடியோ டெக்கின் வருகை சிறை மீட்டது எனக் கூறுவது முழுமையாகப் பொருந்தாது.

ஆனாலும் தியேட்டரின் மவுசைக் குறைத்தது. தியேட்டரில் மட் டும் படம் பார்க்கலாம் என்றிருந்த நிலை தொலைக்காட்சியின் வரு கையால் மாற்றமடைந்த காலங்ளும் கால் நீட்சியின் மீள் நினைவுகளுக்கு உரியது.

1977 ஜூலை மாதத்ததில் அப்போதைய ஜே.ஆர். அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட தாராள பொருளாதார வணிகமுறை தொலைக் காட்சிப் பெட்டியையும் எமது நாட்டினுள் கொண்டு வந்தது. 1978 ஆம் ஆண்டு தான் தொலைக்காட்சிப் பெட்டி எமது நாட்டினுள் வந்தது.

அப்போது யாழ்ப்பாண மாநகர சபையால் சுப்பிரமணியம் பூங்காவில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வைத்து அன்ரனா பொருத்தி இந்திய தூர்தர்சன் நிகழ்ச்சிகளைக் காட்டினார்கள். இடை யிடையே காட்சி தோன்றி மின்னி மறையும். ஆனாலும் தியேட்டர் திரையில் மட்டும் படங்களைப் பார்த்த எமக்கு திரையில் புதினமான தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்ப்பதில் பேரானந்தம் கிடைத்தது.

நூற்றுக்கணக்கான சனக்கூட்டம் மொய்த்துப் பார்த்தனர்.

தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக், கசெற் ஆகியவற்றை இணைத்துப் படம் பார்க்கும் நிகழ்வுகள் மெல்ல மெல்ல ஆரம்பித்து வேகமாகப் பரவியது.

தியேட்டர்களுக்குப் போட்டியாக வீடுகளில், பொது வளவுகளில் அடைப்பு அடைத்து ரி.வியில் படம் காட்டும் நிகழ்வுகள் பரவலாக நடைபெறத் தொடங்கின.

ஜப்பானிய தயாரிப்பு ரி.வி., டெக் விலை உயர்ந்ததாக இருந் தது. பணக்காரர்களும் பணவசதி படைத்தோரும் அவற்றை வாங்கி னார்கள்.

இவற்றை வாங்கி வைத்திருந்து வாடகைக்குவிடும் புதுத்தொழி லொன்று விஸ்வரூபம் எடுத்தது. மொறிஸ்மைனர் கார், கேம்பி ரிட்ஜ் கார், ஏபோர்ட்டி கார், பரீனா கார் போன்றவற்றில் ஒன்றைக் கொண்டு போனால் தான் ரி.வி, டெக் ஏற்ற விடுவார்கள். பின்னா ளில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவற்றில் கூட ரி.வி., டெக்கை

ஏற்றிச் செல்ல அனுமதி பட அறிவிப்பு வெளியானதும் அவ் வட்டாரம் முழுவதும் அது பற்றிய பேச்சாகவே இருக்கும்.

இரவு 7 மணிக்குத்தான் படக்காட்சி ஆரம்பமாகும். குறித்த இடத்தை நோக்கி கால்நடையாகவோ, சைக்கிள்களிலோ செல்வார்கள்.

ஒரு படம் காண்பிக்கப்படுவதாயின் இரண்டு ரூபாவும், மூன்று அல்லது நான்கு படங்கள் காண்பிக்கப்படுவதாயின் ஐந்து ரூபாவும் கட்டணமாக வசூலிக்கப்படும். பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு படங்கள் விடிய விடிய காண்பிக்கும் நிகழ்வுகளே நடைபெறும். ஏனென்றால் கார்பிடித்து ஒலிபெருக்கியில் அறிவித்து டி.வி. டெக்கிற்கு ஒரு இரவு முழுவதற்கும் நூறு ரூபாவுக்கு மேல் வாடகை கொடுத்தால் பல படங்கள் காண்பித்தால் தான் கட்டுப்படியாகும்.

வெள்ளி, சனி தினங்களில் படம் காண்பித்தால் பாடசாலையில் மாணவர்கள் ஒழுங்குப் பிரச்சினை வராது. ஏனைய நாள்களில் விடிய விடிய படம் பார்த்தால் அடுத்தநாள் பள்ளிக்கூடம் சென்று நித்திரை தூங்கி விழித்தாலோ அல்லது பள்ளிக்கூடம் செல்லாவிட்டாலோ கல்வியைப் பாதிக்கும்.

பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் இடைவேளை நேரத்தின் போதோ, வகுப்பில் ஆசிரியர் இல்லாத போதோ பார்த்த படத்தின் கதைகளைக் கூறும் வழக்கமிருந்தது.

இரவிரவாகப் படம் பார்க்கும் போது நித்திரை வராமல் இருப் பதற்காக வீட்டில் வறுத்த புளியங்கொட்டைகளை காற்சட்டைப் பைக் குள் எடுத்துச் செல்வார்கள்.

படம் தொடங்கியதும் புளியங்கொட்டைகளை வாயில் போட்டு பற்களுக்கிடையில் கடிக்கத் தொடங்குவார்கள். வறுத்த புளியங் கொட்டை றப்பர் போலத்தானிருக்கும். பல்லில் கடிபடுமே தவிர

நொருங்காது. இப்படியே வாய் அசைவதால் நித்திரை வராது. படம் காட்டும் இடத்தில் சிலவேளை கச்சான்,கடலை வியாபாரம், தேநீர் வியாபாரம், ஐஸ்கிறீம் வியாபாரம் என்பன நடக்கும்.

வளவு ஒன்றினுள் படம் காட்டுவதாயின் வளவில் தெரிந்தெடுத்த இடத்தைத் துப்பரவாக்குவார்கள். நான்கு புறமும் தடி நட்டு தறப் பால் அல்லது கிடுகால் மறைப்பு ஏற்படுத்துவார்கள். ஆட்கள் இடை யில் கள்ளமாகப் புகுந்து விடாதபடி காவல் கடமைக்கு ஆட்கள் இருப் பார்கள்.

ரிக்கற் அச்சிட்டுக் கொடுத்துப்படம் காட்டிய சில நிகழ்வுகளும் நடந்தன. ரிக்கெற்றிற்குப் பதிலாக றப்பர் சீல் ஒன்றை வெள் ளைத்தாளில் அடித்துக் கொடுத்த சில சம்பவங்களும் இருந்தன.

படம் காட்டப்படும் இடத்தில் குடும்பமாகச் செல்வோர் பாய், பெட் சீற் சகிதம் செல்வார்கள். சிறிசுகள் படம் தொடங்கி ஓரளவு நேரம் சென்ற பின் நித்திரைக்குச் சென்று விடுவார்கள். படம் பார்க்கும் மோகத்தால் விடிய விடிய படம் பார்க்கும் கூட்டம்தான் அதிகம்.

படம் காட்டுவதில் போட்டிகள் ஏற்பட்டால் மின்சாரக்கம்பிகள் மீது சைக்கிள் செயினை எறிந்து மின் விநியோகம் நடத்திய சம்பவங் களும் நிகழ்ந்தன.

இதனால் மின்சாரம் வரும் பாதைகளில் இளைஞர்கள் காவல் காத்த சம்பவங்களும் நடந்தன.

இதனைத் தடுக்க ஜெனரேற்றர் பிடித்து படம் காட்டியோரும் இருந்தார்கள். மின் விநியோகம் கிடைக்காத இடங்களில் ஜென ரேற்றர்கள்தான் உதவியது.

வீடியோ கசெற் வாடகைக்கு கொடுக்கும் புதிய வியாபார மொன்

றும் முளைத்தது. ஒரு நாள் வாடகைக்கு இருபத்தைந்து ரூபா அல்லது முப்பது ரூபா அறவிடப்பட்டது. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட படமாயின் வீடியோ கசெற் ஆரம்ப நாள்களில் நூறு ரூபா வரை வாடகைக்கு போகும் வீடியோ கொப்பிக்குள் அச்சிடப்பட்ட மட்டையொன்றும் வைக்கப்பட்டிருக்கும்.

அதில் வாடகைக்கு பெறுபவர் பெயர், எடுக்கும் நேரம், திகதி, மீளப்பெறும் திகதி, நேரம் என்பன அச்சிடப்பட்டிருக்கும். நன்றாகத் தெரிந்தவர் ஒருவருக்கே வீடியோ கொப்பியை வாடகைக்குக் கொடுப்பார்கள். தெரியாதவர்கள் வந்தால் அறிமுகப்படுத்த ஒருவரை அழைத்து வரச் சொல்லுவார்கள். இல்லாவிட்டால் வைப்புப் பணம் அல்லது பணயமாக தேசிய அடையாளஅட்டையை வாங்குதல் என்பன நடைபெறும்.

வீடியோ கசெற்றை மீளளிக்கத் தாமதித்தால் கட்டணம் அற விடப்படும். கசெற் சேதமடைந்தால் அதற்குத் தண்டப்பணம் கொடுக்க வேண்டும்.

வீடியோ கசெற்றை வாடகைக்கு கொடுக்கும் கடையை கொப்பிக் கடை எனத்தான் அழைப்பார்கள்.

கொப்பிக்கடையில் திரைப்படங்களின் விவரங்கள் கொப்பி ஒன்றில் இலக்கமிடப்பட்டிருக்கும். கொப்பியிலுள்ள நம்பர் ஒழுங்கில் வீடியோ கொப்பிகளும் அடுக்கப்பட்டிருக்கும்.

சில இடங்களில் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி, முத்துராமன், கமலஹாசன், ரஜினிகாந் என நடிகர்களின் பெயரை வைத்து வீடியோ கொப்பிகளின் இலக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாண நகரில் விக்ரர் அன் சன்ஸ், நியூவிக்ரேர்ஸ் ஆகிய நிறுவனங்கள் தமது வீடியோ கொப்பிக்கடையில் உள்ள படங்க

ளின் விவரங்களை அச்சிட்டு சிறு கைநூலாகத் தமது வாடிக்கையா ளர்களிடம் கொடுத்திருந்தார்கள்.

அதில் படக் கொப்பியின் தொடரிலக்கம், நடிகர், நடிகையர் விவரம், கலர்படமா, கறுப்பு வெள்ளைப் படமா போன்ற விவரங்கள் உள்ளடங்கியிருக்கும். என் கைவசமிருந்த இந்தக் கையேடு யுத்த கால இடம் பெயர்வுகளின் போது அழிந்துவிட்டது.

டி.வி., டெக் மூலம் படம் பார்க்கும் காலம் வந்தபோது சங்கே முழங்கு, அலிபாபாவும் நாற்பது திருடர்களும், நாடோடி மன்னன், மதுரையை மீண்ட சுந்தர பாண்டியன் போன்ற எம்.ஜி.ஆர். நடித்த படங்கள் குறிப்பிடத்தக்கவை.

சிவாஜி நடித்த படங்களில் கவரிமான், அண்ணன் ஒரு கோயில், டாக்ரர் சிவா, திரிசூலம், சங்கிலி போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கவை. அப்போது எம்.ஜி.ஆர், சிவாஜிதான் முன்னணி நட்சத்திரங்ள். இதனைவிட புதிய வார்ப்புக்கள், ஹிந்திப்படமான குர்பாணி, கிழக்கே போகும் ரயில், வண்டிச்சக்கரம், வாழ்வே மாயம், பைரவி போன்ற படங்களின் பட்டியலின் நீளமும் அதிகமானது.

ஓரிரவில் 4 படம் போடுவதாயின் முதலில் எம்.ஜி.ஆர். படமா? சிவாஜி படமா? பார்ப்பது எனப் போட்டியிருக்கும். ரசிகர்களின் பெரும்பான்மையினர் விருப்பத்துக்குத்தான் படம் போடுவார்கள். வீட்டு வளவுகளில் படம் போட்ட போது வேலியால் மதிலால் எட்டிப்பார்த்தவர்களைப் பார்க்க வேண்டாம் எனத் தடுத்த போது கல்லெறிபட்டு ரி.விக் கண்ணாடி உடைந்த ஓரிரு சம்பவங்களும் நடந்தன.

இரவில் படம் காட்டியபோது மின்சாரத் தடை காரணமாகவோ தொழில்நுட்பத் தடை காரணமாகவோ ஓரிரு மணி நேரம் தடைப்பட்டால் நாலாவது படம் விடிய 8 மணி வரை சூரிய வெளிச்சம்

வந்த பின்பும் பார்த்த நிகழ்வுகள் நடந்தன.

ஒரு டெக்கை வைத்து மூன்று புறம் மூன்று ரி.விகள் மூலம் படம் காட்டிய போது மற்றைய ரி.வியில் அதிகமாக ஏதும் காட்டுகின்றார்களோ என சிறுசுகள் அங்கலாய்த்து ஓடியோடிப் பார்த்ததும் சிரிப்பாக மீள் நினைவுக்கு வருகின்றது.

விடிய விடிய 4 படம் பார்த்து அதிகாலையில் படம் காட்டிய வளவில் சிறுநீர் கழித்து அசிங்கப்படுத்திய போது முரண்பட்டுக்கொண்ட காணி உரிமையாளர்களும் இருந்தனர்.

பெற்றோர்களுக்கு தெரியாமல் களவாகப் படம் பார்க்கச் சென்று பிடிபட்டுத் தண்டனை வாங்கிய நிகழ்வுகளும் நடந்தன.

படம் பார்த்துவிட்டு நள்ளிரவு வீடு திரும்பும் போது பேய், பிசாசு என பூச்சாண்டி காட்டிய வேடிக்கை நிகழ்வுகளும் நடந்தன.

படம் பார்த்த பைம்பலில் அறிமுகமாகிச் சோடிசேர்ந்து திருமண மாகிய இளசுகளும் இருந்தனர்.

பெண் பிள்ளைகளுக்கு காவல் சென்று பைம்பலடித்து பகிடி விட்ட இளைஞர்களிடம் சண்டை பிடித்த பெற்றோரும் இருந்தனர்.

சில வீடுகள் அடிக்கடி படம் காட்டி உழைக்க முற்பட்ட போது அயல் வீட்டுப் பிள்ளைகள் படிக்காமல் அதே நாட்டமாக இருந்து சீரழிந்த சம்பவங்களும் நடந்தன.

நகரங்களில் மட்டும் மூடப்பட்ட அரங்கங்களில் மட்டும் அரங்கே றிய சினிமாப் படம் இப்போது ஊரெங்கும் உலா வந்தது.

ஒரு படத்தை தியேட்டரில் அரங்கேறிப் பார்க்கப் போவது பெருந்

தவமாயிருந்த வாழ்க்கைக்கோலம் ஒரே நாளில் பல படங்களைப் பார்க்கும் கோலமாகியது.

அதனால் எந்தப் படத்தில் என்ன பாடல், யார் நடித்தார்கள் என்பவற்றை கூடத் தெளிவாகச் சொல்லமுடியாதநிலை உருவானது. இரவிரவாக தொலைக்காட்சி ஒளியைப்பார்த்து கண்பார்வை பாதிக்கப்படுவதும் நிகழ்ந்தது.

தொலைக் காட்சி மூலம் வீடுகள் வளவுகளில் சினிமாப் படம் காட்டிய நிகழ்வுகள் புதியதொரு வியாபாரத்துறைக்கு வித்திட்டது. மினி சினிமா, மினித் தியேட்டர் என அழைக்கப்பட்டதே அப்புதிய வியாபாரமாகும்.

சினிமாத் தியேட்டருக்கு பெரிய இடம் தேவைப்பட்டது. ஆனால் ரி.வி மூலம் படம் காட்டுவதற்குச் சிறியதொரு இடம் தேவைப்பட்டதால் இது மினிசினிமா எனப்பட்டது. தியேட்டர்களுக்கு போட்டியாக மினித்தியேட்டர் புற்றீசல் போல எல்லாத் திசையும் பரவியது. யாழ். குடா நாட்டில் சில தியேட்டர்கள் தாமே மினி சினிமாத் தியேட்டர்களை உருவாக்கி கால மாற்றத்திற்கேற்ப இந்தப் புதிய வியாபாரத்திலும் காலடி வைத்தன.

1980 களின் ஆரம்பத்தில் யுத்தத்தின் சத்தங்கள் பலமாகக் கேட்கத் தொடங்கின. அதற்கு மத்தியிலும் இந்தமினி சினிமாக்கள் கிளை விட்டுப் பரவ ஆரம்பித்தன. நகரங்களிலும் புற நகரங்களிலும் கிராமங்களிலும் சீமெந்து கட்டிடத்தால் இடமொன்று மறைப்பு ஏற்படுத்தப்பட்டு மினி சினிமாத் தியேட்டராகியது. அதன் வாச லில் குறித்த திரைப்படத்தின் காட்சி கொண்ட கலர் போஸ்ரல் ஒட்டப் பட்டிருக்கும். அதன் கீழ் மாக்கரால் காட்சி நேரங்கள் 10.30, 2.30, 6.30 மணியெனவும் ரிக்கற் எவ்வளவு எனவும் எழுதப்பட்டிருக்கும். ரிக்கெற் கொடுப்பதற்கு ஒருவரும் ரி.வி டெக்கை இயக்குவதற்கு

ஒருவருமென இருப்பார்கள்.

மினி சினிமாக்கள் இருந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களும் இயங்கத் தொடங்கினார்கள். ஆங்கிலப் படப் போஸ்ரரை முன்புறம் ஒட்டி விட்டு ஆபாசப் படம் காட்டியோர் சிலர் பிடிபட்டுத் தண்டனைக்கும் ஆளானார்கள். இதனால் சில மினி சினிமாக்கள் மூடு விழாக் கண்டன.

தேநீர் கடைகள் பலசரக்குக் கடைகள் சில இலாபகரமான தொழில் எனக்கருதி மினி சினிமாவாகவும் மாற்றப்பட்டன. ரி.வி யின் வருகை கோயில் திருவிழாக்களிலும் வீடுகளில் நிகழ்ந்த மங்கல நிகழ்வுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கோயில் திருவிழாக்களில் உபயகாரரால் சின்ன மேளம், நாதஸ்வரக் கச்சேரி, நாடகம், நடனமென இருந்த நிலை மாறி வீடியோ படக் காட்சிகள் இரவிரவாகக் காட்டப்படும் நிலை வந்தது. இலவசக் காட்சிகளாக 3.4 படம் காட்டினார்கள். முதலாவது படம் ஓர் பக்திப் படமாயிருக்கும். ஏனைய படங்கள் யாவும் பிற சினிமாப் படங்களாகயிருக்கும். திருவிழா உபயகாரர்கள் முதல் நாளே தமது திருவிழா அன்று இரவு இன்ன இன்ன படங்கள் காட்டப்படுமென அறிவிப்பார்கள்.

படங்களைப் பார்ப்பதற்கு ஆவலுடன் அலை மோதுவார்கள். சிவராத்திரி விரதம் ஆலயங்களில் பக்தி மயமானதாக நிகழும். சிவராத்திரி கலை நிகழ்ச்சிகள் என்ற பெயரில் சில இடங்களில் விடிய விடிய சினிமாப் படங்கள் காண்பிக்கப்பட்டது.

வீடுகளில் மங்கல நிகழ்வுகளான திருமண விழா, புதுமனைப் புகுவிழா, பிறந்த நாள் விழா, கிறிஸ்தவர்களின் முதல் நன்மை போன்ற நிகழ்வுகள் நடந்தால் அன்றிரவோ அல்லது அடுத்த நாட்க ளிலே இரவு முழுவதும் படங்கள் காட்டுவது கட்டாய சடங்கென்ற

நிகழ்வு உருவாகியது. பணவரவு, அற்ஹோம் போன்ற பணந்திரட்டும் வைபவங்களின் போதும் வீடியோவில் படம் காட்டுதல் நடந்தது.

ரி.வி டெக் கொப்பிகளுடன், தேவைப்பட்டால் ஜெனரேற்றர் வாடகைக்கு எடுக்கப்படும். யார் யார் நடித்த என்னென்ன படங்களின் கொப்பிகளை வாடகைக்கு எடுப்பது எந்தப் படத்தை முதலில் போடுவதென குடும்பத்திற்குள் உறவுக்குள் ஒரு வட்டமேசை மாநாடே நடக்கும்.

சிறு சிறு வாதப் பிரதிவாதங்களுடன் படம் கட்டும் நிகழ்வு அரங்கேறும். மங்கல நிகழ்வுக்கு வந்த உறவுகள் விடிய விடியக் காண்பிக்கப்படும் இலவசத் திரைப்படத்தைப் பார்த்து விட்டே தமது வீடுகளுக்குச் செல்வார்கள். இன்று இவ்வழக்கம் மிகப் பெருமளவில் அருகி விட்டாலும் வறிய கிராமங்களில் அங்கொன்று, இங்கொன்றாகத் தொடரவே செய்கின்றது.

1982 பெப்ரவரி 4ஆம் நாளன்று அரச தொலைக்காட்சியான ரூபவாகினி ஜப்பானிய அரசாங்கத்தின் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது. அப்போது வடபகுதி மக்களும் இச்சேவையைப் பார்க்கவென கிளிநொச்சி கொக்காவிலில் அஞ்சல் நிலைய மொன்று உருவாக்கப்பட்டது. அப்போது கொழும்பிலுள்ள பிரபல நகை மாளிகையான லலிதா ஜுவல்லரி அனுசரணையில் இரவு 8.30 மணிக்கு ஒவ்வொரு புதன் கிழமையும் சினிமாப் படமொன்று காண்பிக்கப்பட்டது.

ஒரு ஊரில் சில வீடுகளில் மட்டுமே தொலைக் காட்சிப் பெட்டியும் வானுயர்ந்த அன்ரனாவும் இருந்தது. அவ் ஊரிலுள்ள ஏனைய குடும்பங்கள் புதன் கிழமைகளில் படம் பார்க்க ரி.வி உள்ள வீடுகளில் கூடுவார்கள். இவ்வாறு ஒளிபரப்பாகிய படங்களில் பாசமலர், சுடரும் சூறாவளியும் எங்க மாமா, எங்கிருந்தோ வந்தாள்,

இரு கோடுகள் என படங்களின் பட்டியல் நீளமானது.

1983 ஜூலை மாத இனவன்முறைகளின் பின்பாக இவ்வாறு படம் காட்டிய ஒழுங்கு குழம்பி விட்டது. 1980 களில் ஹர்த்தால், ஊரடங்குச் சட்டங்கள் இருந்த காலங்களில் வீடுகளில் இருந்தோர் பொழுது போக்காகப் படம் பார்த்தல் என்பதே இருந்தது. அக்காலங்களில் ரி.வி டெக் மூலமாகப் படங்களை ஒளிபரப்புச் செய்யும் முறைமையொன்றையும் எம்மவர்கள் கண்டு பிடித்தார்கள்.

தொலைக்காட்சி அன்ரனாவைப் பயன்படுத்தி 3 அல்லது 4 கிலோமீற்றர் தூரம் வரையில் குடியிருப்போர் பார்க்கக் கூடியதாக இவ்ஒளி பரப்பு நடைபெற்றது. ரி.வி அன்ரனா உள்ளவர்கள் தமது வீடுகளில் வைத்து இப்படங்களைப் பார்க்கக் கூடியதாயிருந்த்து. இவ்வாறு பார்ப்பதற்கென காட் ஒன்றை அடித்து குறித்த வீடுகளின் உரிமையாளர்களிடம் கொடுத்திருப்பார்கள். மாத வாடகையாக 50 ரூபா வாங்கினார்கள். படம் காண்பிப்பதற்கென நேர அட்டவணை ஒன்றையும் வகுத்து அதன்படி படங்களை ஒளிபரப்பாக்கினார்கள். இவ்ஒளிபரப்பில் வணிக விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், மங்கல நிகழ்வுகள் குறித்த அறிவிப்புகள் என்பன இடையே சேர்க் கப்படும்.

ஊரில் நிகழும் கோயில்த் திருவிழாக்கள், முக்கிய விழாக்கள், திருமண நிகழ்வுகள் கூட ஒளிபரப்பில் சேர்க்கப்பட்டன. அத்துடன் சினிமாப்பாடல்களும் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இன்றைய கேபிள் தொலைக்காட்சிகளின் தனியார் தொலைக்காட்சி அலைவ ரிசைகளின் முன்னோடியாக எம்மவர் அன்றே செயற்பட்டிருந்தனர்.

விடுதலைப் போராட்ட இயக்கங்களும் மறைவான நிலையில் தொலைக்காட்சி அலைவரிசைகளை இயக்கினார்கள். இவ்வகை யில் விடுதலைப் புலிகளால் இயக்கப்பட்ட நிதர்சனம் தொலைக்காட்

சிச் சேவையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்நகரப் பிரதேசத்தில் றீகல் வீடியோ சேவிஸ், செல்வா வீடியோ, சோபனா வீடியோ, வாகினி வீடியோ போன்றவை குறிப்பிடத்தக்கன. கோண்டாவிலில் புலவர் வீடியோ இருந்தது. இவ்வாறே யாழ்குடா நாடெங்கும் பல பிரதேசங்களிலும் தனியார் தொலைக்காட்சிச் சேவைகள் இருந்தன. இவற்றின் விபரங்கள் யாவும் சேர்க்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பிய தொழிலாளர் தலைமுறையாலும் ஐரோப்பிய நாடுகளுக்கான புலம்பெயர்விலும் ரி.வி டெக் வீடுகளுக்குள் பரவலாக நுழையத் தொடங்கியது. இதனால் மினி சினிமாத் தியேட்டர்களுக்கு வேகமான மூடு விழா நடந்தது.

வீடியோ கொப்பிக் கடைகள் இல்லாத கிராமங்களே இல்லையெனுமளவுக்கு இவை பரவியது. யுத்தத்தின் தீவிரம் தியேட்டர்களினதும் மினி தியேட்டர்களின் இயக்கத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. யாழ்நகரில் றீகல் தியேட்டர் எரியுண்டது.

1990 ஜூன் 15 ஆம் நாளில் வெள்ளிக்கிழமை காங்கேசன் துறையில் இரண்டாம் ஈழப்போர் தொடங்கியது. இப்போரின் தீவிரத்தால் மின்சாரம் நின்று போனது தரை வழிப் பாதை அடைக்கப்பட்டுப் போனது. தியேட்டர்கள் முற்றும் முழுதாக இயங்க முடியாமல் போயின. யுத்தத்தினால் ஏராளம் தியேட்டர்கள் அழிவுக்கு உள்ளாகின. மக்களின் வாழ்விலும் உணர்விலும் பண்பாட்டு அடையாளங்களிலும் ஒன்றாகவிருந்த தியேட்டர்கள் பலவற்றை நாம் இழக்க நேரிட்டது. ஆனாலும் வீடியோ படக் கெசெற் கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வந்தது. மினிசினிமாக்களின் நடவடிக்கைகள் மேற்பார்வைக்கு ஆளாயின. தமிழீழ விடுதலைப் புலிகளால் சினிமாப் படங்களின் வீடியோ கசெற்றுகளைப் பார்வை யிட்டு அனுமதி அளிக்கவெனத் தணிக்கைக் குழுவொன்று உருவாக்

கப்பட்டது.

இக்குழு அனுமதியளிக்கும் படங்கள் அதிலும் காட்சிகள் தணிக்கை செய்யப்பட்ட படங்களே மக்களது பார்வைக்கு வந்தன. 1993 ஆம் ஆண்டில் தென்னிந்திய திரைப்படங்களைப் பார்ப்பதற்கு முற்றாகத் தடை விதித்தனர். போராட்ட வரலாற்றைக் குறிக்கும் பிரச்சாரப் படங்கள் அவர்களால் தயாரிக்கப்படத் தொடங்கியது. யாழ்நகரிலுள்ள ஸ்ரீதர் தியேட்டரில் திரையில் புரொஜெக்ரர் மூல மாகப் படம் காட்டப்படும் முறையை உருவாக்கினார்கள்.

உறங்காத கண்மணிகள், உயிர்ப்பூ போன்று பல படங்கள் அங்கு திரையிடப்பட்டன. போராட்டத் திரைப்படப் பண்பாடொன்று உருவாக்கப்பட்டது. சினிமாப் படங்களுக்குத் தடையிருந்த போதும் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் பெற்றுப் படம் பார்த்த நிகழ்வுகளும் பிடிபட்டு ரி.வி டெக் பறிமுதலாகி தண்டனை பெற்றோரும் இருந் தார்கள்.

சினிமாப் படங்களுக்குத் தடை இருந்த காரணத்தால் வவுனியா, கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்றுவரும்போது பலர் புதிதாக வந்த படங்களை பார்த்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந் தார்கள்.

1994 ஆகஸ்ட் மாதம் சந்திரிகா குமாரதுங்க பிரதமராகி பின் 1994 நவெம்பரில் ஜனாதிபதியாகிய காலங்களில் இரண்டாம் ஈழப் போர் ஓய்வுக்கு வந்தது. 1995 ஏப்ரல்19 ஆம் நாளன்று திருகோணமலையில் கடற்படைத் தளத்தில் ரணசுறு, சூரயா கப்பல்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகி அழிந்ததும் மூன்றாம் ஈழப்போர் வெடித்தது

1996 மே மாதத்துடன் யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் அரச படைகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது. ரி.வி டெக் VDO கசெற் மூலம் சினிமாப் படம் பார்க்கும் முறை மீண்டும் பரவலாகியது.

1997 இன் ஆரம்பத்தில் யாழ்நகரில் ராஜாத் தியேட்டர் மீள இயங்க ஆரம்பித்தது. சில காலத்தின் பின்பு நாகம்ஸ் தியேட்டர் இயங்க ஆரம்பித்தது அச்சுவேலி லிபேட்டி சினிமா, சங்கானையில் ரஞ்சனாஸ், யாழ்நகரில் மனோகரா தியேட்டர், சாந்தி தியேட்டர், நாதன்ஸ்.சினிமா, செல்லா சினிமா எனப் பெயர் மாறி இயங்க ஆரம்பித்தன. ஏனைய தியேட்டர்கள் யாவுமே அவுட். தியேட்டர்களின் நீண்ட ரசனைப் பாரம்பரியம் ஒன்று படுத்து விட்டது.

காலமாற்றம் ரி.வி தொழில் நுட்பத்தில் மிக வேகமான தொழில் நுட்பமாற்றங்களைப் புகுத்தி விட்டது. ரி.வி யில் தொழில் நுட்ப மேன்மைகள் பல வந்தது. டெக் மூலம் VDO கசெற் பயன்படுத்திப் பார்பதற்குப் பதிலாக சி.டி பிளேயர் அல்லது டி.வி.டி பிளேயர் பயன்படுத்தி படம் பார்க்கும் முறை வந்தது. வீடியோ கசற்றுக்குப் பதிலாக சி.டி, டி.வி.டி என்பன வந்தன. வீடியோக் கசெற் வாடகைக்குக் கொடுக்கும் கடையிலேயே இவற்றையும் வாடகைக்குக் கொடுக்கும் கடைகள் வந்தன.


ஒருகாலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட ரி.வி ,டெக், சி.டி பிளேயர், டி.வி.டி பிளேயர் என்பன இப்போது நடுத்தர வருமானக் குடும்பங்களின் வீடுகளில் அத்தியாவசியப் பொருள்களாகின. இதனால் ரி.வி டெக் வாடகைக்கு கொடுக்கும் தொழில் மெல்ல மெல்ல முற்றாகவே ஒழிந்து போனது.

சி.டி பிளேயர் டி.வி.டி பிளேயர் பரவலாகி வர வீடியோ டெக் நூதன சாலையில் பார்க்கும் பொருளாகியது. வீடியோ கசெற்றுக்கும் அதே நிலை ஏற்பட்டது. வீடியோ கசெற்றில் ஒரு படம் மட்டும் பார்க்க முடிந்தது. ஆனால், டி.வி.டி யில் இரண்டு, மூன்று, நான்கு படங்கள் உள்ளடங்கி இருந்தன.

அவற்றைப் பார்க்க முடிந்தது. நாளடைவில் சி.டி டி.வி.டி ஐம்பது,

அறுபது ரூபாவுக்கு சொந்தமாக வாங்கும் நிலைவர இவற்றை வாடகைக்குக் கொடுக்கும் கடைகள் தேவையற்றுப் போனது. அக்கடைகள் இவற்றை விற்கும் கடைகளாயின. கேபிள் தொலைக் காட்சி, செய்மதித் தொலைக்காட்சி, அலைவரிசைகளின் வழியாக சினிமாப் படங்களை அடிக்கடி பார்க்கும் நிலை உரு வாகியது கைத்தொலைபேசிகளின் வழியாக இணையத்தின் மூலமும் படம் பார்க்கும் வசதிகள் வந்தன. சினிமாத் தியேட்டர்கள் நாடெங்கும் மூடப்பட்டு வணிக நிலையங்களாகின. ஆயினும் வருமானத்திற்காக அன்றி மானத்திற்காக தியேட்டர் நடத்தும் சிலர் இப்போதும் இருக் கத்தான் செய்கின்றனர்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஏப்ரல் 7, 14**


யாழ்ப்பாண நினைவுகள் 42

# சூத்திரக் கிணறும் விவசாயமும்

யாழ்ப்பாண தோட்ட விவசாயத்தில் மறக்கமுடியாத ஒரு நீரி றைப்பு முறைதான் சூத்திரக்கிணறு மூலம் நீரிறைப்பதாகும். இன்றும் மின்சாரத்தைப் பயன்படுத்தி மோட்டர் மூலம் நீரிறைப் பது சர்வசாதாரணமாகிவிட்டது. இதற்குச் சற்று முந்திய காலப்பகு தியில் வோட்டர் பம்ப் . எனப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நீரிறைக்கும் முறை பரவலாக இருந்தது. அக்காலத்தில் பிரித்தா னிய தயாரிப்பு வூல்ஸ்லீ, வில்லியேர்ஸ் ஆகிய வோட்டர் பம்ப்கள் பிரபலமானதாகவும் மக்களால் விரும்பப்பட்டதாகவும் இருந்தது. தற்போதும் இம்முறை ஓரளவுக்குப் புழக்கத்தில் உள்ளது. அதற்கு முந்திய காலகட்டத்தில் நீர்வேலி, அளவெட்டி போன்ற பிரதேசங் களில் பரவலாகவும் பலாலி, நெல்லியடி பிரதேசத்தில் ஓரளவும் இருந்தது தான் சூத்திரக்கிணறு மூலம் நீரிறைக்கும் முறையாகும். சூத்திரக்கிணறு வருவதற்கு முன்பாக துலாமிதித்தல் நீரிறைக்கும் முறை இருந்தது.

சூத்திரக்கிணறு மூலம் நீரிறைக்கும் முறை குறித்த சில இடங்களில் மட்டும் செல்வாக்குச் செலுத்திய போதும் துலா மிதித்தல் மூலம் நீரிறைத்த முறைமை யாழ். குடாநாட்டின் விவசாயக் கிராமங்கள் யாவற்றிலும் செல்வாக்குச் செலுத்தியது குறிப்பிடத்தக்கது. துலா மிதித்து நீரிறைக்கும் முறையில் துலா மிதிக்க ஒருவர் அல்லது இருவர், நீர்கோலி ஊற்ற ஒருவர், தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் கட்ட ஒருவர் எனத் தேவைப்பட்டனர். இதற்கு மாற்றீடாக ஒரு முறைமை கண்டுபிடித்து அதிக தண்ணீர் கிணற்றிலிருந்து பெற வேண்டும் என்ற சிந்தனை வலிகாமம் கிழக்கின் செம்புலக் கிராமமான நீர்வேலிக் கிராமத்து விவசாய விற்பன்னர் சிவக்கொழுந்து ஐயாவுக்கு 120 வருடங்களுக்கு முன்பு உதித்தது. அதன் பெறுபேறாக உருவாகியதே சூத்திரக்கிணறு எனும் முறையாகும்.

துலாமிதித்தல் நீரிறைக்க ஆகக் குறைந்தது 3 பலாசாலிகள் தேவைப்பட்டனர். ஆனால், சூத்திரக்கிணறு முறைமூலம் சூத்திர மாடுவளைக்க ஒரு சிறுவனே போதுமாகும். தோட்டத்தில் பயிர் களுக்கு தண்ணீர் கட்ட சாதாரண உடற்பலமுள்ள ஆள் ஒருவர் போதுமானதாகும். துலாமிதித்து நீர் பெறுவதை விட சூத்திரக் கிணறு மூலம் அதிக நீரைக் குறைந்த நேரத்தில் பெற முடியும். சூத்திரக்கிணற்று முறை முற்றாகக் கைவிடப்பட்டு உள்ளது. நீர்வேலி மேற்கில் கைவிடப்பட்டுள்ள சூத்திரக்கிணற்றின் எஞ்சிய பகுதிகளையே இங்குள்ள படங்களில் காணுகின்றீர்கள். தோட்ட விவசாய நிலப்பகுதி ஒன்றில் கிணறு ஒன்றுக்குப் பக்கத்தில் உயரமான கட்டு ஒன்று கட்டப்பட்டிருக்கும். அதற்குப் பக்கத்தில் தண்ணீர் ஊற்றவென தொட்டி அமைப்பு ஒன்றிருக்கும். மாடு சூத்திரம் வளைக்கும்போது களைக்காமல் இருப்பதற்காக தென்னை, வாழை போன்ற மரங்களின் நிழலில்தான் இக்கிணறு அமைந் திருக்கும்.

கிணற்றின் ஒரு பக்கமும் சூத்திரம் வளைப்பதற்குரிய கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். கொங்கிறீற் தூணின் மூலம் கிணற்றைப் பிணைக்கும் வகையில் அமைந்திருக்கும்.

கிணற்று அருகில் அமைக்கப்பட்ட கொங்கிறீற் கட்டுமானத்துடன் இணைந்ததாக 2 கம்பிகள் இருக்கும். அக்கம்பிகளுடன் சமாந்தரமாக சங்கிலி ஒன்றும் பிணைக்கப்பட்டிருக்கும். கிணற்றுக்குள் கம்பி நிலையாக இருக்க அதன் துணையுடன் வாளி ஆடாமல் அருங்காமல் போய் வந்து தண்ணீரை மேலே கொண்டு வந்து தள்ளும். கிணற்றுக்கு அருகில் மாடுகள் 2 சூத்திர அமைப்புடன் பிணைக்கப்பட்டிருக்கும். அந்த சூத்திரத்துடன் சங்கிலி போன்ற அமைப்பு உழண்டிகள் இரண்டுடன் பிணைக்கப்பட்டிருக்கும். கிணற்றுக் கட்டிலிலிருந்து கொங்கிறீட் கட்டு நோக்கி இரண்டு சங்கிலிகள் செல்லும். கிணற்றுக் கட்டுடன் அருகாமையில் இணைக்கப்பட்டுள்ள மாடுகளை அந்தக் கட்டையைச் சுற்றச் செய்ய ஒருவர் இருப்பார்.

அவர் மாட்டை வளைக்க சங்கிலியில் இணைக்கப்பட்ட வாளி ஒன்று கீழே போய் தண்ணீரைக்கோல அடுத்த வாளிமேலே வரும். மாறி மாறி தண்ணீர் கோலி மேலே வந்து தொட்டியில் ஊற்றப்படும். கிணற்றிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கட்டை 2 வாளிக்கு ஒன்று போதுமானது. 3 வாளியாயின் 2 கட்டை தேவை. 48 வாளியாயின் மாடுகள் கிணற்றை முழுதாகச் சுற்றிவரும். சூத்திரம் வளைப்பதற்கு 2 மாடுகள் கட்டாயம் தேவை. மாடு கலைத்து விடுபவரை சூத்திரம் வளைப்பவர் என்பார்கள். மாட்டைக் கலைப்பதற்கு தடி ஒன்று தேவை. மாடு சூத்திரம் வளைக்கும்போது கிணற்றில் தண்ணீர் கோலும் சங்கிலியில் 2 பெரிய வாளி அல்லது 3 பெரிய வாளிகள் உள்ள நிலையைக் காணலாம்.

அந்தப் பென்னம்பெரிய வாளிகள் கிணற்றினுள் அமிழ்ந்து எழும்பி வந்து நிறையத் தண்ணீரை தொட்டியினுள் ஊற்றும். அத்

தண்ணீர் வாய்க்கால் வழியாகப் பாய்ந்தோடும்.இந்த வாளிகள் 300 லீற்றர் அல்லது 400 லீற்றர் தண்ணீரை கோலிக்கொண்டு வரும்.

48 வாளிகள் உள்ள சூத்திரக்கிணற்று முறையும் இருந்தது. இவ்வாளிகள் சராசரியாக 15 அல்லது 20 லீற்றர் தண்ணீரைக் கிணற்றில் இருந்து கோலி வரும். இதனால் தொடர்ச்சியாகவே தண்ணீர் கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்டு தோட்டப் பயிர்களுக்கு வேகமாக நீர் பாச்ச முடியும்.

இந்திய தமிழகத்தில் சூத்திரக்கிணறு முறை முன்னாளில் இருந்தது. ஆனால் அதன் அமைப்பு வேறுபட்டதாகும். எம்.ஜி.ஆர். நடித்த அரசிளங்குமாரி படத்தில் தமிழக சூத்திரக்கிணற்றை காண முடியும். அங்கு ஒரு மாடு கிணற்றைச் சுற்றி நடந்து வர பட்டை மூலம் தண்ணீர் கோலப்பட்டு வெளியேற்றப்படும். சூத்திரம் வளைக்கப் பயன்படுத்திய மாட்டை வண்டில் இழுத்தல், உழவு செய்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்த முடியாது.

ஏனென்றால், இம்மாடுகள் தொடர்ச்சியாகவே சூத்திரத்தை வளைத்துப் பழக்கப்பட்ட நிலையில் அதன் நடை, உடல் அசைவு மாறுபட்டதாக இருக்கும். அதனால், வேறு தொழில்களுக்கு இவற்றைப் பயன்படுத்த முடியாது. சூத்திரக்கிணற்றைச் சுற்றி அரைப்பரப்பு (5பேர்ச்) காணி இருந்தால் இக்கட்டுமானத்திற்குப் போதுமானதாகும். யாழ்ப்பாணத்து தோட்டங்களில் உள்ள கிணறுகள் தண்ணீர் பங்கு உள்ளதாகவே அன்றும் இன்றுமிருக்கிறது. முன்னாளில் ஒரு தாய், தந்தையருக்குச் சொந்தமாக இருந்த தோட்டத்தின் ஒரு கிணறு பிள்ளைகளுக்குக் காணி பங்கிடப்படும்போது கிணறும் பங்குக்குரியதாகிவிடும். பல தோட்டங்கள் உள்ள ஓரிடத்தில் பலர் சேர்ந்து ஒரு கிணற்றை அமைப்பார்கள். அங்கும் கிணற்றுப் பங்கு முறைமை ஒன்று உருவாகிவிடும் அதனால் அக் கிணறுகளிலிருந்து தோட்டத்துக்கு நீர் பெறும்போது

முறை வைத்து இறைப்பார்கள். அதுபோல சூத்திரக்கிணறு மூலம் தோட்டத்துக்கு நீரிறைக்கும்போது பங்குவைத்து தண்ணீர் இறைக்கும் முறை இருந்தது. ஒருவர் தனியே இரண்டு மாடுகளை வைத்து சூத்திரம் வளைத்து நீர் இறைக்கும் முறை இருந்தது. இருவர் தனியொரு மாடாக சேர்ந்து இரண்டு மாட்டை கொண்டு சூத்திரம் வளைக்கும் முறையும் இருந்தது.

மாடுகள் சூத்திரம் வளைத்து கிணற்று நீரிறைத்து முடிந்த பின்பு மாடுகளுக்கு தண்ணீர் வைக்கோல் என்பவை உணவாக வழங்கப்படும். துலா மிதித்தலை விட சூத்திரக்கிணறு மூலம் அதிக நீர் இறைக்க முடியுமாயினும் துலா போல இம்முறைமை சகல தோட்டங்களுக்கும் பரவவில்லை. சூத்திரம் அமைப்பதன் நுட்பமான முறை இதற்கு ஒரு காரணமாகவும் இருக்கலாம்.

நீரிறைக்கும் இயந்திரத்திர யுகத்தின் எழுச்சி சூத்திரக் கிணறுகளின் தேவைகளை அற்றுப்போகச் செய்துவிட்டது. ஆனாலும், மின்சாரம், எரிபொருள் இல்லாது 1990 - 1997 வரையான ஆண்டு காலப்பகுதியில் சூத்திரக்கிணறுகளின் முறை சில இடங்களில் பயன்படுத்தப்பட்டது. தற்போது சூத்திரக்கிணறுகள் பல அமைப்பு மாற்றப்பட்டு விட்டன. ஆயினும், ஓரிரு சூத்திரக்கிணறுகள் அடையாள ஆவணமாக எமக்குக் கிடைக்கின்றன. நீர்வேலி மேற்கில் தோட்டத்தில் உள்ள சூத்திரக் கிணறொன்றின் படத்தை இங்கு இணைத்துள்ளேன். எமது மூதாதையர்களின் தொழில்நுட்ப ஆற்றலை வியக்க வைக்கும் சூத்திரக்கிணறுகளும் ஆவணப் பெட்டகத்தில் பாதுகாக்க வேண்டிய ஒன்றே.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 மே 12**



# மாறிப்போன உபசரிப்பு முறைகள்

'தலை வாழை இலை போடுங்க, ஊரை விருந்துக்கு வரச் சொல்லுங்க,'

1970 களின் நடுப்பகுதியில் திரைக்குவந்த அன்னக்கிளி படத்தில் இப்பாடலைக் கேட்டிருப்பீர்கள். உபசரிப்பு முறைகள் பல காலவெள்ளத்தில் அள்ளுண்டு போய்விட்டன. கால மாற்றம் இவற்றையும் உருமாற்றம் செய்து விட்டன. காலப் பெட்டகத்தில் கிடைத்தவற்றை சேமிக்க இப்பதிவைச் செய்கின்றேன்.

மங்கல நிகழ்வுகளில் உணவு உண்பதற்குத் தலை வாழை இலை மட்டும் போடும் மரபு முன்னாளில் இருந்தது. வாழை பயிரிடும் விவசாய நிலப்பரப்புகள் அதிகம் இருந்ததும், மக்கள் தொகை குறைவாக இருந்ததுவும் தலை வாழை இலையைப் போடுவதற்கு வாய்ப்பாக இருந்தது.

நிலத்தில் பனை ஓலைப் பாய்விரித்து அதில் உட்கார வைத்து தலைவாழை இலை போடுவார்கள். இலையின் கூம்பு பக்கம் இடது புறத்திலும் வெட்டுண்ட பக்கம் வலப்பக்கமும் இருக்கக் கூடியதாகப் போடுவார்கள். முதலில் சோற்றை இலையில் போடுவார்கள். பின்பு வாழையிலையின் வெட்டுண்ட வலது பக்கம் சுவையான கறிகளைச் சோற்றுக்கு மேல்போடுவார்கள். இடது பக்கம், பாகற்காய், ஊறு காய் போன்றவற்றை இடுவார்கள். சோற்றுக்கு நடுப்பக்கம் பருப்புக் கறியை இறுதியாகப் போடுவார்கள். பருப்புப் போட்டால் சாப்பிடத் தொடங்கலாம். அதற்கு மேல் கறி ஏதும் வராது.

இந்த வாழையிலை, சோறு, கறி போடும் நடைமுறை தெரியாத தலைமுறை இன்று வந்துவிட்டது. திருமண மண்டபத்திற்கு வந்து லஞ்ச்ரிசு சுற்றிய சில்வர் பிளேற்றில் தாமாகவே சோறு, கறி போடும் புதியமுறை வந்து விட்டது. வாழையிலை போடும்போது தலைவாழை இலை மட்டுமல்ல வெட்டுண்ட இடை இலையும் போடும் முறை வந்துவிட்டது. வாழையிலையில் கட்டுச் சோறு பிற உணவுகள் கட்டிச் செல்லும், கொடுத்தனுப்பும் நடைமுறையும் அரிதாகவே காணமுடிகின்றது.

வாழையிலையின் மீது உணவு போட்டு உண்ணும் போது அதனுடன் உடல் ஆரோக்கியமும். ஏற்படுவதாக மூத்தோர்கள் கூறுகின்றார்கள். மங்கல நிகழ்வுகளுக்கு வருவோரை வெற்றிலை கொடுத்து வரவேற்கும் மரபு இன்று மிகவும் அருகிவிட்டது. ஆனாலும் சிங்கள மக்கள் தமது வெற்றிலைப் பண்பாட்டை விடாப்பிடியாகப் பேணிவருவது குறிப்பிடத்தக்கது.

'அவரை நான் வெற்றிலை, பாக்கு வைச்சு அழைச்சனான் தானே' என்ற சொற்றொடர்கள் எமது வாழ்வில் இன்றும் சர்வசா தாரணமாகப் பேசப்படுகின்றது. நிகழ்விற்கு, வீட்டிற்கு வருபவரை வெற்றிலை, பாக்கு வைத்து அழைப்பது எமது பண்பாடாக இருந்தது,

மங்கல நிகழ்வுகளில் வீடுகளில் வெற்றிலை வழங்குவதற்கு எனத் தட்டமொன்று பித்தளையில் இருக்கும். வீடுகளில் எப்போதும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை என்பவை கையிருப்பாக இருக்கும்.

உறவென்று வந்தவரை வெற்றிலைத் தட்டம் கொடுத்து வரவேற்பார்கள். அவ்விதம் வரவேற்காவிட்டால் அவரை அவமதித்தது போலாகிவிடும். பல பிரதேசங்களில் மங்கல நிகழ்வு முடிந்து வீட்டிற்குப் போகும் போது பேப்பரினால் செய்த பை ஒன்றினுள் வெற்றிலை, சீவல் பாக்கு வைத்தும் இன்னொரு பையில் பலகாரங் களும் வைத்தும் கொடுத்து விடும் முறை இருந்தது.

இன்றைய அவசர உலகத்தில் நிகழ்வுகளில் வெற்றிலையை தேடிப் பிடிக்க வேண்டியுள்ளது. வெற்றிலையின் இடத்தை புதுப்புதுச் சிற்றூண்டிகள் பிடித்து விட்டன. மூடல் பெட்டியினுள் உறவினர் வீடுகளுக்கு சாப்பாடு, பலகாரம் கொடுத்து விடும் இந்த மரபால் உணவுப் பொருள்களும் பழுதடையாமல் உடலுக்கு ஆரோக்கியம் தந்தது. இந்நாளில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவிக்கப்பட்டு உணவு காவப்படுவதால் தான் புதிது புதிதான நோய்களை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. அந்நாளில் திருமணப் பொருத்தம் பார்க்கப்பட்டு திருமண நிச்சயதார்த்தம் நடைபெறும் போதும் மூடல் பெட்டியினுள் தான் பலகாரங்கள் பிற உணவுப் பொருள்களை எடுத்துச் செல் வார்கள்.

அந்த மூடல் பெட்டிகளை மணமகன் வீடு மணமகள் வீட்டிற்கு முதலாவதாகச் சென்று கொடுப்பார்கள். சம்பந்தக் கலப்பு என இந்நாளில் நாம் வழங்கும் இம்முறை அந்நாளில் பெட்டி மாறுதல் எனப்பட்டது. வடமராட்சிப் பிரதேசத்தில் இந்நாளிலும் பெட்டி மாறுதல் என்ற சொல் வழக்கு உள்ளதைக் காணுகின்றோம். ஆனால், இந்நாளில் சில்வர் தட்டுக்களிலும் பிளாஸ்டிக் பாத்திரங்களிலும்

உணவு உபசரிப்பு பழக்கம் மாறிவிட்டது.

தோட்டங்களில் வேலை செய்யும் ஆட்களுக்கு மூடல் பெட்டியினுள் எடுத்துச் சென்று உணவு பரிமாறும் முறை முன்னாளில் இருந்தது. எடுத்துச் செல்லப்பட்ட உணவு மூடல் பெட்டியின் மேல் பெட்டியில் ஒருவருக்கும், கீழ் பெட்டியில் ஒருவருக்குமாக கொடுக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள். கடல் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களும் மூடல் பெட்டியினுள் உணவை எடுத்துச் சென்ற முறைகளும் இருந்தது. அது இன்று அற்றுப் போய்விட்டது. எனச் சொல்லுமளவுக்கு வந்துவிட்டது.

மண்சட்டி மண்பானையில் சமைத்து உணவுபரிமாறும் முறை முற்றுமுழுதாகவே இல்லாமல் போய்விட்டது. இந்துக்கள் தமது விரத தேவைகளுக்கு மட்டுமே மண் சட்டியில் சமைக்கும் முறை உள்ளது. வீட்டிற்கு வருந்தினர்களை அழைத்தால் வாழையிலையில் உணவு பரிமாறும் முறை இருந்தது.

மரக்கறி, மாமிச உணவு எதுவானாலும் வாழையிலையில் வைத்தே உணவு பரிமாறினார்கள். தலைவாழை இலையில் உண வருந்துவது தனிச்சுவையானதாக இருந்தது. இன்றும் மரக்கறி உணவு வகைகளைக் கொடுத்து விருந்தினரை உபசரிப்பதற்கு வாழையிலை உபயோகத்தில் உள்ளது. ஆயினும் லஞ்ச்சீற், சில்வர் பிளேற்றுக்கு மாறியோரின் தொகைதான் அதிகம். பனை மரம் கூடுதலாக உள்ள இடங்களில் பச்சைப் பனை ஓலையை வெட்டித் தட்டுவம் கட்டி உணவளிக்கும் முறை இருந்தது. பனை ஓலையின் ஒருபுறம் நிளமாக வருமாறு கட்டினால் தட்டுவம் எனப்படுகின்றது

அதே பனை ஓலையை ஒரு புறமாக குடும்பிபோலக் கட்டினால் பிளா எனப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் கள்ளுச் சீவுபவர்களின் வீடுகளில் கள்ளுத் தவறணைகளில் கள்ளுக் குடிப்பதற்குப் பிளா

மட்டும் உபயோகிக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. இன்று பிளாவில் கள்ளுக் குடிப்பவரைக் காண்பது அரிது பிளாஸ்டிக் கோப்பைகளில் தான் கள்ளுக் கொடுக்கின்றனர். மச்சக் கூழ் மரக்கறிக் கூழ் குடிப்பதற்கு பிளா பயன்பட்ட காலம் இருந்தது ஆனால், இன்று சில்வர் பாத்திரங்களில் பிளாஸ்டிக் கோப்பைகளில் தான் கூழ் கொடுத்து உபசரிக்கின்றனர். தட்டுவத்தில் உணவு கொடுப்பது தொடர்பாக கருத்துகள் மாறுபட்ட வகையில் கூறப்படுகின்றது.

உயர் சாதிக் குடும்பங்கள் தாம் வாழையிலையில் உணவருந்திக் கொண்டு தமக்கு குடிமை வேலை செய்த தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு வறிய மக்களுக்கு தட்டுவத்தில் சோறு, கறி கொடுத்து விடுவதாகக் கூறும் மரபிருந்தது. சமூகஒடுக்கு முறையின் ஒரு வடிவமாக தட்டுவத்தில் சோறு கொடுத்ததை கூறுகின்றனர்.

கர்ப்பம் தரித்த ஒரு பெண் நாலாம், ஐந்தாம் மாதங்களில் சாப்பட்டிற்கு விருப்பமில்லாமல் இருக்கும் போது தட்டுவத்தில் சோறு, கறிகளைப் இட்டு உணவருந்தக் கொடுத்த முறையும் சில பிரதேசங்களில் இருந்தது. பனை ஓலையில் சுடச் சுடப் போடப்பட்ட உணவு சுவையானதாக மாற கர்ப்பிணிப் பெண் அதனை விரும்பி உண்பாள்.

கிடாய் வெட்டி இறைச்சி பங்கு போடும் போது முன்னைய நாளில் பங்கு இறைச்சியைப் பனை ஓலையில் இட்டுக் கட்டிக் கொடுத்து விடும் மரபு இருந்தது இந்நாட்களில் சொப்பிங் பையினுள் தான் இறைச்சி கொடுத்து விடுகின்றனர். ஆடு குட்டி ஈன்றால், மாடு கன்று ஈன்றால் கறக்கும் முதல்ப் பாலை கடும்பு பால் என்பார்கள். அதனை பச்சைப் பிளாவில் ஏந்தி நெருப்பில் ஆட்டி ஆட்டிக் காய்ச்சும் மரபும் இருந்தது. அது காணக்கிடைப்பது அரிதாயுள்ளது. முன்னோரை உபசரிக்கும் முறை வடமராட்சிப் பிரதேசத்தில் திருக்கார்த்திகை விளக்கீடு வந்து எட்டாம் நாள் தவம் எனும் பெயரில் நடைபெற்றது.

சோறு, ஒடியல்ப்பிட்டு, இறைச்சி, மீன், கணவாய், திருக்கை, சுறாமீன் போன்றவற்றைச் சமைப்பார்கள். பச்சைப் பனை ஓலை வெட்டி குடலை செய்வார்கள். குடலை என்பது இரண்டு பிளா அல்லது தட்டுவத்தை ஒன்றாகச் சேர்த்தது போன்ற அமைப்பில் இருக்கும். குடலையினுள் இறந்த முன்னோர்களை நினைத்துச் சமைத்த உணவுகளில் ஒரு பகுதியை இட்டு மூடிக் கட்டுவார்கள்.

பின்னர் அதனை ஆட்கள் இல்லாத வளவு ஒன்றினுள் பெரும்பாலும் வடலிக் காணியாக இருக்கும் கொண்டு சென்று அணிஞ்சில் மரம் அல்லது கிழட்டுப் பூவரசு மரமொன்றுடன் சேர்த்துக் கட்டி விட்டு வருவார்கள். ஆவிகளுக்கு படைத்த உண வென்று யாரும் கிட்டப் போக மாட்டார்கள். ஆனாலும், தாம் தமது சிறுவயதில் களவாகச் சென்று குடலையை எடுத்து அவிழ்த்து இந் தச் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்ததாக தமது குறும்புகளை நினைவு கூருவோர் உள்ளனர். இறந்த முன்னோர்களை நினைத்துப் படைத்த படையல்களும் தனித்துவமான தேடலுக்குரியவை. பனம் பாத்தி கிண்டும் போது உறவுகளை வரவழைத்து சோறு, கறி சமைத்து தட்டுவத்தில் உபசரித்த பண்பாடுகளும் முன்பிருந்தன.


மூக்கு பேணியில் தேநீர் கொடுத்து உபசரித்த பண்பாடு இன்று முற்றாகவே காணாமல் போய்விட்டது. மூக்குப் பேணி பித்தளைமூக்குப் பேணியாகவே பெரும்பாலும் இருக்கும். வெள் ளித் தகரத்தில் செய்த மூக்குப் பேணிகளும் இருந்தன. சுடச் சுட ஆவி பறக்க மூக்குப் பேணியில் தேநீர் குடித்த அனுபவங்கள் தனித் துவமான பசுமை தரும் நினைவுகளாகும். தேநீர்க் கடைகளில் சமூகப்பாகுபாடு காட்டி மூக்குப் பேணி உள்மூக்குப் பேணி வெளி மூக்குப் பேணி என இருவகைப்பட்டதாக இருந்த காலமும் இருந்தது. சமூக சமத்துவம் வேண்டி தேநீர்க் கடைப் பிரவேசம் நிகழ்ந்த காலங்களில் இந்த இருவகையான மூக்குப் பேணிகளும் உடைத் தெறியப்பட்ட காலம் இருந்தது. திருமண நிகழ்வு நடைபெறும்

போது முன்னைய காலங்களில் திருமணம் நடைபெறும் வீட்டிற்கு அயலில் உள்ள குடும்பங்கள் தாம் ஒவ்வொரு பலகாரமாகச் செய்து பித்தளைத் தாம்பாளத்தில் வைத்துக் கொடுப்பார்கள். திருமண நாளிலும் பித்தளைத் தாம்பாளத்தில் பலகாரங்கள் கொண்டு செல் லும் பண்பாடு இன்றும் நிலவுகின்றது .

உபசரிப்பு முறைகள் ஊருக்குஊர் வேறுபட்ட முறைகள் முன் னைய காலத்தில் நிறையவே இருந்தன. பொருட்களின் கிடைப் பனவுக்கு ஏற்பவே தனித்துவமான தன்மை கொண்டதாக அவை இருந்தன. இயற்கையுடன் இணைந்தனவாகவே அவை இருந்தன. காலமாற்றம் 'கடிகாரமுள் ஓடமுன் நீ ஓடு' என்ற நிலையை மனிதர்களுக்கு உருவாக்கிவிட்டது. மனிதன்இயற்கையுடன் இணைந்த பண்பாட்டைத்தான் பின்பற்ற விரும்பினாலும் கூட செயற்கைப் பொருள் ஒன்றைச் சேர்க்காது செய்ய முடியாது. இயற்கையுடன் இணைந்த பண்பாடு இன்று அதிக செலவு உள்ளதாக மாறிவிட்டது.

செலவுச் சிக்கனம், விரைவு, நாகரிகத்திற்கு புதிய வரவுகள், தகவல் தொடர்பாடல் யுகம் ஆகியவை மனிதர்களின் பண்பாட்டு வேர்களை நிறையவே மாற்றமுறச் செய்துவிட்டன. மனிதன் பிறந்த காலம் முதலே உபசரித்தல் என்பது தனித்துவமான ஒரு பண்பாடாக உள்ளது. காலமாற்றத்தில் அருகிப்போய் விட்ட இவற்றையும் தேடிப் பாதுகாத்தல் வேண்டும். மாதிரிக்குச் சிலவற்றைக் காட்டியுள்ளேன்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஜூன் 2**



# நிகழ்வுகளை மீட்டுப் பார்க்க உதவும் புகைப்படங்கள்

கண்ணால் கண்ட காட்சியை ஓவியமாக வரைந்த மனிதனுக்கு கமராவின் வருகை புதிய அத்தியாயம் ஒன்றைத் தோற்றுவித்தது.

கமரா, ஸ்ரூடியோவுடன் இணைந்த யாழ்ப்பாண வாழ்வியலின் அழகியலை ஆவணப்படுத்த வேண்டுமென்ற வாசகர்களின் வேண்டு கோளை நிறைவேற்ற இன்றைய பத்தி மலர்கின்றது.

இன்றைய நினைவுப் பயணத்திற்கான தகவல்களை பலமணி நேரம் உரையாடி அளித்த மிக மூத்த புகைப்படக் கலைஞர் எஸ். திருநாவுக்கரசு (எஸ்.ரி.அரசு), பேபி ஸ்ரூடியோ உரிமையாளர் என். ராஜரட்ணம் ஆகியோருக்கு நன்றிகள். இவர்களது தகவல்களுடன் தேடல் மூலம் பெற்ற தகவல்களும் இங்கே பதியப்படுகின்றன.

இன்றைய காலத்தில் வேகவேகமாக அதிநவீன கண்டுபிடிப் புக்கள் வருவதால் இயந்திரங்கள் தகவல் தொடர்பு சாதனங்களில்

நம்பி முதலிட முடியாதுள்ளது. ஆனால் , அன்றைய நாள்களில் இவ்விதம் இருக்கவில்லை. இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரூடியோக் கைத்தொழில் பன்னெடுங்காலம் நின்று நிலைத்து இலபாகரமான தொழிலாக இருந்தது.

யாழ்.குடாநாட்டில் இயங்கி மறைந்த இயங்கும் ஸ்ரூடியோக்களின் பட்டியலை முதலில் பார்ப்போம்.

யாழ். நகரப் பிரதேசம் கன்னாதிட்டிச் சந்தியில் செல்லம்ஸ் ஸ்ரூடியோ, முட்டாசுக் கடைச்சந்தி வாசன்ஸ் ஸ்ரூடியோ, பிரதான வீதி சற்குணம் ஸ்ரூடியோ, நவீன சந்தை தரன் ஸ்ரூடியோ, மணிக்கூட்டு வீதி ஞானம்ஸ் ஸ்ரூடியோ, கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்.நகர் பேபி ஸ்ரூடியோ, ஸ்ரான்லி வீதியில் பிரிண்ஸ் ஸ்ரூடியோ, சபாஷ் ஸ்ரூடியோ, பிரபா போட்டோ, சித்திராலயா ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி பாரத் ஸ்ரூடியோ, குகன் ஸ்ரூடியோ, உரும்பிராய் ஜீவா ஸ்ரூடியோ, மானிப்பாய் ராஜா ஸ்ரூடியோ, சாவகச்சேரி ஸ்ரூடியோக்கள் குகன், ஜனனி, ஜீவனா, தெல்லிப்பளை தாசன் ஸ்ரூடியோ, காங்கேசன்துறை, விமலாஸ்ரூடியோ, சுன்னாகம் பிறின்ஸ் ஸ்ரூடியோ.

ஸ்ரூடியோ, கமரா, புகைப்படக் கலையின் முன்னோடிகளைப் பார்ப்போம்.

இதன் முதலாவது தலைமுறைக்கலைஞராக 1880களில் இறுதி யில் எஸ்.கே.லோட்டன் கனகரட்ணத்தைக் குறிப்பிடலாம். அவரது இரு மகன்மார்களும் அவருக்கு அடுத்த தலைமுறையாக இருந்தனர்.

அடுத்த தலைமுறையில் பி.மாணிக்கத்தம்பி என்பவர் இருந்தார். அவரது மகன் எம்.நிக்லஸ்தந்தையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புகைப்படக் கலைக்கு உயிர் கொடுத்தார்.

நிக்லஸின் மகன் ஜோய் ஜெயக்குமார் வீரகேசரி பத்திரிகையின்

படப்பிடிப்பாளராக உள்ளார்.

நிக்லஸுக்கு அடுத்த தலைமுறையாக எஸ். திருநாவுக்கரசு (எஸ். ரி. அரசு) உள்ளார். இவருக்கு சற்றுப்பின்னராக என். இராஜரட்ணம் மூத்த புகைப்படக் கலைஞராக இன்றுமுள்ளார்.

வடமராட்சியில் குகன் ஸ்ரூடியோ ஸ்தாபகர் புகைப்படக் கலையின் முன்னோடியாக உள்ளார். இதுபோல பல புகைப்படக் கலைஞர்கள் பல இடங்களில் பல காலங்களில் இருந்துள்ளனர்.

அதன் பின்னரான தலைமுறைகளிலும் பலர் இத்துறையில் பிரகாசித்துள்ளனர். இவர்களது விபரங்களைத் தேடி ஆவணப் படுத்தல் வேண்டும். முதற்சொன்ன எஸ்.கே.லோட்டன் கனகரட்ணம் உள்ளிட்ட பலரும் 1880 களின் இறுதிப் பகுதியில் தலை நகர் கொழும்பிலிருந்து பிரான்சிய நாட்டவரின் பிளாத்தே ஸ்ரூடியோவில்தான் புகைப்படக் கலையின் அரிச்சுவடிகளைக் கற்றுக்கொண்டார்கள்.

இங்கு பழகியவர்கள் தான் இலங்கையின் சகல பாகங்களிலும் இக்கலையைப் பரப்பினார்கள். அக்காலத்தின் புகைப்படக் கருவிகள் பெரிய அளவிலும் ஸ்ரான்ட் பூட்டி எடுக்க வேண்டியதாகவும் இருந்தன.

ஆரம்ப காலத்தில் ஜேர்மனி நாட்டின் 'பொக்ஸ் கமரா' தான் புகைப்படம் எடுக்க உபயோகிக்கப்பட்டது. இதில் 620 இலக்கம் கொண்ட பிலிம் மூலம் 8 போட்டோ எடுக்க முடிந்தது. 120 இலக்க பிலிம் மூலம் 12 போட்டோ எடுக்க முடிந்தது.

இதனை அண்மித்த காலத்தில் ஜேர்மனி நாட்டுத் தயாரிப்பான றொலிவிலெக்ஸ் கமரா வந்தது. சற்றுப் பின்னாளில் ஜேர்மானியத் தயாரிப்பான ஹலோ பிளெக்ஸ் கமரா புழக்கத்துக்கு வந்தது. பின்னாளில் ஜப்பானிய தயாரிப்புக்கமராக்களான ஜசிக்கா, மமியா

போன்ற கமராக்கள் பாவனைக்கு வந்தன. கனொன், நிக்கொன், பியூஜி எனக் கமராக்களின் வருகையின் பட்டியல் நீளமானது.

ஆரம்ப காலத்தில் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களே எடுக்கப்பட்டன. இப்படங்கள் இன்றளவும் அழிவடையாது தெளிவாக இருக்கின்றன . 1942 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புகைப்படமொன்றே இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் நீடித்த காலம் உயிர்வாழ்வது போல வர்ணப் படங்கள் வாழவில்லை.

ஆரம்ப கால ஸ்ரூடியோக்களில் இருட்டறை இருந்தது. கமராவில் படம் எடுக்க வேண்டிய பிலிம் அந்த இருட்டறையில்தான் செய்யப்பட்டது. எடுத்த புகைப்படமும் உடனே அந்த இருட்டறையில் வைத்து செய்முறைக்குட்படுத்தப்பட்டது. சிறிதளவு கூட ஒளி புகமுடியாத அந்த இருட்டறைகளில் வைத்துத்தான் காட்சி தொழில்நுட்ப ரீதியாக உயிரூட்டப்பட்டது.

புகைப்படம் எடுப்பதென்பது வசதியுள்ளவர்களிற்கு மட்டும் சாத்தியமானதாக இருந்தது.

படம் எடுக்கும் பிலிம் ஆரம்ப காலங்களில் கண்ணாடி மூலம் செய்தார்கள். இருட்டறைகளில் கண்ணாடி பிளேற் செய்து தான் கமராவில் பொருத்திப்படம் எடுத்தார்கள். பின்னைய நாள்களில் தான் பிலிம் வந்தது. அதற்கும் பிந்திய காலத்தின் தான் பிலிம் றோல்கள் வந்தன. அண்மைய ஆண்டுகளில் பிலிம்றோல் முறைமை அற்றுப் போய் டிஜிற்றல் கமராவில் மெமறிகாட் போட்டு படம் எடுக்கும் முறைமை வந்தது. உலகம் முழுவதுமே இந்த நிலை ஏற்பட்டது.

அன்றைய நாளில் பெரும் வசதியுள்ளவர்களின் வீடுகளில் நிகழும் மங்கல நிகழ்வுகளுக்குத்தான் புகைப்படம் எடுக்க ஸ்ரூடியோ வைத்திருப்பவர்கள் செல்வரார்கள். ஒரு பெண் பிள்ளை பருவடைந்து

மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா வீட்டில் நடைபெறுமாயின் பால் அறுகு வைக்குப்போதோ, குளிக்கும்போதோ படம் எடுக்க முடியாது. ஆராத்தி எடுக்கும்போது மட்டுமே படம் எடுக்க முடியும். அதுவும் குடும்ப உறவுகளை மட்டும் வைத்துத்தான் புகைப்படம் எடுப்பார்கள். பெண் பிள்ளையை தாய், தகப்பனுடன் இல்லாமல் தனியே படம் எடுக்கமுடியாது. 12 போட்டோ, 18 போட்டோ, 24 போட்டோ எனத்தான் இந்த எண்ணிக்கை இருக்கும்.

இன்றைய நாளில் பெண் பிள்ளைகளுக்கு பால் அறுகு வைப்பது. குளிக்க வார்ப்பது எல்லாமே புகைப்படம் எடுக்கும் முறைமைக்கு வந்து விட்டது. அன்றைய நாளில் ஒரு புகைப்படம் எடுப்பதற்கு எவ்வளவோ ஆயத்தங்களைச் செய்வார்கள்.

புகைப்படம் எடுக்கும் போது கமராவின் முன்மூடியை12, 13 செக் கன்கள் வரை திறந்து வைத்துவிட்டு பின்னர் மூடித்தான் படம் எடுத் தார்கள். ஆனால், யாரும் கண்ணை மூடாமல் காட்சிக்குத் தோன் றுவார்கள்.

இந்நாளைய படங்களில் சிலர் கண்ணை மூடியிருக்கும் தன்மை யைக் காண முடிகின்றது. அந்நாளில் குழந்தைப் பிள்ளைகளை படம் எடுக்க விடமாட்டார்கள். பிள்ளையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விடுமென நம்புவதே இதற்குக் காரணம். குழந்தைப் பிள்ளைக்கு கண் திருஷ்டி படாமலிருக்க பெரிய கறுத்தப் பொட்டுப் போடுவார்கள். குழந்தைப் பிள்ளையைப் படம் எடுப்பதாயின் வீட்டிலுள்ள ஆச்சி, அப்புவுக்குத் தெரியாமல் வீட்டின் பின்புறம்தான் படம் எடுப்பார்கள்.

மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழாவின் போது பெண் களின் சேலை விலகுமானால் படம் எடுக்கமாட்டார்கள். சேலையை நேர் சீராகச் சரி செய்த பின்பு தான் போட்டோ எடுப்பார்கள்.ஒழுக்கக் கோட்பாடு உயர்வாயிருந்தது. மங்கல நிகழ்வுகளில் நிகழ்ச்சியை புகைப்படக் கலைஞர்கள் ஒரு ஓரமாக நின்றுதான் புகைப்படம்

எடுப்பார்கள்.

நிகழ்வு இயல்பாகவே நடந்து கொண்டிருக்கும். புகைப்படம் எடுப்பவர் தேவைப்படும் தருணங்களில் படம் எடுப்பார். ஆனால், இன்றைய நாட்களில் புகைப்படம் எடுப்பவருக்காகவும் வீடியோ எடுப்பவருக்காகவும்நிகழ்ச்சிகள்அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. சுவாமி அறையிலிருந்துஅலங்காரப் பந்தல் நோக்கி நடந்து வரும் போது சரியாகப் படம் எடுக்கப்படவில்லை. திரும்பவும் நடந்து வாருங்கள் என இவர்கள் கேட்டால் கூட திரும்பவும் போய் நடந்து வருகின்றார்கள்.

அது அன்றைய நாள்களில் சகுனப் பிழையாக கருதப்பட்டு நடைபெற பெரியோர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

வீடுகளில் நிகழும் மங்கல நிகழ்வுகளுக்குப் புகைப்படம் எடுக்கச் செல்பவர்களை உணவருந்தக் கேட்டால் உண்ணமாட்டார்கள். தான் புகைப்படம் எடுக்க மட்டுமே வந்ததாகவும், தனக்கு நிகழ்வுக்கு அழைப்புத் தரப்படவில்லை. ஆதலால் உணவருந்த மாட்டோமென நாகரிகமாக மறுத்து விடுவார்கள். புகைப்படம் எடுப்பவருக்கு நிகழ் விற்கு அழைப்புக் கொடுத்தால் கூட அவர் தனது பணியை முடித்து விட்டு வீடு சென்று ஆடை மாற்றி விட்டுத்தான் வந்து கலந்து கொள்வார்.

வீடுகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு சமூக அடிப்படையில் உள்ள வேறுபாடுகளைக் காட்டி அந்நாளில் ஸ்ரூடியோக்காரர்கள் புகைப்படம் எடுக்க வரமாட்டார்கள். என மூத்தவர் ஒருவர் நினைவு கூருகின்றார். நிலப் பிரபுத்துவ குடும்பங்கள், பெரிய உத்தியோகம் பார்த்த குடும்பங்கள் தமது ஆடை அணிகலன்களுடன் படம் எடுத்து வீட்டில் பெரிய பிறேமில் போட்டு வைத்திருக்கும் முறை இருந்தது. தமது முன்னோர்களின் படங்களுடன் தமது படங்களையும் வரிசை யாக வைத்திருப்பார்கள். யாவரும் ஸ்ரூடியோக்களில்தான் புகைப்

படம் எடுப்பற்கு தங்கியிருந்தார்கள்.

வீடுகளில் மங்கல நிகழ்வு நடைபெற்று முடிந்த பின்பு படம் எடுக்க ஸ்ரூடியோ செல்வார்கள். திருமணமான தம்பதிகள் சாதார ணமான ஆடை அணிகலன்களுடன் ஸ்ரூடியோவில் படம் எடுத்து தமது வீடுகளில் கொண்டு வந்து சுவரில் மாட்டினார்கள். பிறந்த நாள் நினைவைக் கூட ஸ்ரூடியோவில் சென்று படம் எடுத்து ஞாபகத்திற்கு வைத்திருந்தார்கள், நடுத்தர வசதியுள்ள குடும்பங் களுக்கே இவ்விதம் சாத்தியமாக இருந்தது.

பரம ஏழைகளுக்கு போட்டோ எடுப்பதென்பது கனவு நிகழ் வாகவே இருந்தது. ஸ்ரூடியோவில் அழகான ஆண்களின் படத்தைக் காட்சிக்கு வைத்திருப்பார்கள். அந்த ஊரில் சமூக அந்தஸ்து பெற்ற அழகான ஆண் ஒருவரின் படத்தை அவரது சம்மதம் பெற்ற பின்பே பெரிய சைஸ் போட்டோவாக காட்சிக்கு வைத்திருப்பார்கள். அவர் திருமணமாகாத ஆணாக இருந்தால் அவருக்குத் திருமணம் தொடர்பாகத் தனியான ஒரு டிமான்ட் இருக்கும். அழகான பெண்களின் போட்டோக்களைக் காட்சிப்படுத்தப் போய் பிரச்சினையில் சிக்குப்பட்ட சில ஸ்ரூடியோக்காரர்களும் இருந்தார்கள்.

ஸ்ரூடியோக்களில் தமது படம் பிடித்தலில் உயர்தரமாக வந்த சில புகைப்படங்களைத் தான் காட்சிக்கு வைத்தார்கள். இதற்கென கண்ணாடியால் செய்யப்பட்டகாட்சி அறை போன்ற அமைப்பு ஸ்ரூடியோக்களின் வெளி, உட்சுவர்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும். அதில் கறுப்பு வெள்ளையினாலான போட்டோக்களை ஆரம்ப காலங்களில் வைத்திருந்தார்கள். பின்னாளில் கலர் புகைப்படங் களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

தேசிய அடையாள அட்டை, பாஸ்போட், சாரதி அனுமதிப் பத்திரம் போன்ற தேவைக்குப் படம் எடுப்பவர்கள் நினைவிற்காகப் படம் எடுப்பவர்கள் யாவருக்கும் போட்டோவின் நெகரிவ் நம்பிக்கை

குறிப்பிட்டு பற்றுச்சீட்டு கொடுப்பார்கள். பிறி தொரு தேவை வரும் போது குறித்த நெகரிவ் நம்பரைக் குறிப்பிட்டு கட்டணம் செலுத்தி போட்டோவை மீளப் பெற முடிந்தது.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் ஸ்ரூடியோக்கள் பல அழிவைச் சந்தித்தன. இதனால் நெகரிவ்களை உடனேயே வாடிக்கையாளரிடம் கொடுத்து விடும் வழக்கமொன்றை உருவாக்கினார்கள். யுத்தம் நடைபெற்ற காலங்களில் பிலிம்றோல் மிகவும் தட்டுப்பாடான பொரு ளாகவே இருந்தது.

1990 ஜூன் முதல் 1996 மே மாதம் வரை பல மாற்றுப் பாதைகள் ஊடாக யாழ்ப்பாண மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பு ஊடாக வவுனியா சென்று வந்தார்கள். அப்போதெல்லாம் பிலிம்றோல் எடுத்து வருவது தடைசெய்யப்பட்டிருந்தது. அதனால் கள்ளப் பாதை கள் ஊடாகவோ, கள்ளக் கடத்தல் மூலமாகவோ தான் பிலிம்றோல் கள் எடுத்துவரப்பட்டன பிடிபட்டால் கடுந்தண்டனை தான் பயணிக ளுக்குக் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் எடுத்த படங்களின் பிலிம்றோலைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று படமாக்கி வந்தால் தாண்டிக் குளம் சோதனைச் சாவடியில் இரணுவத்தால் போட் டோக்கள் கடுமையாகச் சோதனை செய்யப்பட்டன. சந்தேகமான படங்கள் குறித்து விசாரணை நடந் தது. ஓமந்தைச். சோதனைச் சாவடியிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் வடக்கு நோக்கிப் பயணித்த மக்கள் வைத்திருந்த புகைப்படங்கள் யாவும் பார்க்கப்பட்டன. தமக்கு விரோதமான புகைப் படங்கள் எதுவும் வடக்கு நோக்கிப் போகிறதா என்பதில் தீவிரமாக கவனித்தார்கள்.

புகைப்படம் என்பது நிஜத்தின் நிழல் ஆவணம் என்பதால் அது குறித்த பரிசோதனைகள் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் மேற் கொள்ளப்பட்டன. போட்டோக்கள் மட்டுமல்ல போட்டோ எடுக்

கப்பட்ட படங்களின் பிலிம்றோல் நெகரிவ்கள் கூட துருவித் துருவி ஆராயப்பட்டன. பிலிம்றோல் வடக்கிற்கு தாண்டிக்குளம் சோதனை சாவடி ஊடாக எடுத்து வரப்படுவது கூட தடைசெய்யப்பட்ட காலம் ஒன்று இருந்தது. காட்டு வழியாக கள்ளப் பாதைகளின் ஊடாகத்தான் எடுத்து வரப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டை அரசாங்கப் படைகள் 1996 மே மாதம் முதல் வாரத்தில் முழுமையாக கைப்பற்றிக் கொண்டன. அப்போது கப்பல், விமானப் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது படமாக்கப்பட்ட பிலிம்றோல் எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்ட நடைமுறையும் இருந்தது.

படமாக்கப்பட்ட பிலிம்றோல்களின் நெகரிவ்கள் ஒரு பொலித் தீன் கவருக்குள் போடப்பட்டு போட்டோ எடுத்த குடும்பத்தவர்க ளுக்கு கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு பிலிம்றோளும் ஒவ்வொரு வகைப்பட்டது. 12 படமுள்ள பிலிம்றோல், 24 படமுள்ள பிலிம்றோல், 36 படமுள்ள பிலிம்றோல் எனப் படங்களின் எண் ணிக்கை மாறுபட்டது. நெகரிவ்களை வைத்திருப்பவர்கள் 1 முதல் 12 அல்லது 1 முதல் 24 அல்லது 1 முதல் 36 என இலக்கமிடப்பட்ட போட்டோகளில் தமக்குத் தேவையானவற்றின் இலக்கங்களைக் கொடுத்து படங்களில் பிரதிகளைப் பெற்றுக் கொண்டாரகள். பெலித்தீன் கவரில் வைக் கப்பட்ட நெகரிவ்களை போட்டோகளின் உரிமையாளர்கள் பத்திர மாகப் பாதுகாத்து வைத்திருந்தார்கள்.

டிஜிற்றல் கமெராவின் வருகையும் தாராளப் புழக்கமும் பிலிம் றோல் தொழில்நுட்ப யுகத்தை முற்றாகவே அகற்றி விட்டது. 4GB, 8 GB மெமறிக் காட்டுக்கள் (Memory) மூலம் பல நூறு படங்களை அடுத்தடுத்து எடுத்துத்தள்ளலாம். தேவையானபடங்களைக்கைவசம் வைத்துக்கொண்டு தேவையற்றவற்றை அழித்துக்கொள்ளலாம். எடுத்த படங்களை கணினியில் சேமிக்கலாம். Pendrive சேமிக்கலாம். சிடி (CD)மூலம் படங்களை தாராளமாக பரிமாறலாம்.

படங்களை முகநூல் மூலம் உடனுக்குடன் உலகம் எங்கும்

பரிமாறலாம். மின்னஞ்சல் (Email) மூலம் ஒரே நேரத்தில் தேவை யானவர்களுக்கு பரிமாறலாம். போட்டோவை படத்தாளில் அச்சிட ஸ்ரூடியோ செல்லாமலே பரிமாறும் யுகம் கிடுகிடுவென மலையளவு வளர்ந்து விட்டது. விலையுயர்ந்த பணக்கார பொருளாக இருந்த கமெரா இன்று நடுத்தர குடும்பங்களும் வாங்கக் கூடிய சாதாரண பொருளாகி விட்டது.

கமெரா எடுத்துச் செல்வதற்கு ஆட்கள் தேவைப்பட்ட காலம் பின் னாளில் சுருங்கியது. தோல் பைகளில் எடுத்துச் சென்றார்கள். இப்போது காற்சட்டைப் பையில் கமராவை வைத்திருந்து எப்போ தும் படமெடுக்கக் கூடிய நிலைமை வந்து விட்டது.

கைத்தொலைபேசிகளில் ஐபாட்டுகளில் படமெடுத்து உடனுக் குடன் உலகமெங்கும் பரிமாறும் இலத்திரனியல் யுகத்தின் ஆட்சி நடக்கிறது. பிலிம்றோல் மூலம் எடுத்த படங்களை அல்பத்தில் போட்டுப் படங்கள் வெளிறாதபடி ஒரு கரையில் சிறிய பஞ்சுத்துண்டு வைத்திருந்து காற்றுப் புக விட்டார்கள். இப்போது அந்த தேவை அவசியமற்றுப் போக அல்பம் தயாரிக்கும் தொழிலில் மிக நவீன அதே சமயம் விலை உயர்ந்த தொழில்நுட்பங்கள் வந்து விட்டன.

மங்கல நிகழ்வு ஒன்றில் எடுக்கப்பட்ட படங்களை அல்பமாக்கி ஒரு இலட்சம் ரூபா வரையில் அல்பத்திற்குச் செலவழிக்கும் நிலை தோன்றியுள்ளது. ஏழைகளுக்கு இந்த அல்பம் எட்டாக் கனியாகவே உள்ளது. பிலிம்றோல் மூலம் எடுத்த போட்டோக்களை இரசாயன நீரில் கழுவி படமாக்கும் முன்னைய முறை இருந்த போது படங்களைக் கழுவி எடுக்க வேண்டும் என்ற சொல் வழக்கு இருந்தது.

தற்போது மெமறி காட்டில் படம் எடுத்து கணினி மூலம் அச்சிட்டுப் படமாக்கினாலும் படங்களைக் கழுவி எடுத்து விட்டர்களா என்ற சொல்தான் தொடர்ந்தும் பாவிக்கப்படுகிறது. கமராவில் படம் எடுக்கும் போது காட்சியை வெளிச்சமாக்க பிளாஸ் லைற் போடும்

முறை அந்நாளிலும் இந்நாளிலும் இருக்கிறது. தற்போது கமராவுடன் சேர்ந்தே உள்ளேயே பிளாஸ் லைற் முறைமையும் இருக்கின்றது.

1950 கள், 60 களில் வந்த கமராக்களில் பிளாஸ் லைற்றில் ஒரு முறை மட்டும் பாவித்து எறியும் மின்குமிழ் இருந்தது. கமராவில் ஒரு படம் எடுத்தால் பிரகாசமாக ஒளியைக் கக்கிய அந்த மின்குமிழ் எரிந்து விடும். அதனைக் கழற்றி வீசி விட்டு புதிய பல்ப் ஒன்றைப் பொருத்துவார்கள். மங்கல நிகழ்வுகளின் போது இந்தப் பல்பைப் பொறுக்குவதற்காக சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு கமரா வின் பின்னால் திரிவார்கள். பிரகாசமாக எரிந்து சுட்ட பல்ப் நெருப்பா கச் சுடும். ஆனாலும், அதனைப் பொருட்படுத்தாது கையில் சுட்டு தொப்பளம் வந்தாலும் பொறுக்குவார்கள்.

முன்னைய நாளில் கறுப்பு, வெள்ளைப் புகைப்படம் எடுத்த போது திருமண வீடொன்றில் மண மக்களுடன் இணைந்து உற வுகள் குவியலாகப் படம் எடுத்து ஞாபகத்திற்கு வீட்டுச் சுவரில் பிறேம் போட்டு வைத்திருப்பார்கள். நடுத்தர, ஏழைக் குடும்பங்களில் அருமையாக ஒரு படத்தை எடுத்து விட்டு அதனை பெருமையாக அருஞ்செல்வமாகப் பேணிக்காத்தார்கள். அந்நாளில் பெண் பிள்ளை ஒருவர் ஸ்ரூடியோவில் படம் எடுப்பதாயின் தாய், தந்தை சகிதம் சென்றுதான் படம் எடுத்தார்கள்.

சிறந்த புகைப்படக் கலைஞன் ஒருவனை அடையாளம் காண் பதாயின் கலர், லைற்றிங் எவக்ற் (Lighting effect) போட்டோ கிராபி ஆங்கில் (Photography) உயிர்ப்பு என்பவற்றைப் பார்ப்பார்கள். இவ்வளவும் பொருந்தினால் தான் மிகச் சிறந்த புகைப்படம் வரும். (Lighting Effect) அதனால் தான் புகைப்படக் கலை என்றார்கள்.


தற்போது கண்டபடி படம் எடுக்கிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். இதனை புகைப்படம் எடுத்தல் என மட்டுமே அழைக்கலாம். தொழில் முறையாகப் படம் பிடிப்பவர்களின் படங்கள் எப்போதுமே

தரமாகத்தான் உள்ளன. போட்டோக்களைப் பத்திரிகையில் புத் தகத்தில் அச்சிடுவதற்கு புளொக் தயாரித்தல் என்பது தனியான ஒரு துறையாகவும் வியாபார முயற்சியாகவும் இருந்தது. நவீன தொழி நுட்ப முறைகள் வராத அக்காலத்தில் உடல்பலத்தை புத்தி சாலித்தனத்தை பாவித்து புளொக் தயாரித்தார்கள். (Block Making )

இலத்திரனியல் கணினி யுகத்தின் வருகை புளொக் தயாரித்தல் என்பதனை முற்றாகவே நீக்கிவிட்டது. மிக இலாபகரமாக இயங்கி வந்த ஸ்ரூடியோ தொழில் யுகத்தின் தீவிரத்தாலும் அதிநவீன முறைமைகள் மிக மலிவாகவும் இலகுவாகக் கையாளக் கூடியதாக வந்தமையாலும் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. பல பாரம்பரிய ஸ்ரூடியோக்கள் மூடப்பட்டு விட்டன. ஒரு சில ஸ்ரூடியோக்களே நின்று நிலைக்கின்றன. போட்டோ அச்சிடும் இயந்திரமும் சாதாரண விலைக்கு வந்து விட்டது. தேவைக்கு படங்களைத் தாமே அச்சிடும் காலமும் வந்துவிட்டது.

போட்டோ எடுக்கும் தொழிலைத் தெய்வீகக் கலையாக நினைத்து வாழ்ந்த மனிதர்கள் சிலர் இன்றும் எம் மத்தியில் வாழ்கின்றனர். அவர்களின் திறமைகளும் சாதனைகளும் காலப் பெட்டகத்தில் சேமித்து வைக்கப்பட வேண்டியவைதான். எத்தனை கலர்ப் படங்கள் வந்தாலும் கறுப்பு – வெள்ளை ( Blak and white ) படங்கள் எப்போதும் ஓல்ட் இஸ் கோல்ட் (old is cold) தான்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஜூன் 09,16**



# ஊரடங்கு வாழ்க்கை

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அந்த பஸ்விரைந்து கொண்டிருந்தது. ஆனையிறவு இராணுவச் சோதனைச் சாவடி நெருங்கிக் கொண்டிருந்தது. பஸ்ஸுக்குள் இருந்த பொது மக்கள் எப்படி இண்டைக்குவீடுபோய்ச்சேரப்போகிறோம்எனஅங்கலாய்த்தார்கள். ஆனையிறவில் பஸ் நிறுத்தப்பட்டு சோதனைக்குப் பயணிகள் இறங்க ஆயத்தமாகிய போது நேரம் மாலை 4 மணி

அங்கு நின்ற இந்திய அமைதி காக்கும் படையின் (I.P.K.F- Indian Peace Keeping Forces) கூர்க்கா இனச் சிப்பாய் தனது மேலதிகாரியின் கட்டளைப்படி பஸ் சாரதி, நடத்துனர் பயணிகளை நோக்கி நோ ரைம் நோ செக்கிங், யூ கோ ( No time, No checking, you go) நேரமில்லை.சோதிக்கவில்லை, நீங்கள் போகலாம் எனக் கூறினார். பஸ் பயணிகள் சற்று ஆறுதலுடன் வேகமான பயணத்தைத் தொடங்கினார்கள்.

- வேதநாயகம் தபேந்திரன் -

இன்றைய பத்தி ஊரடங்குச் சட்ட கால நினைவுகளாக மலரும் போது நான் அனுபவித்த 1988 ஆம் ஆண்டு அந்தச் சம்பவம் நினைவுத் திரையில் வந்தது. யாழ்ப்பாணம் மட்டுமல்ல இலங்கைத் தீவின் சகல பாகங்களிலும் வசிக்கும் மக்களால் மறக்க முடியாததாக ஊரடங்குச்சட்ட கால நினைவுகள் உள்ளன. ஆங்கில மொழியில் Curfew எனக் கூறப்பட்ட ஊரடங்குச்சட்ட நினைவுகளைப் புறந்தள்ளிவிட்டு யாழ்ப்பாண நினைவுகளைப் பதிவு செய்து முடிக்க முடியாதல்லவா

கூரிய கத்தியின் விளிம்பில் நடப்பது போன்றது தான் இன்றைய அத்தியாயம் ஆயினும், அரசியல் பிரசாரம் இன்றிப் பயணித்துத்தான் பார்ப்போமே.

ஊரடங்குச்சட்டம் வன்முறையைத் தடுக்கும் ஓர் நடைமுறையாக உலகெங்கும் இன்று வரையும் நடைமுறையிலுள்ள ஓர் விடயம். எமது நாட்டில் 1915 களில் நிகழ்ந்த சிங்கள – முஸ்லிம் இனவன்முறைகளின் போது ஊரடங்குச்சட்டம் பிரித்தானியரால் பிறப்பிக்கப்பட்டதா என்பதை அறிய முடியவில்லை ஆனால், 1958 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இனவன்முறை நிகழ்வுகளின் போது ஊரடங்குச்சட்டம் அன்றைய S.W.R.D பண்டார நாயக்க அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது. 1971 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று சேகுவேரா கிளர்ச்சி எனப்பட்ட ஜே.வி.பி (J.V.P) மக்கள் விடுதலை முன்னணி ஆயுதக் கிளர்ச்சியின் போதும் நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்தது.

கியூபாவின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த பிடல்காஸ்ரோவின் உயிர்த்தோழனாக இருந்து பொலிவியாவில் கொல்லப்பட்ட சேகுவேராவினது சிந்தனைகளைத் தாங்கிய புத்தகம் மக்கள் விடுதலை முன்னணியின் முகாம்களில் இருந்ததாலேயே அது சேகுவேரா கிளர்ச்சி என அழைக்கப்பட்டது பலருக்குத் தெரியாத விடயம்.

1971 ஆம் அண்டு ஏப்ரல் மாதம், 1958 ஆம் ஆண்டு ஊரடங்குச் சட்டங்களால் யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டதாக அறிய முடியவில்லை. இனப்பிரச்சினையும், விடுதலைப் போராட்ட இயக்கங்களும் 1980 களில் தான் வீரியம் பெறத் தொடங்கின. இதன் பயனாக அரசாங்கம் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஊரடங்குச்சட்டத்தைக் கையில் எடுத்தது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நடை முறைக்கு இடப்படும் முறைமை தோன்றியது. 1983 ஜுலை 25 ஆம் நாளன்று கொழும்பு கனத்தையில் வெடித்த இனவன்முறை நிகழ் வுகள் நாடெங்கும் பரவிய போது நாடு முழவதுமே ஊரடங்குச்சட்டம் சில தினங்கள் தொடர்ச்சியாகவே அமுலில் இருந்தது.

1983 ஜுலை மாதத்தின் பின்பாக வடக்கு – கிழக்கு பிரதேசங்கள் ஊரடங்குச் சட்டத்துடன் பின்னிப் பிணைந்து வாழ நேரிட்டது. ஒருவர் ஒரு தேவை கருதி இன்னொரு பிரதேசத்திற்குப் பயணித்திருப்பார். திடீரென பிற்பகல் வேளையில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு விடும். அவர் உடுத்த உடுப்புடனேயே தங்க வசதி யின்றி அவலப்படுவார்.

ஊரடங்குச்சட்டம் திடீரென நடைமுறைக்கு வந்து சில தினங்கள் நீடிக்கும். நாளாந்தம் உழைத்துச் சாப்பிடுவோர் உழைக்க வழியின்றி உண்ண உணவின்றி துன்பப்படுவார்கள். கையில் காசிருந்தாலும் கடைக்குப் போய் உணவுப் பொருட்கள் வாங்கி வர வழியின்றிப் பட்டினி கிடக்க நேரிட்டது. ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும். சில மணி நேரத்தில் பாண் வாங்க பேக்கரி வாசலில் வரிசையில் நின்று தவமிருந்ததுவும் நிகழ்ந்தது. வசதியுள்ளோர் வீட்டைவிட்டுப் புறப்பட வழியின்றி ரி.வி டெக் படம் எனப் பல நாள் பொழுதைக் கழித்ததும் நிகழ்ந்தது.

தாயக்கட்டை விளையாடுதல், கரம் போட் விளையாடுதல், செஸ் (Chess) விளையாடுதல், வளவுக்குள் கிளித்தட்டு, கிரிக்கெட், உதை பந்து விளையாடுதல் எனப் பொழுதுகள் கழிந்தன. தாக்குதல் சம்பவம் நடந்த பகுதியாயின் புறப்பட்டு வேறிடம் செல்ல முடியாமல் பேரச்சத்துடன் மணித்தியாலங்கள் நாட்கள் கழித்ததுவும் நிகழ்ந் தது. ஊரடங்குச்சட்டம் எப்போது போடுவார்கள். எப்போது நீக்குவார் கள். என்பதை அறிய வானொலிப் பெட்டியை எந்த நேரமும் செவிம டுத்ததுவும் ஓர் நினைவு தான்.

அரச, தனியார் நிறுவனங்களில் கடமைக்குச் சென்று ஊரடங்கு காரணமாக முடங்கிக் கிடந்து அவதிப்பட்ட நினைவுகளும் ஏராளம். விடுதலைப் போராட்டம் நடத்திய இயக்கங்களின் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு அரசாங்கப் படையினர் ஓர் உத்தியாக ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள்.

அரசாங்கப் படைகளுக்கு எதிராக ஒரு தாக்குதல் நடைபெற்றால் உடனே அந்தப் பிரதேசம் முழுவதும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டுவிடும். யாழ்ப்பாணத்தில் குறித்த ஓரிடத்தில் நிகழ்ந்த சம்பவத்தை முன்னிட்டு முழு யாழ்ப்பாணத்திற்கும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு விடும். ஆனால், ஏனைய பிரதேசங்களில் ஊரடங் குச்சட்ட நேரத்திலும் மக்கள் உள்ளூரில் உலாவித்திரிவார்கள். விடுத லைப் புலிகளின் ஆளுகைக்குள் இருந்த நிலப்பரப்புக்களில் அர சாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நேரத்திலும் அலுவலகங் கள் இயங்கிய நடைமுறை காணப்பட்டது. அவர்களின் அறிவுறுத்த லின்படி அவை இயங்கியதாக கூறப்பட்டது.

1977 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் கொழும்பில் வெடித்த இனவன்முறைகள் நாடெங்கும் பரவியது. அப்போதும் ஊரடங் குச்சட்டம் சில தினங்கள் தொடர்ச்சியாகவே நாடு முழுவதும் நடைமுறை அமுலுக்கு வந்தது. முழு நாளாகப் பிறப்பிக்கப்படும்

ஊரடங்குச்சட்டம் இயல்பு நிலையைப் பொறுத்து மெல்ல மெல்லக் குறைக்கப்படும். தேவையேற்படின் முழுமையாகவே நீக்கப்படும்.

1977 செப்டெம்பர் மாதம் ஊரடங்குச்சட்ட காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூர் நடமாட்டங்கள் பெரிய பாதிப்பின்றி இருந்தது. 1983 ஜூலைக்குப் பின்னர்தான் ஊரடங்குச்சட்டத்தின் பாதிப்பு மக்களது இயல்பு வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்கள் கைது செய்யப்படுவதும், இரவு நேரத்தில் சுடப்பட்டு இறந்ததுவும் சர்வசாதாரணமாக நிகழ்ந்தது. உள்நாட்டு யுத்தம் பிரசவித்த குழந்தைகளில் மிகப் பருமனான குழந்தைகளில் ஒன்றாக ஊரடங்கைக் கூறலாம். பொது மக்களின் இயல்பான நடமாட்டங்கள் யாவுமே இந்த ஊரடங்கு சட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டன. திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டால் அந்தப் பிரதேசத்திற்கு உறவுகளிடம் நண்பர்களிடம் சொந்தத் தேவைக்கு வந்தவர்கள் விசாரிக்கப்படவோ, கைது செய்யப்படவோ கூடிய நிலமை இருந்தது. வானொலி, தொலைக்காட்சி செய்தி அறிக்கைகளில் ஊரடங்குச் சட்டம் குறித்தான அறிவித்தல் கட்டாயமிருந்த காலமும் இருந்தது. பத்திரிகைகளின் நாளாந்தச் செய்திகளில் முன்பகுதியில் ஊரடங் குச் சட்டம் குறித்த செய்திகளுக்கெனத் தனியான ஒரு அட்டவணை யும் இருந்தது. அதில் ஊரடங்கு ஆரம்பிக்கப்படும் நேரம், முடிவடை யும் நேரம் என்பன குறித்த தகவல்கள் இருக்கும்.

அரச, தனியார் அலுவலகங்களில் கடமைக்கு வந்தோர் ஊரடங் குச் சட்டம் திடீரென வருமோ, வந்தால்தாம் என்ன செய்வது. எங்கு செல்வது என்ற பதற்றத்துடன் தான் இருப்பார்கள். தாம் அலுவலக வளாகத்தில் அல்லது அதன் சூழலில் தங்க நேரிடலாம் என முன்னாயத்தமாக உடைகள், இரவு வீட்டுப் பாவனைப் பொருட் களை வத்திருந்தார்கள். அலுவலக வேலை, கூலி வேலை, வியாபா

ரத்திற்குச் செல்பவர்கள் ஊரடங்கு நேரம் நெருங்க பதற்றத்துடன் தான் வீதியால் வீடு செல்வார்கள்.

வியாபார நிலையங்கள் திடீரென வரும் ஊரடங்குச் சட்டத்தின் போது கடைகளை மூடவும் பொருட்களைப் பாதுகாக்கவும் மிகவும் அவதிப்பட்டார்கள். ஊரடங்கு நேரத்தில் புறநகர, கிராமப் புறக்கடைகளில் வியாபாரம் பின் கதவு வியாபாரமாக சில வேளை மந்தமாகவோ, சில வேளை படு சுறுசுறுப்பாகவோ இருக்கும்.

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனப் போக்கு வரத்தில் பாரிய தடைகள் ஏற்பட்டு விடும். இதனால் உணவு, சேவைத் தொழில்கள் பாதிக்கப்பட்டு விலைவாசிகள் மிகவும் உயர்ந்துவிடும். வங்கிகளில் பணப்புழக்கம் குறைந்து திரவப்பணக்கையிருப்பு குறைவு காரணமாக வைப்பிலிடப்பட்ட காசோலைக்கு வைப்பில் இருந்த பணத்தை முழுமையாகப் பெற முடியாமல் பகுதி பகுதியாகப் பெறும் நிலமை இருந்தது.

ஊரடங்கும், அமைதியற்ற வாழ்க்கை நிலையும் காரணமாக மிகவும் சனச் செறிவாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து வடக் கிற்கு வெளியேயான பிரதேசங்களிற்கும், இந்தியாவிற்கும், ஐரோப் பிய வடஅமெரிக்க, ஓசானிக் நாடுகளுக்கும் மக்கள் இடம் பெயர்ந்தார் கள். யாழ்ப்பாணத்தின் சனத்தொகை சரி அரைவாசிக்கும் குறை வாகவே குறைந்துவிட்டது. ஊரடங்குச் சட்டத்தின் பாதிப் புகளைக் கூறிக்கொண்டு போனால் நிறையவே இருக்கும். 1987 மே 26 ஆம்திகதி வடமராட்சி பிரதேசத்தில் ஒப்பிரேசன் லிபறேசன் எனும் இராணுவ நடவடிக்கை மூலமாக விடுதலைப் புலிகளின் ஆளுகை யிலுள்ள நிலப்பரப்புகள் மீட்கப்பட்டன. அப்போதும் ஊரடங் குச் சட்டம் யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதும் நடைமுறைக்கு அமுலானது.

ஊரடங்கு வேளையில் பகல் வேளைகளில் பயணத்தை மேற்

கொள்பவர்கள் மிகவும் அச்சத்துடனேயே பயணிக்க நேரிட்டது. 1987 ஜூலை 05 ஆம் திகதி வடமராட்சி. நெல்லியடியில் அரச படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலித் தாக்குதல் நிகழ்ந்தது. அதன் அனர்த்தம் காரணமாக ஊரடங்குச் சட்டமும் இறுக்கமாக்கப்பட்டது.

ஊரடங்குக்காலத்தில் உணவுப் பழக்க வழக்கத்தில் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்தது. திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும் போது உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் நடுத்தர, பணக்கார வர்க்கத்தின் குடும்பங்கள் பருப்பு, வெந்தயம், கடலை, பயறு, உள்ளி (பூடு) சோயாமீற், கருவாடு, ரின்மீன், அரிசி, மா, சீனி போன்றவற்றைக் கையிருப்பாக வைத்திருக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார்கள். கடைகளுக்குப் போக முடியாத, பொருட்கள் வர முடியாத நிலை ஏற்படும் போது இவற்றைக் கொண்டு தமது தேவைகளை நிறைவு செய்தார்கள்.நாளாந்தம் உழைக்கும் மக்களின் பாடோ அந்தோ பரிதாப நிலைதான். கால்வயிறோ, அரை வயிறோ வயிறு நிறைந்த பசியோடு தான் வாழ்க்கை ஓடும்.

1987 ஜூலை 29 ஆம் நாளன்று புதன் கிழமையன்று கொழும்பில் வைத்து இலங்கை - இந்திய உடன்படிக்கை ( Indo Sri Lanka Peace agreement) ரஜீவ்காந்தி, J.R.ஜெயவர்த்தன ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது சிங்கள மக்களில் பலர் வீதிகளில் இறங்கி இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்ய பெரும் குழப்பமேற்பட்டது. ஜே.ஆர் அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தைக் கடுமையாகப்பிறப்பித்துவிட்டேஇந்தஒப்பந்தத்தில்கைச்சாத்திட்டது இந்த சம்பவத்துடனேயே மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) கட்சி அரசினால் தடைசெய்யப்பட்டது. 1987 ஜூலை 30ஆம் நாளன்று இந்திய அமைதி காக்கும் படைகள் இந்த ஒப்பந்தத்தின்படி நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வந்திறங்கினர். இதற்கு ஒரு வாரத்திற்கு.முன்புதான் விடுதலைப் புலிகளின் தலைவர்

வே.பிரபாகரன் சுதுமலை அம்மன் கோவில் முன்பாக இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் இந்தியாவுக்குச் சென்றார்.

அப்போது யாழ்.குடாநாட்டின் பெருமளவு பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்தியா சென்ற வே.பிரபாகரன் 1987 ஆகஸ்ட் 01 ஆம் திகதியன்று விமானம் மூலம் பலாலியில் உள்ள விமானப்படைத் தளத்திற்கு வந்திறங்கினார். இந்திய அமைதி காக்கும் படைகள் பாதுகாப்பை வழங்க வெளியேறிவந்தார்.

அப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒலி பெருக்கி மூலம் யாழ்குடாநாடெங்கும் ஊரடங்கு நிலையைத் தாம் பிறப்பித்ததாக அறிவித்தார்கள். தமது தலைவரைப் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதுவே இலங்கையில் அரசல்லாத ஓர் அமைப்பு பிரகடனம் செய்த ஒரே ஒரு ஊரடங்கு நிலை எனலாம். இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னத்துடன் அமைதி நிலை தோன்ற மக்களை வருத்திய ஊரடங்குச் சட்டமும் அப்போதைக்கு முடிவுக்கு வந்தது.

ஊரடங்கற்ற நிலையை, போர்ச்சத்தங்களற்ற நிலையைப் பொது மக்கள் ஆரவாரமாக வரவேற்றார்கள். இந்த அமைதி இப்படியே நீடிக்க வேண்டுமென அவாவினார்கள்.இந்த நம்பிக்கையில் இடி விழுந்தது போல 1987 ஆம்ஆண்டு அக்டோபர் 10 ஆம் திகதி இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் மூண்டது. இரண்டாம் ஈழப் போர் பேரிரைச்சலுடன் போரிரைச்சலாகியது.

அப்போது யுத்தத்தின் மூத்த பிள்ளையாக வழமை போலவே ஊரடங்குச் சட்டமும் பிறந்தது. யுத்த ஆரம்ப நாட்களில் பல நாட்கள் இடையிடாத ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யுத்தத்தின் தீவிரம் மெல்ல மெல்லக் குறைய ஊரடங்குச் சட்டத்தின் தீவிரம் குறையத் தொடங்கியது. ஆனாலும், இரவு வேளைகள் முழுமையான

ஊரடங்காகவே இருந்தது. காலப் போக்கில் இரவு 9 மணி முதல் அதிகாலை 4 மணி வரையுமென ஊரடங்குச் சட்டம் சுருங்கியது.

ஆயினும், அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்தால் ஊரடங்குச் சட்டம் குறித்த பிரதேசத்தில் இறுக்கமாக அமுலாக்கப்பட்டது. யாழ்.குடா நாட்டில் இருந்த இந்தியப் படைகளின் முகாம்களின் வாசலில் ஊரடங்குச் சட்டம் ஆரம்பிக்கும் நேரம். முடிவடையும் நேரம் என்பன கரும்பலகை ஒன்றில் எழுதப்பட்டிருக்கும். இலங்கையின் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களுக்கென விசேடமாக இந்திய வானொலியில் காலை, மாலையென அன்புவழி, வெற்றிமாலை எனும் பெயரில் தமிழ் ஒலிபரப்பு ஒலிபரப்பப்பட்டது.

இதிலும் ஊரடங்குச் சட்டம் ஆரம்பிக்கும் நேரம் முடிவடையும் நேரம் என்பன அறிவிக்கப்படும். இந்தியத் தூரதர்சன் தொலைக்காட்சிச் சேவை இலங்கையின் தமிழ்ப் பகுதிகளுக்கென சரியான நேரத்தையும் ஒதுக்கியது. இந்தியப் படையினர் வடக்கு - கிழக்கில் குடியிருந்த காலத்தில் ஜப்பானியத் தயாரிப்பு இலத்திரனியல் பொருட்களைத் தேடித் தேடித் வாங்கினார்கள். இந்தியப் பொருட் களுக்கு Made in Japan என்னும் ஸ்ரிக்கரை ஒட்டி ஜப்பானிய பொரு ளெனக் கூறி விற்ற சில கில்லாடிகளும் இருந்தனர்.

1990 ஜனவரி 22 ஆம் திகதி நாளன்று இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்திலிருந்து முற்றாக வெளியேறினார்கள் அவர்க ளுடன் சேர்ந்து ஊரடங்குச் சட்டமும் வெளியேறியபோது மக்கள் உற்சாகமாக ஆரவாரம் செய்தார்கள். மகிழ்ச்சி ஆரவாரம் ஆறு மாதங்கள் மட்டுமே நீடித்தது தான் கவலைக்குரியது.

1990 ஜூன் 15 ஆம் நாளன்று காங்கேசன்துறை நகரப் பிர தேசத் தில் மூன்றாம் ஈழப்போர் மூண்டது. அப்போதும் ஊரடங்குச் சட்டம் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டது.

பல தினங்கள் தொடர் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யாழ்.குடாநாட்டின் பெரும் நிலப் பகுதி மீதான ஆளுகை விடு தலைப் புலிகள் வசமானது. அப்போது ஊரடங்கு சட்ட நேரம் குறித்த அறிவித்தல்கள் ஹெலிகொப்டரில் இருந்து துண்டுப் பிர சுரம் மூலம் அறிவிக்கப்பட்டது.

வடக்கின் பெரும் நிலப்பரப்புகள் விடுதலைப் புலிகள் வசமிருந் ததால் பொது மக்கள் தாக்குதலற்ற நேரத்தில் ஊரடங்குச் சட்டத் தைப் பொருட்படுத்தாது உலாவினார்கள். ஆனாலும் தீவகப் பிரதேசம் 1990 ஆம் ஆண்டின் இறுதியில் முழுமையான ஊரடங்குச் சட்டத் தின் நடைமுறைக்கு அமுலாக்கப்பட்டு அரச படைகள் வசமாகியது. ஊரடங்குச் சட்டம் திடீர் திடீரென வானொலி அறிவிப்பு ஹெலிகொப் ரர் மூலமாக வீசப்படும் துண்டுப் பிரசுரம் மூலமாக நடைமுறைக்கு வந்தது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும் நிலப்பரப்பின் ஆளுகை விடுதலைப் புலிகளின் வசமிருந்ததால் பொது மக்களது நடமாட்டமும் இருந்தது. 1994 ஆகஸ்டில் சந்திரிகா பிரதமரானதும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார்கள்.

அதன் பயனாக ஊரடங்குச் சட்டமும் நீக்கப்பட்டது. 1994 நவம் பரில் சந்திரிகா ஜனாதிபதியானார். அப்போது பேச்சுக்கள் யாழ்ப்பா ணத்தில் தொடர்ந்தன. 1995 ஏப்ரல் 19 ஆம் நாளன்று திருகோண மலை, கடற் படைத் தளத்தில் விடுதலைப் புலிகளால் ரணசுறு சூரயா. கப்பல்களின் மீதான தற்கொலைத் தாக்குதலுடன் நான்காம் ஈழப் போர் தொடங்கியது.

அப்போதும் ஊரடங்குச் சட்டம் தன்முகத்தைக் காட்டத் தொடங்கி யது. யாழ்ப்பாணத்திலும் ஊரடங்குச் சட்டம் அரசினால் அறிவிக்கப் பட்டது. 1995 ஜூலை 9 ஆம் நாளன்று வலிகாமம் மேற்கு, தென்மேற்கு,

பிரதேசங்கள் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை (Operation Leap For - Ward) எனும் இராணுவ நடவடிக்கை மூலமாக கைப்பற்றப்பட்டது அப்போதும் ஊரடங்குச் சட்டம் யாழ்.குடாநாடெங்கும் அறிவிக்கப் பட்டது.

பின்னர் இப்பிரதேசம் புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலமாக புலிகளால் மீளக் கைப்பற்றப்பட்டது. 1995 செப்டெம்பர் மாதம் பலாலி இராணுவ முகாமிலிருந்து இடிமுழக்கம் இராணுவ நடவடிக்கை மூலமாக அச்சுவேலிப் பகுதியை நோக்கி முன்னேறினார்கள். இந்த நடவடிக்கை அக்டோபர் மாதத்தில் சூரியக் கதிர் (ரவிரச) நடவடிக்கை எனப் பெயர் மாற்றம் பெற்றது. அப்போதும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது. தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தை அரச படைகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்குடன் நடத்தப்பட்டன. 1995 அக்டோபரில் 31 இல் வலிகாமம், பெரிய யாழ்ப்பாணம் (Great Jaffna) யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகள்) பிரதேச மக்கள் நாவற்குழிப் பாலம் ஊடாக 5 இலட்சம் பேர் வரையில் ஒரே நாளில் இடம் பெயர்ந்தார்கள். மாபெரும் இடம்பெயர்வாக இது வரலாற்றில் பதியப்பட்டது. 1995 டிசெம்பர் 7 ஆம் திகதியன்று யாழ் நகரப்பிரதேசம் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. 1996 ஏப்ரல் 19 ஆம் நாளன்று தென்மராட்சிப் பிரதேசத்திற்குள் அரச படைகள் பிரவேசித்தன.

1996 மே இரண்டாம் வாரத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுமை யாகவே அரச படைகள் வசமாகியது. 1996 ஜூலை மாத்தின் பின்னர் இரவு நேர ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி அரச - விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை வந்த போது இரவு ஊரடங்கும் விலகியது. 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதியன்று இறுதியானதுமான ஈழப் போர் வெடித்தது. யாழ். மண்டைதீவுப் பிர தேசத்தில் திடீரென தரையிறங்க முற்பட்ட விடுதலைப் புலிகளால்

பெரும் போர் மூண்டது.

அரச படைகளினதும் விடுதலைப் புலிகளினதும் எல்லைக் கோடாக திகழ்ந்த முகமாலையிலும் கடும் போர் மூண்டது.

அதன் விளைவாக யாழ். குடாநாடெங்கும் முழுமையாக இறுக்க மான ஊரடங்கு நிலை பிறப்பிக்கப்பட்டது.

பலாலி அரச படைத் தளத்தில் இயங்கிய யாழ். சேவை வானொலி மூலமாக ஊரடங்கு நிலை அறிவிக்கப்பட்டது.

சில நாள்கள் தொடர்ச்சியான ஊரடங்கு நிலை தொடர்ந்தது. பின் னர் ஊரடங்கு நிலை பிரதேச ரீதியாக வேறுபட்ட நேரங்களில் நடை முறைக்கு இடப்பட்டது.

பிரதேசங்களுக்கு இடையில் ஓரிரு மணி நேரமே இடைவெளி இருந்தது. உதாரணமாகக் கூறுவோமாயின் யாழ்ப்பாணம், வலிகாம பிரதேசங்களில் காலை 7 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு முற்ப கல் 10 மணிக்கு மீளவும் நடைமுறைக்கு வரும்.

தென்மராட்சி பிரதேசத்தில் காலை 8 மணிக்கு ஊரடங்கு தளர்த் தப்பட்டு முற்பகல் 10 மணிக்கு மீண்டும் பிறப்பிக்கப்படும்.


அப்போது இரு பிரதேசங்களுக்கும் இடையில் இரு மணி நேரம் தான் இடைவெளி. அதற்குள் ஒருவர் தனது தேவைக்கு சென்று வரல் வேண்டும். தமது உறவுகளைப் பார்க்க, மரண வீட்டு நிகழ்வுகளில் பங்கேற்க முடியாமல் பெரும் துன்பப்பட்டனர்.

சில வாரங்களின் பின்னர் இந்த ஊரடங்கு நிலை பெரும் தளர் வுக்கு உட்பட்டது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையென பொது மக்கள் நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இரவு நேர ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாகவே அமுலில் இருந்தது. இரவு 9. மணி முதல் அதிகாலை 4 மணி வரையென அதன் அளவும் குறைக்கப்பட்டது. ஆலயத் திருவிழாக்கள், பொது மக்களின் விழாக்கள், தேவாலயப் பொருட்கள், விஷேட சமயப் பண்டிகைகளின் போது ஊரடங்குச் சட்டமும் இரவு முழுவதும் விலக்கப்பட்டதும் நிகழ்ந்தது. இவ்விலக்களிப்பு பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்டிருந்தது. இதற்கு பிரதேச சபை அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். 2009 மே மாதம் இறுதி வாரத்தில் யுத்தம் முடிவுக்கு வந்ததும் ஊரடங்குச் சட்டமும் சில வாரங்களின் பின்னர் முழுமையாகவும் விலக்கப்பட்டது.

அரசாங்கத்தால் தேர்தல்கள் நடத்தப்படும் போது வாக்குகள் எண்ணப்பட்டு முடியும் நாளன்று பகல் முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும் நடைமுறை நாடுமுழுவதும் இருந்தது. அண்மைக் காலமாக இந்த நடைமுறையும் கைவிடப்பட்டுள்ளது. ஊரடங்கு நிலை வாழ்வில் இனிமேல் ஒரு காலமும் வரக்கூடாதென்பதே யாழ்ப்பாணம் உட்பட இலங்கை மக்களின் விருப்பமாகும். நீளும் காலத்தில் வாழப்போகும் தலைமுறைகள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவணமாக்கல் என்ற நோக்குடன் மட்டுமே என் எழுத்துக்களை இங்கே விதைத்துள்ளேன்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஜூன் 23, 30**



# சேர்க்கஸ், உடற்பயிற்சி கால நினைவுகள்

யாழ்ப்பாண மக்கள் உளமகிழ்வு கொண்டு ஆரோக்கியமாக வாழ சேர்க்கஸ், உடற்பயிற்சி நிகழ்வுகளின் காட்சிகள் இருந்த காலங்களும் நினைவிற்குரிய காலங்கள் தான். எம்.ஜி.ஆர் நடித்த சந்திரலேகா படம் பார்த்தவர்களுக்கு சேர்க்கஸ் சாகசக் காட்சிகள் நினைவில் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த சேர்க்கஸ் நிகழ்வுகளை முதலில் பார்ப்போம். இன்றைய பகுதிக்குரிய தகவல்களில் பெரும் பகுதியை தமது நினைவுப் பெட்டகத்தில் மீட்டித் தந்த இருபாலை கிழக்கில் வசிக்கும் திரு.பொன்னையா அருமைநாயகம், கொக்குவிலில் வசிக்கும் திரு.செல்லையா செல்வரட்ணம் ஆகியோருக்கு பல கோடி நன்றிகள்.

1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக உள்ள முற்றவெளியில் நடந்த கமலா சேர்க்கஸ் தான்

முதலில் நினைவிற்குரியதாகவுள்ளது. இங்கு றெஸ்லிங் எனப்பட்ட மல்யுத்தம்தான் வினோதமானதாக இருந்தது. இந்தியர்களின் கம்பனியாக இயங்கிய கமலா சேர்க்கஸ் குழுவில் தாராசிங் கிங்கொங், ஹாபஜன்சிங் போன்றோர் மல்யுத்த வீரர்களாக யாழ்ப் பாண முற்றவெளிக்கு வந்திருந்தார்கள்.

இவர்களின் மல்யுத்த வீரத்தைப் பார்க்கவே பொது மக்கள் அலை அலையாகத் திரண்டார்கள். அதிலும் தாராசிங்கின் மல்யுத்தத்தின் திறமையை அக்காலத்தில் வாழ்ந்த மூத்தோர்களால் இன்றளவும் நினைவு கூரப்படுகின்றது.

கமலா சேர்க்கஸில் சாகசக் காட்சிகள் பலவும் அரங்கேற் றப்பட்டன. யானை நடனம், Trapez எனப் பட்ட இரும்பு வளையங் களுக்கிடையில் பாய்தல், இந்த இரும்பு வளையங்களில் நெருப்பு மூட்டப்பட்டு அதற்கிடையிலும் பாய்ந்தார்கள். யானையின் மேல் இருந்து ஊர்வலம் செல்தல், பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓடுதல் போன்ற சாகங்கள் நிகழ்த்தப்பட்டன.

இந்தியாவைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் இணைந்து கமலா சேர்க்கஸில் சாகசம் புரிந்தார்கள். முற்றவெளியில் கமலா சேர்க்கஸ் ஒரு மாத காலம் வரையில் நடந்தது. யாழ்ப்பாணம் மட்டுமல்ல வட மாகாணங்கத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும், ஏனைய மாகாணங்களிலிருந்தும் கூட பொது மக்கள் கமலா சேர்க்கஸைப் பார்க்க வந்தார்கள்.

சாகச்காட்சி எனும் போது 1960 இற்கும் 1965 ஆம் ஆண்டிற் குமிடையில் யாழ்.முற்றவெளியில் நடந்த வலம்புரி சைக்கிள் ஓட்டத்தையும் குறிப்பிடத்தான் வேண்டும். வலம்புரி எனப் பெயருள்ள இந்திய சைக்கிள் வீரர் ஒருவர் சைக்கிளின் ஹான்டிலின் முன் பக்கம் இருந்தவாறு பின் பக்கமாக சைக்கிள் பெடலை உழக்கி சைக்கிள் ஓடினார். முன் புறம் பாரத்து பின் புறம் சைக்கிள் ஓடிய

இச்சாகசத்தைப் பார்க்க மக்கள் அலை அலையெனத் தினந்தோறும் முற்றவெளிக்குத் திரண்டார்கள். வலம்புரி சைக்கிளின் ஹான்டிலில் இருந்து சைக்கிளை ஓடியவாறே குளித்தல், முகம் கழுவுதல், ஆடை மாற்றுதல் போன்றவற்றைச் சைக்கிள் வீரர் செய்தார்.

இவ்வாறு செய்த செயல்களைப் பார்த்து பின்னாளில் 1979 ஆம் ஆண்டில் யாழ்நகர முஸ்லிம் பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் நசீர் என்ற இளைஞன் ஹான்டிலில் இருந்து முன்புறம் பார்த்து பின்புறமாக சைக்கிள் ஓடினார்.

ஆயினும், வலம்புரியின் சைக்கிள் ஓட்டம் தான் இன்றளவும் மூத்தோரால் பேசப்பட்டு வருகின்றது. வலம்புரியின் சைக்கிளோட் டத்திற்கான அனுசரணையை யாழ்.நகரப்பகுதியிலிருந்த தனமும் நல்ல மனமும் உள்ள வணிகர்கள் வழங்கினார்கள். வலம்புரியின் சாகத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுத்து இந்தியாவிற்கு வழியனுப்பி வைத்தார்கள். வலம்புரியின் சைக்கிள் ஓட்டத்தைப் பார்த்து ரசித்த யாழ்ப்பாண மக்கள் நிறையப் பேர் தாமும் அது போல ஓடிப்பார்த்து விபத்துக்கு உள்ளாகிய நிகழ்வுகளும் நடந்தன.

சைக்கிளைத் தாறுமாறாக ஓடும் இளசுகளைப் பார்த்து ஏனை யோர் வலம்புரி ஓட்டம் ஓடுறாயோ. போன்ற வசனங்களைக் கேட்டார் கள். இன்றளவும் அக்காலப் பெரியவர்களின் வாயில் திரில்லாக சைக்கிள் ஓடுவோரைப் பார்த்து என்ன வலம்புரி ஓட்டமோ... எனக் கேட்குமளவுக்கு வலம்புரியின் சாகசம் நீங்காத நினைவுகளாகவே உள்ளது.

அப்பலோ சேர்க்கஸ் யாழ் முற்றவெளியில் 1981 ஆம் ஆண்டில் நடந்தது. ஒருமாத காலம் வரையில் நடந்த இச்சேர்க்கஸ் காட் சிகளை இன்றளவும் நினைவு கூரக்கூடியதாக நிறையப்பேர் உயிர் வாழ்கின்றார்கள். அப்பலோ சேர்க்கஸ் காலை, மாலையென இரண்டு பிரிவாக நிகழ்ந்தது. காலையில் பாடசாலை மாணவர்

- வேதநாயகம்

களை முதன்மைப்படுத்தியதாக சாகசக் காட்சிகள் நடைபெற்றது. இருபத்தைந்து சதம் கொடுத்து இக்காட்சிகளைப் பார்த்த ஞாபகம் வருகின்றது. பாடசாலைகள் அப்பலோசேர்க்கஸ் முகாமையாள ருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து மாணவர்களை அழைத்து வரு வார்கள். தூரப் பிரதேச மாணவர்கள் பஸ், தட்டிவான் போன்ற வாக னங்களின் மூலம் யாழ்முற்றவெளி வந்து அப்பலோ சேர்க்கஸைப் பார்ப்பார்கள். காலை 10 மணிக்காட்சி முடிய மதியம் ஒரு மணியாகிவிடும்.

மாலைக்காட்சி 6 மணிக்கும் தொடங்கும் இதனையும் எனது பெற்றோருடன் சென்று பார்த்தேன். இரவு நேரமாகும் இக்காட்சி மின்னொளியில் கண்ணைப் பறிக்கும் வகையில் இருக்கும். முற்ற வெளிப் பிரதேசமும் யாழ்.நகரச் சுற்றாடலும் அப்பலோ சேர்க்கஸ் நிகழ்ந்த காலத்தில் சன அலைகளாக இருந்தன. அப்பலோ சேர்க்கஸ் உள்ளே நிகழ்ந்த சாகசங்களின் தரிசனத்திற்குச் செல்வோம். சேர்க்கஸில் முக்கியமாக சேர்க்கஸ் கோமாளி என ஒருவர் இருப்பார். அவருக்கு சேர்க்கஸ் பார்க்க வருபவர்களை சிரிக்க வைப்பது தான் இவரது பிரதான வேலை, கமலஹாசனின் அபூர்வ சகோதரர்கள் படத்தைப் பார்த்தவர்கள் சேர்க்கஸ் கோமாளியைக் கண்டிருப்பீர்கள். நகைச்சுவை நிகழ்வுகளைத் திடீரென நிகழ்த்திச் சகலரையும் சிரிக்க வைப்பார்.

சேர்க்கஸில் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் சாகசம் மயிர்க்கூச்செறிய வைக்கும். யானைகள் கூட்டமாக அசைந்து வரும். சில யானைகள் மண்டியிட்டு நிற்க, சில காலை உயர்த்தியபடி தும்பிக்கையை உயர்த்தியபடி நிற்கும்.

இரும்புக் கம்பியினாலான வளையத்தினுள் குரங்கு, நாய் என்பன பாய்ந்து கொள்ளும், மனிதர்களும் இவ்வாறு பாய்ந்து சாகசம் புரிந்தார்கள். குரங்குகள் பல அழகான வர்ணத் தொப் பிகளை தலையில் அணிவதும், எடுப்பதுமாக எறிந்து ஏந்தித் தலை

யில் போடுவதுமாக, எறிந்து அழகு காட்டும் மூன்றடி ஆழம், ஒன்றரை அடி அகலமுள்ள கிடங்கு ஒன்றினுள் ஆளை சாக்குப் போட்டு மண் நிரப்பி புதைத்த பின் பல நிமிடங்களின் பின் மீளவும் எழுப்பி எடுப்பார்கள்.

நாற்பது அடி உயரத்தில் பலகை ஒன்று கட்டியிருக்கும். கீழிருந்து ஏறி அதன் மேல் இருப்பார்கள். பின்பு அதிலிருந்து நூல் ஏணி மூலம் குதிப்பார்கள். கீழே விழாமல் லாவகமாகக் குதிப்பார்கள். கீழே விழுந்தாலும் தாங்குவதற்கென வலை ஒன்று இருக்கும். நூல் ஏணி மீது லாவகமாகப் பாய்ந்து ஒவ்வொரு நூல் ஏணியாக மாறி மாறித் தொங்குவதும், ஒருவரின் கைகளை இன்னொருவர் பிடித்தவாறே சங்கிலிக் கோர்வையாகத் தொங்குவார்கள்.

மெல்லிய றப்பர் போன்ற உடல்வாகு உள்ள ஆண்களும் பெண்களும் இவ்வாறே சங்கிலிக் கோர்வை போல நூல் ஏணிக ளில் மாறி மாறித் தொங்குவார்கள். பார்வையாளருக்கு மயிர்க்கூச் செறியும் விதத்திலும் பயங்கொள்ள வைக்கும் வகையிலும் நூலே ணிச் சாகம் நடக்கும்.

அப்பலோ சேர்க்கஸ் சீலைகளாலான கூடார அமைப்பினுள் தான் நடந்தது. கூடாரம் அமைக்க உரிய தடிகள், உலோகக் குழாய்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. உயர அமைக்கப்பட்ட கூடாரத்தை தாங்கும் கம்பிக் கட்டைகள் முற்றவெளியின் தரைப்பகுதி எங்கும் தடித்த கயிற்றுடன் இணைந்து அமைக்கப்பட்டிருந்தது. காற்று, மழை ஆகியவற்றின் தாக்கத்திற்கு உட்பட்டு கூடாரம் சேதமடையாத வகையிலும் பார்வையாளர்களைக் குழப்பாத வகையிலும் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அப்பலோ சேர்க்கஸில் சாகசம் காட்டிய யானைகளுக்கு உணவளிக்க இலை குழைகள் வெட்டவெனத் தொழிலாளர் குழுவொன்று நாளாந்தம் செயற்பட்டது.

இந்தச் சேர்க்கஸில் ஒற்றைச் சில்லுள்ள சைக்கிள் ஒன்றின்

மீது பெண் ஒருவர் ஓடியது வியப்பிற்குரியதாகப் பார்க்கப்பட்டது. அந்தரத்தில் மிக லாவமாக பெண்கள் சிலர் இந்த சாகசத்தை நிகழ்த்திய போது ஆசன நுனி வரை சென்று திரில்லாகப் பார் வையாளர்கள் பார்த்தார்கள். சேர்க்கஸ் கூடாரத்தில் ஆசன அமைப்பு பலகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டிருந்தது. மாடிப்படிகள் போன்ற அமைப்பைக் கொண்டதாகப் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. படிகள் மேலிருந்து கீழ் நோக்கியதாக வந்தது. பார்வையாளர்கள் கட்டணமும் இதனால் வேறுபட்டிருந்தது.

மேல் உள்ள படிகளில் இருந்தவர்களுக்குக் கட்டணம் குறை வானதாகவும் தரைப் பகுதியின் பின் புறமிருந்தோருக்கு கட்டணம் அதிகமாகவும் வசூலிக்கப்பட்டது. யாழ்.நகரின் மிக முக்கிய பிரமுகர்கள் (V.I.P ) இருப்பதற்கான சிறப்பான ஆசனங்களுடன் உபசரிப்பு முறைகளுமுள்ள வி.ஐ.பி வரிசையும் இருந்தது. அப்பலோ சேர்க்கஸில் பொடி பில்டிங் (Body building) எனப்பட்ட பாரந்தூக்கி சாகசம் காட்டும் நிகழ்வுகளும் நடைபெற்றது. உடற்பருமனுள்ள ஆண்கள் எண்ணெய் பூசியது போல தேகம் மினுமினுக்க இரும்பு வட்டச் சக்கரங்களை மெல்ல மெல்ல மேலே உயர்த்தி சாகசம் காட்டினார்கள். பொடி பில்டிங் சாகசங்கள் பார்வையாளர்களின் கரகோசம் வானைப் பிளக்க நடந்தது.

அப்பலோ சேக்கசின் நினைவுத் தடங்கள் வட புல மண்ணில் இன்றளவும் நினைவு கூரப்படுகின்றது. வாழ்ந்த வாழ்வின் நினை வுகளை அசைபோடுவார்கள். யாழ்.முற்றவெளிப் பகுதி ஊடாகச் செல்லும் போது அப்பலோ சேக்கஸின் நினைவுகளை மீள நினைக்கத் தவற மாட்டார்கள்.

தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து தலை மன்னார் வரை பயணிகள் கப்பல்கள், சரக்குக் கப்பல்கள் சர்வசாதரணமாக ஓடிய அக்காலத்தில் சேர்க்கஸ் கூடாரங்கள், பாரிய உபகரணங்கள், மிருகங்களை இங்கு எடுத்து வருவது சர்வசாதாரணமாக இருந்தது.

யாழ்ப்பாணமும் சனச்செறிவு மிக்கதாகவும் இலங்கையில் ஏனைய பகுதிகளை விட அக்காலத்தில் பணவசதி கூடிய மக்கள் வாழந்த பிரதேசமாக இருந்தது. இதனால், சேர்க்கஸ் கம்பனிகள் இங்கு முகாமிட்டு உழைப்பது இயலுமானதாக இருந்தது. யாழ்முற்றவெளிப் பிரதேசமும் எத்தனையோ அரசியல், பொருளாதார மேடைகளின் களமாகிவிட்டது. சேர்க்கஸ் காலங்களை ஒத்ததான உடற்பயிற்சி சாகச நிகழ்வுகளும் யாழ்மண்ணில் அரங்கேறி உள்ளன.

இருபாலை கிழக்கில் வசிக்கும் மூத்த பெரியார் பொன்னையா அரியநாயகம் என்பவர் இத்தகைய நிகழ்வுகளை நிகழ்த்திய முன்னோடிகளில் ஒருவராக உள்ளார். இருபாலையைச் சேர்ந்த செல்லையா செல்வரட்ணம் எனும் பெரியார் கொக்குவிலில் வசிக்கின்றார். இவர்கள் உடற்பயிற்சிக் கழகமொன்றை நடத்தி பாடசாலைகள், கோயில்களில் கலை நிகழ்ச்சிகளில் காட்டிய உடற்பயிற்சிச் சாகசங்களும் வரலாற்றில் பதிவிற்குரியவை.

இவர்கள் போன்ற உடற்பயிற்சி நிபுணர்கள் யாழ்குடா நாட்டில் பரவலாக வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் குறித்த தேடலும் ஆவ ணப்படுத்தலும் செய்வது இத்துறையில் அவசியமான ஒன்றாகும். இருபாலை கிழக்கு பொன்னையா அரியநாயகத்திடம் பயின்ற இருபாலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஐரோப்பிய நாடுக ளுக்கு புலம்பெயர்ந்து சென்று இக்கலையைப் பகுதி நேரமாக வும் தொடர்கின்றார்கள். அன்றைய காலத்தில் பாடசாலை முடிந்து வந்தால் ரியுசன், கேபிள் தொலைக்காட்சி, டி.வி.டி பிளேயர் போன் றவை இல்லை. இதனால் மாணவர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற பொழுது போக்குகள் தேவையை நிறைவு செய்தன. அத்தகைய நிலையில்தான் உடற்பயிற்சிக் கலையும் அதன் வழிப்பட்ட நிகழ்வு களும் வளர்ந்தன.

உடற்பயிற்சிக் கழகம் என்ற இந்த அமைப்பு பாடசாலை மாணவர்களுக்கு உடற்பயிற்சி நிகழ்வுகளை நடத்திக் காட்டியது.

இவை சாகசக் காட்சிகளை ஒத்த தன்மையுடையதாக இருந்தன. உடலை வளைத்து சாகசங்களை நிகழ்த்தினார்கள். நிலத்தில் படுத்த படி இருக்க நெஞ்சின் மேல் பலகை வைத்து அதன் மேல் ஜீப் போன்ற வாகனங்கள் செலுத்தப்பட்டன. மோட்டார் சைக்கிள் செலுத்தப்பட்டது. இரும்பு வளையங்களுக்கு ஊடாகப் பாய்தல், நிலத்தில் இரு கைகளையும் ஊன்றிக் கைகளால் உடல் பாரத்தை தாங்கி நடத்தல், கைகளை நிலத்தில் வைத்து உடலை வளைத்து பாய்ச்சல் செய்தல் போன்றவை நிகழ்த்தப்பட்டன.

இவ்உடற்பயிற்சி நிகழ்வுகளை பாடசாலைகள் ஒழுங்கு செய்து தமது மாணவர்களுக்கு காட்டினார்கள். பாடசாலைகளின் அபிவி ருத்தித்தேவைகளுக்கு நன்கொடைப் பணம் வாங்கும் பண்பாடு அந்நாளில் இருக்கவில்லை. இதனால் பாடசாலைகள் உடற்பயிற்சிக் கழகங்களின் காட்சிகளை நடத்தி நிதி திரட்டினார்கள் உடற்பயிற்சி சாகச காட்சிகளைப் பார்த்த மாணவர்கள் சிலர் தாமும் அது போல பயிற்சிகளைச் செய்ய முற்பட்டார்கள். உடல் ஆரோக்கியத்தைத் தரும் இது போன்ற உடற் பயிற்சி நிகழ்வுகள் மாணவர்களிடத்தில் புத்தெழுச்சியை உண்டாக்கியது. கோயில் திருவிழாக்களில் இரவு நேரத்தில் திருவிழா முடிய உடற்பயிற்சி சாகச நிகழ்வுகள் நடத்தப் பட்டன. எல்லாத் திருவிழாக்களிலும் இந்நிகழ்வு இல்லை. ஒரு சில பெரும் திருவழாக்களின் உபயகாரர் மட்டுமே தமது திருவிழாவில் உடற்பயிற்சிகளைச் செய்வித்தனர்.

இத்தகைய நிகழ்சிகள் நடைபெறுவது குறித்து துண்டுப் பிர சுரங்களை முன்னைய திருவிழாகளில் விநியோகித்தார்கள். யார் யார் இந்த நிகழ்வுகளைச் செய்யப் போகின்றார்கள் போன்ற விபரங்கள் இடம்பெற்றிருக்கும். சில சமயம் இது குறித்த சுவரொட்டிகள் ஊரில் ஒட்டப்பட்டிருக்கும்.


உடற்பயிற்சிக் கழகத்தை நடத்தியவர்கள் தமக்கு பணமீட்டும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. தமது போக்குவரத்து,

நியாயபூர்வமான கூலி போன்றவற்றை ஈடு செய்யும் விதத்தில்தான் கட்டணம் அறவிட்டார்கள். திருவிழாக்களில் இசைக் குழுக்களின் நிகழ்ச்சிகளை அலைமோதிப் பார்ப்பது போல உடற்பயிற்சி சாகச நிகழ்ச்சிகளைப் பார்க்கச் சென்றார்கள். எம்மவரின் இத்தகைய திறமைகள் இந்தியர்கள், சீனர்கள் போன்று நிறுவனமயப்பட்டு பெரும் பண முதலீட்டுடன் வளர்க்கப்படவில்லை என்பது கவலைக் குரியது. அவ்வாறு வளர்க்கப்பட்டிருந்தால் இத்துறையும் திறமை ஒளிர்ந்து வளர்ந்து நிலை பெற்றிருக்கும். அக்காலத்தில் உடற்ப யிற்சி நிகழ்வுகளை நடத்திக் காடிய வீரர்கள் சமூகத்தில் நன்கு மதிக்கப்பட்டார்கள். இவர்கள் ஒழுக்கப் பண்பும், உணவு தொடர்பான கட்டுப்பாடுகளும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

இத்தகைய வீரர்கள் தமது வாழ்வாதரத்திற்கு அரச, தனியார் தொழில் ஒன்றைச் செய்து கொண்டு பகுதி நேரமாகத்தான் இத னைச் செய்தார்கள். சேவை அடிப்படையில் குறைந்த கட்டணத்துடன் இதனைச் செய்யும் போது பல நாட்கள் தமது உழைப்பை இழந்துதான் செய்தார்கள். கோயில் திருவிழாக்கள், ஊரின் கலைவிழாக்களில் நிகழ்வுகளைச் செய்யும் போது தமது இரவு நேர ஓய்வை இழந்துதான் செய்தார்கள்.

இத்தகைய கலைநிகழ்வுகளை நிகழ்த்திய திறமைசாலிகள் நீண்ட உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள உடல் ஆரோக்கிய சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதில் உழைத்த இத்தகையவர்களும் காலநீட்சியில் ஆவணத்திற்கு உரியவர்கள் தான்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு, 2013 ஜூலை 07,14**



# போர்க்காலமும் வியாபாரமும்

இலங்கைத் தீவில் அமைதியை மூன்று தசாப்த காலம். தின்று தீர்த்த போர் முற்றாக முடிந்து விட்டது.போரின் நினைவுகள்,வடுக்கள் நாட்டின் சகல பிரதேசங்களிலும் இன்னமும் உள்ளது. போர்க்காலமும் வியாபாரமும் என்ற விடயமும் ஆவணப்படுத்த வேண்டி இன்றைய பத்தி மலர்கின்றது.

1980 களின் ஆரம்பத்தில் போரின் சலசலப்பு மெல்ல மெல்ல ஆரம்பித்தது. போரின் வருகை மக்களுக்கு பொருள்கள், சேவைகள் கிடைப்பதில் தடங்கல்களை ஏற்படுத்த ஆரம்பித்தது. யாழ்குடா நாட்டிற்கு1990 ஜுன் 15 ஆம் திகதி வரையில் பொருட்கள் தரைவழிப் பாதை வழியாகவும் கொழும்பிலிருந்து சரக்கு ரெயின் மூலமாகவும் கொண்டு வரப்பட்டது.

1980 களின் ஆரம்பத்தில் யுத்தத்ததின் வருகையின் போது லொறிகள் மூலம் தரைவழிப்பாதையால் பொருட்கள் எடுத்து வருவது

இடைக்கிடை தடை ஏற்பட்டது. 1983 ஜுலை 23 ஆம் திகதி திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் வெடித்த கண்ணி வெடியால் ஜுலை 25 ஆம் திகதி நாடெங்கும் இனவன்முறைகள் வெடித்தன.

அப்போது தரை, புகையிரத வழியான பொருட்களின் வருகை தடைப்பட்ட போது தென்பகுதியிலிருந்து வரும் உணவுப் பொருட் களின் விலைகளில் அதிகரிப்பு உருவாகியது.

அதேவேளை, வடபகுதியில் விளைந்த விவசாயப் பொருட்களின் விற்பனை வசதியின்மையால் அவை மிக மலிவு விலையில் விற்பனையாகின. 1983 ஜுலை மாதத்தின் பின்னர் வன்முறை நிகழ்வுகள் வடபகுதியில் பரவிய போது தரைவழிப் பாதை ஊடான பொருட்களின் வருகை அவ்வப்போது தடைப்பட்டது. 1984 இல் கோண்டாவில் புகையிரத நிலையத்தில் புகையிரதங்கள் எரிக்கப்பட்டன. 1985 ஜனவரி 19 இல் கிளிநொச்சி முறிகண்டியில் பயணிகள் புகையிரதம் குண்டு வெடிப்பில் சிக்கியது. அதில் படை வீரர்களே பெருமளவில் இறந்தார்கள்.

இவற்றைத் தொடர்ந்து புகையிரத சேவைகள் அடிக்கடி சீர்கு லைந்தன. இதனால் உணவு, எரிபொருட்களின் விலைகள் அடிக்கடி உயர்வடைந்தன. மண்ணெண்ணைக்காகத் தவமிருந்து பிளாஸ் டிக் கொள்கலன்களுடன் திரியும் காலம் உருவாகியது.

இக்காலப் பகுதியில் தனியார் கடைகளில் பொருள் விற்பனை செய்யப்படும் நிலைமை குறைவடைய பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலைமை உருவாகியது. இதனால் பலநோக்குகூட்டுறவுச் சங்கங்களில் கிளைமுகாமையாளர்களாகக் கடமையாற்றுவோருக்கு திருமணச் சந்தையில் நல்ல டிமான்ட் இருந்தது. சங்கக் கடை மனேச்சரை

மருமகனாக எடுத்தால் பொருள் பண்டத்திற்கு குறைவிருக்காது என சராசரி யாழ்ப்பாணத்தான் விரும்பினான்.யுத்தத்தின் சத்தம் காரணமாக நகரப்பகுதிக்கடைகள் அடிக்கடி மூடப்படத் தொடங்கின. இதனால் கிராமப்புறக் கடைகள் மெல்ல மெல்ல வியாபாரக் கிளை விட்டுப் பரவ ஆரம்பித்தன. சந்தைகளில் மட்டும் பொருள் விற்பனை செய்யும் முறைமைக்கு மாற்றாகத் தெருவோர நடைபாதை வியாபாரங்கள் களை கட்ட ஆரம்பித்தன.

1985 ஆம் ஆண்டில் நல்லூர் கோயில் திருவிழாவின் போது தமிழ் இயக்கங்கள் தமது வியாபார நிலையங்களை ஆலய வெளிப் பிரதேசத்தில் அமைத்தன. ஈழமக்கள் புரட்சி கரமுன்னணி (EPRLF) இயக்கம் இயற்கை மூலிகைகளுடன் சேர்த்துத் தயாரித்த தேயிலையை விற்பனை செய்தது. 1986 ஆம் ஆண்டின் பிற்பகுதி முதல் விடுதலைப் புலிகள் இயக்கம் தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மக்கள் கடை எனும் அமைப்பை உருவாக்கியது.

அரச படைகள் முகாம்களில் முடங்கியிருந்த காலங்களில் தமிழர் விடுதலைஇயக்கங்கள்தென்பகுதியிலிருந்துவரும்பொருட்களுக்கு வரி விதிக்கும் முறைமையைக் கடைப் பிடித்தார்கள். ஆரம்பத்தில் இயக்கங்கள் தமக்குள் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு பொருட்களுக்கு வரி விதிக்கும் முறைமையைக் கடைப்பிடித்தார்கள். என்னென்ன பொருட்களுக்கு யார் யார்வரி விதிப்பது என்ற இணக்கப்பாட்டைத் தமக்குள் ஏற்படுத்தினார்கள். நாளடைவில் இவ்இணக்கப்பாட்டில் முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டன.

வர்த்தகர்கள் நேரடியாகவே இந்த வரியைச் செலுத்தி விட்டு பொருட்களை விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

போராட்ட நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்கும் ஓர் விதி முறையாகவே இந்த வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டது. சில இயக்

கங்கள் தமது நிதித் தேவைகளுக்கு கிராமப்புறங்களில் சிறு கைத் தொழில் முயற்சிகளை தமது கிராமிய ஆதரவாளர்கள் மூலம் மேற் கொண்டனர்.

தும்படித்தல், கயிறு திரித்தல், தும்புத்தடி கட்டுதல், விளக் குமாறு கட்டல், அரிசிமாப் பொதி செய்தல் என இந்த வியாபாபர முயற்சிகள் பலவாக அமைந்தன. தோட்டம், வயல் செய்கைகளில் ஈடுபட்ட இயக்கங்கள் கூட இருந்தன. பண்ணைகளை கூட வைத் திருந்தார்கள். தமது போராட்ட நடவடிக்கைகளிற்கு ஆதரவு திரட்டும் பிரச்சார வெளியீடுகளை வீடு வீடாகச் எடுத்துச் சென்று விற்பனை செய்தும் வருவாய் ஈட்டினார்கள்.

சந்தைக் குத்தகையை தமது ஆதரவாளர்களின் பெயர்களில் பதிந்து எடுத்தல், சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை நடத்தியமை எனவும் நிதித் தேடல்கள் நடந்தன. 1986 ஆம் ஆண்டின் இறுதியை தொடர்ந்து வந்த யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ் EROS) ஆகிய இயக்கங்கள் மட்டும் இயங்கின.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமக்கென வருவாய்த்துறை அமைப்பை உருவாக்கியது.வியாபாரங்களிலிருந்தான வருவாய் வழி களைத் தேடினார்கள். தென்பகுதியிலிருந்து ஆனையிறவு ஊடாக யாழ்ப்பாணம் வரும் பொருட்களுக்கு வீத அடிப்படையில் வரி வதிப்பை மேற்கொண்டார்கள்.

இவற்றால் உள்ளூரில் பொருட்களின் விலைகள் உயர் வடைந் தன. அதே வேளையில் போர்க் காலத்தில் வடக்கு நோக்கி எடுத்து வரப்படும் பொருட்களுக்கு அன்றைய அரசாங்கத்தினால் கட்டுப்பா டுகள் விதிக்கப்பட்டன. இதனால் கறுப்புச் சந்தை வியாபாரமொன் றும் தோன்றியது. நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகரித்த

விலையில் பொருட்களை வாங்க நேரிட்டது. அதேவேளை, உள்ளூரில் பொருட்களைத் தட்டுப்பாடான பிரதேசத்திற்கு எடுத்துச் சென்று விற்கும் சைக்கிள் வியாபார முறையொன்றும் உருவாகியது.

ஊரடங்குச்சட்ட நடைமுறைகளால் யுத்த மோதலால் உணவுப் பொருட்களின் வருகை தடைப்பட்டது. இதனால் உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்திருந்த வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் உழைக்க முடிந்தது.

யுத்தத்தில் அகப்பட்டு, உயிர்,உடமை, அவயவங்களை இழந்த வர்த்தகர்களும் இருந்தார்கள். இடம்பெயர்வு வாழ்க்கைக்குள் அகப்பட்டு பொருட்களைக் கைவிட்டோடிய வர்த்தகர்கள் நிலையும் பரிதாபம் தான்.

வியாபார நிலையை விட தமிழ் விடுதலை இயக்கங்களின் வருகையால் உள்ளூர் சண்டியர்கள் அடக்கப்பட்ட நிலையையும் கூறத்தான் வேண்டும். இயக்கங்களின் வருகைக்கு முன்னர் ஊருக்கு ஊர் விலாசமான சண்டியர்கள் இருந்தார்கள். தேவைப்பட்டால் வெட்டுக் குத்துக்கும் தயங்க மாட்டார்கள். தீபாவளி வந்தால் குடி வெறி கூத்தாக சண்டையாக, வெட்டுக் கொத்தாக சில வேளை கொலையாகவும் முடிவடையும். சில ஊர்களின் பொழுது போக்கு இவ்வாறாகவே அடிக்கடி கரையும். பொடியங்களின் எழுச்சியால் பல சண்டியர்கள் பொடி (Body )பொடியாக விழுந்தார்கள்.

மிகுதிச் சண்டியர்கள் அடங்கிப் பெட்டிப் பாம்பாக ஒடுங்கிப் போனார்கள். மிக நீண்ட காலத்திற்கு இவர்கள் நிமிர்ந்தெழ முடியாமல் சண்டியர்களின் கலாச்சாரம் பெருமளவு அடிபட்டே போனது. அதுபோல, உள்ளூரில் பெண், பிரசுகளுடன் நக்கல் நையாண்டி விட்டுத் திரிந்த இளவட்டங்களின் அட்டகாசங்களும் அடக்கப்பட்டன. மொத்தத்தில் சமூக அமைதியுள்ள சமூகமொன்று உறுதியாக கட்டி

எழுப்பப்பட்டது. சமூக வன்முறைகள் மலிந்த இன்றைய காலத்தில் அக் காலத்தை பொற்காலமாக நினைவு கூரும் பலருள்ளனர்.

போர்க் காலத்தில் உணவுப் பொருட்களின் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பேக்கரித் தொழில் வேகமாக வளர்ச்சிய டைந்துள்ளது. 1983 ஜூலையில் 25 இல் வெடித்த இனவன்முறை காரணமாக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பேக்கரித் தொழி லைச் சிறப்பாகச் செய்த மாத்தறைச் சிங்கள வர்த்தகர் முழுப் பேருமே வெளியேறினார்கள். லீலா பேக்கரி, சிற்றி பேக்கரி, மாத் தறை பேக்கரி என குடாநாடெங்கும் பரவியிருந்த சிங்கள வியாபா ரிகள் வெளியேறிய போது பேக்கரித் தொழிலில் பெரும் வெற்றிடம் ஏற்பட்டது.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் சிங்களவர்கள் கைவிட்டுப் போன பேக்கரிகளில் பாண் போட முயன்றார்கள். பாண் ஒரு நாள் எரிந்தபடி போறணையால் வந்தது. இன்னு மோர் நாள் பாண் முழு றொட்டியாக வந்தது. இவ்வாறு பாணின் விசித்திரங்கள் தொடர்ந்தன. ஆனாலும் தோமஸ் அல்வா எடிசன் மின்சார பல்பைக் கண்டு பிடிக்க 600 முறை தோற்று வென்றது போல தாமும் ஓர் நாள் வெல்வோமென விடாப் பிடியாகவே பாண் உற்பத்தியில் ஈடுபட்டார்கள். வென்றார்கள். தற்போது சிங்களவரே வியக்குமளவுக்கு பாண், பணிஸ் தயாரிக்கி றார்கள்.

போர்க் காலத்தில் உணவுத் தட்டுப்பாடு காரணமாக பேக்கரி களை நம்பி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் நகர்ப்புற, புறநகரப் புற மக்களுக்கு ஏற்பட்டது. இதனால், பேக்கரி வாசலில் பாணுக்காக கியூவில் நின்று வாங்க வேண்டியும் ஏற்பட்டது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பங்கீட்டு அடிப்படையில் பாண் விற்கப்பட்டதும் நிகழ்ந்தது.

1983 ஆம் ஆண்டைத் தொடர்ந்து திருகோணமலை மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த போது நலன்புரி நிலையங்கள் பல அமைக்கப்பட்டன. இதில் இருந்த மக்களுக்கு திடீர் உணவாக கைகொடுத்தது பாண்தான். இடம்பெயரும் சகல மக்களினதும் ஆபத்தாந்தவனாக பாண்தான் எப்போதும் இருந்தது. ஊரடங்குச் சட்டம் விலக்கப்படாத இருள் நேரத்தில் பாணுக்குச் சென்று துன்பங்களைச் சந்தித்தவர்களும் இருந்தார்கள். உயிரிழந் தோரும் பலர் இருந்தார்கள்.

1987 அக்டோபர் 10 இல் இந்தியப் படைகள் - விடுதலைப் புலிகள் போரின் போதெல்லாம் பேக்கரி வியாபாரம் தான் பட்டினி நிலையைப் பெருமளவு குறைத்தது. இந்தியப் படைகளுடன் புலிகளது போர் தீவிரம் பெற்றுத் தணிந்த காலத்தில் அதிகாலை வேளையில் பாணுக்கு சென்று துன்பங்களைச் சந்தித்தார்களா. ஒருவர் நாலைந்து இறாத்தல் பாண் கொண்டு சென்றால் எல்.ரீ.ரீ. க்கா கொண்டு போகிறாய் என அடிவாங்கியோரும் இருந்தார்கள்.

பாணைப் பெரிதும் விரும்பி உண்ணாத யாழ்ப்பாண மக்கள் போர்க்காலத்தில் பாணை ஒரு நேர உணவாக உண்ணப் பழகினார்கள். இப்பழக்கம் நாளடைவில் நிரந்தரமாகவே நிலை பெற்று விட்டது. அது போல ரெயிலர் வேலை எனப்பட்ட வேலை யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களால் தான் பெருமளவில் செய்யப்பட்டது. விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழர்களே ரெயிலர்களாக இருந்தார்கள். 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாண முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டர்கள். இவர்களின் வெளி யேற்றத்தின் போது ரெயிலர் தொழிலில் பெரியதொரு இடைவெளி ஏற்பட்டது. காலப்போக்கில் யாழ்ப்பாணத்தவர்கள் ரெயிலர் தொழி லைக் கற்றுக் கைதேர்ந்தவர்களாக மாறினார்கள். சிறப்புத் தேர்ச்சி யுள்ள தொழிலாளர் வெளியேற்றமென்பது நிரப்பப்பட்டது.

1983 ஜூலையில் உள்நாட்டு யுத்தம் தீவிர வடிவம் எடுக்க முன்பு தென்னிந்தியாவிற்கு கடல் வழியாக கள்ளக் கடத்தல் வியாபாரம் நடைபெற்று வந்தது. யாழ்குடாநாட்டின் கரையோரக் கிராமங்கள் பல இத்தொழிலுடன் தொடர்புடைய சிலரைக் கொண்டிருந்தன. வல்வெட்டித்துறையில் பலர் கடல் வழிக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு செல்வமீட்டியதால் வல்வெட்டித்துறை பிரபலமாகத் திகழ்ந் தது. கள்ளக் கடத்தல் மூலம் தென்னிந்தியாவிலிருந்து உடு புடைவை கள், சில்வர், அலுமினிய, பித்தளைப் பாத்திரங்கள் வந்தன. அவற்றை விற்பதற்கென முகவர்கள் இருந்தார்கள். யுத்தத்தின் தீவிரம் பெருமளவு இல்லாத அக்காலத்தில் கடற்படையும் விரிவு பெற்றிருக்கவில்லை. இதனால் கடற்படை, சுங்கத் திணைக்கள அதிகாரிகளிற்கு தண்ணிகாட்டி பெருமளவு இந்திய மீனவப் படகு கள் போல பாசாங்கு செய்து படகுகள் பயணம் செய்தன. ஆயினும் அவ்வப்போது சில படகுகள் பிடிபட்டன.

கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட படகுகள்தான் விடுதலைப் போராட் டத்தின் ஆரம்ப காலங்களில் தென்னிந்தியப் பயணத்திற்கு உதவி யதாகவும் கூறப்படுகின்றது. காலப்போக்கில் இந்த இயக்கங் கள் தமக்கெனப் படகுகளையும் படகோட்டிகளையும் வைத்துக்கொண் டன. அக்கரைக்கு வண்டி போகிறது எனக் குறியீட்டுப் பெயரால் அழைத்தார்கள்

உள்நாட்டு யுத்தத்தின் விரிவு காரணமாக அரச கடற்படை பலம் பொருந்தியதாக வர இந்தக் கள்ளக் கடத்தல் வியாபாரமும் நின்று போனது. 1983 ஜூலை மாதத்திற்கு முன்னர் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரம் வரை பயணிகள் கப்பல் சேவை நடந்தது. யுத்தத்தின் வீரியம் இந்த வியாபாரத்தையும் இல்லாமல் செய்து விட்டது.

இவற்றுக்குப் பதிலாக ஒரு சிலர் கொழும்பில் விமானமேறி

தென்னிந்தியா சென்று பொருட்களை எடுத்து வந்து வியாபாரம் செய்தனர். 1983 ஜுலைக்கு முன்னர் பலாலி விமான நிலையத்தில் இருந்து தென்னிந்தியாவின் சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களின் விமான நிலையங்களுக்குச் சென்றார்கள். அங்கிருந்து பொருட்களை எடுத்து வந்து வியாபாரம் செய்தார்கள். அத்தொழிலும் நின்று போனது.

யாழ்நகரிலும், பிற நகரங்களிலும் சில கிராமப்புறங்களிலும் சினிமாத் தியேட்டர் தொழில் இலாபகரமானதாக இருந்தது. யுத்தத் தின் வரவும், தொலைக்காட்சிப் பெட்டியின் பரவலாக்க மும் சினிமாத் தியேட்டர்களின் செல்வாக்கை வேகமாக மங்கச்செய்துவிட்டன. பல தியேட்டர்கள் தாக்கப்பட்டு கற்குவியல்களாகின.

கணினியின் வரவும் பரவலாக்கமும் இன்று உள்ளது. ஆனால், யாழ்நகரில் விக்ரர் அன்சன்ஸ், நியுவிக்ரேர் ஆகிய இலத் திரனியல் வியாபார நிலையங்களில் கணினி விளையாட்டு நடத்தப்பட்டது. இவ்வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தமது நுண்ணறிவைப் பயன்படுத்தி கணினியில் புதுநுட்பங்களை அறிமுகம் செய்து வரவேற்பைப் பெற்றார்கள். போரின் உக்கிரம் இவ்வியாபார நிலையங்களின் உரிமையாளர்களை நாட்டைவிட்டு வெளியேறச்செய்தது. போரினால் இவர்கள் வெளியேறாது இருந்தி ருந்தால் யாழ்ப்பாணத்தில் கணினி தகவல் தொழிநுட்ப யுகமொன்று கட்டி எழுப்பப்பட்டிருக்கும்.

போரின்வரவால்தென்னிந்தியாவிற்கு படகுமூலம்அகதிகளாகச் செல்லும் நிலை உருவாகியது. இதனால் அகதிகளாகப் போக விரும்புபவர்களை வள்ளத்தில் ஏற்றிச் சென்று தென்னிந்தியக் கரைகளில் விட்டுவரும் புதிய தொழிலொன்றும் 1983 களின் பின்பு எழுந்தது. 1990 களின் முற்பகுதியிலும் இந்தத்தொழில் தொடர்ந்தது. உயிராபத்துமிக்க இத்தொழில் பின்பொரு காலம் நின்று போனது.

இது போல 1996 ஆம் ஆண்டின் பின் பகுதி முதல் வன்னிப் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் படகு மூலம் ஆட்களைக் கொண்டு செல்லும் வியாபாரமொன்றும் சில காலம் நடந்தது. 1986 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விமானக் குண்டு வீச்சு ஆரம்பித்த போது பங்கர் எனப்பட்ட பதுங்குகுழி வெட்டி மரக்குற்றிகளை அடுக்கிக் கொடுக்கும் ஒப்பந்தத் தொழிலொன்றும் நடந்தது.

1990 ஜூனில் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த போது வங்கிகள் திரவப் பணக் கையிருப்பு இன்றித் தவித்தன. அக்காலத்தில் காசோலை மூலம் சம்பளம் பெறும் அரச ஊழியர்கள், தனியார் துறையினர் காசோலையை மாற்றுவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள். அக்காலத்தில் காசோலைகளை கொமிசன் வாங்கி மாற்றிக் கொடுக்கும். சில வணிகர்கள் முளைத்தனர். அரச காசோலை என்றால் உடயே மாற்றிக் கொடுத்தார்கள்.

ஆயிரம் ரூபாவிற்கு ஐம்பது ரூபா கொமிசன் வாங்கினார்கள். பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் காசோலை மாற்றிக் கொடுக்கும் நிறுவனங்களாகின. தம்மிடம் குறித்தளவு பொருட்களை வாங்கியோருக்கு மட்டுமே காசோலையை மாற்றிக் கொடுத்தார்கள். இதே போல தனியார் துறையின் பெரிய முதலாளிகளும் தமது வியாபார நிலையத்தில் குறிப்பிட்டளவு தொகை பொருட்களை வாங்குவோருக்கு மட்டும் காசோலைக்குரிய பணத்தைக் கொடுத் தார்கள். வங்கிகளில் காசோலையை வைப்பிலிட்ட ஒருவருக்கு அத்தொகையினைப் பகுதி பகுதியாக வழங்கித் தீர்த்தன. வெளி மாவட்டக் காசோலைகள் வைப்பிலிடப்பட்டால் அவை தீர்வையாகி வர சில மாதங்கள் பிடித்தது.

1990 ஜூனில் யுத்தம் வெடித்த போது வடபகுதி மீது பொருளா தாரத் தடைவிதிக்கப்பட்டது. இதனால் எரிபொருட்கள் எடுத்து வரப்படுவது தடைப்படுத்தப்பட்டது. மண்ணெண்ணை மட்டும் மட்டுப்

படுத்தப்பட்டளவில் எடுத்து வர அனுமதிக்கப்பட்டது. பெற்றோல், டீசலைப் பற்றிய கதைக்கே இடமில்லை. மண்ணெண்ணை வவுனியாவிலிருந்து கடத்தி வரப்பட்டது.

மண்ணெண்ணை வியாபாரம் மிகவும் வெற்றிகரமாக இலாபமீட்டக்கூடிய தொழிலாக அமைந்தது. ஏனெனில், மின் சாரம் இல்லாத யாழ்ப்பாணத்தில் சர்வரோக நிவாரணியாக மண்ணெண்ணை அமைந்தது. நாளுக்கொரு விலை விற்ற மண்ணெண்ணை இலாபகரமான தொழிலாக அமைந்தது.

அரியாலையின் ஒரு பிரதேசம் வசாவிளானில் ஒரு பிரதேசம் என்பவை மட்டும் மண்ணெண்ணை விற்பவர்களை பெருமளவுக்கு கொண்டிருந்தன. இந்த வியாபாரம் குறித்த ஒரு சாதிக்குரிய தொழில் ஒன்றாகமட்டுமேயிருந்தது. யுத்தத்தின் வரவால் மண் ணெண்ணையின் பாவனை பல மடங்கு அதிகரித்தது. இதனால், சாதிபேதமின்றி அதிக இலாபமீட்டும் நோக்குடன் இந்த மண்ணெண்ணெய் வியாபாரம் கொடி கட்டிப் பறந்தது.

கொழும்பில் பாதுகாப்பமைச்சின் அனுமதி (M.O.D. Clearence) பெற்று பல திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புகள் கப்பல் மூலமாக மண்ணெண்ணையை எடுத்து வர ஆரம்பித்தன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் மாணவர் அடையாள அட்டையில் குறிப்பு ஒன்றை வரைந்து மண்ணெண்ணெயை விநியோகித்தது. 1990 களில் மண்ணெண்ணையை விற்று இலாபமீட்டிய பணத்தை வைத்துக் கொண்டு பின்னாளில் பெரியதொழிலதிபர்களாகிய யாழ்நகர வணிகர்கள் சிலர் இன்றுமுள்ளனர்

தெருவெங்கும் நடைபாதையில் ஒரு லீற்றர் கொக்கோ கோலா போத்தலினுள் மண்ணெண்ணெய் ஊற்றி வைக்கப்பட்டிருக்கும். மண்ணெண்ணெய்க்கென இறாக்கைகளும் அடிக்கப்பட்டிருந்தன.

உயர் நிலை பதவியிலுள்ளோருக்கு அரசாங்கத்தால் பெற்றோல் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்பட்டது. அதனை அவர்கள் லீற்றர் ஒன்று மூவாயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டன. அந்நாளில் தென்பகுதியில் நாற்பது ரூபா விற்ற பெற்றோலுக்கு இவ்வளவு மதிப்பு இருந்தது. அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன் போராடிய உயர்பதவி வகித்தவர்களுக்கு பெற்றோல் விற்பனை நல்ல வருவாயைத் தந்தது.

இதனால் பெற்றோலை விற்றுவிட்டு சைக்கிளில் வேலைக்குச் சென்றார்கள். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் விற்கப்பட்டது. போர்க் காலத்தில் வாகனங்கள் ஓடுவது பெரும் செலவாகிப் போக பாடசாலைக்கு மாணவர்களைச் சைக்கிளில் ஏற்றியிறக்கும் தொழிலும் உருவாகியது. இது புதியதொரு தொழில் வாய்ப்பாக உருவாகியது. போரின் வரவால் வாகனங்களை வைத்து உள்ளூர் வெளிமாவட்டங்களுக்குச் சேவைகளில் ஈடுபட்டவர்களின் வருவாய்களும் வீழ்ச்சி கண்டது.

போர்க் காலத்தில் 1990 ஆம் ஆண்டு ஜுன் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்குமான தரைவழிப் போக்குவரத்து இடம்பெற்றது. இடையிடையே சில தினங்களோ வாரங்களோ ஆனையிறவு ஊடான போக்குவரத்து தடைப்பட்டாலும் மற்றும்படி தரைவழிப் பாதை ஊடானபோக்குவரத்து இடம்பெற்றது. அத்துடன் புகையிரதப் பாதை ஊடான போக்கு வரத்தும் இடம்பெற்றது.

1990 ஜுன் 15 இல் 4 ஆம் ஈழப்போர் காரணமாகத் தரைப் பாதை தடைப்பட்டது. இப்பாதை மீண்டும் 2002 ஏப்ரல் 8 ஆம் திகதி தான் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் திறக்கப்பட்டது. 12 வருடங்களுக்கு மேலாக தரைப்பாதை மூடப்பட்டு அவலமுற்ற ஒரு பிரதேசம் உலகில் நானறிந்த வரையில் யாழ்ப்பாணக் குடாநாடாகத்தானிருக்கும்.

தரைப்பாதை மூடப்பட்டபோது லொறி ஊடாக இடம்பெற்ற வியாபாரங்கள் யாவும் தடைப்பட்டன. எரிபொருள் தடைப்பட்டதினால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் யாவுமே செயலிழந்தன. இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகள் யாவும் தடைப்பட்டன.

தனியார் போக்குவரத்துத் துறையும் மிகப்பெருமளவில் செயலிழந்தது. புகையிரதச் சேவைகளும் முற்றாகத் தடைப்பட்டன. இலங்கைப் புகையிரத் திணைக்களத்திற்கு அதிக வருவாயை ஈட்டித் தந்த வடபகுதிச் சேவைகள் 1990 ஜூனில் அநுராதபுரம் வரை நடைபெற்றன. சில மாதங்களின் பின் வவுனியா வரையில் நடைபெற்றன.

வவுனியாவிற்கு வடக்கேயான புகையிரதப் பாதைகள் விடுதலைப் புலிகளால் அகற்றப்பட்டன. சிலிப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் விடுதலைப் புலிகளால் போர்க் காப்பரண்களாக அமைக்கப்பட்டன.பெயர்க்கப்பட்ட தண்டவாளங்கள் வடக்கின் சகல பிரதேசங்களிலும் விரவிக் கிடந்தன. இதேபோல 1987 அக்டோபர் 10 இந்தியப் படைகளுக்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தம் செய்யத் தொடங்கிய போது தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. ஆனால், 1988 ஜனவரியில் இந்தியப் படைகளால் புகையிரதப் பாதை அசுர வேகத்தில் போட்டு முடிக்கப்பட்டன.

1990 ஜூனில் புகையிரதச் சேவையின் நிறுத்தத்தால் புகையிரதம் ஊடாக தென்பகுதிக்குப் பொருட்களை எடுத்துச் சென்று வந்த அனைத்து வியாபாரங்களும் தடைப்பட்டன. யுத்தத் தின் ஆரம்பத்தினால் பதுக்கல் வியாபாரமொன்று வேகமாகத் தலையெடுத்தது. ஏழெட்டு ரூபாக்கள் விற்ற சவர்க்காரங்களின் விலை எழுபது ரூபாவாக எகிறிப் பாய்ந்தது. பத்து ரூபாவிற்கு விற்ற மண்ணெண்ணெய் நாற்பது,ஐம்பது, இருநூறு ரூபா வரை ஏற்றம் கண்டது. அனைத்துப் பொருட்களும் இதே வேகத்தில் உச்சம்

கண்டன. அதேநேரம் உள்ளூரில் உற்பத்தியாகிய மரக்கறி வகைகள், பழ வகைகள் விற்க விலையின்றி அடிமாட்டு விலைகளில் விற்பனையாகின.

சுண்ணக்கற் பாறை நீரூற்று கிணற்று நீரை நம்பி தோட்டம் செய்து வாழ்ந்த விவசாயி விளைந்த பொருட்களை விற்க வழி யின்றி வாடினான். வலிகாமம் வடக்கின் மக்களும், தீவகப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்து வருவாயின்றி வாடினார்கள்.

அப்பிரதேச உற்பத்திகள், வளங்கள் யாவுமே வருமானம் உழைக்க வழியின்றி வீணாகின. யுத்தத்தின் சத்தங்கள் எங்கும் பரவ வியாபார நிலையங்கள் விற்கப் பொருள்களின்றி தத்தளித்தன. பலநோக்குகூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தி யாவசியப் பொருட்களை, நிவாரணப் பொருட்களை விநியோகிக் கும் நிலையங்களாகின. உழைத்துச் சாப்பிட்ட மக்கள் நிவாரணப் பொருட்களை எதிர் பார்த்து வாழும் நிலையை நோக்கித் தள்ளப் பட்டன.

அரசாங்கத்தின் அமைச்சரவையிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு என்று ஒன்று உருவாகியது. 2005 ஆம் ஆண்டின் பின்பாக மீள்குடியேற்ற அமைச்சு எனவும் ஒன்று உருவாகியது. கச்சேரி எனப்பட்ட மாவட்டச் செயலகங்களிலும் புனர்வாழ்வுப் பிரிவு தனி யான பிரிவாகியது.

நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கென அட்டை வழங்கும் முறை உருவாகியது. நிவாரணப் பொருள் விநியோகம் மிக நீண்ட காலத்திற்கு நடந்தது. லொறிப் போக்குவரத்து ஊடான வியாபாரங்கள் 1991 அக்டோபர் வரை கேரதீவு – சங்குப்பிட்டிதுறை ஊடாக வவுனியா வரை நடைபெற்றது. பாதுகாப்பச்சம் காரணமாக இரவு நேரத்தில் மட்டும் இந்தப் பொருள் வரவு இடம் பெற்றது.

1991 அக்டோபரில் வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக கேரதீவுப் பாதை மூடப்பட்டது. அப்போது, இயக்கச்சி கோவில் வயல் ஊடாக கொம்படி ஊரியான் பாதைப் போக்குவரத்து நடைபெற்றது. இங்கு மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவை தான் போக்கு வரத்திற்கான பிரதான வாகனங்களாக இருந்தன. நிலவு காலம் பார்த்தே இரவில் பெரும்பாலும் பொருட்களை எடுத்துவந்து வியாபாரம் நடைபெற்றது. ஜப்பானிய தயாரிப்பு MD 90 மோட்டார் சைக்கிள்களுக்கு மிகவும் மதிப்புக் கிடைத்தது. வவுனியா நொச்சி மோட்டை ஊடாக வடக்கிற்கு வெளியேயான போக்குவரத்து யுத்தம் காரணமாக பல நாட்கள் தடைப்படும் போது யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலைகள் ஏற்றம் கண்டன. பொருட்கள் அடுத்தடுத்து தொடர்ச்சியாக எடுத்து வரப்பட்டால் வவுனியா நகரப் பிரதேச விலைக்கே வாங்கக் கூடியதாக இருந்தது.

வடக்கில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நகரங்கள் வியாபார ரீதியில் பின்னடைந்த போது விநியோக மையமாக விளங்கிய வவுனியா கிடுகிடுவென வளர்ந்தது. வடக்கை விட்டு வெளியேறிய குடும்பங்கள் கொழும் பிற்கு அடுத்ததாக வவுனியாவில் விரும்பிக் குடியேற வவுனியா மலர்ச்சியடைந்தது.

1990 ஜூன் மாதத்திற்குப் பின்பான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளும் வருவாய்த்துறை எனும் அமைப்பை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். சேரன், சோழன் என்ற பெயர்களில் தமது வணிக நிலையங்களை அமைத்தார்கள். மொத்த, சில்லறை வியாபாரங்கள் பெருமளவில் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

1994 ஆகஸ்ட் மாதம் யாழ்.நகர கன்னாதிட்டியில் தமிழீழ வைப் பகம் எனும் பெயரில் வங்கி அமைப்பு ஒன்றையும் உருவாக்கினார் கள். 1993 மே மாதத்தில் பச்சிலைப்பள்ளி கிளாலிப் பிரதேசம்

ஊடாக பூநகரி ஆலங்கேணி பிரதேசத்திற்குப் படகுப் போக்குவரத்து நடைபெற ஆரம்பித்தது. அப்போது கிளாலிப் படகுத்துறை ஊடான வியாபார முறைமையொன்று உருவாகியது. ஜப்பானிய MD 90 மோட்டார் சைக்கிளின் பின் சீற்றில் இரண்டு பேர் இருக்கக் கூடியதாக அமைக்கப்பட்டது. இரவு நடுநிசி நேரம் இரு வரை ஏற்றி ஒருவர் ஓடி பெரும் பாரம் உள்ள பிரயாணப் பைகளைச் சுமந்தவாறு ஓடினார்கள்.

கிளாலி படகுப் பாதை ஒழுங்காக ஓடினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொருட்களின் விலைகளில் பெருமளவு ஏற்றம் இருக்காது. கடல் நீரேரியில் யுத்தம் நடந்தால் போக்குவரத்துத்தடை வந்து விடும். யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலைகள் மளமளவென உயரும். ரோச் லைற் பற்றறி ஒரு சோடி ஒரு சமயம் நாறூறு ரூபாவிற்கு வாங்கிய அனுபவமும் எனக்கு உள்ளது.

கிளாலிப் பாதை தடைப்பட்டால் பொருட்களை பதுக் கும் வியாபா ரிகள் கைவரிசையைக் காட்ட,பொது மக்கள் திண றினார்கள். 1990 ஜூனுடன் சீமெந்து, கட்டிடப் பொருட்களின் வரவு தடைப்பட்டது. இதனால் கட்டுமான ஒப்பந்தக்காரர்கள் தொழிலிழந்து போனார்கள். தச்சுத் தொழில்களும் செயலிழந்து போனது. இத்தொழிலுக்குப் பொருட்களை வழங்கிய வணிக நிறுவனங்களும் வியாபார ரீதியாக நிர்க்கதிக்குள்ளாயின.

இத் தொழில்களில் ஈடுபட்டு அன்றாடம் உழைத்த தொழிலா ளர்கள் மாற்றுத் தொழில்களைத் தேடிச் சென்றார்கள். பொருட் களால் நிரம்பி வழிந்த பலசரக்குக் கடைகள் வற்றி வரளும் நிலை உருவாகியது. மின்சாரத்தை நம்பி முதலிட்ட வியாபாரங்கள் பல செயலிழந்தன. மின் பிறப்பாக்கியை நம்பி தொழில் புரிந்தோர் அதிக விலைக்கு தமது சேவைகளை வழங்க வேண்டி வந்தது. பொருட்களை அதிக விலைக்கு விற்க நேரிட்டது. எரிவாயு [காஸ்

Gas] யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவது முற்றாகத் தடுக்கப்பட்டது. இதனை நம்பிய வியாபாரங்கள் செயலிழந்து போயின.

மோட்டார் சைக்கிள், வாகனங்கள், இலத்திரனியல் பொருட்கள் வடபகுதிக்கு எடுத்து வருவது தடைப்பட்டது. இவற்றை நம்பிய வியாபார நிறுவனங்களும் இயங்க முடியாத நிலையை அடைந்தன. 1990 ஜூன் மாதத்தின் பின்னரான யுத்த காலத்தில்தான் ஏராளமான வணிகர்கள் தென்பகுதி நோக்கியும் புலம்பெயர்ந்தார்கள். 1983 ஜூலைக்கும் 1990 ஜூனுக்குமிடையில் வணிகர்களின் புலம்பெயர்வுகள் நடைபெற்றன. 1990 ஜூனுக்குப் பின்னர் வணிகர் களின் புலம்பெயர்வு மேலை நாடுகளிலும் யாழ்ப்பாண வணிகர் குழாமொன்றை உருவாக்கியது. பலம் மிக்கதாக வளர்ந்த இவ் வணிகர் குழாமில் சிலர் தமது கடைகளுக்கு அந்நாடுகளில் யாழ்ப்பாணம் – Jaffna [ஜவ்னா] போன்ற பெயர்களையும் இட்டார்கள்.

1990 அக்டோபர் மாதத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் பலம் மிக்க முஸ்லிம் வணிகர் குழாமும் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டார்கள் இவற்றில் யாழ் நகர வணிகச் சுற்றா டலில் வணிகர் குழாம் இடைவெளி ஒன்று உருவாகியது.அதே வேளை, போர்க்காலத்தில் நாளுக்கொரு விலை விற்ற மண் ணெண்ணையால் புதிய வணிகர் குழாம் ஒன்றும் புதுப் பணக்கார வர்க்கமும் உருவாகின.

போர்க் காலச் சூழல் நீடித்து 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் றிவிரச நடவடிக்கையை அரசாங்கப் படைகள் தீவிரப்படுத்தின. 1995 செப்டெம்பரில் இடிமுழக்கம் இராணுவ சூரியகதிர் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

போர் காரணமாக வியாபார விலைகள் தளம்பல் ஏற்பட்ட காரண மாக விலைகளும் உயர்ந்தன. 1995 இல் தென்மராட்சி, வடமராட்சி

பிரதேசம் நோக்கிய இடம்பெயர்வுகள் ஏற்பட்டபோது யாழ்நகரம், மானிப்பாய், அச்சுவேலி, பண்டத்தரிப்பு, சுண்ணாகம், மருதனார்மடம் போன்ற நகரங்கள் உள்ள பிரதேசங்கள் இடம்பெயர்ந்தது. தென்மராட்சிப் பிரதேசத்திலும் வடமராட்சி வன்னிப் பிரதேசத்திலும் வியாபார நிலையங்கள் அமையப் பெற்றது.

பலாலி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, தீவகம் போல தமது இடப்பெயர்வு வாழ்க்கையும் நிலைக்கப் போவதாக மக் கள் எண்ணினார்கள். மிகவும் மனச் சோர்வடைந்தார்கள். வியாபாரி கள் தமது வணிக நிலையங்களை இடம்பெயர்ந்து சென்ற இடங்க ளிலிருந்து அமைத்தார்கள்.

பெரிய யாழ்ப்பாணப் பிரதேச இடம்பெயர்ந்த வியாபரிகளில் கணிசமான ஒரு பகுதியினர் வன்னிப் பிரதேசத்தில் தமது கடைகளை அமைத்தார்கள். அதே பெயர்களை வணிக நிலையங்களுக்கு இட் டார்கள்.

வவுனியாவை நோக்கியும் தென்னிலங்கையை நோக்கியும் ஒரு பகுதி வியாபாரிகள் இடம்பெயர்ந்தார்கள். வவுனியா நகரப் பிரதேசத்தில் வியாபார வரி இன்னமும் ஏற்பட்டது.

வன்னிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வியாபார நிலையங்களில் பல 2002 ஏப்ரல் 08 இல் தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்பான மாதம் வரையில் இயங்கின.

1996 மே 19 ஆம் நாளன்று தென்மராட்சி நோக்கி அரச படை கள் பாரிய மோதல்கள் இன்றி முன்னேறினார்கள் பின்னான சில நாட்களில் வடமராட்சி பச்சிலைப்பள்ளி. வரையான முழுக் குடாநா டெங்கும் அரச படைகள் வசமாகின. யாழ்ப்பாண வணிகர்கள் கிளாலி கடல் நீரேரியூடாக வன்னிப் பகுதி நாட்டின் தென் பகுதி உடனான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது. வெளியிடங்களுடன் போக்கு

வரத்துச் செய்யாத நிலையில் சில வாரங்கள் கழிந்தன.

கப்பல்கள், விமானங்கள் மூலமாக யாழ்ப்பாண வியாபாரிகள் தென்பகுதியுடனான வியாபாரத்தை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள். பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று கப்பல் மூலமாகப் பொருட்களைத் தருவித்தார்கள். யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்த கட்டிடப் பொருட்கள், எரிபொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள், வாகனங்கள் யாவுமே கப்பல் மூலமே எடுத்து வரப் பட்டன.

விமானம் ஒன்றைமுழுதாகவே வாடகைக்கமர்த்தி பொருட்கள் எடுத்து வரப்பட்டன. 1990 இன் ஜுலை நடுப்பகுதியில் ஒரு வெற்றிலை பத்து ரூபா வரை விலைப்பட்டது.

இதனால் வெற்றிலையை மட்டும் எடுத்து வந்த வியாபாரிகளும் இருந்தார்கள்

ஆறு வருடங்களாக தடைப்பட்டிருந்த பொருட்கள் யாவுமே வரத் தொடங்கின. மோட்டார் சைக்கிள் வியாபாரம் சக்கை போடு போட்டது. எரிபொருள் நிலையங்கள் மதுபான விற்பனை நிலையங்கள் மெல்ல மெல்லத் திறக்கப்பட்டன. கப்பலில் எடுத்து வரப்பட்ட எரிபொருட்கள் நாலைந்து தினங்களில் நிரப்பு நிலையங்களில் முடிந்து விடும். பின்னர் வீதிக்கு வீதி போத்தல்களில் கறுப்பு சந்தை தாராளமாக விற்ற மாயமும் நடந்து 1996 ஆம், ஆண்டு மே, ஜுன் மாதத்தில் ச.தோ. ச (C W E ) எனப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் உணவு பொருட்களுக்காக கால்கடுக்கத் தவமிருக்க நேரிட்டது.

இலங்கை தொலைத் தொடர்பு திணைக்களம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் என்ற பெயரில் யாழ் பண்ணையில் திறக்கப்பட்டது. செல்வாக்குள்ள சில நபர்கள் வணிகர்கள் கேபிள் இணைப்பைப் பெற்றார்கள். ஒரு சில நூறு இணைப்புக்களின் மூலம் தென்பகுதி

நாடுகளிலிருந்து பல இலட்சம் பேருடன் தொடர்பு கொள்ள வேண்டி வந்தது.

ரெலிபோன் எடுக்க நிமிடக் கணக்கில் காசு வாங்கப்பட்டது. உள்வரும் அழைப்புக்கு நிமிடத்திற்கு 3 ரூபா, 4ரூபா, 5 ரூபா என கட்டணம்வசூலிக்கப்பட்து.உள்வரும்அழைப்பில்பலமணித்தியாலம் கதைத்தால் செலவில்லாமல் காசு மழையாகப் பொழிந்தது. கேபிள் இணைப்பு இல்லாத இடங்களுக்கு மோட்டோறோலா எனும் கம்பனி அன்ரனா மூலம் இணைப்பை வழங்கியது.

ரெலிபோனின் வரவு புதுப் பணக்கார வர்க்கமொன்றை வேகமாக உருவாக்கியது. வீடுகள் கடைகள் பல கொம்யூனிக்கேசனாக உருவாகின. இரவு பகலாகத் தொலைபேசி மணிகள் ஒலித் துக் கொண்டே இருந்தன. காசு பையில் ஜொலித்துக் கொண்டேயி ருந்தது. 2002 ஏப்ரல் மாதத்தின் பின்பான காலப் பகுதியில் டயலொக் கைத்தொலைபேசி நிறுவனத்தின் வரவுடனும் விரிவாக்கத்துடனும் கொம்யூனிக்கேசன் யுகம் சுருண்டு கப்பல் மூலமாக பொருட்கள் எடுத்து வரப்பட ஆரம்பித்த போது அரச உயர் மட்டத்துடன் செல்வாக்குள்ள வணிகர்கள் சிலர் அதிக செல்வம் ஈட்டமுடிந்தது.

கப்பலில் பொருள் ஒரு முறை எடுத்து வரப்பட்டு அடுத்த முறை எடுத்து வரப்பட தாமதித்தால் கையிருப்பிலுள்ள பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயரும். கையிருப்பு வைத்திருந்த வியாபாரிகள் அதிக இலாபம் ஈட்டினார்கள். ஒரே பொருளை பலர் ஒரே நேரத்தில் எடுத்து வந்தால் கொழும்பு விலையை விட குறைந்த விலையில் யாழ்ப்பாணத்தில் விற்ற வினோதமும் நடந்தது.

கப்பலில் உணவுப் பொருட்களைக் கீழேயும் சாராய வகைகளை மேலேயும் வைத்து சாராயத்தை முதலில் இறக்கியதை பூராயமாக புதினப்பத்திரிகைகள் போட்டதும் நடந்தது. கப்பல், பிளேனில்

பொருள்களை, அங்கேயும் இங்கேயுமாக எடுத்து வரும் வியாபாரிகள் குழாமொன்றும் உருவாகியது.

ரெலிபோன் கதைத்து வெளிநாட்டு உறவுகளிடம் காசு வாங்க வவுனியா, கொழும்பு போன நிலமை மாறியது. யாழ்ப்பா ணத்திலேயே அது நடந்தது. மின்சாரம் மெல்ல மெல்ல வரத் தொடங்கியது. அதன் மூலமான வியாபாரங்களும் உருவாகின. அரச பஸ் சேவை, தனியார் பஸ் சேவைகள் மீளவும் இயங்கத் தொடங்கின. இப்படியே நிலமைபோய்க் கொண்டிருக்க 2002 ஏப்ரல் 08 ஆம் நாளன்று முகமாலை ஊடாகத் தரைவழிப் போக்குவரத்து IC R C வழித்துணையுடன் ஆரம்பித்தது.

தரைப்பாதை பகலில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட நேர அளவில் ஆரம்பித்தது. லொறி,வான் மூலமாக பொருட்கள் தென்பகுதியி லிருந்து தாராளமாகவே எடுத்து வரப்பட ஆரம்பித்தன. யாழ் கொழும்பு நேரடி பஸ் சேவை விடுதலைப் புலிகளின் அனுமதிக்கப் பட்ட ஒரு சிலரால் மட்டும் நடத்தப்பட்டது.

டொல்பின் ரக வாகனங்ள் பல நூறு யாழ் கொழும்பு நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கான போக்குவரத்தை ஆரம்பித்தன. இது ஒரு தனியார் போக்குவரத்துத் துறையை உருவாக்கியது. தரைப் பாதை திறப்பால் பொருட்கள் தாராளமாக எடுத்து வரப்பட ஆரம்பித்த போது கப்பல் ஒன்று வந்து அடுத்த கப்பல் வர இடைவெளி அதிகமாகிய போது அதிக இலாபம் உழைத்த நிலை ஏற்பட்டது. எரிபொருட்களும் தரைப்பாதையால் எடுத்து வரப்பட தட்டுப்பாடற்ற நிலை உருவாகியது. 2002 ஏப்ரலின் பின் கட்டிட நிர்மாணத் தொழில் உச்சமாக வளர்ந்தது.

தென்பகுதி வியாபாரிகளும் யாழ்ப்பாணம் வந்து வீதிக்கு வீதி பொருட்களை விற்றனர். வன்னிப் பகுதியில் கடை வைத்திருந்த

வியாபாரிகள் மீள யாழ்ப்பாணம் திரும்பினார்கள். 2002, 2003, 2004 ஜுலை ஆகஸ்ட் காலப் பகுதியில் புலம் பெயர் உறவுகள் பெருமளவு வருகை தந்தனர். கட்டட நிர்மாணத் தொழில் புடவைக் கடை, நகைக் கடை, ஐஸ்கிறீம் கடை, வாடகை வாகன ஒட்டு மொத்த வியாபாரங் கள் யாவும் களை கட்டின.

தாயகம் பிரிந்த ஏக்கத்தைப் போக்க தாராளமாகவே பணத்தை அள்ளியிறைக்க வியாபாரக் காட்டிலும் பெருமழை பொழிந்தது. 2005 ஆம் ஆண்டைத் தொடர்ந்து யுத்த மேகங்கள் கருக்கட்டத் தொடங்க வியாபாரங்கள் சோபையிழக்கத் தொடங்கின.

2006 ஆம் ஆண்டு 11 வெள்ளிக்கிழமையன்று மாலையில் முகமாலை சோதனைச் சாவடியில் வெடித்த துப்பாக்கி வேட்டு இறுதி ஈழப் போருக்கு நாட்டை அழைத்துச் சென்றது. தரைப்பாதையும் தடைப்பட்டது . அந்நாளின் பின்பான நாட்களில் தொடர் ஊரடங்கு சட்டங்களால் யாழ்ப்பாண மக்கள் துன்பப்பட்டனர். வியாபார நிலையங்களிலுள்ள பொருட்கள் வேகமாக விற்றுத் தீர்ந்ததுடன் எதிர்காலத் தேவை கருதிக் கையிருப்பாகவும் வைத்திருக்கப்பட்டது.

கொடிய பஞ்சமொன்று தலைவிரித்தாடியது. கப்பல், விமானப் பயணங்கள் மீளவும் தொடங்கியது. தனியார் துறையினர் முன்பைப் போல கப்பலிலும், விமானத்திலும் பொருட்களை தருவிக்க முடியாத அரசியல் சூட்சுமம் உருவாகியது. அரசாங்கம் எடுத்து வந்த பொருட்கள் பலநோக்குகூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நீண்டவரிசை முறையினூடாகப் பங்கிடப்பட்டது.

வீட்டுக்கு வீடு பங்கீட்டு அட்டை வழங்கி பிரதேச செயலகங்கள் எரிபொருள் அட்டையை வாகன உரிமையாளருக்கு வழங்கின.

அதில் குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் வழங்கப்பட்டன.

விவசாயிகள் பங்கீட்டு அட்டை வழங்கப்பட்டு அதன் மூலமாகவே இடுபொருட்கள் வழங்கப்பட்டன. தொழில்கள் பல செயலிழந்தன. ஆனால், பொருட்கள் வாங்க பல மணித்தியாலம் நாட்கள் தவமிருந்து வாங்க நேரிட்டது.

நாளாந்த உழைப்பாளிகள் ஒரு ரூபாவுக்கு வழியில்லாமல் ஒரு வேளை பல மணி நேரம் தூங்க நேரிட்டது.


வெளிமாவட்டங்களிலுள்ளோர் தபால் மூலமாக உணவுப் பொருட்களை பார்சலாக அனுப்பலாம் என அரசாங்கம் அறிவித்தது.

தமது யாழ்ப்பாண உறவுகளுக்கு பொருள்களை அனுப்பத் தொடங்கினார்கள். நிலையங்களில் தொடங்கினார்கள். வாரக் கணக்கில் தபாலில் அடைக்கப்பட்ட பொருட்கள் அழுகி வந்தடைந்த துன்பம் நிகழ்ந்தன. ஆனாலும் இதனால் பயன் பெற்ற குடும்பங்கள் பல இருந்தது.

நாளடைவில் கப்பல், விமானம் மூலம் பொருட்களை எடுத்து வர ஆரம்பிக்க வியாபாரம் சீராகியது. ஆனாலும், கட்டடட தொழில் முடங்கியது. வியாபாரிகளும் அதற்கேற்ப தம்மை இசைவாக்கிக் கொண்டார்கள்.

2009 மே மாதம் யுத்தம் நிறைவுற்ற மாதத்தின் பின்னர் தரைப்பாதை ஊடாகப் பொருட்கள் எடுத்து வரப்பட ஆரம்பித்தது. தரைப்பாதை தாராளமாக விரிவடைய நாட்டின் நாலா பாகங்களின் வியாபாரிகள் யாழ்ப்பாணம் நோக்கி படையெடுத்தார்கள். போர்க் காலம் இன்றிய காலத்தில் வியாபார மந்தமொன்றில் தாம் சிக்கித் தவிர்ப்பதாக வியாபாரிகள் குறைபடுகின்றார்கள்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஜுலை 21,28, ஓகஸ்ட் 04,11**



# வல்வெட்டித்துறையும் இந்திரவிழாவும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குப் புறமாகவுள்ள வடமராட்சிக் கரையோர நகராகிய வல்வெட்டித்துறையைக் கேள்விப்படாத தமிழ் பேசும் மக்கள் இருக்கமாட்டார்கள். உலக அரங்கிலும் மிக நீண்ட காலம் உச்சரிக்கப்பட்டு வரும்சிறு நகரப் பிரதேசம் இது.

பல நாட்டு பல மொழி பேசும் மக்களும் அறிந்து கொண்ட வல்வெட்டித்துறையில் நடைபெற்று வரும் இந்திர விழா வடபகுதியெங்கும் பிரசித்தமானது. யாழ்ப்பாணநினைவுகளின் பக்கங்களில் வல்வெட்டித் துறை மண்ணின் கீர்த்தியையும் பெருமைகளையும் பறைசாற்றும் இந்திர விழாவையும் பதிவு செய்யுங்கள் என்ற வாசக உள்ளங்களின் அவா இன்று நிறைவேறுகின்றது.

இன்றைய பத்தி மலரத் தேவையான தகவல்களை பல மணி நேரம் செலவிட்டு என்னுடன் பகிர்ந்த வல்வெட்டித் துறையின் வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்பிற்குரிய

ஐ.கா ரஞ்சனதாஸுக்கு மனமார்ந்த நன்றிகள்.

வல்லியத்தேவன் எனும் ஓர் குறுநில மன்னன் வெட்டிய துறை. வல்வெட்டித்துறை. வெல்வெட்துணி ஏற்றுமதியாகிய துறை வல்வெட்டித் துறை எனப். பல காரணப் பெயர்கள் இவ் ஊருக்கு உள்ளது.

இவர்கள் கப்பல் கட்டுவதிலும் கப்பலோட்டுவதிலும் 7 ஆம் நூற் றாண்டு முதல் விற்பன்னர்களாக இருந்துள்ளனர். பட்டம் விடும் கலையில் இவ் ஊரவர்கள் காட்டும் திறமை கால காலமாகப் பேசப் பட்டு வருகின்றது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் இலங்கை மக்களைப் பட்டினியிலிருந்து காக்க உயிரைத் துச்சமாக மதித்து பாய் மரக் கப்பல்களில் அரிசியைக் கொண்டு வந்தவர்கள் இங்குள்ள கப்பலோட்டிகள்.. ஆறுமுகநாவலருக்குச் சமமாக வாதம் புரிந்து பல கண்டன நூல்களையும். பத்திரிகைகளையும் எழுதிவெளியிட்ட இயற்றமிழ் போதகாசிரியர் புலவர் வைத்தியலிங்கம் பிள்ளை வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

பிரித்தானிய ஆட்சிக்கெதிராகப் போராடிய சிங்களத் தலைவர் களைக் காப்பாற்றி பாதுகாப்பாக தமிழகம் அனுப்பி வைத்தவர்க ளும் இவர்கள்தான். பல உலக சாதனைகளைப் படைத்து ஆங்கிலக் கால்வாயில் இறுதிச் சாதனை படைத்த ஆழிக்குமரன் ஆனந்தனும் இவ் ஊரவர்தான். உலகம் அறிந்த பல கல்விமான்களை உருவாக்கித் தந்ததும் இந்த மண்தான். திரை கடல் ஓடித் திரவியம் தேடிய ஊர்களிலெல்லாம் கோயில்கள் கட்டி சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்கள் இவர்கள்தான்.

போர்த்துக்கேய, பிரித்தானிய ஆட்சியாளர்கள் பட்டம், பதவி, நிவாரணம் என வீசிய சலுகைகளுக்கு விலை போகாமல் உறுதியாக நின்ற பல ஊரவர்களில் இவர்கள் முதன்மையானவர்கள். 1938 ஆம்

ஆண்டு வல்வெட்டித் துறையிலிருந்து இந்து சமுத்திரத்தின் ஊடாக ஆபத்தான அத்திலாந்திக் சமுத்திரமூடாக சுயெஸ் கால்வாய் ஊடாக அமெரிக்காவைச் சென்றடைந்த அன்னபூரணி என்ற பாய்மரக் கப்பலைச் செலுத்தியவர்களும் இவர்கள்தான்.

பல நூற்றுக் கணக்கான கப்பல்களைக் கட்டிக் கடல் எங்கும் கப்பல்களை ஓட்டிய சாதனைத் தமிழர்களும் இவர்கள்தான். இவ் ஊரவர்களின் நிபுணத்துவ ஆற்றல்களின் வரலாறுகள் இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன. வீர தீர சாகசங்களின் விளையாட்டுகளும் அளவற்றவை.

இந்திரவிழா எனும் பண்பாட்டுப் பெருவிழா எனும் பக்கம் நோக்கிப் பயணிப்போம். இந்து சமய மக்களால் பெருமளவு நிறைந்த பேரூர்தான் வல்வெட்டித்துறை. வடமராட்சி வடக்கு - பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகப் பிரிவின் நகரசபைப் பிரதேசம் இது. இந்துக்கோயில்களில் வருடாந்த மகோற்சவம் திருவிழா நடைபெற்று தீர்த்தத் திருவிழா கேணி தீர்த்தமாகவே நடைபெறுவது வழக்கம்.

வல்வெட்டித்துறை கடற்கரை சார்ந்த நகரப் பிரதேசம் என்பதால் இங்குள்ள கோயில்களின் தீர்த்தம் சமுத்திர தீர்த்தமாகவே நடை பெறுவது வழக்கமானது. ஆதி காலத்தில் திரை கடல ஓடித் திரவியம் தேடிய இந்த மக்களில் கப்பல்களைச் சொந்தமாக வைத்திருந்த மக்கள் நூற்றுக்கணக்கில் இருந்தார்கள்.

ஆடி மாதத்தில் சோழகக் கொண்டல் காற்று (South West Monsoon) எனப்படும் பருவப் பெயர்ச்சிக் காலம் ஆரம்பிக்கும் போது வல்வெட்டித்துறையிலிருந்து பாய் மரக் கப்பல்கள் தமது வணிகப் பயணத்தை ஆரம்பிக்கும் பர்மா (மியன்மார்) வின் ரங்கூன் நகரை நோக்கி கப்பல்கள் பயணத்தை ஆரம்பிக்கும். தென்கிழக்கு நாடுகள்

நோக்கியும் பயணத்தை ஆரம்பிக்கும். அங்கு சென்று விளையும் நெல்,அரிசி ஆகியவற்றைக் கப்பல்களில் மூடை மூடையாக ஏற்றுவார்கள். பாய்மரக் கப்பல்கள் இலங்கை நோக்கிப் பயணிக்கும் சித்திரை மாதத்தை நெருங்கும் காலத்தில் வாடைக் காற்றுக்கு (North East Monsoon) இலங்கை நோக்கி பயணத்தை ஆரம்பிப்பார்கள்.

சித்திரை மாதம் பிறக்கும் தருணத்தை ஒட்டிய நாட்களில் நூற்றுக்கணக்கான கப்பல்களும் வல்வெட்டித் துறைக்கு வந்து சேர்ந்து விடும். திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர்களெல்லாம் சித்திரை மாதத்தில் ஊரில் ஒன்று கூடி விடுவார்கள். வல்வெட்டித் துறை முத்துமாரி அம்மன் கோவிலின் தீர்த்தத்திருவிழா சித்திரா பௌர்ணமியில் நடைபெறும். வருடத்தின் 8 மாதங்களில் கடற் பயணங்களில் காலத்தைக் கழித்த கடலோடிகளும். அவர்களது குடும்பங்களும் முத்துமாரியம்மன் கோயிலின் திருவிழாவையும். ஏனைய கோயில்களின் திருவிழாக்களையும் தமது பெரு விழாவா கக் கொண்டாடுவார்கள்.

சேர்த்த செல்வத்தை மிகத் தாராளமாகவே செலவளிப்பார்கள். முத்துமாரியம்மன் கோயிலின் தீரத்தத் திருவிழாவிற்கு அம்மன் விக்கிரகம் ஊறணி தீர்த்தக் கடற்கரை நோக்கி பல்லாயிரம் பக்தர்களால் எடுத்துச் செல்லப்படும். அதையொட்டிய நிகழ்வுகள் மிகப் பிரமாண்டமானதாக நடைபெறும். இக்கலை விழாக்களே 1955 ஆம் ஆண்டு முதல் இந்திர விழா என அழைக்கப்பட்டு வருகின்றது.

சிங்கள பௌத்த மக்களின் வெசாக் பௌர்ணமி தினத்தைப் பார்த்து வியப்படைபவர்கள். வல்வெட்டித் துறையின் இந்திர விழாவையும் அதன் மின்னலங்காரங்களையும் பார்வையிட்டால் அதை விட மிகவும் பிரமாண்டமாகச் செய்யப்படும் இந்திர விழாவின் பெருமை புரியும். பிரமாண்டம் தெரியும்.

முத்துமாரியம்மன் திருவிக்கிரகம் கோயிலில் இருந்து ஊர்வ லமாகப்புறப்பட்டு ஊறணிக் கடற்கரையில் சித்திரைத் தீர்த்த மாடுதல் நடைபெறும். பின்பு அங்கிருந்து புறப்பட்டு நெடிய காட்டுப் பிள்ளையார் கோயிலில் பகல் முழுவதும் பக்தர்களின் வழிபாட் டிற்காக அம்மன் திருவிக்கிரகம் இருக்கும்.

இரவு 7 மணியளவில் நெடிய காட்டுப் பிள்ளையார் கோயிலில் இருந்து அம்மன் புறப்பட்டு இரவிரவாக ஊரவரின் வழிபாட்டை முடித்துக் கொண்டு காலையில்தான் முத்துமாரியம்மன் கோயிலுக்கு வரும். அதனைத் தொடர்ந்து கொடி இறக்கம் நடைபெறும். அம்மன் நெடிய காட்டுப் பிள்ளையார் கோயிலில் இருந்து முத்துமாரியம்மன் கோயிலை வந்தடையும். அந்த இரவு முழுவதும் ஊறணி தீர்த்தக் கடற்கரையிலிருந்து கல்லூரி மைதானம் வரையும் நடைபெறும் கலை நிகழ்வு தான் இந்திரவிழா.

ஒரே நேரத்தில் 7 மேடைகளில் கலைவிழா நடைபெறும். 1965 ஆம் ஆண்டுக்கு முன்பதான காலங்களில் அம்மன் கோயில் திருவிழா கலை நிகழ்வுகள் என அழைக்கப்பட்டது. 1965 இல் 800 வரையான முழுவாழையுடன் கூடிய குலைகளை வல்வெட்டித்துறையின் நகர வீதி எங்கும் கட்டி இத்திருவிழாவைக் கொண்டாட ஆரம்பித்த போது தான் இந்திரவிழா எனப் பெயரும் சூட்டப்பட்டது.

இந்திர விழாவில் வான் நோக்கி புகைக் குண்டுகள் ஏவப்படுவது. அறுசுவை மிகுந்த மோர் தாகசாந்திக்கு வழங்குவது என்பவை பிரதானமானவையாகும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நெல், அரிசி ஏற்றி வர பர்மா சென்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் பர்மி யர்கள் தமது பண்பாட்டு நிகழ்வுகளில் வானோக்கி ஏவும் புகைக் குண்டுகளைப் பார்த்தார்கள்.

பழைய செய்திப் பத்திரிகைகளின் தாள்களை படை படையாக

ஒட்டி புகைக்குண்டு ஏவும் கலையைக் கற்று வந்தார்கள். தமது இஷ்ட தெய்வங்களில் ஒன்றாகிய அம்மனின் சமுத்திர தீர்த்த நாளில்70 அடி 80 அடி 100 அடி என உயரமுடைய பெரும்.பெரும் புகைக் குண்டுகளை (Case Baloon) உருவாக்கி வானோக்கி செலுத்தினார்கள். வானில் அடுத்தடுத்து புகைக் குண்டுகள் கீழே புகை கக்கியபடி காட்சி தருவது பார்க்க பார்க்க இன்பம் தரும். அதனைப் பார்ப்பதற்கென்று யாழ்குடா நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் கூடுவார்கள். இவர்களது திறமைக்கு நிகராக இலங்கையின் எப்பாகத்திலும் புகைக் குண்டுகளை [கூடுகளை] விட்டதாக அறியப்படவில்லை.

பர்மாவிலிருந்து அரிசியை, நெல்லை ஏற்றி வரும் கப்பல்களில் மோரையும் எடுத்து வருவார்கள். தயிரைக் கடைந்து இவர்கள் தயாரித்த மோர் அறுசுவை கொண்டதாக இருக்கும். மோரில் கசப்புச் சுவையைக் கூட்ட கத்தரிக் காயை வெட்டி வதக்கி எடுத்து அதன் சாற்றை மோரில் சேர்ப்பார்கள். இதன் சுவை தனித்து வமாயிருக்கும். அது போல வெங்காயத் தாளிதம். உப்பு. ஊறுகாய் என்பனவற்றையும் சேர்த்து சமுத்திர தீர்த்தத்திற்கு வருபவர்களுக்கு தாராளமாக மோரை வார்ப்பார்கள்.

அம்மன் வீதியுலாவை முன்னிட்டு 7 மேடைகளில் நடக்கும் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்த படியே சனக் கூட்டம் அலைமோதும். போக்கு வரத்துப் பொலிஸார் வீதி ஒழுங்குகளைப் பார்ப்பார்கள். ஒவ்வொரு மேடையாகக் கலைநிகழ்ச்சிகளைப் பார்த்த படியே மக்கள் சாரை சாரையாகச் செல்வார்கள்.

வீதிக்கு மேலாக மேடை போட்டு கலை விழாக்கள் நடக்க மக்கள் மேடைக்கு கீழாகச் சென்று ஒவ்வொரு கலைவிழாவையும் மிகவும் ரசனையுடன் பார்ப்பார்கள். பட்டாசு, வாணவேடிக்கை காட்சிகள் கண்ணைப் பறிக்கும்.

பட்டாசு, வாணங்களைச் சொந்தமாகவே தயாரிக்கும் இவர்களது நிபுணத்துவ ஆற்றல் பரம்பரை பரம்பரையாகவே வந்தது.

1990 சித்திரைப் பௌர்ணமியன்று நடந்த இந்திர விழாவுக்குப் பின்னர் போரின் காரணமாக மீண்டும் 2000 ஆம் ஆண்டில் தான் நடந்தது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளிலும் இந்திர விழா நடந்தது.


போரின் காரணமாக மீண்டும் 2011 ஆம் ஆண்டில்தான் இந்திரவிழா மீளவும் நடந்தது. 2012 இல் முழுமையான சிறப்பாக இந்திர விழா நடந்தது. பாடகர் ரி.எம் சௌந்தரராஜனின் மகன் ரி.எம்.எஸ் செல்வகுமார் வந்து பாடல்களை பாடியது குறிப்பிடத்தக்கது.

2013 ஆம் ஆண்டில் சித்திரைப் பௌர்ணமியன்று சந்திர கிரகணம் நடந்த படியால் முத்துமாரியம்மன் சமுத்திர தீர்த்தம் நடந்த போது இந்திர விழா நடைபெறவில்லை. கோயில்கள் மக்களின் உள்ளத்துக்கு புணர்ச்சியை வழங்கி வாழ்வில் வளங்கள் பலவற்றைச் சேர்ப்பது கால காலமாக மக்களின் நம்பிக்கைளுடன் இணைந்து உயிருடன் இரண்டறக் கலந்துவிட்டது.

யாழ்குடாநாட்டில் நிறைய இந்து ஆலயங்கள் திருவிழாக்களை கால காலமாகச் செய்து வருகின்றன.

அவற்றின் கலையம்சங்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. கோயிலுடன் இணைந்த யாழ்ப்பாணச் சமூக வாழ்வின் பாதச் சுவடுகளும் வாழ்வியல் ஆவணங்கள் தான்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 செப்ரெம்பர் 08, 15**




# மின்சாரம் இல்லாதகால நினைவுகள்

காட்சி - 1

திடீரென்று கரண்டை நிப்பாட்டிப்போட்டாங்கள். இண்டைக்கு பொழுது படேக்கை தான் கரண்டை தருவார்கள்.

அது மட்டும் கிறைண்டர் பாவிக்கேலாது. ராங்கிலும் தண்ணி சரியா குறைவு. வழமையாகப் பார்க்கும் ரி.வி.நாடகங்களையும் பார்க் கேலாது.

காட்சி - 2

நாளைக்கு காலை 8 மணி தொடக்கம் பின்னேரம் 6மணி வரை யும் பவர் கட்டாம். (Power cut) விடிய வெள்ளனையே எழும்பி கரண் டால் செய்யும் வேலைகள் முடிக்கவேணும்.

"ச்சா பகல் பொழுது ரி.வி. பார்க்கத்தான் முடியாமல் போகப் போகுது."

இவை போன்ற சொற்றொடர்களை அன்றாடம் கேட்கின்றோம்.

ஆனால் மின்சாரம் இல்லாமல் ஏழெட்டு வருடங்கள் வாழ்ந்த காலத்தை ஏனோ நினைத்துப் பார்க்க விரும்புவதில்லை.

வடமாகாணத்தில் இன்றும் கூட மின்சாரம் காணாத கிராமங்கள் பல இருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மின்சாரத்தை வாழ்நாளில் எட்டியே பார்க்காத கிராமங்கள் பல இருக்கின்றன.

கொடிய உள்நாட்டுப்போரின் விளைவால் 1990 ஜூன் முதல் 1997 முற்பகுதி வரை மின்சாரம் இல்லாத கொடும் துன்பவாழ்வில் ஈடுபட நேரிட்டது.

1990 ஜூன் 15 ஆம் நாளில் இரண்டாம் ஈழப்போர் வடக்கில் யாழ்ப்பாணத்தில் வெடித்தது. அதன் நேரடித்தாக்கம் யாழ்ப்பாணத் திற்கு வவுனியா ஊடாக தெற்கிலிருந்து வரும் மின்சார விநியோ கத்திலும் எதிரொலித்தது.

சுன்னாகம் மின்சார நிலையம் ஊடாக விநியோகிக்கப்பட்ட மின் விநியோகத்திலும் தடங்கல்கள் ஏற்பட்டன.

விமானக்குண்டுவீச்சுக்கள் இதில் பிரதான காரணம் செலுத்தின.

இதனால் சுழற்சி முறையில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் முறையைக் கடைப்பிடித்தார்கள். ஒரு சில வாரங்களில் மின் விநி யோகம் முற்றாகவே நின்று போனது.

மின்சாரமில்லை, தொலைத்தொடர்பு சேவைகளில்லை. தரைவழிப் போக்குவரத்து இல்லை, தொலைக்காட்சி அலைவரிசை இல்லை.

நவீன உலகிலிருந்து ஆதிகால உலகமென்று கூறக்கூடிய உலகிற்குத் தள்ளப்பட்டோம்.

மின்சாரம் இல்லாமல் வாழவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். வாழ்க்கையை இலகுவாக வாழ முடியாத நிலைமை உருவாகியது.

ஆனால், மனித விழுமிய ரீதியில் உயர்வானதொரு நிலை அக் காலத்தில் இருந்ததாகச் சமூக ஆர்வலர்கள் இன்றளவும் நினைவு கூருகின்றனர்.

தேவைதான் கண்டுபிடிப்புக்களின் தாய் என்பார்கள். அதுபோல மின்சாரமில்லாத வாழ்க்கை மின்சாரம் மூலமாக நிறைவு செய்யும் வேலைகளுக்கு மாற்றுத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் தேவையையும் உருவாக்கியது. **உலக வரலாற்றில் பதியப்படாத விஞ்ஞானிகள் பலர் இங்கே உருவாகினார்கள்.** மின்சாரம் திடீரென்று நின்ற போது மக்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கை மீது சற்றுத் தளர்வொன்றைக் கண்டார்கள்.

ஆனாலும், விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு எனும் அறிஞர் பெருமக்களின் சொல்லுக்கேற்ப தம்மை மாற்றிக் கொண்டார்கள்.

இப்பொழுது காற்று வாங்க ஜன்னலைத் திறந்து நித்திரை கொள்ள முடியாதளவுக்கு திருடர் தொல்லை. ஆனால், அந்நாட்களில் ஜன்னல் மட்டுமல்ல வீட்டுக்கதவைக் கூட திறந்து வைத்துவிட்டு நித்திரை கொண்டார்கள். அந்தளவுக்கு பாதுகாப்புச் சூழல் நில வியதாக சமூக ஆர்வலர்கள். கூறுகின்றனர்.

மின்சாரம் நின்றபோது பாரம்பரிய உபகரணங்கள் மீளவும் பாவிக்கும் பழக்கத்தை மக்கள் கடைப்பிடித்தார்கள்.

மாவிடிக்க உரல் உலக்கையைப் பயன்படுத்தினார்கள். சிறிதளவு மாவரைக்க திரிகைக் கல்லைப் பயன்படுத்தியோரும் உள்ளனர்.

கிணற்றில் நீர் அள்ள கப்பிகளையும் வாளிகளையும் பயன்படுத் தினார்கள். தோட்டங்களுக்கு நீரிறைக்க துலா மிதிக்கும் முறைகளை யும் சூத்திரக்கிணறு முறையையும் பயன்படுத்திய சிலரும் இருந் தார்கள்.

பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களை முற்றாகவே கொண்டு வரமுடியாது எனக் கூறுமளவுக்கு நிலைமை இருந்தது.

மண்ணெண்ணையும் மட்டுப்படுத்தப்பட்டளவில் தான் வடக்கே எடுத்துவர அனுமதியளிக்கப்பட்டது.

மண்ணெண்ணையால் இயங்கும் ஜெனரேட்டர்களைப் பாவித்து தான் அவசர தேவைக்கு மின்சாரம் பெறப்பட்டது.

விவசாயத் தேவைகளுக்கு மோட்டார் இயக்கவும் மண்ணெண்ணை பல மடங்கு விலையில் வாங்க நேரிட்டது.

நீரிறைக்கும் இயந்திரத்தை இயக்க பெற்றோல் சிறிதளவு தேவை. மண்ணெண்ணை கூடிய விலையில் கிடைத்தது.

பெற்றோலுக்கு எங்கே போவது. மாற்றுத் தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். இரும்பு உலோகக் குழாய் ஒன்றை கடுமையாகச் சூடாக்கி விட்டு அதனுள் சிறிதளவு மண்ணெண்ணையை விட்டார் கள். அப்போது எழுந்த ஆவியை நீரிறைக்கும் இயந்திரத்தின் காப ரேற்றருக்குக் காட்டுவார்கள்.

அது பெற்றோலின் வேலையைச் செய்து இயந்திரத்தை இயங்கச் செய்யும்.

அரசாங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பங்கீடு அட்டைக்கு மண்ணெண்ணை வழங்கியது.

மோட்டார் சைக்கிள் ஓடப்பெற்றோல் இல்லை. மண்ணெண்ணையில் ஓடக்கூடியதாக இயந்திரத்தை சீரமைத்தார்கள். மோட்டார் சைக்கிள்களுக்கு ஸ்ராட் வருவதற்கு பெற்றோல்விட்டு ஊதுவதற்கு சேலைன் குழாய் போன்ற மெல்லிய குழாயை இயந்திரத்துடன் பொருத்தினார்கள்.

சிறிதளவு பெற்றோலை விட்டு அக்குழாயூடாக நெஞ்சு வலிக்க வலிக்க ஊதினார்கள். கால் உளைய உளைய சில வேளைகளில் செருப்பு அறும்வரையில் மோட்டார் சைக்கிள் கிக்கரை உதைத்தார்கள்.

மோட்டார் சைக்கிள் ஸ்ராட் வந்தால் அதனை ஓடிச்செல்வார்கள். போகுமிடத்தில் நிப்பாட்டும் தேவை வந்தால் திரும்பவும் ஸ்ராட் ஆக்க மீண்டும் போராட்டம் போராட்டம் போராட்டம்தான். கார், லொறி, ட்ராக்ரர் ஓடவும் மண்ணெண்ணையுடன் மரக்கறி எண்ணெய் கலந்து தான் ஓடுவார்கள். வாகனத்தைப் பலபேர் சேர்ந்து தள்ளித் தள்ளி ஓடுவது பார்ப்பவருக்கு வியப்பாகத் தோன்றும். ஆனால், எமது வாழ்க்கை வேதனைமிக்கது.

மினிபஸ்கள், பஸ்களின் நிலைமையும் இப்படித்தான் இருந்தது.

இன்று வாழ்க்கை சுகமாகி விட்டது. ஆனால் தேவைகள் பல மடங்கு பெருகியதால் வாழ முடியாதளவுக்கு வருமானக் குறைவு உள்ளது.

அன்று வாழ்வது கடினமாக இருந்தது. ஆனால் குறைந்த தேவைகளுடன் உடலை வருத்தி வாழ முடிந்தது.

ரேடியோ கேட்பதற்கு மின்சாரமில்லை. பற்றரியோ ஆனைவிலை, லண்டன் பிபிசி, சென்னை வானொலி, திருச்சி வானொலி, கொழும்பு சர்வதேச வானொலி, பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலி, புலிகளின் குரல் போன்றவற்றின் செய்திகளைத்தான் கேட்டு உள்நாட்டு உலகநடப்பை அறியவேண்டும்.

மரப்பலகை ஒன்றுடன் சைக்கிள் றிம் ஒன்றை இணைத்து சைக்கிள் டைனமோவின் தலையுடன் சைக்கிள் ரியூப்பை இணைத்தார்கள். டைனமோவுடன் வயரை இணைத்து ரேடியோவில் கொன்டன்சரை இணைப்பார்கள்.

சைக்கிள் றிம்மை சுழற்ற சுழற்ற டைனமோ வேகமாகச்சுழன்று வர வரும் மின்சாரத்தின் மூலமாக ரேடியோ கேட்டார்கள்.

தொலைக்காட்சி பார்க்கவும் இதே சைக்கிள் டைனமோதான் கைகொடுத்தது.

வவுனியா ஊடாக வடக்கேவரும் சைக்கிள்கள் ஒவ்வொன்றும் டைனமோவுடன்தான் வரும்.

தியேட்டர்களில் படம் பார்த்து ரசித்து வாழ்ந்த வாழ்க்கையும் மின்சாரமில்லாத நிலையிலும் படச்சுருளை எடுத்துவர முடியாத நிலையிலும் நின்றுபோனது.

கோரயுத்தத்தின் தெறிப்பால் தியேட்டர்களின் கட்டடங்கள் பல மூர்ச்சையற்றுப்போயின.

1990 ஜூலையில் கொக்காவில் அஞ்சல் நிலையக் கோபுரம்

தகர்க்கப்பட்டது.

இதனாலும் மின்சாரமில்லாத நிலையிலும் தொலைக்காட்சி பார்ப்பது சவாலான ஒன்றாக மாறியது. சினிமாப்படங்களின் வீடியோ படச்சுருள்கள் வடக்கே எடுத்துவர எந்தவிதத் தடையுமில்லை.

இதனால் கொழும்புக்கு வரும் படச்சுருள்கள் ஓரிரு நாள்களில் வவுனியா தாண்டிக்குளத்தைத் தாண்டி வடக்கே வந்துவிடும்.

மண்ணெண்ணை மூலமாக ஜெனரேட்டரை இயக்கி மக்கள் படம் பார்த்தார்கள்.

1994 ஆம் ஆண்டில் சினிமாப்படங்களைப் பொது மக்கள் பார்ப்பதை விடுதலைப் புலிகள் தடைசெய்தார்கள். அதனால் சினிமாப்படம் பார்க்க முடியாத சூழல் உருவாகியது.

ஆனாலும் ஆங்காங்கே ஒளித்துப் படம் பார்த்து பிடிபட்டுத் தண்டனை பெற்றவர்களும் இருந்தார்கள்.

இரவுப்பொழுது வந்தால் எங்கும் இருள்மயமாகிவிடும். பூமியின் போர்வை முழுவதையும் இருள் கௌவிவிடும். அரிக்கன் லாம்புகளும், மேசை லாம்புகளும் கைவிளக்குகளும், ஜாம்போத்தல் சிக்கன விளக்குகளும் தான் ஆங்காங்கே தெரியும்.

மண்ணெண்ணை லீற்றர் ஒன்று 200, 300 ரூபாவென விற்ற காலங்களும் இருந்தன.

வருமானம் மிகக் குறைந்த காலத்தில் அந்த விலைக்கு மண்ணெண்ணை வாங்கி விளக்கு வைக்க நிறையக் குடும்பங் களுக்கு முடியாத நிலை.

அப்போது ஜாம் போத்தல் சிக்கன விளக்கு பிரபல்யமாகியது. ஜாம் போத்தல் ஒன்றை எடுத்து மெல்லிய தகட்டை உள்புறம் வளைத்து அதில் துளையொன்றை இடுவார்கள். பின்பு அதில் பஞ்சை திரிபோல செய்து இணைத்து கீழே விடுவார்கள்.

ஜாம்போத்தலின் அடிப்புறம் மண்ணெண்ணை விட்டு அதனுடன் சிறிதளவு உப்பைக் கலந்து விடுவார்கள்.

திரியில் தீக்குச்சியால் நெருப்பு மூட்டுவார்கள். இந்த ஜாம் போத்தல் விளக்கை நடுவில் வைத்து நான்கு புறமும் நான்கு பிள்ளைகள் அந்த மெல்லிய வெளிச்சத்தில் படித்ததுவும் நிகழ்ந்தது.

இன்று நினைத்தப் பார்த்தால் சகிக்க முடியாமல் தான் இருக்கும். ஆனால், அன்று அப்படித்தான் வாழ்ந்தோம். வாழ்ந்தாகவே....... வேண்டும்.

இரவில் மண்ணெண்ணை விளக்கு வைக்க வசதியின்றி பகல் பொழுதில் பாடங்களைப் படித்து இரவில் வந்தவுடன் நித்திரைக்குப் போனவர்களும் இருந்தார்கள்.

மின்சார விளக்கையே காணாமல் படித்து மருத்துவம் முதல் கலை வரையான பட்டங்களைப் பெற்றவர்களும் இருந்தார்கள்.

அதுதான் ஒரேயொரு வழி. அதை விட்டால் வேறு தெரிவு எதுவுமே இல்லை. வேறென்ன செய்ய முடியும். போட்டோ பிரதி எடுப்பதென்பது பெரும் செலவு மிக்கதாயிருந்தது. ஒரு பக்கம் பிரதியெடுக்க பத்து ரூபா கொடுக்கவேணும். பாடசாலைக்கோ, ரியூசனுக்கோ, பல்கலைக்கழகத்திற்கோ வகுப்பிற்கப் போக முடியாதவர்கள் போட்டோபிரதி எடுத்து இன்று இணைக்கின்றனர். ஆனால் அன்று கையால் எழுதியே தீரவேண்டும். தேவைதான் கண்டுபிடிப்புக்களின் தாய் எனும் ஆங்கிலேயரின் பொன்மொழி

மெய்யானது. ஆனாலும் மின்சாரம் இல்லாத வாழ்க்கை நிறைந்த அனுபவங்களைக் கற்றுக்கொடுத்தது. புதுமுறை காணுதல் பலவற்றைக் கண்டுபிடிக்க வைத்தது, பெற்றோல், டீசல் வந்தால் என்ன வராவிட்டால் என்ன மண்ணெண்ணை வருகின்றதே. அதை வைத்து வாகனத்தை ஓட்டுவோம் என்றனர் அதன்படியே செய்தனர்.

பெற்றோலால் இயங்கும் வாகனங்கள் போல வருமா என வாசிக்கும் வாசகர்கள் பலர் வினா எழுப்புவது என் காதில் கேட் கின்றது.

பெற்றோல், டீசல் ஒழுங்காக வரும் வரையில் வாகனங்களை ஓடாமல் இருப்பதை விட கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வாகனம் ஓடுவது மாற்றுத் தொழில் நுட்பம்.

தொழில்நுட்பம் என்பதே அக்கால தேவையை நிறைவு செய் வதே எனலாம். இயந்திரத்தின் தேய்மானம் அதிகமாகிறதே என வாகனத்தை சும்மா வைத்திருக்காமல் மூளையை கசக்கி விடை கண்டு வாழ்ந்தார்கள்.

வாழ்ந்தார்கள் என்பதைவிட வாழ்ந்தேயாக வேண்டிய கட்டா யத்தில் இருந்தார்கள்.

மின்சாரத்தை நம்பி வாழ்ந்த தொழில்கள் பெருமளவுக்கு பட்டுப் போகும் கட்டத்தை அடைந்தது.

மண்ணெண்ணை மட்டுப்படுத்திய அளவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டது.

அதுவும் வராவிட்டால் கடல் தண்ணீரிலே வாகனம் ஓடப் பழகியி ருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென தென்பகுதி அன்பர் ஒருவர் கூறினார். மின்சாரமில்லாத காலத்தில் வீதி மின்விளக்குகள்

எரியமுடியாத நிலை இதனால் இரவாகினால் எங்கும் இருள் மயம்தான்.

யாழ். மாநகரசபை, பருத்தித்துறை நகரசபை போன்றன தமது நிதியிலிருந்து மின்சாரத்தூண்களில் மேசை லாம்புகளைப் பொருத் தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தின.

மாலைநேரத்தில் ஊழியர்கள் மண்ணெண்ணெயை பிளாஸ்ரிக் கானுடன் கொண்டு சென்று லாம்புகளில் தேவையான அள விடுவர். சீலைத்துண்டு ஒன்றால் லாம்புச் சிமிலிகளைத் துடைப்பர். பின்பு தீக்குச்சியால் ஒளியேற்றிவிட்டு வருவார்கள. விடிகாலையில் மீண்டும் அந்த லாம்புச்சுடரை அணைக்கும் பணியைச் செய்வார்கள்.

இந்த இரு பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இரவு நேர வீதி விளக்குகள் இருக்கவில்லை. இரவு வந்தால் இருள்மயம்தான். இருளின் ஆட்சிக்குள் வாழ்ந்தேயாகவேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலை போன்ற ஒரு சில இடங்களில் மின்பிறப்பாக்கி மூலமாக மின்சாரம் பெறும் வசதியிருந்தது. இதனால் அங்கு மின்சாரத்தை தரிசிப்பதற்காக இரவு நேரம் போக மனம் ஆவல்படும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது மாணவர்களின் கல்விக்காக இரவு நேரத்தில் சில மண்டபங்களுக்கு மின்சார வசதியைக் செய்து கொடுத்தது. மாணவர்கள் அங்கு சென்று இரவு நேரக் கல்வியைத் தொடர்ந்தார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலைச் சுற்றுவட்டாரம் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் தவிர்ப்பு வலயமாக்கப்பட்டிருந்தது.

அதற்கு அடையாளமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு வின் அடையாளமிடப்பட்டு இரவு நேரத்தில் நான்கு ரியூப் பல்புக்கள் மூலமாக ஒளியூட்டப்பட்டது.

கல்வியில் ஆவல் கொண்ட மாணவர்கள் சிலர் அங்கு சென்று கல்வியை மேற்கொண்டார்கள். சைக்கிளில் சிறிய மேசை ஒன்றையும் கதிரை ஒன்றையும் கட்டிக்கொண்டு போய் பாதுகாப்பு வலய எல்லையாக செஞ்சிலுவைச் சங்கத்தால் காட்டப்பட்ட இடத்தில் இரவுப்படிப்பை மேற்கொண்டார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயகத்தினர் நகரப் பிரதேசங்களில் பாரிய ஜெனரேற்றர் மூலமாக மின்சாரத்தை வீடுகளுக்கு வழங்கியது பின்னாளில் நிகழ்ந்தது. அவர்களின் மின்சார வாரியம் இதனை நிர்வகித்தது.

மின்சாரம் இல்லாத நிலையில் அச்சிடும் தொழிலும் பாரிய சவாலை எதிர்நோக்கியது. கணினி வராத அக்காலத்தில் கையால் ஈயக்குற்றிகளால் உருவான எழுத்துக்களை அச்சுக்கோர்த்தார்களா. கையால் உடல் வலிமை கொண்டு அச்சு இயந்திரத்தைச் சுழற்றி அச்சடித்தார்கள்.

மின்சாரமில்லாதநிலையில்தொலக்காட்சிஅலைவரிசைகளைப் பார்க்க முடியாத நிலையேற்பட்டது. அப்போது வாசிப்புப் பழக்கம் மிக உயர்வாக இருந்தது. சாளரம், நங்கூரம், அறிவுக்களஞ்சியம் போன்ற பத்திரிகைகள் மாணவர்களின் அறிவுப்பசி தீர்க்கும் மாதாந்த சஞ்சி கைகள் வெற்றிகரமாக வெளியாகின. இலத்திரனியல் ஊடகங் களில் மணம் குணம்தெரியாத அக்காலத்தில் ஓய்வு நேரத்தை வாசிப்பின்பக்கம் திருப்பினார்கள்.

எழுத்துருவாக்கங்கள் நிறைய வெளிவந்தன. இன்றும்கூட அக்கால வாசிப்புப்பழக்கத்தின் உச்ச நிலையை நினைவுகூருவோர் உள்ளனர். கோயில்களில் திருவிழா ஜெனரேற்றர் பிடித்து வெளிச்ச மீட்டிக்கொள்வார்களா. வீடுகளில் மின்சாரம் இல்லாத அக்காலத் ததில் இரவு நேர மின்னொளிமயத்தைக் காண பக்தர் கூட்டம்அ லைமோதும்.

தியேட்டர்களில் திரைப்படம் காணமுடியாதநிலை வந்தது.

பின்னாளில் விடுதலைப்புலிகள் இயகத்தினர் தமது போராட்டப் பரப்புரைப் படங்களை எடுத்தார்கள. உறங்காத கண்மணிகள், உயிராயுதம், அம்மாவுக்காக என அவர்கள் எடுத்த படங்களின் வரிசை குறிப்பிடத்தக்கது.

அதுபோல தமது பரப்புரை ஒலிப்பேழைகளை கசற் நெய்தல் கரும்புலிகள், விடியலைத் தேடும் பறவைகள் என நிறையவே வெளியிட்டார்கள். சினிமாப்படங்களை பார்க்கமுடியாது. பாடல்களைக் கேட்கமுடியாது என்ற கட்டம் வந்தபோத அவர்களின் பரப்புரை களியீடுகளையே வாங்க வேண்டியிருந்தது.

கோயில்கள் பொது இடங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப் பதற்கு கார் பற்றரி, லொறி பற்றரி பயன்படுத்தப்பட்டன.

அதிலிருந்து மின்சாரத்தைப் பெற்று ஒலிபெருக்கியை இயங்க வைத்தார்கள். வீடுகளில் வானொலி கேட்க தொலைக்காட்சி பார்க்க இந்த பற்றரிகளைப் பாவித்தோரும் உள்ளனர். மோட்டார் சைக்கிள் பற்றரியை பாவித்து றேடியோ கேட்டோரும் உள்ளனர்.

இதனால் பொது இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக் கிள்களின் பற்றரிகள் சிலவேளை களாவாடப்பட்டன.

தாண்டிக்குளம் ஊடாக வவுனியா ஊடாக நாட்டின் தென்பகுதிக்கு போய்வரும் போது சார்ஜ் ரோச்லைற்றுக்களை வாங்கி வைத்தி ருப்பதை வாடிக்கையாக வைத்திருந்தார்கள். சொந்தப் பாவனைக்கு வியாபாரத்துக்கு பற்றரிகளை தாண்டிக்குளம் சோதனைச் சாவடி ஊடாகவே வடக்கே எடுத்தவரும் போது பிடிபட்டு அடிவாங்கியோர், தண்டனை பெற்றோரும் உள்ளனர். லான்ட் மாஸ்டரின் என்ஜினை ஜெனரேற்றராக மாற்றி மின்சாரம் பெறும் புதுமுறை காணுதல்

நிகழ்ந்தது. நூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட மின்சாரம் என்ற கண்டுபிடிப்புக்களிலிருந்து நாளாந்த வாழ்க்கையை தூரவைத்தே பழகிவிட்டோம்.

குறைந்த தேவைகளுடன் நிறைவாக வாழமுடிந்தது. அக்காலத்தின் நினைவுகளை மீளத்தரிசிக்கும் போது நினைவு வருகின்றது. 1996 ஏப்ரல் மாத இறுதியினுள் யாழ்ப்பாணக்குடாநாடு அரசாங்க படைகளின் ஆளுகைக்குள் வந்தது.

மின்சாரம் மெல்ல மெல்ல தலைகாட்டத் தொடங்கியது.

யாழ். நகரப் பிரதேசத்தில் ஆரம்பித்து நாளடைவில் கிராமங்களுக்கும் தலைகாட்டியது. ஆனாலும், பூரணத்துவமாக யாவருக்கும் கிடைக்கவில்லை.

ஒன்றுவிட்ட ஒரு நாள் மின்சாரம் விநியோகித்தார்கள். என்றவாறாக நிலைமைகள் இருந்தன. இரவு நேரம் நாளாந்தம் பின்னர் 3 மணித்தியாலங்கள் மட்டும் வழங்கப்பட்டது. பகல் பொழுதில் மட்டுப்படுத்தப்பட்டளவில் வழங்கப்பட்டது. மெல்ல மெல்ல நிலைமை சீர்திருந்தி முன்னேறத் தொடங்கியது. சுன்னாகத்தில் வைத்து பாரிய ஜெனரேற்றர்கள் மூலமாகவே இம்மின் விநியோகம் நடைபெற்றது. காலச்சக்கரத்தின் சுழற்சியில் மின் விநியோகமும் வளர்ச்சிபெற்று நிலை பெற்றது. இப்போது மின்சாரம் இல்லாவிட்டால் சில மணிநேரம் கூட வாழமுடியாதென்ற மனநிலைக்கு வந்துவிட்டோம்.

ஆனால், உலகில் எமக்கு மட்டும் தான் 7 வருடம் மின்சாரமில்லாத வாழ்க்கை இருந்திருக்குமென நினைக்கிறேன். காலத்தின் கல்வெட்டில் கசப்பானதாயினும் கூட இந்நினைவுகளையும் பொறித்துக் கொள்வோம்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 ஒக்டோபர் 10, 17**

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாண நினைவுகள் 2 வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாண நினைவுகள் 2

வேதநாயகம் தபேந்திரன்



## காலத்தின் தேவை

யாழ்ப்பாண மண்ணுக்கே உரித்தான தனித்துவமான பண்பாட்டு, வாழ்வியல் கோலங்களை தேடியறிந்து பதிவு செய்வதில் தீவிர ஆர்வத்துடன் செயற்படும் வேதநாயகம் தபேந்திரன் தன்னுடைய 'யாழ்ப்பாண நினைவுகள் 2' நூலை வெளிட்டிருக்கின்றார். யாழ்ப்பாண நினைவுகள் முதலாவது பகுதிக்குக் கிடைத்த பலத்த வரவேற்பு குறுகிய காலத்துக்குள்ளேயே இரண்டாவது பகுதியையும் வெளிக்கொண்டுவர வேண்டும் என்ற உந்துதலை அவருக்குக் கொடுத்துள்ளது

யாழ்ப்பாணத்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வாழ்வியல், சமூகப் பண்பாடுகள் தனித்துவமானவை. யாழ்ப்பாண மண்ணுக்கும், அவர்களுடைய கலாசார பாரம்பரியங்களுக்கும் இசைவாக உருவானவை. காலங்காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டவை. அதேபோல, அவர்களுடைய உணவுப் பழக்கங்கள், விளையாட்டுக்கள் போன்றவையும் தனித்துவமானவை. கோவில்களை மையப்படுத்தியதாகவே யாழ்ப்பாண சமூகத்தின் அசைவியக்கம் இருந்துவந்திருக்கின்றது

இது போன்ற பல பண்பாட்டுக் கோலங்கள் தொடர்ச்சியான போர், இடப்பெயர்வு என்பவற்றால் சிதறடிக்கப்பட்டதுடன் பல வழமைகள் காணாமல்போய்விட்டன. இந்த நிலையில்தான் காணாமல் போய்விட்ட யாழ்ப்பாணத்தவர்களின் பழைய பண்பாடுகள், வாழ்வியல் கோலங்களைத் தேடியறிந்து பதிவு செய்திருக்கின்றார் தபேந்திரன். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அதிகாரியாகப் பணிபுரிகின்ற நிலையிலும், தகவல்களை நேரடியாகத் தேடிச் சென்று சேகரிப்பதில் அவர் காட்டிய அக்கறை பாராட்டத்தக்கது

ஞாயிறு தினக்குரலில்' தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகளை தொடராக' வெளியிட்ட போது அதற்குக் கிடைத்த ஆதரவு ஆச்சரியப்பட வைத்தது. குறிப்பாக புலம்பெயர்ந்தவர்கள் அதனை விரும்பிப்படித்தார்கள். தாயகத்தை விட்டுச் சென்றவர்களுக்கு தாயகத்தின் மீதான நினைவுகளை மீட்பதற்கும், தமது பண்பாடுகளை தமது பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பதற்கும் அந்தத் தொடர் உதவியது. இது போன்ற பதிவுகள் காலத்தின் தேவை. ஒரு சமூகக் கடமை. இந்த சமூகக் கடமையை தபேந்திரன் சிறப்பாகச் செய்துள்ளார். தொடர்ந்தும் அதனைச் செய்ய வாழ்த்துக்கள்

பாரதி இராஜநாயகம்
ஆசிரியர், ஞாயிறு தினக்குரல்
இல 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு -15

ISBN 978-955-41-3921-3
9 789554 139213

தேவி Printers, Jaffna